

# கலாபூஷணம் பீ.எம்.புன்னியாமீன்: ஒரு மனிதநேயரின் கதை

என்.செல்வராஜா

கலாபூஷணம் பீ.எம். புன்னியாமீன்
ஒரு மனிதநேயரின் கதை

# கலாபூஷணம் பீ.எம். புன்னியாமீன்

## ஒரு மனிதநேயரின் கதை

என். செல்வராஜா

தேசம் வெளியீட்டகம்
தபால் பெட்டி எண்: 35806
லண்டன் E11 3JX
ஐக்கிய இராச்சியம்
ஏப்ரல் 2016

கலாபூஷணம் பீ.எம். புன்னியாமீன்: ஒரு மனிதநேயரின் கதை
ஆக்கியோன்: என்.செல்வராஜா
முதலாவது பதிப்பு, ஏப்ரல் 2016

வெளியீடு
தேசம் வெளியீட்டகம், தபால் பெட்டி எண் 35806, லண்டன் E11 3JX

அச்சு
குமரன் அச்சகம், 39, 36ஆவது ஒழுங்கை, கொழும்பு 6
தொலைபேசி: 011 2364550
மின் அஞ்சல்: kumbhlk@gmail.com

பக்கங்கள்: xx, 151

விலை: 500/=

ஐ.எஸ்.பீ.என். எண்: 978-0-9930143-4-5.

Kalaabushanam P.M. Puniameen: Oru Manithaneyarin Kathai
(A Biographic Note of Late Mr. P.M.Puniameen, A Prominent Teacher, Writer, Publisher and Social Worker in Sri Lanka.)

Author: N.Selvarajah (Bibliographer, Compiler- Noolthettam, London)

First Edition, April 2016

Publishers
Thesam Publishers, P.O.Box No: 35806, London, E11 3JX

Printers
Kumaran Printers, 39, 36th Lane, Colombo 6, Sri Lanka.
Telephone: 011 2364550
E-mail: kumbhlk@gmail.com

Pages: xx, 151

Price: 500/=

ISBN: 978-0-9930143-4-5.

பதிப்புரிமை © Copy Right 2016 by N. Selvarajah

All Rights Reserved. No part of this publication may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photo copying, recording or otherwise, without the prior written permission of the publishers.



ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க
சிந்தை கலங்கிட வந்தவர் வாழ்க
நீரில் மிதந்திடும் கண்களும் காய்க
நிம்மதி நிம்மதி இவ்விடம் சூழ்க

# வெளியீட்டுரை

பீ.எம்.புன்னியாமீனுக்கும் எமக்கும் இடையே மலர்ந்த நட்பும் உறவும் வெறுமனே இரு தனிமனிதர்களுக்கு இடையேயானது அல்ல. கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக அவநம்பிக்கையே வாழ்வியல் முறையாக வாழ்ந்த தமிழ்-முஸ்லீம் சமூகங்களிடையில் இருந்து, இரு சமூக அக்கறையுடைய தனிமனிதர்கள் நட்பையும் உறவையும் வளர்ப்பதென்பது; அதுவும் எண்ணாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து, வெறுமனே தனிப்பட்ட நட்பாகவும் உறவாகவும் இருந்திருக்க முடியாது. புன்னியாமீன் அவர்களுடன் எனக்கு தொடர்பு ஏற்பட்டு, தற்போது ஒரு தசாப்தம் முடிவடைந்த நிலையில் புன்னீயாமீன் இயற்கை எய்தியுள்ளார். எப்போதும் அவர் 'தம்பி' அல்லது 'பிரதர்' என்று என்னை விளிப்பதும், நான் அவரை 'ஐயா' என்று விளிப்பதும் வழமை. எல்லா உறவுகளும் போல இந்த உறவிலும் ஏற்ற இறக்கங்கள் இருந்த போதும் மிக விரைவிலேயே அது தனது வழமைநிலைக்கு வந்துவிடும். அதற்கு புன்னியாமீன் ஐயாவின் இயல்புகளான விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கும் பெருந்தன்மையும் மிக முக்கியமானது.

சமூக அக்கறையுள்ளவராகவும் அரசியல் ஈடுபாடுடையவராகவும் இருந்த சிந்தனை வட்டத்தின் ஸ்தாபகர் புன்னியாமீன் ஐயாவுடன் மாற்றுக் கருத்துத் தளத்தில் காத்திரமான தமிழ் தேசியவாதத்தை கேள்விக்குட்படுத்திக் கொண்டிருந்த தேசம் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்த எனக்கு நட்பையும் உறவையும் ஏற்படுத்திக் கொள்வதில் மதமோ, இனமோ ஒரு தடையாக இருக்கவில்லை. மாறாக ஒரு பன்முகத்தன்மை கொண்ட சமூகத்தை உருவாக்கும் ஆர்வம் எம்மிருவரிடையேயும் இருந்தது. அது எமது நட்பையும் உறவையும் மேலும் வளப்படுத்தியது.

பெரும்பாலும் ஊரில் இருந்து வருபவர்கள் ஐரோப்பியச் சூழலில் மயங்கி அதனை பார்த்து ரசிப்பதிலேயே கவனம்கொள்வதை நான் அவதானித்து உள்ளேன். ஆனால் புன்னியாமீன் ஐயா என்ன நோக்கத்திற்காக வந்தாரோ அதே நோக்கத்தில் மிகத் தெளிவாக இருந்தார். இங்கு என்ன விடயங்களை உள்வாங்கிக் கொண்டாரோ அதனை ஊருக்குச் சென்று நடைமுறைப்படுத்துவதிலும் தீவிரமாகச் செயற்பட்டார். அவரை ஒரு செயல்வீரன் என்று சொன்னால் அது மிகையாகாது.

புன்னியாமீன் ஐயாவை தமிழ் - முஸ்லீம் இனஉறவுகள் பற்றிய கலந்துரையாடலுக்காக லண்டனுக்கு வரவழைத்ததை தேசம் சஞ்சிகை மேற்கொண்ட பல முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றாகவே நான் இன்றும் கணிக்கிறேன். அவர் சில நாட்கள் என்னோடு தங்கி இருந்தபோது அவரைப்பற்றி சற்று ஆழமாக அறிய முடிந்ததுடன், அவரைப் புரிந்து கொள்ளவும் முடிந்தது. இது பின்னாளில் நாம் இணைந்து பல விடயங்களைச் சாதிப்பதற்கும் வித்திட்டது.

அதன் பின்னர் புன்னியாமீன் ஐயா தேசம்நெற் இணையத்தில் கட்டுரையாளராகவும் செய்தியாளராகவும் எமது ஆசிரியர் குழுவில் ஒருவராகவும் இணைந்து கொண்டார். செய்திகளுக்காகவும் கட்டுரை களுக்காகவும் தானே இலங்கையில் இருந்து தொடர்புகொண்டு தன்முனைப்புடன் செயற்பட்டவர். வன்னி யுத்தம் அதன் உச்சகட்டத்தில் இருந்த வேளையில் செய்திகளை உறுதிப்படுத்துவதற்கு புன்னியாமீன் ஐயா மிகுந்த ஒத்துழைப்பை வழங்கினார். அவருக்கு பல்வேறு தளத்திலும் தொடர்புகள் இருந்ததால் அவருக்கு தகவல்களை பெறுவதற்கும் உறுதிப்படுத்துவதற்கும் உரிய ஆளுமை இருந்தது.

யுத்தம் முடிவடைந்த பின் 2010இல் நான் இலங்கை சென்றிருந்த போது கிளிநொச்சியில் ஆரம்பப் பள்ளி ஆசிரியையாக இருக்கும் எனது தங்கை உங்களுக்கு புன்னியாமீன் ஐயாவைத் தெரியுமா? என்று ஆச்சரியமாகக் கேட்டார். யாழ் பல்கலைக்கழகத் தெரிவுக்காக காத்திருக்கும் யாழ்ப்பாணத்தில் வாழும் எனது மருமகளும் அவ்வாறே ஆச்சரியமாகக் கேட்டார். ஐயாவிடம் கண்டி உடத்தலவின்னவுக்குச் சென்றேன். அங்கு அவர் ஒரு உயர் ஸ்தானத்தில் வைத்து மதிக்கப்படுவதை அவதானிக்க முடிந்தது. அப்படிப்பட்ட ஒருவர் எம்மோடு எவ்வித விம்பங்களையும் காட்டாமல் மிகச்சாதாரணமானவராகப் பழகியமை அவர் மீது மிகுந்த மதிப்பை ஏற்படுத்தியது.

எங்களுக்கு இடையே நட்பும் உறவும் பலமாக இருந்தது என்பதற்காக எங்களுக்குள் முரண்பாடுகள் ஏற்படவில்லை என்பதல்ல. ஆனால் முரண்பாடுகள் ஏற்பட்ட போதெல்லாம் அதனை விவாதித்து முடிவெடுப்பதில் நாங்கள் தயங்கியதில்லை. எனக்கு 10 வயதிற்கு மூத்தவராக இருந்த போதும் சிறந்த கல்விமானாக இருந்தபோதும் விவாதத்தின் போது சரியான கருத்துக்களை உள்வாங்கிக் கொள்வதில் புன்னியாமீன் ஐயா ஒரு போதும் தயக்கம் காட்டியது கிடையாது. விதண்டாவாதம் செய்ய முற்பட்டதும் கிடையாது. தன்னுடைய பக்கத்தில் தவறு இருந்தால் எவ்வித தயக்கமும் இன்றி தவறை ஒத்துக்கொள்கின்ற அவருடைய

பெரும்தன்மை என்னை பல இடங்களில் சிறுமைப்பட வைத்தது. ஒரு போதும் தவறை நியாயப்படுத்த முற்படாத உயர்ந்த பண்பு அவருடையது.

வன்னி முகாம்களில் செய்யப்பட்ட கல்வி உதவித் திட்டம் தமிழ் - முஸ்லீம் இனஉறவுகளுக்கு கட்டப்பட்ட ஒரு உறவுப்பாலம். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வன்னி மாணவர்களின் கல்வியில் தென்பகுதி முஸ்லீம் சமூக ஆர்வலர் புன்னியாமீன் முன்னின்று செயற்பட்டதும் அத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியதும் மிகப்பெரும் சாதனையே. அந்த உதவித் திட்டத்தை ஆரம்பம் முதல் இறுதிவரை ஆவணப்படுத்தி ஆதாரங்களுடன் எமக்கு அறிக்கையாகச் சமர்ப்பித்திருந்தார். அதனை இரு பாகங்களில் நூலாகவும் வெளியிட்டார். இது அவருடைய நம்பகத் தன்மையை தனித்துவத்தை, ஒரு திட்டத்தின் பூரணத்துவத்தை எடுத்துக்காட்டியது.

இவ்வாறு புன்னியாமீன் ஐயாவுடன் பழகிய 10 ஆண்டுகளில் நாம் இணைந்து ஆற்றிய பணிகள் பற்றியும் அவர் வெளிப்படுத்திய ஆற்றல்கள் பற்றியும் பல விடயங்களைக் குறிப்பிடலாம். அவருக்காக இந்நூலை பதிப்பித்து வெளியிடுவதில் நானும் தேசம் குழுவும் பெருமைப்படுகின்றோம். இந்நூலை உருவாக்கிய நூலகவியலாளர் என். செல்வராஜாவுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழ் – முஸ்லீம் உறவுக்காக உழைத்த உன்னதமான மனிதன் காலமானது இரு சமூகங்களுக்குமே பேரிழப்பு! வன்னி யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கல்வியை வழங்குவதற்கு அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அளப்பரியன. அவருடன் பழகிய நாட்கள் இனிமையானவை. அவர் இன்னும் பல காலம் ஆரோக்கியத்துடன் இருந்திருக்க வேண்டும் என மனம் அவாவுகிறது. புன்னியாமீன் ஐயா நல்ல மனிதன்! நல்ல நண்பன்!

**த. ஜெயபாலன்**
ஆசிரியர் - தேசம்
04.04.2016

# முன்னுரையாக ஒரு முடிவுரை

நானும் எனது கணவர் புன்னியாமீனும் 1984 ஆகஸ்ட் 19ந் திகதி இல்லற பந்தத்தில் இணைந்தோம். இலக்கியத்தின் மீதிருந்த வேட்கையே இளம் வயதுகளில் எங்களை இல்லறத்தில் இணைத்தது. புன்னியாமீனின் தந்தையார் ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர். அவரது சொற்ப ஓய்வூதியமும் புன்னியாமீனின்ஆசிரியச் சம்பளமும், அக்காலத்தில் நாங்கள் வாழ்வதற்குப் போதியதாய் இருக்கவில்லை. மிகவும் சிரமப் பட்டோம். புன்னியாமீன் தூர இடத்தில் ஆசிரிய நியமனம் பெற்றிருந்தமையால் வார இறுதி நாட்களில் வீட்டுக்கு வரும் அவரது தனிப்பட்ட செலவுகள் மிகைத்திருந்தன.

அத்தகைய நிலைமையில்கூட புன்னியாமீன் தனது எழுத்துப்பணியைத் தொடர்ந்தவண்ணமே இருந்தார். என்னையும் சளைக்காமல் எழுதத் தூண்டினார். என் மகன் பிறந்து இரண்டரை வருடங்களுக்குப் பிறகே எனக்கும் ஆசிரிய நியமனம் கிடைத்தது.

களிமண்ணால் கட்டப்பட்ட பழங்காலத்துத் திண்ணை வீடு மாமியாருடையது. இடப்பற்றாக்குறையான அந்த வீட்டின் ஒடுங்கிய முன் விறாந்தையில் புன்னியாமீன் Mount Line Printers எனும் பெயரில் ஒரு அச்சகத்தை ஆரம்பித்தார். கணனிப் பாவனை அறிமுகமேயில்லாத எங்களூரில் 1989களில் எழுத்துப் பொறிக்கப்பட்ட ஈயத்தாலான குற்றி களைக்கொண்டு அச்சுக்கோர்த்து அவரது ஆரம்பகால நூல்களை அவராகவே வெளிக்கொணர்ந்தார். எழுத்துக் கோர்த்து வடிவமைப்பதும் அதன் மேல் மை தடவி தாளில் பதித்து சரவை பார்ப்பதும், மீண்டும் சரிசெய்வதும், பின்பு தாளின் ஒரு பக்கத்துக்கேற்ப குற்றியாகக் (Block) கட்டி, அசையாமல் பத்திரமாக வசுவண்டியிலேறி அச்சகத்துக்கு எடுத்துச் செல்வதும் என்று பெரிதும் சிரமப்பட்டே அந்நாட்களில் பணியாற்றினார். அவரது இந்த முயற்சிக்கு அவரது பெரியம்மா மகனான திரு. எஸ். எம். பௌசர் மொஹம்மட் பக்கபலமாக இருந்து ஒத்துழைத்தார்.

புன்னியாமீனினது ஆரம்பகால சிறுகதைத் தொகுதிகளான கரு, அந்த நிலை, நெருடல்கள் என்பவையும், பிற வளர்முக எழுத்தாளர்களினது கவிதைகளைத் தொகுத்து புதிய மொட்டுக்கள், அரும்புகள், பாலங்கள் என்பவையும் இந்த முறையிலேயே அச்சுப் பதித்து வெளியிடப்பட்டன. 1993ஆம் ஆண்டு வரை இந்த சிரம சாத்தியப் பணி நிகழ்ந்தேறியது.

அதன் பின்னர், நவீன உத்திகள், அச்சுத்துறைக்கு அறிமுகமாயின. இலக்கியம் சோறு போடாது என்பதை உணர்ந்தாரோ இல்லையோ புன்னியாமீன் தனது அச்சுப் பணியின் தடத்தை மாற்றினார். அவரது ஆசிரியப் பணி சார்பான வரலாறு, அரசியல், பாடநூல்களை வெளியிடு வதில் தீவிரம் காட்டினார். கல்வி நூல்களாக எமது சிந்தனை வட்டம் பிரசவிக்கப் பிரசவிக்க, பிரமிக்கத் தக்க வகையில் எமது பொருளாதாரம் ஸ்திரமடையத் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து எனதும் பங்களிப்புடன் ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான நுண்ணறிவு மற்றும் பொதறிவு நூல்கள், தரம் 5 புலமைப் பரிசிற் பரீட்சை வழிகாட்டிகள் என்று நூற்றுக்கணக்கான நூல்களை வெளிக்கொணர முடிந்தது. எமது தரம் 5 புலமைப் பரிசிற் பரீட்சைக் கருத்தரங்குகளும் நாட்டின் வடக்குக் கிழக்கு உள்ளிட்ட தமிழ்பேசும் பாகங்களில் புகழ்பெற்று வருமானத்தை ஈட்டித் தந்தன.

க.பொ.த. உயர்தரம், இளம்கலைமாணி, முதுகலைமாணிப் பட்டப் படிப்புகளில் அரசறிவியல் பாடம் என்றால் புன்னியாமீன் சேர் தான் என்னுமளவுக்கு அவரது தனியார் வகுப்புகளும், கருத்தரங்குகளும், புகழ் பெற்றன. அதற்கிடையில் கல்விசார்துறையில் பல பதவி உயர்வு களும் அவரைத் தேடிவந்தன.

'சிந்தனை வட்டம்' என்ற நிறுவனத்தை உருவாக்கி அதனை C.V.Publishers and Pvt Ltd என்று பதிவுசெய்து, பணியாட்களையும் நியமித்து அதற்குப் பணிப்பாளராகத் தன்னை இணைத்துக்கொண்டதன் காரணமாக, தனது 21 வருடகால ஆசிரிய சேவையிலிருந்து தனது 43ஆவது வயதில் சுயவிருப்பின்பேரில் ஓய்வு பெற்றுக்கொண்டார். இவ்வாறு அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெறுவோருக்கான ஓய்வூதியம் அவர்களது 55 வயது பூர்த்தியான பின்னரன்றி வழங்கப்படமாட்டாது.

தான் உழைத்த, உழைத்துக்கொண்டிருக்கின்ற பணத்தில் ஒரு பங்கை ஏனைய எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முயற்சியான விபரத் திரட்டுகளை எழுதித் தொகுத்து நூலாக்கம் செய்வதற்குப் பயன் படுத்தலானார். இம்முயற்சி வரவேற்கப்பட்டாலும், இதன் காரணமாக எமது பொருளாதாரம் ஒரு வகையில் ஆட்டம் கண்டது என்றுதான் சொல்லவேண்டும்.

எழுத்துப் பணியும் ஒரு கட்டத்தில் அலுப்புத் தட்டிக்கொண்டிருந்த காலகட்டத்தில் புன்னியாமீனின் செயற்பாடுகளில் அக்கறை காட்டிவந்தவர் களுள் ஒருவரான அல்ஹாஜ் யூ.எல்.எம். நௌபர் அவர்களது உளவளத் துணைச் சமூக சேவைகள் பற்றிய ஒரு நூலை எழுத எண்ணம் கொண்டார். அவரது விபரங்களை மிகவும் சிரமப்பட்டுத் தேடி, கோர்த்து

ஆராய்ந்து அவர் எழுதிய நூல் 'ஓர் ஈர நெஞ்சனின் உளவியல் உலா' 570 பக்கங்களைக் கொண்டு உருப்பெற்றது. அதன் வெளியீட்டு விழா, மிகப் பிரம்மாண்டமான முறையில் கொழும்பில் 2013 பெப்ரவரி மாதம் நடந்தேறியது. இலக்கிய உலகை வியக்கவைக்கும் அளவிற்கு வெற்றி கரமான விழாவாக அது அமைந்தது. புன்னியாமீன் அவ்விழாவில் உரையாற்றுகையில், 'இதற்குப் பின்னால் ஒரு வெளியீட்டு விழாவை நடத்துவதற்கு தன்னிடம் உத்தேசமில்லை' எனப் பகிரங்கமாகக் கூறி, அதனையே தனது வரலாற்றுப் பதிவாக்கிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

எமக்கு ஆணும் பெண்ணுமாய் இரு பிள்ளைகள். 2013ஆம் ஆண்டிலேயே அவர்கள் இருவரது திருமணங்களையும் மூன்று மாத இடைவெளிக்குள் சிரமத்துடன் நடத்தி முடித்தோம். இருவருக்கும் ஒவ்வொருவர் என்று இரு பேரக்குழந்தைகளைக் கொஞ்சும் பாக்கியமும் கிடைத்தது. வாழ்வாதாரத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்காக, தரம் 5 புலமைப் பரிசிற் பரீட்சைப் பாடநெறிகளை அகில இலங்கை ரீதியாக பல பாடசாலைகளிலும் அறிமுகப்படுத்தி கடந்த இருபது ஆண்டுகளாகச் செற்பட்டு வந்தோம். ஓய்வு ஒழிச்சல் இன்றிய இந்தத் தார்மீகப் பொறுப்பு பெருஞ்சுமையாக இருந்தாலும், சீராகச் செய்யவேண்டும் என்பதில் அவர் முனைப்பாக இருந்தார். இடைக்கிடையே வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெறும் அளவுக்கு நோயும் ஆட்கொண்டது. இவர் இப்படியே இயங்கி வந்தால், எம்மைப்பற்றி நாம் எப்போது சிந்திப்பது என்ற ஆதங்கமும் எனக்குள் இருந்துகொண்டே வந்தது.

இதற்கிடையே எமக்குள்ளே கருத்துகளும் முரண்படலாயின. நான் அவரது உடல்நலம் காக்க ஓய்வை வேண்டினேன். அவரோ சிறிதும் பிடி கொடுக்காமல் தன் கொள்கையில் பிடிவாதமாக நின்றார்.

அப்படியொரு பொழுதில் தான் புன்னியாமீன் 2015ஆம் ஆண்டு நடுப்பகுதியளவில் என்னிடம் 'நாங்கள் இவ்வருடம் உம்ரா கடமையை நிறைவேற்றுவோமா?' என்று திடீரெனக் கேட்டார். எமக்காக எதையுமே செய்திருக்காத நிலையில் இப்படியொரு அரிய சந்தர்ப்பத்திற்காக நான் காத்திருந்ததினால் மகிழ்ச்சியுடன் ஒத்துக்கொண்டேன்.

இஸ்லாமிய மதம் சாராத வாசகர்களுக்காக இந்த இடத்தில் 'உம்ரா' கடமை பற்றிய சிறு விளக்கம் ஒன்றை இடம்பெறச் செய்வது சாலப் பொருந்தும் என நினைக்கின்றேன்.

இஸ்லாம் மார்க்கத்தைக் கடைப்பிடித்து ஒழுகுபவர்கள் முஸ்லிம்கள் என அழைக்கப்படுகின்றனர். இஸ்லாத்தின் பெருங் கடமைகள் ஐந்து உள்ளன. முதலாவது கலிமா எனப்படும் 'இறைவன் ஒருவன், வணக்கத்துக் குரியவன். அவனன்றி வேறு யாருமில்லை' என நாவால் மொழிந்து

உள்ளத்தால் ஏற்றுக்கொள்ளல். இரண்டாவது - தொழுகை. ஒரு நாளில் ஐந்து வேளைகள் இறைவனுக்காக முஸ்லிம்கள் சிரம் தாழ்த்த வேண்டும். மூன்றாவது- ஏழை வரி. ஸகாத் என அரபு மொழியில் அழைக்கப்படும். வறியவர்களின் தேவைகளுக்காக, தனவந்தர்கள் தமது செல்வத்தின் இரண்டரை சத வீதத்தை ஒதுக்கி அவர்களுக்காகச் செலவு செய்வது. நான்காவது கடமை நோன்பு. வருடத்தின் குறித்தவொரு மாதத்தில் இறைவனுக்காக அதிகாலையிலிருந்து சூரிய அஸ்தமனம் வரையிலான காலப்பகுதியில் விரதமிருந்து அதிகமதிகம் வணங்கி, தர்மம் செய்து, தீய செயல்களிலிருந்தும் தம்மைப் பேணிக் கொள்வது. ஐந்தாவது கடமைதான் ஹஜ் எனப்படும் கிரியை. புனித இஸ்லாம் மார்க்கம் அருளப்பட்ட பிரதேசமான மக்கமா நகருக்கு புனித யாத்திரை மேற்கொள்வது.

மக்காவில் ஒரு பள்ளிவாசல் உள்ளது. அதில் க.்.பா எனப்படும் புனித ஆலயம் அமையப்பெற்றுள்ளது. உலகெங்கிலுமுள்ள முஸ்லிம்களின் ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் பொருட்டு இந்த இறையில்லம் இருக்கும் திக்கை நோக்கியே சகலரும் தொழுகையில் சிரம் தாழ்த்த வேண்டும் என்பது இறைகட்டளை.

தனது குடும்பத் தேவைகளுக்கு மிஞ்சிய அளவில் செல்வம் சேகரித்து வைத்திருப்பவர்களுக்கு மாத்திரமே ‘ஹஜ்’ எனும் கிரியை இஸ்லாத்தில் கடமையாக்கப்பட்டுள்ளது. இதனை மேற்கொள்வதற்கு குறித்த பருவத்தில் ஒரு மாத கால அவகாசமும், இலட்சக்கணக்கான ரூபா பணமும் அவசியம். எனவே சாதாரண நிலைமையில் வாழுகின்ற முஸ்லிம்களுக்கு இந்த ஹஜ் கிரியை எட்டாக்கனி. எனவே அத்தகை யோருக்காக உம்ரா எனும் சிறு ஹஜ் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குறித்த காலப்பகுதியிலன்றி சந்தர்ப்பம் கிடைக்கும்போது இக்கடமையைப் புரிவதற்கு குறைந்த பட்சம் மூன்று நாட்களும் போதுமானது. வாழ்நாளில் ஒரு முறையேனும் க.்.பாவைக் கண்ணாரத் தரிசித்து வலம்வர வேண்டும் என்பது உண்மை முஸ்லிம்களாக வாழ்வோரது, உள்ளத்து வேட்கை. ஏழையாயினும் இந்த அவாவைத் தவிர்க்க முடியாது என்பது தான் உண்மை.

இனி எங்களது உம்ரா கடமையை மேற்கொள்வதற்கான அலுவல் களில் நாங்கள் மூழ்கினோம். குறித்த நாளும் வந்தது. எங்களுடன் புன்னியாமீனது நண்பர்கள், எனது ஆசிரியச் சகாக்கள் சிலர் என்று ஊரவர்களாகவே பலர் இணைந்துகொண்டனர். இது ஒரு வகையில் மகிழ்ச்சியையும் தெம்பையும் தந்தது. 2015 டிசம்பர் மாதம் 16ஆம் திகதி மாலை 5.30 மணிக்கெல்லாம் எமது புனிதப் பயணம் வீட்டிலிருந்து

ஆரம்பமானது. விமானப் பயணத்திற்கான இரு நாட்கள் தவிர்ந்த பத்து நாட்கள் எமது சமயக் கிரியைகளுக்கானது.

முதலில் மதினா நகரை அடைந்து நான்கு தினங்கள் தங்கி உரிய கிரியைகளை மேற்கொண்டுவிட்டு, 1500 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மக்கமா நகரை அடைந்தோம். அங்கே உம்ரா கடமையை நிறைவேற்றினோம். இடையே களப்பயணங்களும் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தன. அப்படியொரு களப்பயணத்தின் போதுதான் புன்னியாமீனுக்கு சளிச்சுரம் கண்டது. பயணத்திலிருந்து திரும்பியதும் மக்கா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அடுத்தநாள் காலையில் தங்கும் விடுதிக்கு அழைத்துவரப்பட்டார். ஓரளவு சுகமும் கண்டார். நான் அவருடனேயே அன்றைய பொழுதைக் கழித்தேன். ஆண்-பெண்கள் தங்குமறைகள் வேறாக இருந்ததினால் மருந்து மாத்திரைகளைக் கொடுத்துவிட்டு என்னறைக்கு இரவு திரும்பிவிட்டேன்.

அன்று இரவு 11 மணியளவில் புன்னியாமீனுக்கு 'ஸ்ரோக்' வந்து கட்டிலால் விழுந்துவிட்டதாகத் தகவல் வந்தது. விரைந்தோடினேன். இடது பக்க கையும் காலும் தளர்ந்துபோன நிலையில் வாய்ப்பகுதியும் கோணலான நிலையில் கிடந்த அவரை உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றார்கள். தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். நாங்கள் நாடு திரும்புவதற்கு மூன்று நாட்களே எஞ்சியிருந்தன. வைத்தியசாலையில் நானே மூன்று இரவுகளும் தங்கியிருந்தேன். எங்கோ ஒரு நாட்டில் மொழியும் புரியாமல் வழியும் தெரியாமல் நான் மலைத்து நின்றேன். கூடவந்தவர்கள் போய்விட்டால் என் கதி என்னாவது என்று அச்சப்பட்டேன்.

வருவது வரட்டும் என்று மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு செயலில் இறங்கினேன். வைத்தியர்களைக் கெஞ்சிக்கேட்டு வைத்திய சாலையிலிருந்து ஒருவாறு விடுகைபெற்றேன். எமது பிரயாண முகவர் இதற்கு உதவி செய்தார். அடுத்த நாள் அதிகாலையிலேயே அவரை அழைத்துக்கொண்டு 1500 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள மதினா விமான நிலையத்திற்கு குழுவினருடன் பஸ் வண்டியில் பயணித்தேன். மக்கா விலிருந்து ஜித்தா விமான நிலையத்திற்கு இரண்டு மணித்தியாலப் பயணம். ஜித்தாவிலிருந்து பின்பு நேராக ஸ்ரீலங்கா வந்துசேர நான்கு மணித்தியாலம். எனினும் என் இயலாமை அவரை நேரடியாக ஒரே விமானத்தில் இலங்கைக்கு அழைத்துவர முடியாமல் போனது. நோயாளியான புன்னியாமீனை மிகுந்த சிரமங்களுக்கும் சிக்கல்களுக்கும் மத்தியில் ஒருவாறு துபாய்க்கு விமானமேற்றினோம். அந்த விமானப் பயணத்தில் அவருக்குப் பக்கத்து இருக்கையில் அமர்ந்து பயணிக்கும் வாய்ப்புக் கூட எனக்குக் கிட்டவில்லை.

விமானத்தில் வைத்தே புன்னியாமீன் கடுமையான முறையில் பாதிப் புற்றிருக்கிறார். மக்காவில் வைத்து இவரது மூளையில் ஏற்பட்டிருந்த இரத்தக் கசிவு ஏனோ எனக்கு மறைக்கப்பட்ட நிலையிலேயே சகலரும் இயங்கியிருப்பது தெளிவானது. நீண்ட தூர பஸ் வண்டிப் பயணமும், பசிக்கு உணவு உட்கொள்ளமுடியாத மயக்கநிலையும், தொடர்ந்த விமானப் பயணமும் அவரை நன்றாகவே வதைத்திருக்கிறது. மூளையில் இரத்தக் கசிவும் அதிகரித்திருக்கிறது. எப்படியோ சொந்த நாட்டிற்குத் திரும்பிவிட வேண்டும் என்ற என் எதிர்பார்ப்பில் மண் அள்ளிப் போட்டபடி 'கோமா' நிலையில் அவர் துபாய் வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். கூடவே மாரடைப்பு ஒன்றும் அதே சமயம் ஏற்பட்டு வைத்தியர்களின் பகீரதப் பிரயத்தனத்தின் பின்னரே இதயத்துடிப்பு மீளெடுக்கப்பட்டது. நான் நிர்க்கதியானேன். 32 நாட்கள் துபாய் மருத்துவமனையின் அதிநவீனசிகிச்சை முறைகளாலும், இறைவனின் அருளோடும் அவர் மெல்ல மெல்லத் தேறி வந்தார். சிரமங்களுக்கு சளைக்காமல் முகம்கொடுத்து அவரை நாட்டுக்கு அழைத்து வந்தேன். மேலும் 35 நாட்கள் அவரது கை, கால்களுக்கான பயிற்சி வழங்கி இயக்கவைக்கும் நோக்கில் பல்லேகல ஆயுர்வேத வைத்தியசாலையில் சுதேச வைத்திய முறையை நாடி ஓரளவு பலனும் பெற்றேன். இறுதியில் அவரை ஆட்கொண்டிருந்த நிரிழிவு நோயின் உக்கிரமும், இரத்தக் கசிவு நடைபெற்ற மூளைப்பகுதியின் பலவீனமும், காலில் ஏற்பட்ட சிறு காயத்தினூடாக வெறும் ஐந்தே நாட்களில் அவரை என்வசமிருந்து பறித்துக்கொண்டு விட்டது.

நான் எதிர்கொண்ட இன்னல்களில் பங்குகொண்டு எனக்கு உதவியாகவும், மன ஆறதலாகவும் இருந்தவர்களை எப்போதும் என் வாழ்வின் இறுதிவரை என் மனதில் நன்றியுணர்வுடன் நினைத்திருப்பேன். அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றியை பதிவுசெய்யக் கடமைப்பட்டுள்ளேன்.

மக்கா நகரில் என் கணவர் தனது புனிதக் கடமையை நிறைவேற்று வதற்கு தோள் கொடுத்தவர்களான திரு. ஏ.ஆர்.எம். ரிஸ்வி (கலைமகள் ஹிதாயாவின் கணவர்), திரு.நௌஷாட் மொஹமட் (என் அண்ணன் மகன்), புனிதப் பயணத்தை மேற்கொண்டது முதல் டுபாய் விமான நிலையம் வரை வந்து உறுதுணையாக இருந்தவர்களான திரு ஏ.ஆர். எம்.பாஹிம் உட்பட ஊரவர்களான அவரது நண்பர்கள், திரு.ஏ.எம். வைஸ் உட்பட எனது கணவரின் நண்பர்கள்,

டுபாய் நகரில் எனக்கு அடைக்கலம் தந்த ஊரவரான திரு.ஹஸ்லிம் மொஹமட், மனைவி ஹம்ஸியா மற்றும் குடும்பத்தினரும் உறவினர்களும்,

டுபாய் மருத்துவமனைக்கு வந்து ஆறுதல் தந்த எனதும் என் கணவரினதும் முன்னாள் மாணவர்கள், ஊரவர்கள், முகநூல் நணபர்கள், வைத்தியசாலையினுள்ளும் நகருக்குள்ளேயும் என் வெளிவேலைகள் பலவற்றுக்கும் உதவிய பெறாமகன் காலியைச் சேர்ந்த மொஹமட் அப்ரார், மருத்துவ மனையில் என் உடன்பிறந்த சகோதரனிலும் மேலாய் என் கஷ்ட நஷ்டங்களில் வலிந்து பங்கெடுத்து, என் கணவரது உடல்நலத்தில் அதிக அக்கறை காட்டியும், என் கணவரின் சுகயீனம், மற்றும் உடல்நிலை மாற்றங்களை வெளியுலகம் உடனுக்குடன் அறியச்செய்ய பாடுபட்ட கலையன்பன் ரபீக், அவரது அருமைத் துணைவியார் நிஷா ரபீக், மற்றும் அவரது பிள்ளைச் செல்வங்கள் (டுபாயில் ஒரே தமிழ்த் தொலைக்காட்சி சேவையான ‘சங்கமம்’ சேவையின் இயக்குநரான கலையன்பன் கொழும்பு நகரைப் பிறப்பிமாகக்கொண்டவர்), இலங்கைக்கு நாம் திரும்புவதற்கு உதவிசெய்த ‘ஸஹன’ (Sahana) இயக்கத்தின் அங்கத்தவர்கள் (இவ்வியக்கம் டுபாயில் தொழில்புரியும் இலங்கையர்களால் நிர்வகிக்கப்படுகின்றது),

அயல்நாட்டில் நாம் அல்லலுற்ற வேளையில், இலங்கையில் எமது பிள்ளைகளுக்கு ஆறுதலும் ஆதரவும் அளித்துக்கொண்டிருந்த என் உடன்பிறந்த சகோதரிகள், என்கணவரது அண்ணன் எஸ்.எம். பௌஸர், மற்றும் அயலவர்களான உறவினர்கள், பல அலுவல்களுக்கு மத்தியிலும் நேசக்கரம் நீட்டிப் பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்த எனது கல்லூரி அதிபரும், கணவரது உற்ற நண்பருமான திரு. ஏ.ஆர். எம்.உவைஸ் அவர்கள்,

மனதுக்கு ஆறுதலளிக்கும் விதத்தில் தொலைபேசியில் கதைத்து சில ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஒத்துழைத்த சகோதரர் அல்ஹாஜ் யூ.எல்.எம். நௌபர் அவர்கள், அதிகரித்த செலவினங்களுக்காக உதவிக்கரம் நீட்டிய நல்லுள்ளங்களான தம்பி ஜெயபாலன், மற்றும் கனடா ஏ.ஆர்.எம்.லுத்பி (முன்னாள் ஆசிரியர்), என் குடும்ப உறுப்பினர்கள், ஆசிரியச் சகாக்கள், எனது கணவரின் நினைவாக தனது மலரும் நினைவுகளை இந்த நூல்வழியாகப் பகிர்ந்து கொண்டவரான எம் உடன்பிறவாத லண்டன் அண்ணா செல்வராஜா, என் கணவரது உடல் நலத்துக்காய் உருகிப் பிரார்த்தனைகள் மேற்கொண்ட ஊர்மக்கள், அயலூர் வாசிகள், எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், முகநூல் நண்பர்கள், உள்ளூர் வெளியூர் சமூக இயக்கங்கள்,

இவர்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றிகள்.

**திருமதி மஸீதா புன்னியாமீன்**
உடத்தலவின்ன, 19.4.2016

# என்னுரை

அமரர் புன்னியாமீனுடனான எனது தொடர்பு 2003இல் ஏற்பட்டது. அவரது வாழ்வின் இறுதிவரை அது தளராமல் தொடர்ந்தது. அந்த நட்பு வித்தியாசமானது. மதம் கடந்தது, கடல்-நிலம் கடந்தது. என்றும் நினைத்திருக்க இனிமையானது.

புன்னியாமீன் லண்டனுக்கு வந்திருந்த வேளையில் அவர் எனது குடும்பத்தினருடன் மனதால் ஒருங்கிணைந்துகொண்டவர். அவர் இங்கிருந்த வேளைகளில் எனது திட்டமிட்ட வாழ்க்கை முறையினை மிகுந்த ஆர்வத்துடன் அவதானிப்பதை நான் அறிந்திருக்கிறேன். அவரிடம் எப்பொழுதும் என்னிடம் கேட்பதற்கு ஒரு கேள்வி தயாராகவே இருக்கும். அதில் முக்கியமானதும் இறுதிவரை அவருக்கு விடைகிடைக்காததும் என்று ஒன்றுண்டு. 48 மணி நேரத்தில் கூட செய்துமுடிக்க முடியாத வேலைகளை எப்படி 'பிரதரால்' (என்னால்) 24 மணிநேரத்தில் செய்து முடித்து எவ்வித மன உளைச்சலுமின்றி சந்தோஷமாக இருக்க முடிகின்றது? என்று எனது துணைவியாரிடம் அடிக்கடி கேட்டபடி இருப்பார். அதற்கான பதிலை அவருக்கு என்னால் இறுதிவரை வழங்கவே முடியவில்லை.

எமது இல்லத்தில் தங்கியிருந்த வேளையில் எனது வாழ்க்கை வரலாற்றை தான் எழுதப்போவதாகத் தானே முடிவெடுத்தார். லண்டனை விட்டுப் புறப்படும் முன்னரே 'மௌனமாகப் பெய்யும் மாமழை' என்று எனது வாழ்க்கைவரலாற்றுக்கான பெயரையும் தானே வைத்துவிட்டார். என்னிடமிருந்த ஆவணக் கோப்புகளை தானே தோண்டித் துருவி ஒரு கட்டு தகவல்களையும் எடுத்துத் தன் பயணப்பொதிக்குள் வைத்துக் கொண்டார். அவரது வாழ்நாளில் அதனை அவரால் எழுதவே முடிய வில்லை. காலமும் வேகமாகக் கடந்தது. எனது மணிவிழா மலரை 2014இல் வெளியிட குமரன் புத்தக இல்லம் முன்வந்தபோது புன்னியாமீனின் தலைப்பினையே அந்த மலருக்கும் வைத்தோம். 'மௌனமாய்ப் பொழியும் மாமழை' என்ற தலைப்பில் அந்த மலர் புன்னியாமீனின் விருப்பத்தை ஓரளவு நிறைவேற்றியது. அந்த மலரில் அவர் எழுதிய கட்டுரையையே இந்நூலிலும் வாழ்த்துரையாகப் பதிவுசெய்துள்ளேன்.

இலங்கை முஸ்லிம் எழுத்தாளர், கலைஞர், ஊடகவியலாளர்களின் வாழ்வையும் பணிகளையும் உலகிற்கு வெளிச்சமிட்டுக் காட்டியவர் புன்னியாமீன். தனது நட்புக்குரிய நவமணி ஆசிரியர் எம்.பி.எம். அஸ்ஹர்

28.8.2008இல் மறைந்தபோது உடன் பிறந்த சகோதரனை இழந்ததுபோல மிகவும் வருந்தியவர். அவரது மறைவையடுத்து தனது வருத்தத்திற்கு வடிகால் தேடிக்கொள்ளும் வகையில் அமரர் அஸ்ஹர் அவர்களின் 40ஆம் நாள் 'கத்தமுல் குர்ஆன்' தமாம் நிகழ்வை முன்னிட்டு 'மறைந்தும் மறையாத நவமணி அஸ்ஹர்' என்ற நூலை வெளியிட்டு ஆத்ம திருப்தி யடைந்தார். அதனையே நானும் இன்று செய்திருக்கிறேன். மதம் கடந்த மதிப்பை ஈழத்து இலக்கியவாதிகளிடம் வைத்திருந்த அவர் தான் மதிக்கும் தமிழ் எழுத்தாளரான அமரர் வை. அநவரத விநாயகமூர்த்தி என்ற படைப்பாளியின் மறைவையொட்டி அவரது வாழ்வும் பணிகளையும் ஒரு கையடக்க நூலாக தனது செலவிலேயே அச்சிட்டு '31ஆம் நாள் அந்தியேட்டி நிகழ்வின்' போது அவரின் குடும்பத்தினரின் கைகளில் வழங்கி, அவர்களின் கண்களில் வழிந்த ஆனந்தக் கண்ணீரைக் கண்டு மனம் குளிர்ந்தவர் புன்னியாமீன்.

பின்னாளில் தனது வாழ்வில் நெருக்கமான உளவளவியலாளர் யூ.எல்.எம். நௌபர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் அவர் ஆற்றும் உளவளத்துணை செயற்பாடுகளையும் நன்கு அவதானித்து முன்னெப்போதும் தமிழ் எழுத்துலகில் எழுதப்பட்டிராதவொரு கோணத்தில் வித்தியாசமான நூலாகவே அதனை எழுதிமுடித்திருந்தார். இதுவொரு வாழ்க்கை வரலாறா உளவளத்துணை நூலா என்று பிரித்தறிய முடியாதவாறு மிக ஆழமாக ஆய்வுசெய்து அந்த நூலை 550 பக்கங்களில் 2012இல் எழுதிமுடித்தார். அதுவே புன்னியாமீனின் இறுதி நூலாகவும், எதிர்காலத்தில் அவரது பெயரை புதியதொரு அரங்கில் நிலைநிறுத்தவல்ல நூலாகவும் ஆயிற்று.

இன்று புன்னியாமீன் எம்மிடையே இல்லை. ஆனால் அவரது நினைவு மட்டும் என்றும் வாழும். 'வாழும்போது வாழ்ந்த வாழ்க்கை போகும்போது தெரிகிறது' என்றார் கவிஞர் கண்ணதாசன். தான் அறிந்த அறிஞர்களை உலகறியச் செய்த பெருமகனின் வாழ்வையும், அவரைப் பற்றிப் பலரும் அறிந்திராத சில பக்கங்களையும் பதிவுசெய்து வைக்க வேண்டும் என்ற எனது பெருவிருப்பின் வெளிப்பாடாகவே இச்சிறுநூல் அமைந்துள்ளது. இது அமரர் புன்னியாமீனின் முழுமையான வாழ்க்கை வரலாறல்ல. எம்முடன் நட்புரீதியாக அவர் பகிர்ந்துகொண்ட தகவல்களும் எம்முடன் இணைந்து அவர் பங்கேற்ற பல்முனைச் சமூக நலச் சேவை களும் இந்நூலின் வழி உங்களை அடைகின்றது. அதனை முடிந்தவரை எனது நினைவுத் தடத்திலிருந்து தொகுத்து உங்களுக்கு அவசர அவசரமாக வழங்கியுள்ளேன். புன்னியாமீனின் மதம் கடந்த நட்பு எதிர் காலத்தில் தமிழ்-முஸ்லிம் உறவுகளுக்கு ஒரு வழிகாட்டியாக அமையும்

என்பது என் நம்பிக்கை. மேலும் எதிர்காலத்தில் புன்னியாமீனின் முழுமையான வாழ்க்கை வரலாற்றை எழுதமுனையும் அவரது நண்பர்களுக்கு புன்னியாமீனின் வாழ்வின் சில பக்கங்களை அறிந்து எழுதுவதற்கும் இந்நூல் பயனுடையதாக இருக்கும்.

மரணம் ஒருவரின் வாழ்வின் முடிவல்ல. அவர் வாழ்ந்தபோது செய்த நற்காரியங்கள் அவரை மறைவின் பின்னரும் எம்மால் நினைக்க வைக்கும். திருவள்ளுவர் கூற்றில் ‘நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டிவிடும்’ என்பதை புன்னியாமீனின் வாழ்வு மெய்ப்பிக்கும்.

இந்நூலை வெளியிட மறுபேச்சின்றி முன்வந்திருந்த தேசம் - ஜெயபாலனுக்கும், புன்னியாமீனின் இறுதிக்காலத்தை உடனிருந்து கண்ட அவரது துணைவியார் வழங்கிய முன்னுரைக்கும், அவசர வாழ்வுக்கு மத்தியில் இதனை அழகாக அச்சுருவில் காணவைத்த குமரனுக்கும் உளமார்ந்த நன்றி. இந்நூலில் ஆங்காங்கே இடம்பெறும் கவிதை வரிகளின் உரித்தாளன் கவிஞர் வைரமுத்து அவர்கள். நன்றியுடன் அவ்வரிகளை நூலைப் பொலிவுறவேண்டி பயன்படுத்தியிருக்கிறேன்.

**என். செல்வராஜா**
19.04.2016

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| வெளியீட்டுரை | | vii |
| முன்னுரையாக ஒரு முடிவுரை | | x |
| என்னுரை | | xvii |
| 1. | ஒரு உடன்பிறவாத சகோதரனின் அறிமுகம் | 1 |
| 2. | புன்னியாமீனும் சிந்தனை வட்டமும் | 7 |
| 3. | ஈழத்துத் தமிழ் நூலியல் வரலாற்றில் சிந்தனை வட்ட வெளியீடுகள் | 24 |
| 4. | புன்னியாமீனும் அவரது ஆவணமாக்கல் பணிகளும் | 28 |
| 5. | நூல்தேட்டத் தொகுப்பு மற்றும் நூல் வெளியீடுகளில் புன்னியாமீனின் பங்களிப்பு | 51 |
| 6. | புன்னியாமீனின் உதவியுடன் இலங்கையில் புத்தக விநியோகம் | 70 |
| 7. | புன்னியாமீன் - லண்டன் உறவுப்பாலம் | 75 |
| 8. | புன்னியாமீன் எழுதிய நூல்கள்: ஒரு நூல்விபரப்பட்டியல் | 91 |
| பின்னிணைப்பு: நூலாசிரியர் அறிமுகம் | | 141 |

# 1

# ஒரு உடன்பிறவாத சகோதரனின் அறிமுகம்

சகோதரர் பீர்முகம்மது புன்னியாமீன் பற்றிய எனது நினைவுப் பதிகையை தொடங்கும் வேளையில், புன்னியாமீனுடன் எனது தொடர்பின் ஆரம்ப காலத்தை எண்ணிப்பார்க்கின்றேன். கடந்துசென்ற ஒக்டோபர் 2014இல் கொழும்பிலிருந்து குமரன் பதிப்பக அதிபர் க. குமரன் அவர்களால் தொகுக்கப்பெற்று குமரன் புத்தக இல்லத்தினரால் 'மௌனமாய்ப் பொழியும் மாமழை' என்ற தலைப்பில் வெளியிடப்பெற்ற எனது சேவை நயப்பு மலரில் அமரர் புன்னியாமீன் என்னைப்பற்றியும் எனது பணிகள் பற்றியும் ஒரு கட்டுரையை எழுதியிருந்தார். அதனை அவர் இவ்வாறு தொடங்குகின்றார்.

"மூன்று தசாப்தங்களுக்கு மேலான எனதிலக்கியப் பயணத்தில் 2003 ஜனவரி வரை நூலகவியலாளர் என். செல்வராஜா அவர்களுடன் எனக்கு எந்தவிதமான தொடர்புகளும் இருக்கவில்லை. ஊடகங்களில் அவரது சில கட்டுரைகளை வாசித்துள்ளேனே தவிர அவரைப்பற்றி வேறு ஒன்றையும் நான் தெரிந்திருக்கவில்லை.

2002ஆம் ஆண்டின் இறுதியில் பேராதனைப் பல்கலைக்கழக நிகழ்வொன்றில் கலந்து கொள்ள பல்கலைக்கழகம் சென்ற நேரத்தில் சிரேஷ்ட துணை நூலகர் மகேஸ்வரன் அவர்கள் "நூல் தேட்டத்தில் உங்களுடைய புத்தகங்கள் பற்றிய பதிவுகள் இடம்பெற்றுள்ளன" என்று கூறும் வரை நூல்தேட்டம் பற்றியும் நான் அறிந்து வைத்திருக்கவில்லை.

பின்பு ஒரு நாள் கொழும்பு பூபாலசிங்கம் புத்தகநிலையத்திற்கு சென்றிருந்த நேரத்தில் நூல்தேட்டம் முதலாம் தொகுதியைக் கண்டு அதனை நான் விலை கொடுத்து வாங்கினேன். லண்டனில் அச்சிடப்பட்ட அந்த நூலில் 1000 இலங்கைத் தமிழ் நூல்கள் பதிவாக்கப்பட்டிந்தன. நூலில் 003வது பதிவாக என்னுடைய 'இலக்கிய விருந்து' எனும் நூலும், 445வது பதிவாக 'பாலங்கள்' என்னும் கவிதைத் தொகுப்பு நூலும் பதிவாக்கப்பட்டிருந்தன. இந்நூல்கள் இரண்டும் இந்தியா - தமிழ் நாட்டில் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்தவையாகும். எனவே அவர் இந்தியா சென்ற நேரத்தில் அவற்றைப் பெற்றிருப்பார் என எனக்குள்ளேயே முடிவெடுத்துக் கொண்டேன்.

2003ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒரு நாள் எனக்கு இலண்டனி லிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. “புன்னியாமீன்.. நான் இலண்டனிலிருந்து செல்வராஜா கதைக்கின்றேன்....” ஆளுமையான அதேநேரம் கனிவான ஒரு குரல் இலாவகமாகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டது.

“உங்களுடைய முஸ்லிம் எழுத்தாளர் விபரத்திரட்டு முயற்சிகள் எந்தளவு உள்ளன?” அவர் கேட்ட போது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. “ஓர் உண்மையான ஆய்வாளன் தன்னைப்பற்றி மாத்திரம் சிந்திக்க மாட்டான், அவனது சிந்தனை பரந்துபட்டிருக்கும்” என்பதனை அன்று அனுபவரீதியாக நான் உணர்ந்து கொண்டேன்.

சுமார் 25 நிமிடங்கள் மட்டில் எமது உரையாடல் தொடர்ந்தது. எமது உரையாடலில் ‘நூல்தேட்டம்’ பற்றிய கருத்துக்களும், எனது எழுத்தாளர் விபரத்திரட்டு பற்றிய கருத்துக்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. என்னுடைய ஏனைய நூல்விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும், என்னுடைய எழுத்தாளர் விபரத்திரட்டில் இடம்பெற்ற எழுத்தாளர்களின் நூல் விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும் விபரத்திரட்டுப் படிவத்தை அனுப்பி வைப்பதாகக் குறிப்பிட்டார்.

முதல் முறை அவர் கதைத்தபோதே அவரின் பேச்சில் ஒரு வசீகரத் தன்மையை நான் உணர்ந்தேன். அவரின் இரத்தத்தோடு ஊறிய இலக்கிய தாகத்தின் விளைவான ஆவணப்படுத்தல் உணர்வினை அறிந்துகொண்டேன்.

தன் அனுபவத்தின் ஊடாக பிறருக்கு அறிவுரை கூறும் பண்பைத் தெரிந்துகொண்டேன். முதல் தொலைபேசி அழைப்பையடுத்து எமது உறவு மிக நெருக்கமானது. வாரத்தில் மூன்று அல்லது நான்கு தினங்கள் நாங்கள் தொலைபேசியினூடாக கருத்துகளைப் பரிமாறிக்கொள்வோம்.

பிறப்பால் செல்வராஜா ஒரு இந்துவாக இருந்தபோதிலும் கூட இஸ்லாம் மதத்தைப் பற்றி, இலங்கையின் இஸ்லாமிய எழுத்தாளர்கள் பற்றி, அவர்களின் நூல்கள் பற்றி நிறைய அறிந்து வைத்திருந்தார்.

சுமார் இரண்டரை ஆண்டு தொடர்பில் அவரைப்பற்றியும், அவரது இலட்சியங்கள் பற்றியும், அவரது பண்புகள் பற்றியும் நிறைய விளங்கிக் கொண்டேன்.

அவரின் குணாதிசயங்களினூடாக அவரைப்பற்றி உயர்ந்த எண்ணம் என் மனதில் இடம்பிடித்தது. இக்காலகட்டங்களில் ‘நவமணி’ பத்திரிகையில் நான் எழுதிக்கொண்டிருந்த இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு தொடருக்கு நியாயமான ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கிவந்த அதேநேரத்தில் தான் வாராந்த உரைநிகழ்த்தும் இலண்டன் ஐ.பி.சி.

வானொலியிலும் இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள் பற்றிய குறிப்பு களையும் இடைக்கிடையே சேர்த்துக்கொண்டார்.”

மேற்குறிப்பிட்டவை அக்கட்டுரையில் இடம்பெற்றிருந்த புன்னியாமீனின் மனப்பதிவுகள். (அவரது விரிவான கட்டுரை இந்நூலின் பின்னிணைப்பில் இடம்பெற்றுள்ளது).

புன்னியாமீனின் அறிமுகம் எனக்குக் கிடைக்க வழியமைத்துத் தந்தவர், மலையக இலக்கியவாதியும், ‘கொழுந்து’ சஞ்சிகையின் ஆசிரியருமான அந்தனி ஜீவா அவர்களேயாவார். அந்தனி ஜீவாவின் தொடர்பு நான் யாழ்ப்பாணத்தில் ‘ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டு நிறுவனத்தில்’ பிரதம நூலகராகப் பணியாற்றிய காலகட்டத்தில் 1989இல் தான் முதலில் ஏற்பட்டது.

இந்திய இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இலங்கையின் வடக்கு-கிழக்கு கொண்டுவரப்பட்டிருந்த சிக்கலானதொரு காலகட்டம் அது. அவ்வாண்டில் ஒக்டோபர் மாதத்தின் இறுதிப்பகுதியில் உள்ளூராட்சித் திணைக்களத்தின் மூலம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் ‘ஈழத்து நூல், சஞ்சிகை, ஓவிய, சிற்பக் கண்காட்சி’யொன்று நடைபெற்று வந்தது. அப்போது உள்ளூராட்சி உதவி ஆணையாளராகவிருந்த திரு. சுந்தரம் திவகலாலா அவர்களுக்கு உதவியாக, புத்தகக் கண்காட்சிப் பணிகளில் என்னை ஈடுபடுத்திக்கொண்டிருந்த வேளையில் அம்மண்டபத்தில் என்னை கண்டியிலிருந்து நண்பர்களுடன் வந்திருந்த மலையக எழுத்தாளர் அந்தனி ஜீவாவுக்கு, திரு. என்.சோமகாந்தன் அறிமுகம் செய்து வைத்தார். அன்றுமுதல் இன்றளவிலும் தொடரும் அந்தனி ஜீவாவின் சுயநலம் கருதாத நட்பு, எனது நூல்தேட்டம் பணிகளுக்கு மிகவும் உதவியாகவிருந்தது. அவரது உதவியில்லாது போனால், நூல்தேட்டத்தில் மலையக நூல்களை இடம்பெறச் செய்வது கடினமாகவே இருந்திருக்கும்.

நூல்தேட்டம் முதலாவது தொகுதியை 2002இல் லண்டனில் பெரும்பணச்செலவில் அச்சிட்டும் அதனை பரவலாக விநியோகிக்க முடியாது நொந்துபோயிருந்த வேளையில், அடுத்த தொகுதியை இலங்கையில் தான் செய்வதென்ற தீர்மானத்தை எடுத்திருந்தேன். அதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் கொழும்பிலிருந்த அந்தனி ஜீவாவுடன் தொலைபேசியில் உரையாடினேன். எமது உரையாடல்களுக்கிடையே அவர் மலையகத்தில் கட்டுகஸ்தொட்டை பகுதியில் திரு. புன்னியாமீன் என்றொருவர் சிந்தனை வட்டம் என்றதொரு நிறுவனத்தை நடத்துகிறார். அவர் பதிப்புத்துறையில் மிகுந்த ஈடுபாடும் அனுபவமும் கொண்டவர் என்றும், அவருடன் கதைத்தால் எனக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் கூறினார்.

அந்தனி ஜீவா, ஈழத்துப் படைப்பாளிகளில் சற்று வித்தியாசமானவராக இருந்தார். தன்னை வலிந்து என் நூல்தேட்டத் தொகுப்புப் பணிகளில் ஈடுபடுத்திக்கொண்டு, தன்னாலியன்ற வரையில் மலையக நூல்களை நூல்தேட்டத் தொகுப்பில் ஆவணப்படுத்துவதற்கு தனிமனிதனாக நின்று உதவி வந்ததுடன், பிற மலையக இலக்கிய நண்பர்களிடமும் சந்தர்ப்பம் கிட்டும் போதெல்லாம் என்னைப்பற்றிச் சொல்லி எனது தொடர்பினை ஏற்படுத்தி வந்தார்.

புன்னியாமீன் என்ற ஒருவரைப் பற்றிக் கூறி அவர் இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள் பற்றிய தகவல்களைத் திரட்டும் வகையில் கேள்விக் கொத்துக்களை விநியோகித்து வருகிறார் என்றும் குறிப்பிட்டு, அவருடன் தொடர்புகொண்டால் முஸ்லிம் எழுத்தாளர்கள் எழுதிய நூல்கள் பற்றிய விரிவான தகவலும் எனக்குக் கிடைக்கும் என்ற மேலதிகமான செய்தியொன்றையும் அந்தனி ஜீவா தெரிவித்தார். அத்துடன் அவர் நின்றுவிடவில்லை. புன்னியாமீனின் தொலைபேசி இலக்கத்தையும் எனக்கு வழங்கியிருந்தார்.

இதன் அடிப்படையிலேயே திரு. பீ.எம். புன்னியாமீன் அவர்களுடன் 2003ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தொலைபேசியின் ஊடாகத் தொடர் பாடலை ஏற்படுத்திக்கொண்டேன். இருவரும் ஆவணமாக்கல் என்ற ஒரே பாதையில் தனிமனித முயற்சியாக எமது கன்னிப் பயணத்தை அப்போது தான் தொடங்கியிருந்தோம். நான் ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்களைத்தான் ஆவணமாக்கும் பணியைத் தொடங்கியிருந்தேன். அவரோ ஈழத்து எழுத்தாளர்களின்- குறிப்பாக முஸ்லிம் எழுத்தாளர்களின் வாழ்வும் பணியும் பற்றிய பாரிய தகவல் திரட்டொன்றை உருவாக்கும் நோக்கில் அடிப்படைக் கேள்விக் கொத்தொன்றை பத்துப் பக்கத்தில் தயாரித்து விநியோகித்துக் கொண்டிருந்தார்.

இலங்கையில் முஸ்லீம்களில் தமிழ்பேசும் முஸ்லீம்கள் இருப்பது போலவே, தமிழில் பரிச்சயமற்று, சிறுவயது முதலே சிங்களமயப்படுத்தப்பட்ட சிங்களம் பேசும் முஸ்லீம்களும் இருக்கிறார்கள். தமிழ் பேசும் முஸ்லீம் களைப் பொறுத்தவரையில் அவர்களிடையே வாழும் எழுத்தாளர்களுள் பெரும்பாலானவர்கள் இஸ்லாமிய மதம்சார்ந்த நூல்களையும், இஸ்லாமிய கலாச்சாரம் சார்ந்த நூல்களையும் மாத்திரமே இலங்கையில் எழுதி வருபவர்கள். இவர்கள் இலங்கையின் பூர்வீகத் தமிழ் எழுத்தாளர் களுடனான தொடர்புகளையே கொண்டிராதவர்கள். இவர்களையும் தமிழ் எழுத்தாளர்களாகவே நூல்தேட்டம் உள்வாங்கி வருகின்றது. இதற்கு உதவியாகநின்று பின்னாளில் உழைத்தவர் புன்னியாமீன் அவர்களே. முஸ்லிம் தமிழ் எழுத்தாளர்களில் மற்றொரு பகுதியினர் பாரம்பரிய தமிழ்ப் படைப்பாளிகளோடு இலக்கியத் தொடர்பு கொண்டவர்கள்.

இவர்கள் தமிழ்ப்படைப்பாளிகளுக்கும் வாசகர்களுக்கும் நன்கு அறிமுகமானவர்கள். இவர்களது படைப்புகளில் மதவாடை வீசுவது அரிது.

என்னைப் பொறுத்தவரையில் நூல்தேட்டம் ஈழத்துத் தமிழ்ப் படைப்புக்களை தமிழ் முஸ்லீம் என்ற வேறுபாடின்றி உள்வாங்கிக்கொள்ள வேண்டும் என்று முதலாவது தொகுதியிலிருந்தே இயங்குபவன். அதனால் எனக்கு புன்னியாமீனின் தொடர்பு முஸ்லீம் படைப்பாளிகளை இனம் காண்பதற்கு மிகுந்த உதவியாக இருக்கப்போகின்றது என்பதை அவருடனான முதலாவது தொடர்பாடலில் இருந்தே உணர்ந்துகொண்டேன்.

2003 ஆரம்பத்தில் முளைவிட்ட தொடர்பினைத் தன் மரணம் வரை சளைக்காமல், பேணிவந்தவர் சகோதரர் புன்னியாமீன். முதல் தொடர்பாடலிலிருந்து இறுதிக்காலம் வரை என்னை ‘பிரதர்’ என்று தான் அவர் விழித்தழைப்பார். எனது பெயரை என்றுமே குறிப்பிட்டு என்னுடன் கதைத்ததாக எனக்கு நினைவில்லை. எப்போதும் ‘பிரதர்’ தான்.

இதனைப்பற்றி ஒரு கட்டுரையில் புன்னியாமீன் அவர்களே பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

‘நான் எழுதிய நூறாவது புத்தகமான இலங்கை எழுத்தாளர் ஊடகவியலாளர் கலைஞர்களின் விபரத்திரட்டு 4ஆம் தொகுதியின் வெளியீட்டு விழாவினை என் இலண்டன் பயணத்துடன் இணைந்த வகை யில் 2007மார்ச் 17ஆம் திகதி ஜேர்மன் டியுஸ்பேர்க் நகரில் வெளியிடு வதற்கான ஏற்பாடுகளை ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது.

இதற்கான ஏற்பாடுகளை நான் இலங்கையில் இருந்தபோதே ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஒழுங்கு செய்திருந்தது. இருப்பினும் வைத்தியக் காப்புறுதி சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறியமையினால் ஜேர்மன் செல்வதற்கான வீஸாவினை என்னால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால் இலண்டனுக்கான வீஸாவினை நான் பெற்றிருந்தேன். இலண்டனில் வைத்து ஜெர்மனிக்கான வீஸாவினைப் பெற முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் கூட அவையும் தோல்வியில் முடிந்தன.

இதனால் நான் மனதளவில் பெரிதும் பாதிக்கப்பட்டேன். முக்கியமாக எனது நூறாவது புத்தகத்தின் வெளியீடு அது. என் மனஅழுத்தத்தைப் புரிந்து கொண்ட செல்வராஜா குடும்பத்தினர் அனைவருமே எனக்கு ஆறுதல் தந்து என்னைத் தேற்றினார்கள். அத்துடன் என் மனநிலையைப் புரிந்து கொண்ட செல்வராஜா அவர்கள், என் சார்பாக ஜேர்மன் சென்று அவ்விழாவிலே கலந்து கொள்வதாகக் குறிப்பிட்டார். நான் இலண்டன் சென்ற காலகட்டத்தில் சுகயீனம் காரணமாக மருத்துவ விடுகையில் அவர் இருந்தார். தனது சுகயீனத்தையும் பொருட்படுத்தாமல் எனது



100வது புத்தக வெளியீட்டில் என்சார்பாகக் கலந்து கொள்ள முடிவெடுத்த போது அவரை என் உடன் பிறந்த சகோதரனாகவே நான் உள்வாங்கிக் கொண்டேன். எனக்கு சகோதரர்கள் யாரும் இல்லை. அந்தக் குறையை என்னில் களைந்தெறிந்தவர் செல்வராஜா தான் என்பதனை எச்சந்தர்ப் பத்திலும் நான் கூறிக்கொள்ளப் பின்னிற்க மாட்டேன்.

அன்று முதல் இன்றுவரை ஒரு நண்பன் என்ற போர்வையில் அல்லாமல் ஒரு சகோதரனாகவே அவருடனும் அவர் குடும்பத்துடனும் நானும் எனது குடும்பத்தினரும் பழகி வருகின்றோம். அது போன்று அவர் குடும்பத்தினரும் என் குடும்பத்தினரோடு சகோதர வாஞ்சையுடனேயே பழகுவதையிட்டு மகிழ்வெய்துகிறேன்."

மேற்கண்ட அவரது இதயபூர்வமான வரிகளே மீளாத் துயில்கொண்ட சகோதரர் புன்னியாமீன் பற்றிய மலரும் நினைவுகளை ஆவணமாக்கி ஈழத்துத் தமிழ் அறிவியல் உலகிற்கு புன்னியாமீன் என்ற தனிமனித நிறுவனமொன்றின் மதம் கடந்த நட்பிற்குக் காணிக்கையாக வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தை எடுக்கத் தூண்டியுள்ளது.

*கண்ணில் தெரிந்தது காற்றுடன் போக*
*மண்ணில் பிறந்தது மண்ணுடன் சேர்க*
*எலும்பு சதை கொண்ட உருவங்கள் போக*
*எச்சங்களால் அந்த இன்னுயிர் வாழ்க.*

## 2

# புன்னியாமீனும் சிந்தனை வட்டமும்

ஜோர்ஜ் பேர்ணாட் ஷோ அவர்கள் 'இந்த உலகத்திலே உங்களுக்கு ஒரு வேலைதான் உண்டு. அது என்னவென்று தேடிக் கண்டுபிடித்துச் செய்யுங்கள்' என்றார். பலருக்கு முதுமையடையும்வரை இந்த உலகத்திலே தமக்கு என்ன வேலை இருக்கிறது என்பது தெரிவதில்லை. புன்னியாமீன் அவர்கள் பாடசாலையில் கல்வி கற்கும்போதே தன்னிடம் மறைந்து கிடந்த எழுத்தாற்றலைக் கண்டறிந்து கொண்டவர். 11.11.1960இல் பிறந்தவரான புன்னியாமீன் பாடசாலைக் காலங்களிலேயே தன்னுடைய எழுத்துத் திறனை நல்லாசிரியர்களின் துணையுடன் புடம்போட்டுக் கொண்டவர். 1973ஆம் ஆண்டிலிருந்து இலக்கிய உலகில் தவழத் தொடங்கியவர் புன்னியாமீன். தனது முதல் படைப்பான 'அரியணை ஏறிய அரசமரம்' என்ற உருவகக் கதையே இவரது முதலாவது படைப் பிலக்கியமாகும். தினகரன் வாரமலரில் இது 1973இல் பிரசுரமாயிருந்தது.

தன்னை நெறிப்படுத்திய ஆசான்களாக ஜனாப் ஐ.ஹாஜிதீன் அவர்களையும், திரு. யோ.பெனடிக்ற் பாலன் அவர்களையும் அடிக்கடி என்னிடம் குறிப்பிடுவதுண்டு.

மேலும் தன் வளர்ச்சிக் கட்டத்தில் தன் எழுத்துக்களை விமர்சித்து, செப்பனிடவைத்த நட்புவட்டமொன்றையும் அவர் கொண்டிருந்தார். ஏ. அப்துல் றஹ்மான் (கோட்டகொட ஏ ரஹ்மான்), ஏ.ஆர்.ஏ.பரீல், எம். சீ.எம்.அன்வர், யூ.எல்.எம்.பஸீர், யூ.எல்.ஜவ்பர், ஏ.எம்.வைஸ், ஏ.எம். ஜிப்ரி, யூ.எல்.எம். நவ்பர் ஆகியோரை உள்ளடக்கியது அந்த இலக்கிய நட்பு வட்டம். இவர்களில் யூ.எல்.எம். நவ்பர் பற்றிச் சிறப்பித்துக் கூறும் புன்னியாமீன், தன்னுடைய ஆக்கமொன்று பத்திரிகையில் பிரசுரமாகி விட்டால் கொழும்பிலிருந்து ஊருக்கு வரும் போதெல்லாம் தனது வீடு தேடி வந்து வாழ்த்துத் தெரிவிக்கும் பழக்கமுடையவர் நவ்பர் என்பார்.

தன் எழுத்துத் திறனை வளர்த்துவந்த வேளையில் தனது பத்தொன்பதாவது வயதிலேயே பத்திரிகைகள் சஞ்சிகைகளில் பிரசுரமான 14 கதைகளைத் தொகுத்து கட்டுகஸ்தொட்ட இஸ்லாமிய சேமநலச் சங்கம் 'தேவைகள்' என்ற பெயரில் தனது முதலாவது சிறுகதைத் தொகுதியை வெளியிட்டிருந்தது. 'தலவின்னையூர் புன்னியாமீன்' என்ற பெயரில் இந்நூல் நவம்பர் 1979 இல் 80 பக்கங்களில் வெளியிடப்பட்டிருந்தது.

தினகரனில் வெளியான 5 மினிக் கதைகளையும், ஏனைய ஒன்பது புதிய கதைகளையும் உள்ளடக்கிய ஒரு தொகுப்பாக இந்நூல் மலர்ந்திருந்தது. ஆண் - பெண் திருமணம் தொடர்பான எட்டு கதைகளும், மலையகத் தொழிலாளர் பிரச்சினைகளையும், சமூகப் பிறழ்வுகளையும் கருவாகக் கொண்ட 6 கதைகளுமாக மொத்தம் 14 கதைகளும் 'தேவைகள்' கதைத் தொகுப்பில் இடம்பெற்றிருந்தன.

இதே காலகட்டத்தில் உடத்தலவின்ன மடிகே வை.எம்.எம்.ஏ. அமைப்பு, புன்னியாமீனை தனது காலாண்டிதழான 'விடிவு' என்ற சஞ்சிகையின் பிரதம ஆசிரியராக்கியது. கட்டுகஸ்தொட்டையை மையமாகக் கொண்டு இயங்கிய ஸ்ரீலங்கா இஸ்லாமிய காங்கிரஸ் தனது இருவார (Fortnightly Issue) இதழான 'அல் ஹிலால்' சஞ்சிகைக்கும் அவரைப் பிரதம ஆசிரியராக்கி கௌரவமளித்தது. இவை எல்லாம் புன்னியாமீனின் இளவயதிலேயே கைவரப்பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது.

இக்காலகட்டம் இவருக்குத் தந்த உத்வேகத்தின் பயனாக, கலை இலக்கியத்துடன் மட்டும் நின்றுவிடாமல் அரசியல் கட்டுரைகள், சமூக -பொருளாதாரக் கட்டுரைகள், உலக அரசியல் விவகாரங்கள், விளையாட்டுத்துறை தொடர்பான கட்டுரைகள், கல்வித் துறையின் பாடவிதானங்களை அனுசரித்து எழுதப்படும் கட்டுரைகள் எனத் தன் எழுத்துப் பரப்பினை விஸ்தரித்துக்கொண்டார். இருப்பினும் படைப்பிலக்கியத்தில், குறிப்பாக சிறுகதைத் துறையில் இவரது ஈடுபாடு குறையவே இல்லை. இலங்கைப் பத்திரிகைகளில் மாத்திரமல்லாது, தமிழகத்தின் கலைமகள், தீபம், கணையாழி, தாமரை, தீ போன்ற பிரபல்யமான சஞ்சிகைகளிலும் இவரது சிறுகதைகள் அக்காலகட்டத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

**எஸ்.எம்.ஹனிபாவின் தமிழ்மன்றத் தொடர்பு**

அல்ஹாஜ் எஸ்.எம். ஹனிபா மலையகத்தில் கல்ஹின்னையைச் சேர்ந்தவர். இலங்கையில் சிரேஷ்ட எழுத்தாளரும், ஊடகவியலாளரும், வெளியீட்டாளரும், பன்னூலாசிரியருமான சட்டத்தரணி எஸ்.எம். ஹனிபா (29.5.2009இல் இவர் மறைந்துவிட்டார்) இலங்கையில் முன்னணி தமிழ் நூல் பதிப்பகங்களில் ஒன்றான கல்ஹின்னை தமிழ்மன்றத்தின் ஸ்தாபகரும், உரிமையாளருமாவார். 100க்கும் அதிகமான நூல்களை தனது அமைப்பின் மூலம் இவர் வெளியிட்டுள்ளார்.

'இவர்கள் நம்மவர்கள்' என்ற தொடரில் புன்னியாமீன் எழுதிய 57ஆவது எழுத்தாளர் குறிப்புக் கட்டுரை எஸ்.எம். ஹனிபா பற்றியது.

அதில் புன்னியாமீன் எழுதியிருந்த சிறு பகுதியை புன்னியாமீனின் வரிகளிலேயே இங்கே தருகின்றேன்:

"இவ்விடத்தில் ஒரு சிறிய விடயத்தை மனந்திறந்து குறிப்பிடல் வேண்டும். ஒரு எழுத்தாளன் என்ற அடிப்படையில் இன்று நான் 150 புத்தகங்களை எழுதி வெளியிட்டாலும்கூட ஏதோ ஒரு வகையில் புத்தக வெளியீட்டில் எனக்கு உத்வேகத்தைத் தந்தவர் அல்ஹாஜ் எஸ்.எம். ஹனிபா அவர்களே. 1979ஆம் ஆண்டில் என் முதல் சிறுகதைத் தொகுதி 'தேவைகள்' எனும் தலைப்பில் வெளிவந்த பின்பு சுமார் ஏழாண்டுகள் எந்தவொரு புத்தகத்தையும் நான் வெளியிடவில்லை. அதற்குரிய வசதிகளும் என்னிடம் இருக்கவில்லை.

இந்நிலையில் அப்போதைய மாளிகாவத்தை வை.எம்.எம்.ஏ. யின் செயலாளர் நாயகம் அஸ்ரப் ஹாசிம் அவர்களினால் எஸ்.எம். ஹனிபாவிடம் நான் அறிமுகம் செய்து வைக்கப்பட்டேன். எமது முதல் அறிமுகத்துடனே எனது இரண்டாவது நூலான 'நிழலின் அருமை'யை கல்ஹின்னை தமிழ்மன்றத்தின் 28ஆவது வெளியீடாக வெளியிட அல்ஹாஜ் எஸ்.எம். ஹனிபா ஒப்புக்கொண்டார். 1986 மார்ச்சில் அப்புத்தகம் வெளிவந்தது.

அவரின் சுறுசுறுப்பும், பழகும் சுபாவமும், விருந்தோம்பும் பண்பும், அவரின் தமிழ் இலக்கியப் பணிகளும் என்னை வெகுவாகக் கவர்ந்ததினால் அவரைப் பற்றிய ஒரு இலக்கிய ஆய்வினை மேற்கொள்ள நான் முடிவெடுத்தேன். இதன் விளைவாக 1987ஆம் ஆண்டு 'இலக்கிய உலா', 'இலக்கிய விருந்து' ஆகிய இரண்டு நூல்களை நான் எழுதினேன். 'இலக்கிய உலா' அல்ஹாஜ் எஸ்.எம். ஹனிபா அவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளை உள்ளடக்கியது. இந்நூலின் முதலாவது பதிப்பு 1987ஆம் ஆண்டு மே மாதம் வெளிவந்தது. சென்னை மில்லத் பப்ளிகேஷன்ஸ் இந்நூலை வெளியிட்டது. 'இலக்கிய விருந்து' அதுகாலம் வரை தமிழ்மன்றம் வெளியிட்ட 30 நூல்களைப் பற்றிய ஆய்வு நூலாக அமைந்தது. இந்நூல் கல்ஹின்னை தமிழ்மன்றத்தின் 30ஆவது வெளியீடாக 1977 ஏப்ரல் மாதம் வெளிவந்தது. இதே காலகட்டத்தில் இந்தியா அல்பாசி பப்ளிஷர்ஸ் வெளியீடாக எனது 'அடிவானத்து ஒளிர்வுகள்' நாவல் வெளிவரவும் பூரண ஒத்துழைப்பினை அல்ஹாஜ் எஸ்.எம். ஹனிபா அவர்களே வழங்கினார். (இந்நூலுடன் மற்றையை இரு நூல் களையும் சேர்த்து மொத்தம் மூன்று நூல்களுக்குமான வெளியீட்டு விழா கொழும்பு ரண்முத்து ஹோட்டலில் நடைபெற்றது).

இவ்வாறாக இரண்டாண்டுகளுக்குள் என்னுடைய நான்கு புத்தகங்கள் அச்சாவதற்கு ஒத்துழைத்ததுடன், அச்சீட்டுத்துறையிலும், வெளியீட்டுத்

துறையிலும் பல்வேறுபட்ட நுணுக்கங்களை எனக்கு அவர் போதித் தமையினாலேயே பிற்காலத்தில் என்னால் சுயமாக 150 புத்தகங்களை எழுதி வெளியிடவும், அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி எனது சிந்தனைவட்டத்தின் மூலம் 300க்கும் மேற்பட்ட புத்தகங்களை வெளியிடவும் முடிந்தது.

எம்மைவிட்டுப் பிரிந்தாலும் இலங்கை தமிழ் இலக்கியத்துக்கும், இலக்கியவாதிகளுக்கும் அல்ஹாஜ் எஸ்.எம். ஹனிபா அவர்களினால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பும், வழிகாட்டலும் என்றும் நிலைத்திருக்கும்.

இச்சந்தர்ப்பத்தில் அன்னாருக்கு ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் சுவனபதி கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்வதுடன், 'இவர்கள் நம்மவர்கள்' தொடரில் அவர் பற்றிய விசேட குறிப்புகளை இணைத்துக் கொள்கின்றேன்."

மேற்கண்ட குறிப்பிலிருந்து, புன்னியாமீனின் வெளியீட்டுப் பணியின் பின்னணியில் ஆதர்ச சக்தியாக இருந்தவர் எஸ்.எம். ஹனிபா என்பதை விளங்கிக்கொள்ள முடிகின்றது. இவ்விடத்தில் அமரர் எஸ்.எம்.ஹனிபா பற்றிய குறிப்பொன்றையும் இங்கு பதிவுசெய்ய விரும்புகின்றேன்.

நூலகவியல்துறையில் எனது ஆசான்களாக இருந்து தமது வாழ்நாள்வரை எனது நூலியல் பணிகளுக்கு ஆதரவும், என்னிடம் பேரபிமானமும் கொண்ட பெருந்தகைகள் இருவர். ஒன்று ஆசான் வே.இ. பாக்கியநாதன். (இவர் 6.11.2000 அன்று அவுஸ்திரேலியாவில் மறைந்து விட்டார்). மற்றவர் எஸ்.எம்.கமால்தீன் அவர்கள். (இவர் 15.8.2008இல் கொழும்பில் மறைந்துவிட்டார்). இதில் தமிழறிஞர் எஸ்.எம்.கமால்தீன் அவர்கள் தனது இலக்கிய, நூலகத்துறை நண்பர்களிடம் என்னை அறிமுகம் செய்யும் போது தனது நூலகவியல்துறை மாணவர்களுள் தனது இரு கண்களில் ஒன்றாக என்னைக் கணிப்பதாகக் கூறுவதை முன்னரே அறிந்திருந்தேன். (அமரர் கமால்தீனின் மற்றொரு கண்ணாகக் கருதப்பட்டவர் களுத்துறை மர்ஹூம் எஸ்.எம். புஹாரி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரான மர்ஹூம் எம்.பீ.எம். பைரூஸ் அவர்கள். 3.4.2006 அன்று மாரடைப்பால் மரணித்த இவர் இலங்கை தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தில் நூலகராகப் பணியாற்றியவர்.) எஸ்.எம். கமால்தீன் அவர்கள் எஸ்.எம். ஹனிபா அவர்களின் ஆத்ம நண்பர் என்பதை நான் அறிந்திருக்கவில்லை.

திரு. புன்னியாமீனின் தொடர்பு எனக்கு ஏற்படுவதற்கு சில காலங் களுக்கு முன்னரே அல்ஹாஜ் எஸ்.எம். ஹனிபா அவர்களின் பணிகள் பற்றி தமிழ்ப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் எழுதிய ஒரு நூல்வழியாக அறிந்திருந்தேன். மலையகத்தின் 'குட்டி யாழ்ப்பாணம்'

என்ற பெயரைப் பெற்றிருந்த கல்ஹின்னவுடன் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் புத்திஜீவிகள் எல்லாம் தொடர்புபட்டிருந்ததாகவும், வார இறுதிகளில் அங்கு சென்று எஸ்.எம். ஹனிபாவுடனும் பிற இஸ்லாமிய தமிழ் அறிஞர்களுடனும் இலக்கிய உரையாடல்களில் ஈடுபட்டிருந்ததாகவும் அந்நூலில் வாசித்தறிந்திருந்தேன்.

ஒரு நாள் நூல்தேட்டத்தில் கல்ஹின்னை தமிழ் மன்றத்தின் பிரசுரங்களைப் பதிவுசெய்யும் நோக்குடன் எஸ்.எம். ஹனிபாவுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டேன். எனது தொலைபேசித் தொடர்பின் ஆரம்பத்திலேயே நான் யார் என்பதை வெளிப்படுத்தியதும், அடடா அது நீங்கள் தானா? உங்களைப் பற்றி எனது நண்பர் எஸ்.எம்.கமால்தீன் வெகு மதிப்பாக என்னிடம் பல சந்தர்ப்பங்களில் தெரிவித்திருக்கிறார். அவரது கண்களில் ஒன்று நீங்கள் என்றல்லவா நண்பர் எனக்குச் சொல்லியிருக்கிறார். உங்களுக்கு உதவாமல் இருக்க முடியுமா? என்று மனதாரப் புகழ்ந்துவைத்ததுடன் நில்லாமல் தனது தமிழ் மன்றப் பிரசுரங்களில் கையிருப்பில் இருந்த சுமார் ஐம்பது நூல்களை பெரும் பொருட்செலவில் அன்பளிப்பாக எனக்குத் தபாலிலும் அனுப்பிவைத்திருந்தார். ஒவ்வொரு நூலிலும் தன் கைப்பட எனக்கு ஆசிகூறியிருந்ததுடன் தனது கையெழுத்தையும் சளைக்காமல் இட்டிருந்தார். லண்டனில் இன்று நான் உருவாக்கியுள்ள ஈழத்துத் தமிழ் ஆவணக்காப்பகத்தில் அவை அனைத்தும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

அல்ஹாஜ் எஸ்.எம்.ஹனிபா அவர்கள் தனது தமிழ்மன்றத்தின் மூலமாக 1986 மார்ச் மாதத்தில் வெளியிட்ட புன்னியாமீனின் 'நிழலின் அருமை' எனற நூல் 1987ஆம் ஆண்டில் முஸ்லிம் சமய விவகாரத் திணைக்களமும், ஸ்ரீலங்கா முஸ்லிம் எழுத்தாளர் சங்கமும் இணைந்து நடத்திய போட்டியொன்றில் 1982-1987 இடைப்பட்ட காலத்தில் முஸ்லிம் எழுத்தாளர்களினால் வெளியிடப்பட்ட சிறந்த சிறுகதைத் தொகுதிகளுள் ஒன்றாகத் தேர்வுசெய்யப்பட்டிருந்தது.

### தனியார் கல்வி நிறுவன ஆசிரியரானார்

1980க்குப் பின்னர் பத்தாண்டுக் காலத்தில் புன்னியாமீனின் வாழ்வில் பல மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. 1983இல் அவருக்கு ஆசிரியர் நியமனம் கிடைத்தது. 1984இல் திருமணம் நடந்தது. 1985இல் மூத்த மகன் சஜீர் பிறந்துவிட்டார். ஐந்தாண்டுகளில் இளைய மகள் சம்ஹாவும் பிறந்துவிட்டார். குடும்பப் பொறுப்புகளின் அதிகரிப்பினால், பொருளாதாரத்தையும் விருத்திசெய்து கொள்ளவேண்டிய தேவை மற்றையவர்களைப் போலவே புன்னியாமீனுக்கும் ஏற்பட்டதில் வியப்பேதுமில்லை.

புன்னியாமீனின் நண்பர்களான எம்.சீ.எம்.அன்வர், ஏ.ஆர்.எம். உவைஸ், ஏ.எம். வைஸ் போன்றவர்களின் ஆலோசனையின்பேரில் அவர் தனியார் கல்வி நிறுவன ஆசிரியராகவும் பணியாற்றத் தொடங்கினார். ஆரம்பத்தில் திரு. ஏ.கலீல் அவர்களினால் கட்டுகஸ்தொட்டையில் நடத்தப்பட்டு வந்த கே.யூ.ஈ. கல்வி நிலையத்தில் இணைந்து கற்பித்தற் பணியில் ஈடுபட்ட இவர், பின்னர் கண்டி, ராஜபிஹில்ல மாவத்தையில் அமைந்திருந்த வை.எம்.சீ.ஏ. கட்டிடத்தில் ஏ.எம்.வைஸ் அவர்களால் நடத்தப்பட்டு வந்த தனியார் கல்வி நிலையத்தின் வகுப்பிலும், மாத்தளை ஆலோக்க வித்தியாலயத்திலும் வகுப்புகளை நடத்த ஆரம்பித்தார். தனது விருப்பத்துக்குரிய பாடமான அரசறிவியல் துறையைக் கற்பிப்பதில் தீவிர ஈடுபாடு காட்டிய புன்னியாமீன், பீ.ஏ. பட்டதாரி வகுப்பு மாணவர் களுக்கும், ஜீ.ஏ.க்யு முதற் கலைமாணித் தேர்வு மாணவர்களுக்கும் அரசியலறிவு கற்பிக்கும் 'டியுட்டரி' ஆசிரியரானார். 1986ஆம் ஆண்டு இறுதிக் கட்டத்தில் கண்டி E.P.I. கல்வி நிலையத்தில் இணைந்து மேற்படி வகுப்புகளுக்கு மேலதிகமாக, க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான அரசறிவியல் வகுப்புகளையும் நடத்தத் தொடங்கினார்.

கண்டி E.P.I. கல்வி நிலையத்தின் பணிப்பாளர் நாயகமான W.L. இராஜரட்ணம் அவர்கள் பற்றி புன்னியாமீனிடம் உயர்ந்த மதிப்பு என்றும் இருந்துவந்துள்ளது. அவர் பற்றி புன்னியாமீன் பின்வருமாறு தன் நினைவுகளைப் பதிகின்றார்:

'E.P.I. கல்வி நிலையத்தில் நான் இணைந்தது என் வாழ்வில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தோற்றுவித்ததெனலாம். E.P.I. பணிப்பாளர் நாயகம் திருவாளர் W.L. இராஜரட்ணம் அவர்கள் என்னுடைய வகுப்பு களின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும், உந்து சக்தியாகவும், உற்ற நண்பனாகவும் இருந்து அன்று என்னை நெறிப்படுத்தியிருக்காவிட்டால் ஒரு ஆசிரியன் என்ற வகையில் என்னால் பல நூற்றுக்கணக்கான பட்டதாரிகளை உருவாக்கக்கூடிய பாக்கியம் கிடைத்திருக்காது. 'சிந்தனை வட்டம்' என்ற எனது நூல்வெளியீட்டு அமைப்பும் உருவாக்கம் பெற்றிருக்க மாட்டாது. எனவே திருவாளர் W.L. இராஜரட்ணம் அவர்கள் என்றும் என் மனதில் இமயமாகத் திகழ்பவர். இதனை நான் வார்த்தைக்காகக் கூறவில்லை. எனது மனதின் அடித்தளத்தில் பதிந்துள்ள எண்ணத்தையே வெளிப்படுத்தியிருக்கிறேன்' (நன்றி: சிந்தனை வட்டமும் நானும் / பீ.எம். புன்னியாமீன்).

மேற்கூறிய பதிவிலிருந்து அவரது மதிப்பினை நாமும் மதிப்பிட்டுக் கொள்ள முடிகின்றது.

**சிந்தனை வட்டம் உருவாகிய சூழல்**

1987ஆம் ஆண்டில் E.P.I. கல்வி நிலையத்தில் முதற் கலைத் தேர்வு மாணவர்களுக்கு 'அரசறிவியல்' கற்பித்துக்கொண்டிருந்த வேளை, அரசறிவியல், பகுதி -2 வினாப் பத்திரத்தில் பிரித்தானிய அரசியல் முறையை இலங்கை அரசியல் முறையுடன் தொடர்பு படுத்திப் பல வினாக்கள் இடம்பெறுவதுண்டு. ஆனால் பிரித்தானிய அரசியல் முறை தொடர்பாகக் கற்பதற்கான தமிழ் மொழிமூல நூல்கள் எதுவும் அந் நாட்களில் மாணவர்களின் உப பாடநூல் பாவனைக்காக இருக்கவில்லை. இந்நிலையில், பிரித்தானிய தூதுவராலயத்துடன் தொடர்புகொண்டு தேவையான நூல்கள், அறிக்கைகள், தரவுகள் என்பனவற்றைப் பெற்று அவற்றின் துணையுடன் 'பிரித்தானியாவின் அரசியல் முறை' என்ற தலைப்பில் ஒரு நூலை புன்னியாமீன் எழுதினார்.

இலக்கியத்துக்குப் புறம்பாக புன்னியாமீன் எழுதிய முதலாவது நூல் இதுவாகும். இந்நூலை வெளியிடும் வகையில் ஒரு வெளியீட்டு நிறுவனத்தையும் அவரால் கண்டறிய முடியவில்லை. அந்தப் புத்தகத் துக்கான சந்தை வாய்ப்பு அதிகமாக இருக்கும் என்று அனுமானித்துக்கொண்ட புன்னியாமீன், தன் துணைவியார் மஸீதாவுடன் தீவிரமாகச் சிந்தித்து 'சிந்தனை வட்டம்' என்ற வெளியீட்டகத்தை தாமே பெயரளவில் உருவாக்கி, அந்த வெளியீட்டகத்தின் பெயரில் தமது நூல்களை வெளியிடுவது என்ற முடிவை எடுத்தார். இவ்வெளியீட்டகத்தின் பெயரில் 1வது நூலாக மே 1987இல் 'பிரித்தானியாவின் அரசியல் முறை' என்ற நூலை அச்சிட்டு வெளியிட்டார். அவரது அனுமானம் தவறவில்லை. முதல் பதிப்பு 400 பிரதிகளே அச்சிடப்பட்டன. ஆனாலும் தனது 7வது பதிப்பினை பத்தாண்டுகளில் - அதாவது பெப்ரவரி 1997இல் கண்டு இந்த நூல் உயர்கல்வி மாணவர்களிடையே தனித்துவமான கௌரவத் தினைப் பெற்றுக்கொண்டது.

'பிரித்தானியாவின் அரசியல் முறை' நூலை 1987இல் எழுதி முடித் தாலும் அதனை முதலில் அச்சிடுவதற்குப் பணமின்றி புன்னியாமீன் வாடியிருக்கிறார். சிந்தனை வட்டத்தின் பாதை மலர்களால் தூவப்பட்ட தொன்றல்ல. முட்களின் மீது நடந்தே வெற்றிப்படியைத் தொடவேண்டி யிருந்தது. E.P.I. கல்வி நிலையத்தின் அதிபரிடமிருந்து 1200 ரூபா கடனைப்பெற்று, நண்பர் ஏ.எம்.வைஸ் அறிமுகம் செய்துவைத்த அக்குறணை மாத்தளை வீதி, இலக்கம் 38இல் அமைந்திருந்த டிலான் பிரின்டர்சில் சிந்தனை வட்டத்தின் 'முதல் பிரசவமாக' இந்த நூல் பிரசுரிக்கப்பட்டது. அந்த அச்சகத்தின் உரிமையாளர் ஜனாப் அப்துல் பரீட் மிகவும் நல்ல மனிதர். புன்னியாமீனிடம் நம்பிக்கை வைத்து,

'கையிலிருக்கும் காசைத் தந்துவிட்டு அச்சு வேலையைத் தொடங்குங்கள். புத்தங்களை விற்றபின் மீதிக் காசைத் தாருங்கள்' என்று ஆதரவையும் உற்சாகத்தையும் அளித்தார்.

நூல் அச்சாகி கடைகளில் விற்பனைக்கு வழங்கப்பட்டது. கடைக் காரர்கள் சிலரின் திருகுதாளத்தின் காரணமாக எதிர்பார்த்த விற்பனைப் பணம் அவரது கைகளை உரிய காலத்தில் வந்தடையவில்லை. தனக்கு நம்பிக்கையளித்த அச்சக உரிமையாளர் அப்துல் பரீட் அவர்களுக்கு ஏமாற்றத்தைத் தர புன்னியாமீனோ, துணைவியார் மஸீதாவோ துணிய வில்லை. தங்க நகையை அடகுவைத்து அச்சகக் கடனை அடைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஆரம்பத்தில் சிந்தனை வட்டத்தின் முதலாவது வெளியீட்டின்போதே ஏற்பட்டுவிட்டது.

ஆனாலும் பின்னாளில் நூல்கள் விற்றுத் தீர்த்து, இரண்டாவது பதிப்பாக 500 பிரதிகளை பெப்ரவரி 1989இலும், மூன்றாம் பதிப்பாக 750 பிரதிகளை நவம்பர் 1989இலும் அச்சிட்டு விற்பனைசெய்து நல்ல இலாபத்தை சிந்தனை வட்டம் பெற்றுக்கொடுத்தது. அதுவே புன்னியாமீனிடம் அதீத நம்பிக்கையையும் முரட்டுத் துணிச்சலையும் பின்னாளில் ஏற்படுத்தி விட்டது.

இவ்வாறான சிந்தனை வட்டம் உருவாக்கம் பெற்றபின்னர், பரீட்சார்த்த முயற்சியாக, ஒருவருடத்தினுள் ஆறு இலக்கிய நூல்களை வெளியிடுவது என்ற இலக்கை புன்னியாமீன் நிர்ணயித்துக்கொண்டார். உண்மையில் இதுவொரு அளவுக்குமீறிய துணிச்சலான தீர்மானம்தான். ஏனெனில் அன்றைய சூழலில் 1989-90 காலகட்டத்தில்தான் ஜே.வி.பீ. இயக்கத்தின் வன்முறைகள் மீளவும் கிளர்ந்தெழுந்து சிங்களப் பிரதேசங்களில் தீவிரமடைந்திருந்தது. அக்காலகட்டத்தில் கிராமங்களிலெல்லாம் இராணுவ கெடுபிடிகள் மலிந்துகிடந்தது.

அந்தக் கெடுபிடியான காலகட்டத்திலும் சிந்தனைவட்ட முத்திரையுடன் குறிப்பிட்ட நூல்கள் அச்சேறியிருந்தன. அவ்வாறு வெளிவந்த நூல்கள் கரு, நெருடல்கள், அந்த நிலை என்ற தலைப்புகளில் புன்னியாமீனின் மூன்று சிறுகதைத் தொகுப்புகளும், இளம் கவிஞர்கள் பலரின் கவிதைகளைத் தொகுத்து புதிய மொட்டுக்கள், அரும்புகள் என்ற பெயரில் இரண்டு கவிதைத் தொகுப்புகளும், முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர்அல்ஹஜ் ஜே.மீரா மொஹிடீன் அவர்களின் இஸ்லாமியக் கதைகள் என்னும் நூலுமாகும்.

ஒருவருடத்தில் இந்த ஆறு நூல்களையும் பிரசுரித்து குறித்த இலக்கினை அடைய புன்னியாமீன் பல சிரமங்களை எதிர்கொள்ளவே செய்தார். அச்சுக்கோர்க்கும் ஈய எழுத்துக்களை தனது நண்பர் ஜனாப்



ஏ.எல்.எம். அஷ்ரப் அவர்களுடன் இணைந்து கொள்வனவு செய்து, 'மவுண்ட்லைன் பிரின்டர்ஸ்' என்ற அச்சகத்தை தனது வீட்டிலேயே உருவாக்கிக்கொண்டார். வீட்டில் வைத்து எழுத்துக்களை அச்சுக்கோர்த்து, அக்குறணை ஏழாம் கட்டையில் அமைந்திருந்த நிலான் அச்சகத்திலும் அக்குறணை 'சிட்டி' அச்சகத்திலும் அச்சிடக் கொடுத்து, பின்னர் அச்சிடப் பட்ட தாள்களை போர்ம்களாகவே (Forms) வீட்டுக்குக் கொண்டுவந்து அவற்றை பக்க ஒழுங்கில் மடித்து புத்தக உருவில் ஆக்கிய பின்னர் அவற்றை வீட்டிலேயே 'பைண்ட்' பண்ணி, அதன் பின்னர் மீண்டும் அவற்றைக் காவிக்கொண்டு கட்டுகஸ்தொட்டைவரை கொண்டுசென்று புத்தகத்தின் கரைகளை அச்சகத்தின் குலொட்டின் (Guillotine) இயந்திரத் தினால் வெட்டுவித்து என்று ஒவ்வொரு நூலையும் வெளியிடுவதற்கு பல்வேறு சிரமங்களையும் பிரயாணக் கெடுபிடிகளையும் புன்னியாமீன் எதிர்கொள்ளவேண்டியிருந்தது. அனைத்தையும் சவாலாகவே அவரும் துணைவியாரும் எதிர்கொண்டு வெற்றிகரமாகத் தமது நிறுவனத்தை வளர்த்தெடுத்தார்கள்.

புன்னியாமீன் தனது பணிகள் அனைத்தையும் தனியாகச் செய்தாரென்று என்றுமே தம்பட்டம் அடித்தது கிடையாது. 'சிந்தனை வட்டம்' என்ற பிரசுர அமைப்பை உருவாக்கிச் செயற்படுத்துவதில் தனது துணைவியாரின் பங்களிப்பை அவர் எப்போதும் விதந்து போற்றியே வந்துள்ளார்.

அதனை அவரது வார்த்தைகளிலேயே பதிவிடுவது பொருத்தமாக இருக்கும்: '(சிந்தனை வட்டத்தின் வளர்ச்சியில்) என் மனைவியின் பங்களிப்பையும் இவ்விடத்தில் நினைவுகூர்ந்தேயாக வேண்டும். ஆம்

- நான் திருமணம் முடித்ததிலிருந்து இன்றுவரை என் இலக்கியப் பயணத்திலும் நூல்வெளியீட்டு நடவடிக்கைகளிலும் என்னோடு சம பங்கேற்றதினால், சில சந்தர்ப்பங்களில் என்னைவிடவும் திறமையாகப் பங்கேற்றதினால் தான் இன்று என்னால் இந்த நிலைக்கு வர முடிந்தது. என்னுடைய வாழ்க்கைப் போராட்டத்தில் நான் பெற்ற வெற்றிகளை, எனது வெற்றிகள் என்று தனிப்பட்ட முறையில் நான் எப்போதும் உரிமைகொண்டாட மாட்டேன். ஏனென்றால் கணவன்-மனைவி என்ற உறவில் எமது முயற்சிக்குக் கிடைத்த வெற்றி- அது எமது இருவரதும் வெற்றி.

மடுல்கலை க/ஹுலுகங்கை முஸ்லிம் வித்தியாலயத்தில் கற்பித்துக் கொண்டிருக்கும் வேளையில் அதிகாலை 5:45 மணி பஸ்வண்டியில் கடமைக்குச் சென்று சில நேரங்களில் வீடு வந்து சேரும்போது பிற்பகல் 5:00 மணி 6:00 மணியும் ஆகி விடுவதுண்டு. அதன் பிற்பாடே வீட்டு வேலைகள், குழந்தையின் பணிகள், பாடசாலைக் கடமைகளை முடித்துவிட்டு என் இலக்கிய வெளியீட்டு நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைக்கும் நிகழ்வானது - நிச்சயமாக ஒரு எல்லை மீறிய சக்திதான்.'

### சிந்தனை வட்டத்தின் வெளியீட்டில் பாடநூல்கள்

புன்னியாமீன் சிந்தனை வட்டத்தின் மூலம் இலக்கிய நூல்களை வெளியிடும் ஆர்வத்தில் ஆரம்பகாலத்தில் இருந்தபோதிலும், பொருளாதார நிலை காரணமாக அவற்றைச் செயற்படுத்த விரும்பவில்லை. இலக்கியப் படைப்புகளுக்கான சந்தைவாய்ப்பு எம்மிடையே மிகவும் குறைவு. இதனை அவரது உற்ற நண்பர்களான ஏ.ஆர்.எம். உவைஸ், ஏ.எம்.ஜிப்ரி போன்றோர் எடுத்துக்கூறி, (சிந்தனை வட்டம்) இலக்கியப் புத்தகங்களை வெளியிட்டு நட்டமடைவதைவிடப் பாடப் புத்தகங்களை வெளியிட்டால் அதிக லாபத்தை ஈட்டலாம் என அடிக்கடி வலியுறுத்தி வந்தனர். இவர்களுள் குறிப்பாக, சகோதரர் ஏ.எம். ஜிப்ரி தொடர்பாக நல்லதொரு அபிப்பிராயத்தை புன்னியாமீன் மன ஆழத்தில் பதிந்துவைத்திருந்தார். தனது தனிப்பட்ட வாழ்க்கையின் முன்னேற்றத்துக்காக ஓர் உடன்பிறந்த சகோதரன் போன்று பல நிலைகளிலும் தன் வாழ்வின் உந்துசக்தியாகத் திகழ்ந்தவர் என்று ஏ.எம்.ஜிப்ரியைப்பற்றிக் கூறிக்கொள்வார். புன்னியாமீன் அவர்கள் க.பொ.த. பரீட்சையில் சித்தியடைந்துவிட்டு தொழில் வாய்ப்பைத் தேடி அலைந்த அந்த ஆரம்ப காலங்களில், ஏ.எம்.ஜிப்ரி அவருக்கு ஆதரவுக்கரம் நீட்டிவந்துள்ளார். கொழும்பில் வாரக் கணக்காக அவருடைய அறையில் தங்கியிருந்த சந்தர்ப்பங்களில் புன்னியாமீனுக்கு முழுவேளை உணவு அளித்து, கைச்செலவுக்காகப் பணமும் தந்து, மானசீக மட்டத்தில் புன்னியாமீன் உளப்பாதிப்புக்கு உள்ளாகக்

கூடாதென்ற மேன்மையான நோக்கத்தில் அடிக்கடி அறிவுரைகளையும் வழங்குவார். புன்னியாமீன் மனதில் சமூக உணர்வுகளை விதைத்ததிலும், செப்பனிட்டு வளர்த்ததிலும், ஏ.எம்.ஜிப்ரி அவர்களின் பங்கு அதிகமாக இருந்துள்ளது.

நிதி வருவாயைப் பெருக்கிக் கொள்ளும் நோக்கில் சிந்தனை வட்டத்தினால் படிப்படியாக இலக்கியங்கள் அல்லாத பாடநூல்களை அதிகமாக வெளியிட புன்னியாமீன் தீர்மானித்தார். அக்காலகட்டத்தில் ஆண்டு 9, 10, 11ஆம் வகுப்புகளுக்கு ‘வரலாறும் சமூகக் கல்வியும்’ பாடத்தில் புதிய பாடத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் புதிய பாடத்திட்டத்திற்குரிய பாடநுல்களைத் தமிழில் வெளியிட்டு விநியோகிப்பதில், கல்வித் திணைக்களம் தாமதத்தை எதிர்கொண்டிருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள புன்னியாமீன் விரும்பினார். அக்காலகட்டத்தில் கட்டுகஸ்தொட்ட கல்வி வலயத்தில் வரலாறும் சமூகக்கல்வியும் பாடத்துக்கான ஆசிரிய ஆலோசகராக யூ.எல்.எம். பஸீர் அவர்கள் பணியாற்றிவந்தார். அவரது ஆலோசனையின்கீழ் வரலாறு - வினாவிடைத் தொகுப்பு ஒன்றினையும், வரலாறு தொடர்பான குறிப்புகளைக்கொண்ட நூலொன்றினையும் ஆண்டு 11 மாணவர்களுக்கு உதவும் வகையில் எழுதி வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து, ஆண்டு 9, 10 மாணவர்களுக்கான வரலாறு - வினாவிடைத் தொகுதிகளையும் எழுதி வெளியிட்டார். இந்நுல்கள் அனைத்தும் எளிதில் சந்தைப்படுத்தி லாபமீட்டும் வாய்ப்பினை சிந்தனை வட்டத்திற்கு அளித்திருந்தன. வரலாறு ஆண்டு 11 வினாவிடைத் தொகுதி, வரலாறு - ஆண்டு 10 வினா விடைத் தொகுதி என்பன குறுகிய காலத்திற்குள் எட்டுப் பதிப்புகளைக் கண்டதுடன், ஆண்டு 9க்கான வரலாறு - வினா விடைத் தொகுதி ஆறு பதிப்புகளையும் கண்டது.

இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அதீத நம்பிக்கையினால் 1991ஆம் ஆண்டு வரலாறும் சமூகக் கல்வியும் பாடத்துடன் இணைந்த வகையில் ஒரே நேரத்தில் ஏழு நூல்களை வெளியிட்டார். இதனால் புன்னியாமீனுக்கு பணமுடை மீண்டும் ஏற்பட்டது.

இந்நிலையில் சிந்தனை வட்டத்தின் வரலாற்றையே திசை திருப்பி யிருக்கக்கூடிய சந்தர்ப்பமொன்றை துர்அதிர்ஷ்டவசமாக புன்னியாமீன் எதிர்கொள்ள நேர்ந்தது. அதனை அவரது வார்த்தைகளிலேயே இங்கு பதிவுசெய்கின்றேன்.

‘புதிய பாடத்திட்டத்திற்கமைய ஆண்டு 10, 11 பாடப்பரப்பில் ஐரோப்பிய வரலாறு பாட அலகுகளும் சேர்க்கப்பட்டிருந்தன. ஐரோப்பிய வரலாற்றினை பாடப்பரப்புக்கு உட்பட்ட வகையில் மாத்திரம் தனியாகத்

தொகுத்து ஒரு புத்தகத்தை வெளியிட்டால் அதிக கேள்வி எழும் என்ற நம்பிக்கையில் ஒரு புத்தகத்தை எழுதி முடித்தேன்.

எனது கிராமத்தில் இஸ்லாமிய நலன்புரி வங்கி அமைப்பொன்று செயற்பட்டு வந்தது. எனவே இப்புத்தகத்தை வெளியிட இஸ்லாமிய வங்கியின் உதவியைக் கோரினேன். புத்தக விற்பனையில் வரும் இலாபத்தில் 50 வீதத்தை வங்கிக்குத் தருவதாகவும் குறிப்பிட்டேன். இஸ்லாமிய வங்கியின் பணிப்பாளர் சபை மாதத்தில் ஒரு தடவைதான் கூடும். எனக்கோ அதுவரை காத்திருந்தால் உரிய காலத்தில் நூல் களை வெளியிட முடியாது. அதனால் சந்தை வாய்ப்பை இழக்க நேரிடும். எனவே இந்த இடைக்காலத்தில் எனது வேண்டுகோளின்பேரில் உத்தியோகப் பற்றற்ற முறையில் மூவரைக் கொண்ட கடன் சபையால் என் விண்ணப்பம் ஆலோசிக்கப்பட்டது. அப்புத்தகத்தை அச்சிட நான் கோரிய பணத்தொகையை வியாபாரக் கடன் அடிப்படையிலே எனக்குத் தரப்படும் என்று கடன் சபை அங்கத்தினர் ஒருவர் உத்தியோகப் பற்றற்ற முறையில் என்னிடம் தெரிவித்தார். அப்புத்தகத்தை அவசரமாக அச்சிட வேண்டியிருந்தமையால் வங்கியின் பணிப்பாளர் சபை கூடுவதற்கு முன்பாகவே - புத்தகத்தை அச்சகத்திற்குக் கொடுத்து, முதல் 24 பக்கங்களை 5000 பிரதிகள் அச்சிட்டு முடித்தேன். ஆனால் ஒரு மாதத்தின் பின்னர் வங்கியின் பணிப்பாளர் சபை கூடியபோது, உத்தியோகப்பற்றற்ற முறையில் ஒப்புக்கொண்டதற்கு மாறாக எனது கடன் விண்ணப்பத்தையே நிராகரித்துவிட்டனர். அவசரப்பட்டுவிட்ட என்னால் மெல்லவும் முடிய வில்லை. விழுங்கவும் முடியவில்லை. உடத்தலவின்னை மடிகே இஸ்லாமிய வங்கியில் நானும் ஒரு ஆரம்ப உறுப்பினர். பணிப்பாளர் சபை உறுப்பினரும்கூட. எனவே அந்த வங்கியினருடன் வீணாக வாக்குவாதப்பட்டு அக்கடன் தொகையைப் பெற்றுக்கொள்ள நான் விரும்பவில்லை. அதனால் மௌனமானேன். நான் நம்பிக்கையின் அடிப்படையில் அச்சகத்தில் அச்சிடக்கொடுத்த 24 பக்கங்களுக்கும் உரிய நேரத்தில் பணத்தைக் கொடுத்துக்கொள்ள முடியாமல் போனதினால் என் மனைவியின் மாலையொன்றை அடகு வைத்து வட்டிக்குப் பணத்தைப்பெற்று கடனை அடைத்தது என் வாழ்க்கையில் மறக்கமுடியாத மற்றுமொரு நிகழ்வாகும்'. (நன்றி: சிந்தனை வட்டமும் நானும். சிந்தனை வட்டம் 100வது வெளியீடு சிறப்பு இதழ்).

இறுதியில் ஐரோப்பிய வரலாறு நூல் வெளிவரவேயில்லை. அச்சிடப் பட்ட 24 பக்கங்களையும் கறையான் அரித்த நிலையில் புன்னியாமீன், பழைய பேப்பர் கடைக்கே நிறுத்துக்கொடுக்கவேண்டியதாயிற்று. அன்று அந்த இஸ்லாமிய வங்கி புத்தகம் அச்சடித்தால் நட்டமேற்படும் என்று கருதியிருக்கலாம். ஆனால் அக்கடனுதவியை சிந்தனை வட்டத்திற்கு

வழங்கியிருந்தால் சிந்தனை வட்டத்தால் இன்றளவில் வெளியிடப்பெற்றுள்ள 300க்கும் அதிகமான நூல்களின் விற்பனையில் பெற்ற லாபத்தில் 50 சதவீதம் புன்னியாமீனுக்கு உரியதாக இருந்திராது. மேலும், சிந்தனை வட்டத்தின் வெளியீடுகள் பற்றிய தீர்மானம் எடுக்கும் சுதந்திரமும்கூட இழக்கப்பட்டிருக்கலாம்.

புன்னியாமீன் E.P.I. கல்வி நிலையத்தில் இணைந்ததன் பின்னர், 1992 முதல் க.பொ.த. (உயர்தரம்), ஜீ.ஏ.கியூ, மற்றும் பீ.ஏ. வகுப்புகளைக் கொட்டஹென கிளையிலும், பம்பலப்பிட்டிக் கிளையிலும் நடத்தலானார். தொடங்கி ஆறு மாத காலத்துக்குள்ளேயே தனது கல்வித் திறமையால் அதிகமான மாணவர்களை தனது வகுப்புகளுக்குள் ஈர்த்துக்கொண்டார். E.P.I. கல்வி நிலையத்தின் பணிப்பாளர் W.L. இராஜரட்ணம் அவர்கள் அச்சீட்டுத் துறையின் நவீன வழிமுறைகளை புன்னியாமீனுக்கு அறிமுகம் செய்தார். அந்த நவீன வழிமுறைகளில் புன்னியாமீன் தொடர்ந்தும் காட்டிய ஆர்வமே 1992இன் பின்னர் அவரது நூல்வெளியீட்டுப் பணிகளைத் துரிதப்படுத்தியிருக்கிறது. கணனியிலும் எழுத்துக்களை டைப்செட் பண்ணி, கொழும்பு விஜய ஓப்செட் அச்சகம், ஜக்கோ அச்சகம், யுனி ஆர்ட்ஸ் அச்சகம், எம்.ஜே. பிரின்டர்ஸ் போன்றவற்றில் ஓப்செட் மூலமாக அச்சிட முடிந்தது. இக்காலகட்டத்தில் கணனி அச்சாக்கப் பணிகளுக்கு புன்னியாமீனுக்கு பக்க பலமாகவிருந்த இருவராக அமுதாஸ், ஜீவா ஆகியோரை அடிக்கடி அவர் நினைவுகூர்வதுண்டு. இரவு பகலாகக் கண்விழித்து புன்னியாமீன் எழுதித்தரும் பக்கங்களை உடனுக்குடன் டைப்செட் பண்ணி பதிப்புப் பணியை விரைவுபடுத்தியதில் இவ்விருவரதும் பங்கு அளப்பரியதென்பார்.

சிந்தனை வட்டம் பிரசுரங்களை பெருமளவில் விநியோகித்து வந்தவர் பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் பூ. ஸ்ரீதர்சிங் அவர்களாவார். கொழும்பில் புத்தகங்களை அச்சிடும் வேளையில் E.P.I. கல்வி நிலையத்தில் பணிபுரிந்த கே.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அச்சிடப்பட்ட நூல்களை இரவு வேளைகளில் பைண்ட் செய்து தனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் புத்தக நிலையங்களுக்கு விநியோகித்து உதவி வந்தார். கே.கிருஷ்ணமூர்த்தியின் தொடர்பினாலேயே புன்னியா மீனுக்கு பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் பூ. ஸ்ரீதர்சிங் அவர்களின் தொடர்பும் ஏற்பட்டது. அன்று அதிபர் பூ. ஸ்ரீதர்சிங் அவர்கள் வழங்கிய ஊக்கத்தின் மூலமே தான் 1995ஆம் ஆண்டுக்குப் பின்னர் 'பிரித்தானியாவின் அரசியல் முறை' என்ற நூலின் ஏழு பதிப்புக்களையும், 'அரசறிவியல் கோட்பாடுகளும் எண்ணக்கருக்களும்' என்ற நூலில் ஏழு பதிப்புகளையும், 'இலங்கையின் அரசியல் திட்ட வளர்ச்சி' என்ற நூலில் ஏழு பதிப்புகளையும், 'இலங்கையில் உள்ளூராட்சி முறையும் வெளிநாட்டுக் கொள்கைகளும்'

என்ற நூலில் ஏழு பதிப்புகளையும், 'தெரிவுசெய்யப்பட்ட நாடுகள்' என்ற நூலில் ஆறு பதிப்புகளையும் புன்னியாமீன் அவர்களால் வெற்றிகரமாகப் பதிப்பிக்க முடிந்துள்ளது. அத்துடன் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை உட்பட பல பாடசாலைகளில் உசாத்துணைப் பாட நூல்களாகப் பயன்படுத்தக்கூடியளவு பரவலான விநியோகத்திட்டத்தை மேற்கொள்ளக்கூடியதான பாரிய விளம்பரத்தையும் ஸ்ரீதர்சிங் இந்நூல் களுக்கு வழங்கியிருந்தார்.

சிந்தனை வட்டத்தின் நூல் வெளியீட்டு வரலாற்றில் தனியொருவனாக இருந்து முன்னூறுக்கும் அதிகமான நூல்களை வெளியிட்டவர் அமரர் புன்னியாமீன். அவர் தான் வெளியிடும் மீள் பதிப்புகளையும் தனி நூலாகவே கணக்கிட்டு வந்தார். அதற்கு அவரிடம் தனித்துவமான தெளிவு ஒன்றிருந்தது. ஒரு நூலை தான் மீள்பதிப்புக்குள்ளாக்கும் போது - குறிப்பாக பாடநூல்களைப் பொறுத்தவரை, காலம் கடந்ததும், அக்காலத்திற்குப் பொருத்தமில்லாதவற்றையும் களைந்து, புதிய விடயங்களைச் சேர்த்தும் ஒவ்வொரு பதிப்பையும் முன்னைய பதிப்பிலிருந்து வேறுபட்டதாகவே வெளியிட்டுவந்துள்ளார். அட்டைப் படத்தைக்கூட அவர் பதிப்புக்கொன்றாக மாற்றிவிடுவார். அதனால் இரண்டாம் பதிப்பு என்பது அவரைப் பொறுத்த வரையில் மற்றொரு நூலாகவே பார்க்கப்பட்டு வந்துள்ளது. இது தொடர்பாக எம்மிருவருக்குமிடையே நீண்டகாலமாக விவாதம் இருந்து வந்தது.

ஒரு தடவை சிந்தனை வட்டத்தின் முதல் நூறு நூல்களையும் பட்டியலிட்டு ஒரு பதிவை எனக்கு அனுப்பியிருந்தார். அதிலிருந்து தான் இவரது பதிப்புக் கணக்கைப் பற்றிய தெளிவை நான் அறிய விரும்பி யிருந்தேன். அதனை அவர் கீழ்க்கண்டவாறு எனக்குப் பதிலாக எழுதி அனுப்பியிருந்தார்

'இப்பட்டியலில் என்னால் எழுதப்பட்ட பத்து அரசறிவியல் புத்தகங்கள் உள்ளன. ஆனால் இந்த 10 அரசறிவியல் புத்தகங்களும் முப்பத்தொன்பது பதிப்புகளைப் பெற்றுள்ளன. என்னுடைய தனிப்பட்ட பெயரில் எழுதப்பட்ட நூல்கள் என்ற வகையில் பட்டியலிடுவதாயின் பத்துப் புத்தகங்கள் என்றே கணக்கிடுவேன். ஆனால் சிந்தனை வட்டத்தின் பிரசுரங்கள் என்று கணக்கிடும்போது 39 புத்தகங்கள் என்றே (ஒவ்வொரு பதிப்பையும் தனித்தனி நூல்களாகக் கணித்து) பட்டியலிடுவேன். இதுதான் எனது வெளியீட்டு நியதி.' இதுவே இறுதிவரை புன்னியாமீனின் வெளியீட்டுக் கணிப்பாக இருந்து வந்துள்ளது. சிந்தனை வட்டத்தின் வெளியீட்டு வரலாற்றுத் தடத்தில் இது தொடர்ந்தும் விமர்சனத்துக்குள்ளாகக் கூடும்.

இஸ்லாமிய மார்க்க மேதையான இப்னு அப்பாஸ் (ரழி) அவர்களின் வாசகம் ஒன்றுள்ளது. 'இன்பத்தில் திளைக்காத, துன்பத்தில் துவளாத



மனிதனே இல்லை. எனினும் ஒரு மு.்.மினைப் பொறுத்தவரை துன்பத்தில் பொறுமையைக் கடைப்பிடிப்பான். இன்பத்தில் இறைவனுக்கு நன்றியைக் கூறுவான்'

புன்னியாமீனைப் பொறுத்தவரை தனது கிராமத்தை - தான் பிறந்த மண்ணை அதிகம் நேசிப்பவர். ஒருவன் கிராமத்துக்கும் சமூகத்திற்கும் அதன் வளர்ச்சிக்கான பங்களிப்பை வழங்கும் வாய்ப்பிருந்தும் அதனைச் செய்யாது அமைதியாக இருந்தால் அவனை நல்லவனாகப் பார்க்கும் எமது சமூகம், வெறுமனே வாளாவிருக்காது, தான் சார்ந்த சமூகத்தினதும், மண்ணினதும் வளர்ச்சிக்காக உழைக்க ஒருவன் முனைந்து எழுந்தால் அவனை விமர்சனம்செய்து அவனது கால்களை முறித்து, அவனது முயற்சிகளுக்குத் தடைக்கற்களைப் போட்டுத் தடுக்க முனைகின்றது. காய்க்கும் மரத்துக்கே கல்லடி விழுகின்றது. இதனை புன்னியாமீன் தன் வாழ்வின் பல கட்டங்களிலும் அனுபவித்தே இருந்தார். தனிப்பட்ட வாழ்வில் சேறுபூச முனைந்த, தனக்கு எதிராகச் செயற்பட்ட சில கிராமத்தவர்களை அவர் இனம்கண்டிருந்த போதிலும், அந்த ஒரு சிலருக்காகத் தன் மண்மீதான பாசத்தை மீள்பரிசீலனை செய்ய எப்போதும் முன்வரவில்லை.

தான் பிறந்து வளர்ந்த உடத்தலவின்ன கிராமத்திற்கும், புன்னியா மீனுக்கும் இடையில் உறுதியான பிணைப்பொன்றிருந்து வந்துள்ளது. அவரது வாழ்வின் எந்தக் கட்டத்திலும் தன் கிராமத்தை விட்டுப் பிரிய முற்படாத ஒரு இறுக்கமான பிணைப்பினை அவர் கொண்டிருந்தார்.

அதுவே அவரைத் தன் மரணத்தையும் தன் மண்ணிலேயே எதிர்கொள்ள வைத்தது. ஹஜ் யாத்திரையின்போது கடும் சுகவீனமுற்று உயிருக்குப் போராடிய வேளையிலும், துபாய் வைத்தியசாலைகளில் ஒரு மாதம் தன்னுயிரை விடாப்பிடியாகக் காத்துவந்து, தன் தாய்மண்ணிலேயே - தன் கிராமத்திலேயே - உயிரை விடுவித்த மண்ணின் மைந்தன் அவர்.

தன் சிந்தனை வட்ட அமைப்பின் இருப்பினால், தன் உலகளாவிய நட்பு வட்டத்தின் தொடர்பினால், உடத்தலவின்னை மடிகே என்ற ஒரு சிறு கிராமத்தின் பெயரை உலகத் தமிழர்களின் வாய்களில் உச்சரிக்க வைத்தவர் புன்னியாமீன். தான் எழுதிக் குவித்த நூல்களாலும், உருவாக்கிவிட்ட மாணவர் பரம்பரையினாலும் தன் பெயரை கௌரவமான ஒரு இடத்தில் தக்கவைத்துக்கொண்டவர் அவர்.

**சிந்தனை வட்டத்தில் அறிமுக எழுத்தாளர்கள்**

தனது நூல்களைப் பதிப்பிக்கவேண்டும் என்ற நோக்குடன் சிந்தனை வட்டத்தை ஆரம்பத்தில் உருவாக்கிய திரு. புன்னியாமீன் தன்னுடைய சொந்த நூல்களையும், தனது மனைவி மஸீதா புன்னியாமீனுடன் இணைந்து எழுதிய சில நூல்களையும் சேர்த்து பல நூல்களை இதுவரை வெளியிட்டுள்ளார்.

தனது நூல்களை மாத்திரமன்றி பிற எழுத்தாளர்களுக்கும் களமமைத்துக் கொடுக்கவேண்டும் என்ற நோக்குடன் சிந்தனை வட்டம் உஸ்மான் மரிக்கார், நஜுமுதீன், தலவின்ன சிபார், மஸீதா புன்னியாமீன், அக்குறணை ரிழ்வான், ரிஷானா ரஷீட், கலைமகள் ஹிதாயா, கலதெனிய நளீம், தமீம் அன்சார், மரீனா இல்யாஸ், சுமைரா அன்வர், கலைநிலா ராதிகீன், கெக்கிறாவை ஸஹானா, தலவின்னை பூதொர, இஸ்லாமிய செல்வி, பஹீமா ஜஹான், சுலைமா-சமி-இக்பால், நயீமா சித்தீக், மௌலவி ஜே.மீராமொஹிடீன், மூதூர் கலைமேகம், சுஹைதா ஏ கரீம், குலாம் மொஹிதீன், ஜே.எம்.யாசீன், அமீனா சரப்தீன், எஸ்.எல்.எம். மஹ்ரூப், ஏ.ஆர்.எம்.ரிஸ்வி, எம்.ஐ.எம்.மும்தாஜ், என்.நவரட்ணம், இரா. திருச்செல்வம், நாகபூஷணி கருப்பையா, நீலன் அணை ஜயந்தன், சீ.வி. நித்தியானந்தன், த.திரேஷ்குமார், மாரிமுத்து சிவகுமார், திருமதி கி. பொன்னம்பலம் என நீண்ட பட்டியலில் அடங்கக்கூடிய எழுத்தாளர்களின் நூல்களை வெளியிட்டு வைத்துள்ளது.

வளர்ந்த எழுத்தாளர்களைவிட வளர்ந்துவரும் எழுத்தாளர்களுக்கே அதிகளவில் சிந்தனை வட்டம் களம் அமைத்துக் கொடுத்துள்ளதை விசேடமாக அவதானிக்கலாம். உதாரணமாக, கலைமகள் ஹிதாயா ரிஸ்வியின் ‘தேன்மலர்கள்’, த.திரேஷ்குமாரின் ‘நிஜங்களின் நிகழ்வுகள்’, சுமைரா அன்வரின் ‘எண்ணச் சிதறல்கள்’, நாகபூஷணி கருப்பையாவின்

'நெற்றிக் கண்', மாரிமுத்து சிவகுமாரின் 'மலைச்சுவடுகள்' போன்ற கவிதைத் தொகுதிகளைக் குறிப்பிடலாம். இந்நூலாசிரியர்களின் முதல் கவிநூல்களாகவே இவை அமைந்துள்ளன.

அதே நேரம், மூத்த எழுத்தாளர்களின் நூல்களை வெளியிடவும் சிந்தனை வட்டம் பின்நிற்கவில்லை. உதாரணமாக நயீமா சித்தீக்கின் 'வாழ்க்கை வண்ணங்கள்', சுலைமா சமி இக்பாலின் 'திசை மாறிய தீர்மானங்கள்', மௌலவி ஜே மீரா மொஹிடீனின் 'இஸ்லாமிய கதைகள்' போன்ற கதைத் தொகுதிகளைக் குறிப்பிடலாம். சிந்தனை வட்டத்தின் பல வெளியீடுகள் பல பதிப்புகளைப் பெற்றுள்ளன.

கவிஞர் கண்ணதாசனின் வரிகளில் சொல்வதானால், 'ஒரு மனிதன் வாழும்போது வாழ்ந்த வாழ்க்கை, அவன் போகும்போது தெரிந்துவிடும்.' புன்னியாமீன் வாழும்போது அவர் வாழ்ந்த வாழ்க்கையை, அவரது மரணச் சடங்கின்போது கிராமமே திரண்டெழுந்ததை அவரது நண்பர் ஏ.ஆர்.எம். உவைஸ் அவர்களின் தொலைபேசி உரையாடலின்போது கேட்டறிந்தவேளையில் எனது மனது கவிஞர் கண்ணதாசனின் வரிகளையே மீள நினைவூட்டியது.

*பிறப்பு இல்லாமலே நாளொன்றும் இல்லை*
*இறப்பு இல்லாமலும் நாளொன்றும் இல்லை*
*நேசத்தினால் வரும் நினைவுகள் தொல்லை*
*மறதியைப் போலொரு மாமருந்தில்லை.*

3

# ஈழத்துத் தமிழ் நூலியல் வரலாற்றில் சிந்தனை வட்ட வெளியீடுகள்

(இது நூல்தேட்டத்தில் சிந்தனை வட்டம் என்ற நூலுக்கான எனது முன்னுரை)

மலையக மண்ணில் கட்டுகஸ்தொட்ட பிரதேசத்தில் உள்ள உடத்தலவின்ன என்ற கிராமத்தில் 1988ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட சிந்தனை வட்டம் என்ற தனிநபர் நிறுவனம், இன்று தனது 20ஆவது ஆண்டை நெருங்கும் நிலையில் 250 ஆவது நூலை வெளியிட்டுவைத்து விட்டு, தனது வெளியீட்டுப்பணியை மேலும் தொடர்ந்தவண்ணம் இருக் கின்றது. இதன் பின்னணியில் நின்று இயங்குபவர்கள் கலாபூஷணம் பீ.எம்.புன்னியாமீனும் அவரது நிறுவனக் குடும்பத்தினருமேயாவர்.

இன்றைய நிலையில் இலங்கையில் தமிழ் நூல் வெளியீட்டுத் துறையில் 250 நூல்களை வெளியிட்டுவைத்துள்ள ஒரே தமிழ் வெளியீட்டு நிறுவனம் சிந்தனை வட்டம் என்றே கருதுகின்றேன். அத்துடன் இலங்கை நூலக ஆவணவாக்கல் சபையின் பதிவில் அதிகூடிய சர்வதேச தராதர நூல் எண் (International Standard Book Number) பதிவுகளையும் மேற் கொண்டுள்ள தனியார் நிறுவனமும் சிந்தனை வட்டம் என்றே கருதுகின்றேன்.

சிந்தனை வட்டத்தின் பதிப்புலகப் பணி பல்பரிமாணம் கொண்டது. இலங்கையின் கல்வித்துறையில் உபபாடநூல்களையும், புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டிகளையும் பெருமளவில் தயாரித்து விநியோகிப்பதில் சிந்தனை வட்டம் தன் பெயரை வர்த்தகரீதியில் முன்நிறுத்திவைத்திருப்பதால் அதன் அரசியல், இலக்கியத்துறைப் பங்களிப்புகளும், பிற அறிவியல்துறைப் பங்களிப்புகளும் போதிய அளவில் மேலெழவில்லை என்று கூறலாம்.

இன்று உங்கள் கைகளில் தவழும் இந்நூல் அந்தப் பனித்திரையைக் கிழித்து சிந்தனை வட்டத்தின் இருபதாண்டை நோக்கிய அனுபவப் பகிர்வின் பல்துறைப் பரிமாணத்தைப் பதிவுசெய்யமுயல்கின்றது. எதிர்கால ஈழத்துப் பதிப்புலக வரலாற்றை எழுதவிழையும் ஆசிரியர்களுக்கு இந் நூல் ஒரு முதனிலை ஆவணமாக அமையும் என்று நம்புகின்றேன்.

இந்நூல் சிந்தனை வட்டத்தின் முதல் 250 நூல்பதிப்புகளை ஆவணப் படுத்தியிருக்கின்றது. அனைத்தும் நூல்தேட்டத்தின் முதல் ஐந்து தொகுதி களிலும் பதிவுக்குள்ளானவை. பல்வேறு துறைகளிலும், 135 தலைப்புக்களில்

சிந்தனைவட்டத்தினால் பதிப்பிக்கப்பெற்ற 250 நூல்கள் இங்கு பதிவுசெய்யப் பட்டுள்ளன. சில நூல்கள் பல பதிப்புகளைக் கண்டவை. பதிப்புலகத் தேவைக்காக நூலின் ஒவ்வொரு பதிப்பும் சிந்தனைவட்டத்தின் தனி நூலாகக் கருதப்பட்டதால் இங்கு 250 நூல்களாக அவை கணக்கிடப் பெற்றுள்ளன.

நூல்தேட்டம் நூல்விபரப்பட்டியல் தொகுப்பின்போது, நூலொன்றின் ஒன்றுக்கு மேற்பட்ட பதிப்புகள் வெளியிடப்பட்டால் அவற்றில் ஒரு நூலே பிரதான பதிவைப்பெறும் என்பதால், சிந்தனை வட்டத்தின் 250 நூல் பதிப்பகளும் நூல்தேட்டத்தில் இடம்பெறவில்லை. அவற்றில் 135 பதிவுகளே இடம்பெற்றுள்ளன. அப்பதிவுகளே இத்தொகுப்பின் முதலாம் பகுதியாகவும் அமைந்துள்ளன.

சிந்தனை வட்டத்தின் வெளியீட்டுத் தொடர் இலக்க அடிப்படையில் அமைந்த 250 நூல்களையும் இரண்டாவது பகுதியில் அட்டவணைப் படுத்தியிருக்கிறேன். மூன்றாம் பகுதியில் இத்தலைப்புக்கள் மீளவும் அகரவரிசையில் ஒழுங்குபடுத்தித் தரப்பட்டுள்ளன.

சிந்தனை வட்டம் ஓர் ஆய்வு என்ற தலைப்பில் அண்மையில் லண்டனில் அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தமிழ் (IBC) வானொலி ஒலிபரப்பில் நான் ஆற்றிய ஒரு உரையும் சில திருத்தங்களுடன் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. சிந்தனை வட்டத்தின் நூல்வெளியீட்டுப் பணி பற்றிய விரிவானதொரு அறிக்கையாக அது அமைவதால் இங்கு சிந்தனைவட்டத்தின் வரலாறு, அதன் பணிகள் என்பன பற்றிக் குறிப்பிடவில்லை.

இங்கு பதிவுசெய்யப்படவேண்டியதும், தமிழ் நூல் வெளியீட்டாளர்களால் கவனத்துக்கெடுத்துக்கொள்ளப்பட வேண்டியதுமான முக்கியவிடயம் ஒன்றினையே குறிப்பிட விரும்புகின்றேன். அது பற்றி இங்கு ஆழமாக வலியுறுத்துவது எதிர்காலத்தில் நூல் வெளியீட்டாளர்களுக்கும், நூலாசிரியர்களுக்கும், அச்சகங்களுக்கும் பயனுள்ளதாக அமையும் என்று நம்புகின்றேன்.

இன்றைய காலகட்டத்தில் உலகளாவிய தமிழ் நூல் வெளியீட்டுத் துறையில் பதிப்பு என்ற சொல்லையிட்டு எவரும் அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை. ஒரு நூலின் பதிப்புவிபரம் நூலின் பிரதான தலையங்கப் பக்கத்தின் பின்புறத்தில் (Verso of the Title Page) பிற நூலியல் பதிவுகளுடன் சேர்த்து பதிவு செய்வது வழக்கம். முதலாம் பதிப்பு, ஜூலை 2005 (1st Edition, July 2005) என்று உதாரணத்துக்காகக் குறிப்பிட்டிருப்பதாகக் கருதுவோம். இதன்மூலம் சொல்லப்படும் செய்தி தெளிவானது.

குறிப்பிட்ட நூல் விற்றுத் தீர்ந்த நிலையில் மறு பதிப்பு ஒன்றை வெளியிட முனையும் நூலாசிரியர் மீள அச்சிடும் நூலானது, விடயதானங்களில் எவ்வித மாற்றத்துக்கும் உள்ளிடாமல் இருந்தால் அதை மறுபதிப்பு, டிசம்பர் 2006 (Reprint, December 2006) என்று குறிப்பிடுவார். நூலியல் பதிவில் அட்டைப்படம், தலைப்பு, பக்க எண்ணிக்கை போன்ற பௌதிக அம்சங்களில் எவ்வித மாற்றத்தையும் இந்த மறு பதிப்பு ஏற்படுத்தக்கூடாது. நூலாசிரியர் மூலநூலில் தவறவிட்ட சில விடயங்களை உள்ளடக்கியோ, மேலதிக பின்னிணைப்புகளைச் செருகியோ பதிப்பாளரை மாற்றியோ, நூலின் அளவினை மாற்றியோ, நூலின் இரண்டாவது பதிப்பினை வெளியிடுமிடத்து, பௌதிக அம்சங்கள் மாற்றப்படுவது தவிர்க்கமுடியாததாகி விடுகின்றது. இந்நிலையில் நூலை மறுபதிப்பாகக் குறிப்பிடாது 2வது பதிப்பு, டிசம்பர் 2006 (2nd edition, December 2006) என்று குறிப்பிடுவது பொருத்தமானது. சிலர் திருத்திய 2ஆம் பதிப்பு (Revised 2nd edition) என்றும் குறிப்பிடுவர். அதில் தவறேதும் இல்லை. நூலியல் மொழியில் இரண்டாம் பதிப்பு என்றாலே அங்கு ஏதும் மாற்றம் நிகழ்ந்திருக்கலாம் என்று கருதப்படும். பதிக்கப்பெற்ற ஆண்டைக் குறிப்பிடாமல் திருத்திய பதிப்பு என்று மாத்திரம் குறிப்பிடுவது தவறாகும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதிப்புகள் வெளியான நிலையில், பின்னைய பதிப்பு விபரத்தை நூலில் பொறிக்கும் வெளியீட்டாளர், அந்நூலின் முன்னைய பதிப்பு விபரங்களையும் அதில் வரலாற்றுப் பதிவுகளாகக் குறிப்பிடுவது முறைமை.

இலங்கையில் முதலில் வெளியாகிய ஒரு நூல், தமிழகத்தில் மீள்பதிப்புக் காணும்போது 1வது பதிப்பு என்றே குறிப்பிடும் தப்பான செயல் இப்போது சகஜமாகிவிட்டது. தமிழகத்தில் அச்சாகும் புதிய நூல்களில் (முதலாவது பதிப்பு) கணிசமான எண்ணிக்கையை தமிழக அரசின் கொள்வனவுத்திட்டத்தினூடாக அங்குள்ள பொது நூலகங்களுக்கு விற்கும் வாய்ப்பு உள்ளதால், எம்மவர்கள் வியாபார நோக்கம் கருதி, தமது நூல்களை தமிழகத்தில் மீள்பதிப்புச் செய்யும்போது அதனை முதற்பதிப்பாகவே குறிப்பிடுகின்றார்கள். இது முற்றிலும் தவறானதும் அந்நூலுக்கான நூலியல் பதிவை குழப்பநிலையில் வைத்திருக்கும் ஒரு செயலுமாகும். குறைந்தபட்சம் 1வது தமிழகப் பதிப்பு என்றாவது குறிப்பிட்டால் குழப்பநிலை ஓரளவு குறையும்.

ஒரு நூலை மீள்பதிப்பு செய்யும்போது நூலின் தலைப்பை எக்காரணம் கொண்டும் மாற்றுவது கூடாது. தலைப்பு மாறினால் அல்லது மேலட்டை மாறினால் நூலை மறுபதிப்பாக அடையாளப்படுத்துவதில் சிக்கல் ஏற்படுகின்றது. அதனால் ஒரு நூலை மறுபதிப்பாக வெளியிடும்

ஒவ்வொருவரும் இப்பதிப்புகளால் எதிர்காலத்தில் ஏற்படும் அடையாளச் சிக்கல்களை தெளிவாக உணர்ந்து அதற்கேற்ப தகவல்களை வழங்க வேண்டும். நூலின் தலைப்புப் பின்புறம் (Verso of the Title page) இத்தகைய நூலியல் விபரங்களுக்காகவே ஒதுக்கப்பட்டுள்ளது. நடைமுறையில் எத்தனை நூல்கள் இப்பக்கத்தினை முழுமையாகப் பயன்படுத்துகின்றன என்பதை கூர்ந்து அவதானித்தால் எமக்கு ஏமாற்றமே எஞ்சுகின்றது.

எந்தவொரு நாட்டின் தேசிய நூலகத்திலும் சிறப்பான பிரிவு ஒன்று உள்ளது. படைப்பாளிகளுக்கும், வெளியீட்டாளர்களுக்கும், பதிப்பகங் களுக்கும் தேவையான நூலியல்துறையின் ஆலோசனைகளை இப்பிரிவு வழங்குவது அவர்களது பணியாக வரையறுக்கப்பட்டுள்ளது. காலத்திற்குக் காலம் நூலியல்துறையில் ஏற்படும் மாற்றங்களை அறிவுறுத்துவதும், காலத்துக்குக்காலம் கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்தி நூலியல் துறையில் ஈடுபட்டுள்ள பலரையும் ஒன்றுகூடவைத்து அறிவார்த்தமான கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொள்வதும் தேசிய நூலகத்தின் கடமைகளுள் ஒன்றாகும். ஒரு நாட்டின் நூல்தயாரிப்பின் உயர்தரத்தை தேசியரீதியில் பேணுவதில் தேசிய நூலகத்தின் பங்கு முதன்மையானது. இதனை எவ்வளவு தூரம் இலங்கை தேசிய நூலகம் உணர்ந்துள்ளது என்பது கேள்விக்குரியதாகும். நாட்டின் நூல்வெளியீட்டு அபிவிருத்திகளில் தேசிய நூலகத்தின் பங்கினை வலியுறுத்தும் பொறுப்பு ஒவ்வொரு வெளியீட் டாளருக்கும், படைப்பாளிக்கும் உரியதாகும். அவர்களின் ஆர்வமும், தேடலுமே தேசிய நூலகங்களை அத்துறையில் முதலீடுசெய்ய ஊக்குவிக்கும் என்பதும் கவனத்திற்குரியது.

சிந்தனை வட்டத்தைப் பொறுத்தவரையில் தேசிய நூலகத்துடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ளதை அதன் நூலியல் பதிவுகளை உற்றுநோக்கும்போது அவதானிக்கமுடிகின்றது. அதன் ஒரு வெளிப் பாடாகவே சர்வதேச தராதரநூல் எண் பதிவில் சிந்தனை வட்டம் முன்னணியில் இருக்கின்றது.

*கடல்தொடும் ஆறுகள் கலங்குவதில்லை*
*தரைதொடும் தாரைகள் அழுவதும் இல்லை*
*நதிமழை போன்றதே விதியென்று கண்டும்*
*மதிகொண்ட மானுடர் மயங்குவதென்ன.*

# 4

# புன்னியாமீனும் அவரது ஆவணமாக்கல் பணிகளும்

அமரர் பீ.எம். புன்னியாமீன் அவர்கள் தமது வாழ்வையும் தான் மேற்கொண்ட அனைத்துப் பணிகளையும் ஆவணப்படுத்துவதில் மிகுந்த அக்கறைகொண்டு செயற்பட்டு வந்துள்ளார். தனது வாழ்க்கையை மாத்திரமல்லாது மற்றவர்களின் வாழ்க்கையையும் அர்த்தமுள்ளதாக்குவதென்பது, அவர்கள் வாழ்ந்த நல்வாழ்வு பற்றிய தகவல்களை எங்காவது பொது ஊடகத்தில் பேணிவைத்தாலே சாத்தியமாகும் என்பதில் புன்னியாமீன் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார். அவரது அந்தப் பண்பே என்னையும் அவரையும் ஒரு பொதுப்புள்ளியில் ஒன்றுசேர வைத்தது. நாடு, மதம் ஆகியவற்றைக் கடந்த நட்பினை மொழி - இனம் என்ற பொதுப்புள்ளியில் தொடர்புற்று இணைந்தியங்கி ஒரு உன்னதமான நட்பினை இறுதிவரை எமக்கிடையே நிலைபெறச் செய்திருந்தது.

புன்னியாமீனுடன் 2003இல் நான் மேற்கொண்ட அந்த முதலாவது தொலைபேசி அழைப்பு, ஆவணவாக்கல் பற்றியதாகவே இருந்தது. மலையக இலக்கிய நண்பர் கொழுந்து - சஞ்சிகை ஆசிரியர் அந்தனி ஜீவா அவர்களின் அறிமுகத்தினால் புன்னியாமீனின் ஆவணவாக்கல் பணிகளை நான் அறியவந்த வேளையில், அவர் இலங்கையின் தமிழ் முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்புகளையும், அவர்களது பணிகளையும் பற்றிய தகவல்களை சேகரித்துக்கொண்டிருந்தார். அதுவே எனக்கு அவரின்மீது ஒரு ஈர்ப்பினை ஏற்படுத்தியிருந்தது.

அதற்கு முன்னர் இலங்கையில் உள்ள முஸ்லிம்கள் பற்றி அவ்வப்போது சில நூல்கள் வெளிவந்திருந்தன என்பதை நான் அறிவேன். 1992இல் ‘அநுராதபுர மாவட்ட முஸ்லிம்கள்: வரலாறும் பாரம்பரியமும்’ என்ற தலைப்பில் S.H.M. ஜெமீல் அவர்கள் பதிப்பித்த நூலொன்று முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள், இராஜாங்க அமைச்சர் அலுவலகத்தினால் ஒக்டோபர் 1992இல் வெளிவந்திருந்தது. பிரதேச முஸ்லிம்களின் வரலாற்றுப் பாரம்பரியங்களை, வரலாற்றை பொதுப்படையாக இந் நூல் பதிவுசெய்திருந்தது.

1997இல் இதே ஆசிரியரின் பதிப்பில், 'அம்பாறை மாவட்ட முஸ்லீம்கள்: வரலாறும் பாரம்பரியமும்' என்ற நூல் வெளிவந்திருந்தது. இலங்கையின் 25 மாவட்டங்களுள் முஸ்லீம்கள் அதிகம் செறிந்துள்ள மாவட்டம் அம்பாறையாகும். தொகையினால் குறைந்தாலும் செறிவினால் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த மாகாணமாக கிழக்கு மாகாணம் பொதுவாகவும், அம்பாறை மாவட்டம் சிறப்பாகவும் திகழ்கின்றது. இந்த அடிப்படையில் அம்பாறை மாவட்ட முஸ்லீம்களின் வரலாறும் பாரம்பரியமும் இந் நூலில் ஆவணப்படுத்தப் பட்டிருந்தது.

இவ்வாறு ஆங்காங்கே முஸ்லிம் இலக்கியவாதிகள் பற்றியும் கலைஞர் கள் பற்றியும் சில நூல்கள் அவ்வப்போது ஈழத்துத் தமிழ் நூலியல் சூழலில் தலைகாட்டியிருந்தனவேயொழிய, மிக விரிவாக, ஒரு பொதுவான வரன்முறையுடன் இலங்கை முஸ்லிம்கள் யார், எவர்? (Whos, Who) என்ற பாணியில் ஒரு நூலும் வெளிவந்திருக்கவில்லை. அத்தகைய திட்டங்கள் எதுவும் நிறுவனரீதியாக முன்னெடுக்கப்பட்டிருக்கவுமில்லை. எந்த ஒரு நிறுவனமும் முன்னெடுக்கத் தவறிய ஒரு முக்கியமான பணியைத் தனியொருவனாக நின்று புன்னியாமீன் பதிவுசெய்ய முயன்றமையே இங்கு முக்கியத்துவமாகப் படுகின்றது.

முதல்நாள் தொடர்பின் பயனாக பத்துப் பக்கங்கள் கொண்ட கேள்விக் கொத்தொன்றை புன்னியாமீன் அனுப்பிவைத்திருந்தார். மிகவும் விரிவான முறையில் கேள்விகளை அப்படிவத்தில் அவர் கேட்டிருந்தார். அவரது கேள்விகளின் விரிந்த பரப்பு என்னை அதிசயிக்க வைத்தது. மேலாக, இவ்வளவு விரிவான தகவல்களைப் பொறுமையாக இருந்து ஒரு எழுத்தாளனோ, கலைஞனோ, ஊடகவியலாளனோ அன்றிருந்த அரசியல், போர்ச் சூழலில் எழுதிக் கொடுப்பார்களா என்ற கேள்வியும் கூடவே என்னுள் எழுந்தது.

இலங்கைவாழ் முஸ்லிம்களின் உரிமைக்காக குரல் எழுப்பும் ஒரு தேசிய நாளிதழ் என்று அறியப்பெற்றதும், 19.10.1996 முதல் வாராந்தம் வெளிவருவதுமான 'நவமணி' வாரப் பத்திரிகை புன்னியாமீனின் பணிக்கு, உடனிருந்து அனுசரணை வழங்கியிருந்தமை சற்று நம்பிக்கையூட்டுவதாக அமைந்திருந்தது. நவமணி இதழின் ஆசிரியராக அப்போது அல்ஹாஜ் எம்.பி.எம்.அஸ்ஹர் பணியாற்றிவந்தார். (இவர் பின்னர் 28.08.2008 இல் காலமாகிவிட்டார்). புன்னியாமீனின் நட்புக்கும், அன்புக்கும் பாத்திர மானவராக எம்.பி.எம்.அஸ்ஹர் விளங்கினார். புன்னியாமீனின் எழுத்தாளர் தகவல் சேகரிப்புப் பணிபற்றி விரிவாக இப்பத்திரிகையில் எம்.பி.எம். அஸ்ஹர் விளம்பரப்படுத்தியிருந்தார்.

புன்னியாமீன் இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்களின் விபரத்தை மேலோட்டமாகத் தொகுக்கத் தீர்மானித்திருக்கவில்லை என்பதை அவரது

ஒழுங்கமைக்கப்பட்ட ஆய்வுப் படிமுறை எனக்கு உணர்த்தியிருந்தது. அவர் முஸ்லிம் எழுத்தாளர்களுடன் மாத்திரம் நின்றுவிடவில்லை. முஸ்லிம் ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் ஆகியோரையும் தனது ஆய்வு வட்டத்துக்குள் இணைத்துக்கொண்டிருந்தார். இதன் காரணம் தெளிவானதொன்றே. இலங்கையில் பல இலக்கியவாதிகள் ஓவிய, நாடக, திரைப்படக் கலைஞர்களாகவும் அறியப்பெற்றிருக்கிறார்கள். ஒருவரின் பல்வேறு புலமைத்துவங்களை பதிவுசெய்வதாயின் விரிந்த பார்வைவேண்டும். அதனையே புன்னியாமீன் கொண்டிருந்தார். இலங்கையில் வாழும் இஸ்லாமிய இலக்கியவாதிகளை அவர் இரண்டாகப் பிரித்தார். படைப்பிலக்கியவாதிகள் (சிறுகதை, கவிதை, நாவல், நாடகம்), கட்டுரை எழுத்தாளர்கள் (அரசியல், சமூகம், உலக அரங்கு, விமர்சனம்) எனப் பிரித்து அதன் அடிப்படையில் தகவல்களைப் பெறத் துணிந்தார். ஊடகவியலாளர்களுள் செய்திப்பத்திரிகை ஆசிரியர்கள், சஞ்சிகை வெளியீட்டாளர்கள், இலத்திரனியல் ஊடகங்களில் பணியாற்றுவோர் என அவரது ஆய்வுத்தளம் விரிந்திருந்தது.

மேலும் அவர் தயாரித்த பத்துப் பக்கப் படிவங்கள் இலங்கை முழுவதுமாக, தபால் மூலம் சுமார் 1500 பேருக்கு அனுப்பிவைக்கப் பட்டிருந்தன. கிடைக்கப்பெற்ற படிவங்களை அடிப்படையாக வைத்து புன்னியாமீன் ஒவ்வொரு எழுத்தாளர்களினதும் வாழ்வும் பணிகளும் என்னென்ன என்பதை நறுக்கான கட்டுரைகளாக எழுதத் தொடங்கினார். எழுத்தாளரின் பிறப்பு, வளர்ச்சி, குடும்பப் பின்னணி, கல்வி, ஈடுபாடுள்ள துறை, ஆண்டுவாரியான படைப்புக்களின் பட்டியல், பெற்றுக்கொண்ட விருதுகள் எனப் பல்வேறு விடயங்களை கிடைக்கும் படிவங்களில் உள்ள தகவல்களை அடிப்படையாக வைத்து புகைப்பட ஆதாரங்களையும் இணைத்து, எழுதத் தொடங்கினார். இவரது முதலாவது கட்டுரை 27.7.2003இல் நவமணியில் வெளியாயிற்று தொடர்ந்து வாராவாரம் ஒரு பத்தி எழுத்தாக தமிழ் முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், ஆகியோர் பற்றிய விபரக் குறிப்புகளுடன் இக்கட்டுரைப் பணி தொடரலாயிற்று.

புன்னியாமீனின் ஆய்வுகளின்படி 19ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதிகளிலிருந்து 21ஆம் நூற்றாண்டின் தற்போதைய காலப்பகுதி வரை சுமார் 2800க்கும் மேற்பட்ட முஸ்லிம் எழுத்தாளர்களும், 1250க்கும் மேற்பட்ட முஸ்லிம் ஊடகவியலாளர்களும், 300க்கும் மேற்பட்ட முஸ்லிம் கலைஞர்களுமாக மொத்தம் 4350 பேரை இனம்கண்டிருந்தார். இது என்னை ஆச்சரியப்படவே வைத்தது. இருப்பினும் இவரால் தகவல் சேகரிக்க முடிந்ததென்னவோ சிறு பங்கினரிடமிருந்தேயாகும். பெருவாரியான

படிவங்களை தபால்செலவையும் பொருட்படுத்தாமல் புன்னயாமீன் அனுப்பிவைத்திருந்த போதிலும், மிகவும் சிறுபங்கினரே புன்னியாமீனின் நல்ல நோக்கத்தைப் புரிந்துகொண்டிருந்தார்கள். பெரும்பங்கினர் கடிதத்தை குப்பைத் தொட்டியில் போட்டுத் தமது பொறுப்புணர்வினைக் காட்டியிருக்கிறார்கள். இதனை புன்னியாமீனுக்குக் கிடைத்த நிரப்பப்பட்ட படிவங்களின் எண்ணிக்கையிலிருந்து அறிந்துகொள்ள முடிந்தது.

நவமணியில் வெளியான கட்டுரைத் தொடரை பின்னர் சிந்தனை வட்டத்தின் 189ஆவது வெளியீடாக ‘இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு’ என்ற தலைப்பில் முதலாம் பாகமாக 19-8-2004 அன்று வெளியிட்டிருந்தார். இதில் 36 கலை இலக்கியப் பிரமுகர்கள் பற்றிய விபரங்களைப் புகைப்படங்களுடனும், அவர்களின் புத்தக அட்டைப் படங்களுடனும் புன்னியாமீன் வெளியிட்டிருந்தார்.

முதலாவது தொகுதியில் A.U.M.A. கரீம், S.M.A. ஹஸன், அன்பு முகையதீன், I.A. றஸாக், முபீதா உஸ்மான், எச். ஸலாஹுூதீன், M.H.M. அஷ்ரப், M.H.M. புஹாரி, அப்துல் கஹ்ஹார், எஸ்.முத்துமீரான், எச்.ஏ. ஸகூர், ஏ.எஸ். இப்றாஹீம், M.I.M. தாஹிர், M.J.M. கமால், A.H.M. யூசுப், நூருல் அயின், M.C.M. இக்பால், ஆ. அலாவுதீன், M.Z. அஹ்மத் முனவ்வர், சித்தி ஸர்தாபி, A.M.M. அலி, M.H.M. ஹலிம்தீன், N.S,A. கையூம், S.M. ஜவுபர், A.L.M. சத்தார், J.M. ஹாபீஸ், A.H.M. ஜாபீர், A.M. நஜிமுதீன், S.L.A. லத்தீப், S.I.M.A. ஜப்பார், மொஹமட் வைஸ், எம்.எம். ஸப்வான், ஹிதாயா ரிஸ்வி, என்.எம். அமீன், மஸீதா புன்னியாமீன், கே.எம்.எம்.இக்பால் ஆகிய முஸ்லிம் எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்களின் வாழ்வும் பணிகளும் பற்றிய தனித்தனிக் கட்டுரைகள் இடம்பெற்றிருந்தன.

இந்நூலின் சிறப்பம்சமாக இலங்கையின் சிரேஷ்ட பத்திரிகையாளரும், எழுத்தாளரும், ‘நவமணி’ பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான அல்ஹாஜ் எம்.பீ.எம். அஸ்ஹர் எழுதியிருந்த விரிவான வரலாற்று ஆய்வுக்கட்டுரையொன்றும் இடம்பெற்றிருந்தது. ‘இலங்கை முஸ்லிம்கள் வரலாறு முழுமையாக வெளியிடப்பட வேண்டியது காலத்தின் முக்கியத் தேவைகளுள் ஒன்றாகும்’ என்ற தலைப்பில் எழுதப்பட்டிருந்த அக்கட்டுரை இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றுப் பின்னணியில் அவர்களது இலக்கிய, ஊடகத்துறைப் பங்களிப்பு என்பவை வரலாற்றுரீதியாக, தெளிவான தகவல்களுடன் ஆவணப்படுத்தப்பட்டிருந்தது.

‘இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு’ என்ற தொடரின் இரண்டாம் பாகம்

செப்டெம்பர் 2004இல் வெளிவந்தது. சிந்தனை வட்டத்தின் 193ஆவது வெளியீடாக இதனை புன்னியாமீன் வெளியிட்டிருந்தார். இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள் 41பேரின் விபரங்கள், புகைப்படங்களுடன் இவ்விரண்டாம் பாகத்தில் இடம்பெற்றிருந்தது. எம்.பீ.எம்.அஸ்ஹர், ஜிப்ரி யூனுஸ், எம்.எஸ்.எம். அக்ரம், ஏ.எச்.எம். மஜீத், ஏ.ஏ. றஹ்மான், எஸ். கலீல், எம்.எம்.ராஸிக், கே. சுலைமா லெவ்வை, யு.எல். எம்.ஹுவைலித், ஏ.ஆர்.ஏ. பரீல், சுலைமா சமி, ரஸீனா புஹார், ஐ.எம்.மாரூப், ஸெய்யித் முஹம்மத், ஏ.எஸ்.எம். ரம்ஜான், அப்துல் லத்தீப், எம்.எம்.ஜமால்தீன், ஏ. ஜபார், முஹம்மது பௌஸ், சிபார்தீன் மரிக்கார், மஷுரா சுஹுறுத்தீன், யூ. ஸெயின், ஏ.எல்.எம். அஸ்வர், எம்.எம்.எஸ். முஹம்மத், முஹம்மட் கலீல், எஸ்.எல்.எம். அபூபக்கர், எம்.யூ. முஹம்மத் பஷீர், முஹம்மத் இஸ்மாஈல், முஹம்மட் பைரூஸ், எம்.ஐ.எம்.முஸ்தபா, றபிக் பிர்தௌஸ், புர்கான் பீ. இப்திகார், எம்.எஸ்.எஸ். ஹமீத், அப்துல் மலிக், அப்துல் ஸலாம், எம்.எச்.எம். கரீம், எம்.எஸ். றம்ஸீன், அப்துல் அசன், ஏ.எஸ். எம். நவாஸ், முஹம்மத் ஹஸனி, எஸ்.எஸ்.பரீட் ஆகிய எழுத்தாளர்களின் விபரங்களை 'இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு' என்ற நூலின் இரண்டாவது பாகம் உள்ளீர்த்திருந்தது.

இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத் திரட்டின் மூன்றாம் பாகம் செப்டெம்பர் 2005 இல் வெளிவந்திருந்தது. சிந்தனை வட்டத்தின் 200ஆவது வெளியீடாக இது அமைந்திருந்தது. 'நவமணி' வார இதழில், முஸ்லீம் எழுத்தாளர்கள், கலைஞர்களின் விபரங்களைத் தொகுத்து வெளிவந்த தொடரில் இடம்பெற்ற மேலும் 37பேரின் விபரங்கள் புகைப்படங்களுடன் இம்மூன்றாம் பாகத்தில் தொகுக்கப்பட்டிருந்தன.

கல்முனை முபாறக், ஏ.எம். நஸீம்டீன், மாத்தளைக் கமால், நூறுல் ஹக், ஜமால்டீன், முஹம்மட் றபிக், முஹம்மட் சுஹைப், மு.மூ. விஜிலி, யூ.எல். ஆதம்பாவா, ஏ.எம்.எம். ஸியாது, எம்.நவாஸ் சௌபி, முகுஸீன் றயிசுத்தீன், எம்.ஐ.எம். அன்சார், மஸ்ஹுது லெவ்வை, எம். அனஸ், எம்.கே.எம்.முனாஸ், பாத்திமா பீபீ, ஸர்மிளா ஸெய்யித், பாத்திமா சுபியானி, மொஹம்மட் சியாஜ், நிஸாரா பரூக், பௌசுல் றஹீம், ஏ.எல்.எம். புஹாரி, ஏ.எப்.எம். றியாட், யூ.எல்.எம். அஸ்மின், அப்துஸ்ஸலாம் அஸ்லம், எம்.ஏ. அமீனுல்லா, நயிமுத்தீன், எச்.எல். முஹம்மத், ஹுஸைன், ஹய்ருன்னிஸா புஹாரி, எஸ்.எல். லரீப், அலி உதுமாலெவ்வை, எம்.ஐ.எம். மஷ்ஹுர், கிண்ணியா நஸ்புல்லாஹ், பரீதா சாகுல் ஹமீட், அரபா உம்மா ஆகியோர் பற்றிய கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றிருந்தன.

இத்தொகுதியின் பின்னிணைப்பாக மலையகப் பதிப்புலகத்தில் சிந்தனைவட்டம், கலாபூஷணம் பீ.எம். புன்னியாமீன் (என்.செல்வராஜா), சிந்தனை வட்டம் ஓர் ஆய்வு (என்.செல்வராஜா), ஒரே பார்வையில் சிந்தனை வட்டம் வெளியீடுகள் (2005 செப்டெம்பர் 11 வரை வெளியான 207 நூல்களின் விபரங்கள்) ஆகிய முக்கியமான மூன்று ஆவணங்களும், சிந்தனை வட்டம் பணிப்பாளர்களில் ஒருவரான மஸீதா புன்னியாமீன் அவர்களின் தாயார், சகோதரி, அவரது குழந்தைகள், என சுனாமிப் பேரலையில் இழந்த உறவுகளுக்கான கண்ணீர் அஞ்சலிக் கவிதைகளும் இந்நூலில் இடம்பெற்றிருந்தன. முன்னுரையில் இத்தகையதொரு தொகுதியின் தேவை பற்றிய ஆய்வுரீதியான கருத்துக்கள் பல விளக்கமாக இடம்பெற்றிருந்தன.

இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர் களின் விபரத் திரட்டின் மூன்றாம் பாகத்தின் பின்னர் புன்னியாமீனின் தேடல் பார்வை ஒரு விரிவைக் கண்டுள்ளது என்று கருத முடிகின்றது. இதற்கு முஸ்லிம் அல்லாத என்னுடனான கடல் கடந்த, மதம் கடந்த தொடர்பு ஒரு முக்கிய காரணமாக இருந்துள்ளது என்பதை அவர் என்னிடம் அடிக்கடி சொல்வதுண்டு. அதுவரை இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், முஸ்லிம் ஊடகவியலாளர்கள், முஸ்லிம் கலைஞர்களின் விபரங்களையே தேடிவந்த புன்னியாமீனுக்கு, தனது சமூகத்திலுள்ள இஸ்லாமிய படைப்புலக ஜாம்பவான்களின் போதிய ஆதரவு கிடைக்க வில்லை என்பதை அவர் கவலையுடன் கூறி மனம் வருந்தியிருந்தார். புன்னியாமீன் என்ற பெயரை, ‘ஏதோ வர்த்தக நோக்கத்திற்காக பாடப்புத்தகங்கள் அச்சிடும் நபர்’ என்ற மட்டத்திலேயே அறிந்துவைத்திருக்க அந்த இலக்கிய ஜாம்பவான்கள் முனைந்திருந்தார்கள் என்பதை வேதனையுடன் அவர் குறிப்பிடுவதுண்டு. முதல் மூன்று தொகுதிகளும் வெளிவந்திருந்த 2002-2005 காலகட்டத்தில் அவர் பதிவுசெய்திருக்கும் 114 பேர்களின் விபரங்களைப் பார்க்கும்போது, இதனை நாம் ஏற்றுக்கொண்டேயாக வேண்டியுள்ளது. அதில் நாம் எதிர்பார்த்திருந்த பல முன்னணி முஸ்லிம் படைப்பாளிகளின் பெயர்கள் அங்கே இடம் பெறவில்லை என்பதை அறிந்தகொள்ள முடிகின்றது. இந்த நிலைமை முஸ்லிம் படைப்பிலக்கிய பிரமுகர்களுக்கு மாத்திரம் உரியதொன்றல்ல. ஒட்டுமொத்த ஈழத்துத் தமிழ் படைப்பாளிகளிடமும் பரவலாகக் காணப்படும் தேடலுக்கான ஆர்வமும், தன்னைச் சந்தைப்படுத்தும் - அதாவது தனது பணியை ஆவணப்படுத்துவதின் முக்கியத்துவம் பற்றிய அக்கறை இன்மையே இதற்குக் காரணம் என்று நான் கருதுகின்றேன். தம்மை ‘சந்தைப்படுத்திக் கொள்வதில்’ எமது தமிழறிஞர்கள் எப்போதும் அக்கறை

கொண்டதில்லை. தம்மைப் பற்றி மற்றவர்கள் தாமாக முன்வந்து அறிந்து கொள்ளவேண்டும் என்று நினைப்பவர்களே எமது மண்ணில் அதிகம் காணப்படுகின்றார்கள். தம்மைச் சந்தைப்படுத்துவதை ஏதோ 'தம்பட்டம் அடித்துக்கொள்ளும் செயலாகவோ', தற்புகழ்ச்சிக்காரனாக உலகம் தன்னை அவதூறு செய்யும் என்ற தவறான கருதுகோளோ காரணமாகி விடுவதால்தான், பல மறைந்த நல்ல படைப்பாளிகள் பற்றிய போதிய தகவல்களை உலகம் அறியமுடியாதிருந்துள்ளது.

கோல்டன் குளோப் விருது, பா∴ப்டா விருது ஆகியவற்றை ஏற்கெனவே பெற்ற தமிழக திரை இசைக்கலைஞன் ஏ.ஆர். ரஹ்மான் 2008இல் ஆஸ்கார் விருது பெற்றபோது தமிழகத்தில் நடந்த வரவேற்பு விருந்து ஒன்றில் ஒரு பிரமுகர், நடிகர் திலகம் சிவாஜி கணேசனையும், இசைஞானி இளையராஜாவையும், உலகநாயகன் கமல்ஹாசனையும் கண்டுகொள்ளாத ஒஸ்கார் அமைப்பு ஏ.ஆர். ரஹ்மானை கண்டு கொண்டுள்ளதே என்று வியப்புடன் தெரிவித்திருந்தார். அந்த நிகழ்வில் ஏற்புரை வழங்கிய ஏ.ஆர்.ரஹ்மான் குறித்த கருத்துக்குப் பின்வருமாறு பதிலளித்திருந்தார். 'இசைஞானி இளையராஜாவோ, நடிகர் திலகம் சிவாஜிகணேசனோ உலகநாயகன் கமல்ஹாசனோ செய்ய முற்படாத ஒரு காரியத்தை நான் செய்திருந்தேன். தமிழகத்தைவிட்டு அமெரிக்காவில் போய் வாழ்ந்த வேளையில் அங்கு இசைத்துறையில் ஈடுபட்டவர்கள், இசை நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்பவர்களுக்கு தனது பயோடேட்டாவையும், தனது இசை ஆல்பங்களையும் அனுப்பி தொடர்ந்தும் சர்வதேச அமைப்பு களின் கதவைத் தட்டிக்கொண்டிருந்தேன். ஒரு இசை நிறுவனம் எனக்கு தமது இசை நிகழ்வொன்றில் இசையமைக்க சிறியதொரு சந்தர்ப்பத்தை வழங்கியது. அதையே சர்வதேசத்திற்கு என்னை அறிமுகப்படுத்தும் வாய்ப்பாகக் கருதினேன். அங்கிருந்தே எனக்கு சிறிது சிறிதாக அறிமுகம் கிடைத்தது. தமிழகத்தின் தலைசிறந்தவர்கள் எவராயினும் தம்மை பொருத்தமான முறையில் உலக அரங்கிற்கு தாமாக அறிமுகப்படுத்தாமல், அவர்கள் தம்மைத் தேடிவரும்வரை காத்திருந்தால் இறுதிவரை ஏமாற்றமே மிஞ்சும்' என்ற பொருளில் அவர் வழங்கிய பதில் தான் இங்கு இலங்கைவாழ் படைப்பாளிகளுக்கும் பொருந்தும் என்று நம்புகின்றேன்.

தனது மூன்றாவது தொகுதிக்குப் பின்னர் புன்னியாமீன் தன் நூலின் தலைப்பை 'இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள்' என்று குறிப்பிடுவதைத் தவிர்த்துக்கொண்டார். பதிலாக 'இலங்கை எழுத்தாளர்கள்' என்று குறிப்பிட்டு அதன்மூலம் முஸ்லீம் அல்லாதவர்களையும் தனது தேடல் வலயத்துக்குள் உள்வாங்கிக் கொண்டார். இந்த வரையறையுடனே நவம்பர் 2006 இல் அவரது நூல் தொடரின் நான்காவது தொகுப்பு 'இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின்

விபரத்திரட்டு - தொகுதி 4' என்ற தலைப்புடன் வெளிவந்தது. இது புன்னியாமீன் எழுதி வெளியிட்ட 100வது நூல் என்ற பெருமையையும், புலம்பெயர்ந்த ஈழத்து எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டின் முதலாம் பாகம் என்ற அறிமுகத்தையும் பெற்றிருந்தது. ஐரோப்பிய நாடுகளிலெல்லாம் முஸ்லீம்கள் அல்லாத இலங்கைத் தமிழ்ப் படைப்பாளிகளிடையே புன்னியாமீன் பற்றிய விழிப்புணர்வை ஊட்டியதில் இந்த நூல் முக்கிய பங்கு வகித்திருந்தது. ஈழத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு பின்னர் புலம்பெயர்ந்து பிரித்தானியா, ஜெர்மனி, டென்மார்க், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் வசித்துவரும் 25 எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்கள் அவர்களின் புகைப்படங் களுடன் இப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருந்தன.

இத்தொகுப்புப் பணியில் புன்னியாமீனின் விருப்பத்திற்கிணங்க அவர் அனுப்பிய படிவங்களை லண்டனில் நானறிந்த எழுத்தாளர்கள் அனைவருக்கும் தபாலில் அனுப்பி வைத்திருந்ததுடன், ஐரோப்பிய நாடு களுக்கு நான் கலை இலக்கிய நிகழ்வுகளில் பங்கேற்பதற்காகச் சிறப்பு விருந்தினராகச் சென்றிருந்த வேளைகளில் எனது உரைகளுக்கிடையேயும், அங்கு நான் சந்தித்த புகலிடத்துக் கலை இலக்கியவாதிகளிடமும் புன்னியாமீனின் தொகுப்புப் பணிபற்றி வாய்ப்புக் கிட்டும் வேளைகளிலெல்லாம் எடுத்துரைத்ததுடன், படிவங்களையும் விநியோகித்தும் உதவிசெய்திருந்தேன். ஆரம்பத்தில் நான் வழங்கிய படிவங்களை வாங்கித் தமது தகவல்களை புன்னியாமீனுக்கு வழங்க பலரும் முன்வரவில்லை என்பது எனது கசப்பானதொரு அனுபவமாக இருந்தது. இதற்கு சில காரணங்கள் இருந்தன.

முதலாவது காரணம் அவர் ஒரு முஸ்லிமாக இருந்தமையாகும். ஈழ விடுதலைப் போராட்டத்தின் போது புலனாய்வுத்துறையினருடன் இணைந்து பல தமிழ்பேசும் முஸ்லிம்கள் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தினை கொச்சைப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த தாகவும், புலம்பெயர்ந்தோர் தொடர்பான புலனாய்வுத் தகவல்களை பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கிவரும் ஒற்றர்களாக முஸ்லிம்களையே அரசாங்கம் அதிகளவில் பயன்படுத்தி வந்ததாகவும் ஒரு கருத்து அக் காலகட்டத்தில் புலம்பெயர் தமிழர்களிடையே நிலவிவந்திருந்தது. புன்னியாமீனின் இந்தத் தகவல் சேகரிக்கும் செயற்பாடுகளும் புலம் பெயர்ந்து வாழ்ந்திருந்த பெரும்பான்மையான தமிழர்களால் அத்தகைய பின்புலத்திலிருந்தே பார்க்கப்பட்டது. இருப்பினும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகச் செயற்பட்டு வந்திருந்த ஐ.பீ.சீ. தமிழ் என்ற ஐரோப்பிய வானொலியில் வாரம்தோறும் காலைக்கலசம் என்ற

நிகழ்ச்சியில் இலக்கியத் தகவல் திரட்டு என்றொரு இருபது நிமிட நேர நிகழ்ச்சியொன்றை ஏழு வருடங்களாக வழங்கி வந்த நான் அறிமுகப் படுத்தும் ஒருவர் இத்தகைய அரசியல் பின்புலத்தில் செயற்படுபவராக இருக்கமாட்டார் என்ற நம்பிக்கையும் ஒருசாராரிடையே இருந்து வந்ததையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

புன்னியாமீன் ஏதோ அரசாங்கத்தின் புலனாய்வு உளவாளியாக இருந்து புலம்பெயர் தமிழர்களிடம் இருந்து தகவல்களைப் பெற்று அரசாங்கத்துக்கு வழங்குகிறாரோ என்ற சந்தேக மனப்பான்மை, அவர்களை புன்னியாமீனுக்கு தம்மைப்பற்றிய தகவல்களை வழங்குவதில் எச்சரிக்கையாக இருக்கவைத்தது. .இதனை பலர் மறைமுகமாகவும், சிலர் நேரடியாகவும் என்னிடம் விசாரிக்கத் தலைப்பட்டிருந்தார்கள். காலக் கிரமத்தில் அவர்களிடம் புன்னியாமீன் பற்றிய தெளிவான அபிப் பிராயத்தை ஏற்படுத்த நான் மிகவும் கடினமாக முயற்சிசெய்ய வேண்டியிருந்தது. பின்னாளில் புன்னியாமீனின் நூல்களை புகலிடத்தில் சுதந்திரமாக புலம்பெயர் இலக்கிய அமைப்புகளே முன்வந்து வெளியிடவும், அவரது இணையத்தள நட்புவட்டத்தில் இணைந்து உரையாடவும், அவரது சிந்தனை வட்டத்தின் உதவியுடன் தத்தமது நூல்களை அச்சிட்டுப் பெற்றுக்கொள்ளவும் புலம்பெயர் தமிழர் முன்வந்தது எனக்குக் கிடைத்த வெற்றியாகவே கருதுகின்றேன்.

'இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு - தொகுதி 4' என்ற நூலில் இருபத்தைந்து புகலிடப் படைப்பாளிகள், ஊடகவியலாளர்களின் தகவல்கள் இடம்பெற்றிருந்தன. ஐக்கிய இராச்சியத்திலிருந்து நூலகவியலாளர் என். செல்வராஜா, நவஜோதி ஜோகரட்ணம், தேசம் இணைய இயக்குநர் த. ஜெயபாலன், அடைக்கலமுத்து அமுதசாகரன் என்றழைக்கப்படும் இளவாலை அமுது, பத்திரிகையாளர் டரின் கொன்ஸ்டன்டைன், ரமேஷ் வேதநாயகம், முல்லை அமுதன் என்ற அறியப்பெற்ற எழுத்தாளர் இ. மகேந்திரன் (இவர் பின்னாளில் முறையே 2008, 2015 ஆகிய ஆண்டுகளில் 'இலக்கியப் பூக்கள்' என்ற தலைப்பில் இரண்டு பாரிய தொகுதிகளில் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களின் விபரத்தொகுப்பினை வெளியிட்டுள்ளார்.) ஆகியோர் பற்றியும், ஜேர்மனியிலிருந்து பத்மாஷணி மாணிக்கரட்ணம், நகுலா சிவநாதன், மண் - சஞ்சிகை ஆசிரியர் வை.சிவராஜா, சுந்தரம்பாள் பாலச்சந்திரன், கீதா பரமானந்தன், ஈழமுருகதாசன் என்ற இராசகருணா, கே.கே.அருந்தவராஜா (இவர் மீண்டும் தாயகம் திரும்பி வவுனியாவில் வாழ்ந்து வருகிறார்.), அம்பலவன் புவனேந்திரன், பொ.சிறீஜீவகன், கலைவாணி ஏகானந்தராஜா, வை. யோகேஸ்வரன், அன்ரனி வரதராசன்,

பெ.கருணாகரமூர்த்தி, ஜெயா நடேசன் ஆகியோர் பற்றியும், டென்மார்க் நாட்டிலிருந்து வேதா இலங்காதிலகம், சு. சண்முகம், வேலணையூர் பொன்னண்ணா என்று அறியப்பெற்ற பொன். தியாகராசா ஆகியோர் பற்றியும், பிரான்சிலிருந்து வண்ணை தெய்வம் என்று அறியப்பெற்ற நா. தெய்வேந்திரம் அவர்களைப் பற்றியும் விரிவான தகவல்கள் இந்தத் தொகுப்பில் இடம்பெற்றதன் மூலம், புன்னியாமீன் அவர்களின் எழுத்தாளர் விபரத்திரட்டு, முழு இலங்கையையும் தாயகமாகக் கொண்ட அனைத்துத் தமிழ்பேசும் மக்களுக்கும் பொதுவானதாக விரிவு பெற்றது.

இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டின் ஐந்தாவது தொகுதி முன்னைய தொகுதி வெளியாகிய அடுத்த மாதமே வெளிவந்துவிட்டது. டிசம்பர் 2006 இல் இத்தொகுதி மேலும் சில முஸ்லிம் படைப்பாளிகளின் விபரங்களுடன் வெளிவந்தது. இத்தொகுதியில் அஷ்ரப் ஏ. ஸமத், எம்.எம்.எம். மஹ்றூப், அன்பு ஜவஹர்ஷா, ஏ.எம்.இஸ்ஸடீன், எஸ்.எம்.அறூஸ், எம்.அர்.கே.மவ்பியா, எம்.யூ.எம். ஜிப்ரி, ஏ.எல்.எம். ஸும்ரி, எம்.எச்.எம். ஹாரித், அபுதாலிப், த. மீரா லெவ்வை, எம்.எம்.எம். கலீல், முஹம்மது பாறூக், யூ.எல். முஸம்மில், பாயிஸா கைஸ், மொஹிதீன் அடுமை, எம்.பீ. ஹுசைன் பாருக், ஏ.எம்.எம். அத்தாஸ் ஆகியவர்கள் பற்றிய விரிவான பதிவுகள் இடம்பெற்றிருந்தன. இந்நூலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 18 பேரினதும் புகைப்படங்களும் அவர்கள் எழுதிய சில நூல்களின் அட்டைப்படங்களும், இலக்கிய வாழ்வின் முக்கிய நிகழ்ச்சிகளை பதிவுசெய்திருந்த புகைப் படங்களும் இடம்பெற்றிருந்தன.

மீண்டும் ஒரு மாத இடைவெளியில் இவ் விபரத்திரட்டின் ஆறாவது தொகுதி வெளிவந்துவிட்டது. ஜனவரி 2007இல் வெளிவந்த இத்தொகுதி சிந்தனை வட்டத்தின் 239ஆவது நூலாக அமைந்திருந்தது. இத்தொகுதி யில் மேலும் 14 பேரின் விபரங்கள் தொகுக்கப்பெற்றிருந்தன. எம்.எம். சாலிஹ், என்.எம். ஹனீபா, ஏம். றஸீது, ஏ.எல்.எம். பளீல், சுலைமான் புலவர், ஏ.எம். கனி, ஆ.மு. ஷரிபத்தீன், எம்.ஏ. முஹம்மது, எம்.ஸி. எம். ஸுபைர், எம்.எச்.எம்.ஷம்ஸ், பீ.எம்.ஏ.சலாஹுதீன், வை. அஹ்மத், ஏ.ஸீ. பீர் மொஹம்மட் ஆகியோர் இந்நூலில் இடம்பெற்ற எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களாவர்.

ஒரு மாதம் கழிந்த நிலையில் பெப்ரவரி 2007இல் ஏழாவது தொகுதியை மேலும் முப்பது முஸ்லிம் பெருமக்களின் வாழ்க்கைக் குறிப்புகளுடனும் அவர்களது பணிகள் பற்றிய தகவல்களுடனும் புகைப்பட ஆதாரங்களுடன் சிந்தனை வட்டத்தின் 241வது வெளியீடாகப் புன்னியாமீன் எமக்களித்தார். இத்தொகுதியில் நயீமா சித்தீக், ஏ. சித்தி ஜஹானறா, ஸாஹிரா நாஸிர், முகம்மது முர்சித், எம்.எப்.ரிம்ஸா, எம்.எல்.லாபீர்,

ஹிபிஷி தௌபிக், என்.எல்.ரஷீன், தமீம் அன்ஸார், ரஷீத் எம்.ராஸிக், ஏ.சி.றாஹில், செய்ன் தம்பி ஸியாம், எஸ்.எம்.ஸப்ரி, எம்.ஏ.அமீர் ரிழ்வான், ஏ.ஆர்.ஏ.அஸீஸ், வை.எல்.எம்.றிஸ்வி, எம்.எச். முஹம்மட், மொஹம்மட் அக்ரம், மு.மீ.அமீர் அலி, எஸ்.நஜிமுதீன், என்.பி.ஜுனைத், மல்ஹர்தீன், றஹ்மான் ஏ.ஜெமீல், எம்.எல்.இஸ்ஹாக், எஸ்.எம்.எம்.நஸிறுதீன், றிஸ்வியூ முஹம்மத் நபில், எம்.எஸ்.எம்.ல்ஸபீல், முகமட் இமாம் ஹன்பல், அ.கா.மு.றிஸ்வின், எம்.எம்.கலீல் ஆகிய 30 பேர்கள் பற்றிய கட்டுரைகள் இடம்பெற்றிருந்தன.

மார்ச் 2007இல் வெளிவந்த எட்டாவது தொகுதி மேலும் 25 முஸ்லிம் எழுத்தாளர்களைத் தனது பதிவாக்கத்திற்கு உட்படுத்தியதன் மூலம் 25 தமிழ்ப் படைப்பாளிகள் உள்ளிட்ட 225 படைப்பாளிகளை அவர் அதுவரையில் ஆவணப்படுத்தியிருந்தார். சிந்தனைவட்டத்தின் 246வது வெளியீடு இதுவாகும். இத்தொகுதியில் என்.எம். நூர்தீன், ஏ.எல். முஹம்மட் முக்தார், ஆரிப் அஜ்மீர், ஏ. புஹாது, ஏ.எல். ஜுனைதீன், எம்.பி.எம். காசிம், அப்துல் அஹத், எம்.யூ.எம்.சனூன், மொஹமட் ரமலி, எச்.எம்.ஷரிப், அப்துல் ஸலாம், மருதூர் அலிக்கான், எம்.என்.அப்துல் அஸீஸ், எம்.ஐ.எம்.ஐ.பாவா, எம்.எம்.பகர்தீன் பாவா, ஏ.சி.அகமது லெவ்வை, அப்துல் ரவூப், எம்.ஐ.இம்தியாஸ், ஏ.கே.எம். அன்ஸார், எம்.ஐ.எம்.பாரிஸ், முஹம்மது அஸ்ஹர், எஸ்.எம்.உவைத்துல்லா, எம். பி. அஹமட் ஹாருன், சுபைர் இளங்கீரன், எம்.ரி.முகம்மது ஹுஸைன் ஆகிய 25 முஸ்லிம் எழுத்தாளர்களின் விபரங்களை புன்னியாமீன் உள்ளடக்கியிருந்தார்.

நவமணியில் தொடராக இக்கட்டுரைகள் இடம்பெற்றதைப் போலவே, பின்னர் தினக்குரலிலும் தொடர்ந்து இக்கட்டுரைகள் வெளிவரத் தொடங்கியிருந்தன. தினக்குரல் கட்டுரைகளின் தொகுப்பாக புன்னியாமீன் தனது ஒன்பதாவது தொகுதியை வெளியிடத் தீர்மானித்தார்

இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டின் ஒன்பதாவது தொகுதி நவம்பர் 2007இல் சிந்தனை வட்டத்தின் 275ஆவது நூலாக அமைந்தது. நான்காவது தொகுதியைப் போன்று இதுவும் புலம்பெயர்ந்த ஈழத்து எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டின் இரண்டாம் பாகமாக வெளிவந்தது. ஈழத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு தற்போது கனடா, நோர்வே, பிரித் தானியா, ஜெர்மனி, டென்மார்க், பிரான்ஸ், இந்தியா ஆகிய நாடுகளில் புலம்பெயர்ந்து வசித்துவரும் 15 எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்கள் அவர்களின் புகைப்படங்களுடன் இந்நூலில் சேர்க்கப்பட்டிருந்தன. வள்ளிநாயகி இராமலிங்கம் (கனடா), பொன்னரசி கோபாலரட்ணம் (நோர்வே), பத்மன் பசுபதிராஜா (ஜேர்மனி), இணுவை

சக்திதாசன் (டென்மார்க்), ஆ.மகேந்திரராஜா (ஜேர்மனி), வைத்தீஸ்வரன் ஜெயபாலன் (ஐக்கிய இராச்சியம்), முகத்தார் எஸ்.ஜேசுரட்ணம் (பிரான்ஸ்), தர்மலிங்கம் ரவீந்திரன் (ஜேர்மனி), செல்லத்தம்பி சிறீக்கந்தராசா (ஐக்கிய இராச்சியம்), எம்.என்.எம்.அனஸ் (ஐக்கிய இராச்சியம்), மட்டுவில் ஞானக்குமாரன் (ஜேர்மனி), சகாதேவன் இராஜ்தேவன் (நோர்வே), மனோன்மணி பரராஜசிங்கம் (ஜேர்மனி), சீ.பன்னீர்செல்வம் (இந்தியா), இராஜேஸ்வரி சிவராஜா (ஜேர்மனி) ஆகிய 15 இலக்கியப் பிரமுகர்களின் பணிகள் கட்டுரையுருவில் தரப்பட்டிருந்தன.

இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு என்ற தலைப்பில் வெளிவந்த நூல்தொடரின் இறுதித் தொகுதியாக பத்தாவது தொகுதி அமைந்திருந்தது. பெப்ரவரி 2008இல் இத்தொகுதியை அவர் வெளியிட்டிருந்தார். இந்நூலில் இலங்கையைச் சேர்ந்த 35 முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்களின் பதிவு இடம்பெற்றுள்ளது. நூலின் இறுதியில் யாழ்ப்பாணம் கரவெட்டியில் தலைமையகத்தைக் கொண்டு செயற்படும் அகில இலங்கை கலை இலக்கியச் சங்கத்தின் வாழ்த்துச் செய்தியொன்றும் சேர்க்கப் பட்டுள்ளது. இது புன்னியாமீனின் இலக்கியத் தளம், உடத்தலவின்னை யிலிருந்து யாழ்ப்பாணம் வரை வியாபித்திருந்தமைக்கு ஒருசோற்றுப் பதமாகக் கருதலாம். பத்தாவது தொகுதியில் யூ.எல். அலியார், ரஸ்மினா ராஸீக், கே.எல்.அமீர், எஸ்.ஆர்.எம்.எம்.முஹ்ஸி, ஏ.ஜீ.எம்.தமீம், மு.சு.அ. முகம்மது றாஸீக், பீ.எம்.நியாஸ்தீன், எஸ்.எச். அமீர், றுவைதா மதீன், எம்.ஏ.எம்.செல்ல மரிக்கார், மஸாஹிரா இல்யாஸ், கே.எம். ஸவாஹிர், எம்.எஸ்.அஹ்மது பதுர்தீன், அப்தல் காதர் அஸீம், எம்.எஸ். நௌஷாட், முஹம்மது ஸித்தீக், எம்.ஏ.கபூர், ஏ.எல்.அலியார், எம்.ஸி. எம்.அஸ்வர், அல்.அஸூமத், லா∴பீர் ஸஹீட், இப்பன் சால்டின், அபதாலிப் அப்துல் லத்தீ∴ப், ஜெய் றஹீம் சயீத், கே.ஏ.ஜவாஹர், எம்.எச். பௌசல் அமீர், எம்.எம்.ஏ.லத்தீப், நூர்ஜான் மர்ஸூக், ஹம்ஸா ஆரிப், ஆமினா பேகம் பாரூக், நிஹாரா சபூர்தீன், ஜெய் குமாலா சவ்ஜா, டோனி ஹஸன், எம்.எஸ்.முஹம்மத், எம்.ஏ.புஹாரி ஆகிய 35 கலை இலக்கிய வாதிகளையும் சேர்த்து புன்னியாமீன் இதுவரை வெளியிட்ட பத்து தொகுதிகளிலும் மொத்தம் 275 தமிழ் இஸ்லாமிய பிரமுகர்களை ஆவணப்படுத்தியிருந்தார்.

**இவர்கள் நம்மவர்கள்**

புன்னியாமீன் தொடர்ந்தும் படைப்பாளிகளை ஆவணப்படுத்தும் பணியை விட்டுவிடவில்லை. நவமணியில் தொடர் நிறுத்தப்பட்டதும் அது 11.11.2007 முதல் தினக்குரலில் ‘இவர்கள் நம்மவர்கள்’ என்ற வாராந்தத் தொடராக,




அவரைத் தொடரவைத்தது. தினக்குரல் கட்டுரைகளின் வாயிலாக அவர் பெரும்பாலும் தமிழ்ப் படைப்பிலக்கியவாதிகளையே அதிகமாக அறிமுகப்படுத்தத் தொடங்கியிருந்தார். எழுத்தாளர் விபரத்திரட்டின் தொடர்ச்சியாகவே ‘இவர்கள் நம்மவர்கள்’ என்ற தொகுதியும் அமைய லாயிற்று. அவற்றுக்கு வழங்கப்பட்ட தொடர் இலக்கங்களும் முன்னைய தொகுதியிலிருந்து தொடர்வதாகவே காணப்பட்டன. இலங்கை எழுத் தாளர்கள், ஊடகவியலாளர்கள் கலைஞர்களின் விபரத்திரட்டு தொகுதி 11 முதல் தொகுதி 15 வரை, ‘இவர்கள் நம்மவர்கள்’ என்ற புதிய தலைப்பிலும் புதிய வடிவத்திலும் தொடர்ந்தது.

‘இவர்கள் நம்மவர்கள்’ என்ற புதிய தலைப்பில் வெளிவந்த மொத்தம் ஐந்து நூல்களின் வழியாக ஈழத்துத் தமிழ்ப் படைப்பாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் என்று இத்துறைகளில் தடம் பதித்து நின்ற தம்பிஐயா தேவதாஸ், எஸ்.எச்.எம். ஜெமீல், அராலியூர் ந.சுந்தரம் பிள்ளை, அந்தனி ஜீவா, பாலா.சங்குப்பிள்ளை, ஜே.மீரா மொஹிதீன், வை.அனவரத விநாயகமூர்த்தி, சாரல்நாடன், வீ.வீரசொக்கன், நாகலிங்கம் தர்மராஜா (அகளங்கன்), செபஸ்தியான் செபமாலை (குழந்தை), பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கம், சந்திரகௌரி சிவபாலன், சாந்தி முஹியித்தீன், கிச்சிலான் அமதுர் றஹீம், வண.பிதா. தமிழ்நேசன் அடிகளார், சி.என். துரைராஜா, மானா மக்கீன், சு. ஸ்ரீகந்தராசா, ராஜா ஜென்கின்ஸ், ச.முருகானந்தன், த.சந்திரசேகரன், அன்புமணி இராசையா

நாகலிங்கம், கே.எம்.பாரூக், சின்னத்தம்பி ரவீந்திரன், தங்கேஸ்வரி கதிராமன், எம்.வை.எம்.மீஆது, ஆ.மு.சி.வேலழகன், க.இரத்தினசிங்கம், சி.தர்மகுலசிங்கம், கே.எம்.எம்.காசீம்ஜீ, ஞானச்செல்வம் மகாதேவா, கந்தப்பன் செல்லத்தம்பி, இராசவல்லவன் இராசயோகன், முருகர் செல்லையா, சந்திரகாந்தா முருகானந்தன், கோ.லோகநேசன், வதிரி இ.இராஜேஸ்கண்ணன், வ.தம்பிமுத்து, மாரி மகேந்திரன், இராமசாமி பாலகிருஷ்ணன், சி.விஸ்வலிங்கம், பொன்னம்பலம் சுகந்தன், எம்.எஸ்.ஏ. மஜீத், ஏ.முஹம்மத் சமீம், ஏ.எம்.முஸ்தகீம், உஸ்மான் பைலா, முக்தார் ஏ.முஹம்மத், ஏ.என்.எம்.ஷாஜஹான், எம்.ஏ.ஏ.ஹஸன், ஞானம் சஞ்சிகை ஆசிரியர் தி.ஞானசேகரன், லெ.முருகபூபதி, சக்தீ அ.பாலஐயா, திமிலைத் துமிலன், ஏறாவூர் தாஹிர், கந்தையா செல்வநாயகம், த.கோபாலகிருஷ்ணன், தில்லையடிச் சிவன், நீலாபாலன், வைரமுத்து கந்தசாமி, செபஸ்தியாம் பிள்ளை ஞானராசா, மண்டூர் அசோகா, கனிவுமதி சந்திரசேகரம், முருகப்பன் கணபதிப்பிள்ளை (மூனாக்கானா), கனகசபை சிவகுருநாதன் (கசின்), கண்டாவளைக் கவிராயர் (சி.கு.இராசையா), அ.அந்தோனிமுத்து, மொகம்மது நிசார், தாமரைத்தீவான் (சோமநாதர் இராசேந்திரம்), பெரியதம்பி ஐங்கரன், இளையதம்பி நடராசா, எஸ்.எம்.ஹனீபா, ஆனந்தன் மோகனதாஸ், எஸ்.எல்.எம்.மஹ்ரூப், செல்லத்தம்பி மகேஸ் ஆகியோரைப் பற்றிய வாழ்வும் பணிகளும் புன்னியாமீன் அவர்களால் ஆவணப்படுத்தப் பட்டுள்ளது. ‘இவர்கள் நம்மவர்கள்’ முதலாம் பாகம், மே 2008இலும், இரண்டாம் பாகம் ஜுன் 2008இலும், மூன்றாம் நான்காம் பாகங்கள் நவம்பர் 2008இலும், இறுதியாக வெளிவந்த ஐந்தாம் பாகம் நவம்பர் 2009இலும் வெளிவந்து ஒட்டுமொத்தமான 350 பதிவுகளுடன் நிறைவு கண்டது.

இலக்கியவாதிகளை ஆவணப்படுத்துவதில் மாத்திரம் புன்னியாமீன் ஈடுபாடு கொண்டிருக்கவில்லை. அவரது சமூக வாழ்வே ஆவணப்படுத்தல் என்ற ஒரு பணியை அடிநாதமாகக் கொண்டுதான் இயங்கிவந்திருக் கின்றது என்பதை அவருடன் நெருக்கமான தொடர்பு கொண்ட எவரும் அறிந்திருப்பார்கள்.

‘சுவடுகள் 99: நினைவு மலர்’ ஒன்றினை உடத்தலவின்ன, கென்ட் பவுண்டேஷன், அமைப்பிற்காக புன்னயாமீன் தயாரித்து செப்டெம்பர் 1999இல் வழங்கியிருந்தார். மலையகத்தின் உடத்தலவின்ன மடிகேயில் இயங்கிவந்த கென்ட் பவுண்டேஷன் (Kent Foundation) என்ற நிறுவனத்தின் பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்பெற்ற சிறப்பு மலர் இதுவாகும். நாடளாவியரீதியில் வாழும் பல அறிஞர்களின் கட்டுரைகள் இம்மலரில் தொகுக்கப்பட்டிருந்ததுடன், உடத்தலவின்ன மடிகேயின்

பிரதேச வரலாறு பற்றிய பல தகவல்களை இம்மலர் தன்னகத்தே கொண்டிருந்தது.

'சுவடு' என்ற பெயரில் M.R.M.ரிஸ்வி அவர்களைத் தொகுப்பாசிரியராகக் கொண்டு, புன்னியாமீனின் வழிகாட்டலில் ஜனவரி 2001 இல் ஒருநூல் வெளிவந்திருந்தது. இதில் விசேஷம் என்னவென்றால், ஒரு நூல்வெளியீட்டு விழாவைப்பற்றிய தகவல்களை ஆவணமாக்கும் மற்றொரு நூலாக அமைந்ததுதான். சிந்தனை வட்டத்தின் 100வது நூலான 'இரட்டைத்தாயின் ஒற்றைக்குழந்தை' யின் வெளியீட்டுவிழா நிகழ்வின் பதிவாக இந்நூல் அமைந்திருந்தது. நூல்வெளியீட்டின் நினைவாக ஒரு நூலை வெளியிடும் போக்கு புன்னியாமீனுக்கு கைவந்த கலையாயிற்று. ஈழத்துத் தமிழ் இலக்கியவானில் ஒரு புதிய பரிமாணத்தின் சுவடு இதுவாகும் என்று நான்கருதுகின்றேன். 11.11.2000 அன்று கண்டியில் இடம்பெற்ற அந்த வெளியீட்டு நிகழ்வின் பின்னணியில் நூல்வெளியீடு, தமிழ் வளர்க்கும் காவலர்களைக் கௌரவித்தல், தடாகம் சிறுகதைப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு ஆகிய பல இலக்கிய நிகழ்வுகள் அன்று இடம்பெற்றன. இவை பற்றிய விரிவானதொரு ஆவணத் தொகுப்பாக 'சுவடு' என்ற அந்நூலின் முதலாம் பகுதி அமைந்துள்ளது. இரண்டாம் பகுதியில் சிந்தனை வட்டம் வெளியீடுகள் பற்றிய பட்டியல், சிந்தனை வட்டத்தின் பணிப்பாளர் புன்னியாமீன் அவர்களின் நூல்களின் பட்டியல், அவரது பேட்டி ஆகியன இடம்பெற்றிருந்தன.

இதே பாணியில் மற்றொரு பதிவையும் அண்மையில் புன்னியாமீன் மேற்கொண்டிருந்தார். துர்அதிர்ஷ்டவசமாக அதுவே அவரது இறுதி நூலுமாயிற்று.

சிந்தனை வட்டத்தின் 350ஆவது வெளியீடாக வந்துள்ள 'ஓர் ஈரநெஞ்சனின் உளவியல் உலா' என்ற நூலை புன்னியாமீனின் தனது இறுதிக்காலத்தில் மிகுந்த ஆர்வத்துடன் எழுதிவந்தார். டிசம்பர் 2012இல் வெளிவந்த இந்நூல், சிந்தனை வட்டத்தின் 350ஆவது வெளியீடாகவும் அமைந்தது. இந்நூலில் இலங்கையின் பிரபல உளவளவியலாளர் யூ.எல்.எம்.நௌபர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுப் பதிவுகளும், உளவியல் அடிப்படைகளும் பதினேழு இயல்களில் விபரிக்கப்பட்டிருந்தன. யூ.எல்.எம். நௌபரின் வாழ்க்கை வரலாற்றின் பின்னணியில் அவர் வாழ்வில் தான் கண்ட அரிய பல அனுபவபூர்வமான உளவியல் கருத்துக் களை இந்நூலில் புன்னியாமீன் விளக்கியுள்ளார். மனோதத்துவ நிபுணரான யூ.எல்.எம்.நௌபர் தன்னலமற்ற ஒரு உளவளவியலாளராக சுமார் நான்கு தசாப்தகாலமாக இலங்கையில் அறியப்பட்டவர். இனமதபேதம் கடந்த அவரது சேவை - சுமார் 2500 பேரை இலவச உளவியல் சிகிச்சை மூலமாகக் குணப்படுத்தியுள்ளதை இந்நூலில் ஆசிரியர்

விபரிக்கிறார். இலங்கையில் 2004இல் இடம்பெற்ற சுநாமி அனர்த்தத்தின் பின்னணியில் இவரது சேவை வடக்குக் கிழக்கிலும் பரவலடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. புன்னியாமீன், உளவளவியலாளர் யூ.எல்.எம். நௌபர் அவர்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தார். அவரது நட்பு வட்டத்தில் முக்கியமானவராக யூ.எல்.எம். நௌபர் விளங்கியிருந்ததை புன்னியாமீன் 2012-2013களில் என்னுடனான தொடர்பாடல்களில் அடிக்கடி குறிப்பிட்டு வந்திருக்கிறார்.

புன்னியாமீனின் மிக முக்கியமான பதிவாக அமைந்த உளவளவியலாளர் யூ.எல்.எம்.நௌபர் பற்றிய ‘ஓர் ஈரநெஞ்சனின் உளவியல் உலா’ என்ற நூல் வெளியீட்டு நிகழ்வு பற்றிய நேர்முக வர்ணனையாக மற்றும் ஒரு நூலையே இறுதியாக பெப்ரவரி 2013இல் புன்னியாமீன் எழுதி வெளியிட்டுத் தன் எழுத்துலகப் பணியை நிறைவுசெய்யத் துணிந்திருக்கிறார் போலும்.

ஆம் சிந்தனை வட்டத்தின் 351ஆவது வெளியீடாக புன்னியாமீனின் இறுதி நூல், ‘ஓர் ஈரநெஞ்சனின் உளவியல் உலா-சுவடுகள்’ என்ற தலைப்பில் வெளிவந்திருந்தது. அவரது நூல் வெளியீட்டு விழா 25.2.2013 அன்று கொழும்பில் நடைபெற்றவேளையில் வெளியிடப்பட்ட கைந் நூல் இதுவாகும். நிகழ்ச்சி நிரலுடன், நூல் வெளியீட்டு விழா நிகழ்வுகளின் பதிவுகளாக அமைந்த இச்சிறு நூலில், விழாவின் பேராளர்கள் பற்றியும், அந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டவர்கள் பற்றியும் சிறு வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் இடம்பெற்றிருந்தன. சிந்தனை வட்டம்-ஓர் ஆய்வு என்ற தலைப்பில் நூலகவியலாளர் என்.செல்வராஜா அவர்களின் விரிவான கட்டுரையும் இறுதியில் இடம்பெற்றிருந்தது.

புன்னியாமீனின் அந்த நூலின் வெளியீட்டு விழா, அவரது வாழ்வில் நடந்தேறிய பல்வேறு விழாக்களின் உச்சமாக அமைந்து அவரை சிறப்பித்தது. புன்னியாமீன் அவர்களது இறுதி நூலின் வெளியீட்டு விழா பற்றி நான் எழுதி வழங்கியிருந்த லண்டன் தமிழமுதம் வானொலி உரையை இங்கே மீண்டும் தருகின்றேன்:

‘இலங்கையில் நிகழ்ந்த நிறைவானதோர் தமிழ் நூல் வெளியீட்டு விழா.’

இலங்கையின் புகழ்பூத்த ஹிப்னாட்டிச- மனோதத்துவ - உளவளவியலாளர்களுள் ஒருவரான யூ.எல்.எம்.நௌபரின் வாழ்க்கை வரலாற்றுப் பதிவுகளையும் உளவியல் அடிப்படைகளையும் உள்ளடக்கிய நூலொன்றினை கலாபூசணம் பீ.எம். புன்னியாமீன் அவர்கள் அண்மையில் எழுதியிருந்தார். யூ.எல்.எம். நௌபரின் வாழ்க்கை வரலாற்றின் பின்னணியில் அவர் வாழ்வில் கண்ட அரிய பல அனுபவபூர்வமான உளவியல் கருத்துக்களை அனுபவரீதியில் இந்நூலில் புன்னியாமீன் விளக்கியுள்ளார். கலாபூசணம் புன்னியாமீன் எழுதிய ‘ஓர் ஈர நெஞ்சனின் உளவியல்

உலா' என்ற இந்நூல் வெளியீட்டுவிழா கொழும்பு ஜே.ஆர். ஜயவர்த்தனா கலாசார மண்டபத்தில் 2013 பெப்ரவரி 25இல் வெகு சிறப்பாக நடைபெற்றது.

பொதுவாக இலங்கையில் நடைபெறும் தமிழ் நூல் வெளியீட்டு விழாக்களைப் பொறுத்தவரையில் ஒரு கூரையின்கீழ் நூறு பேரைத் திரட்டுவது என்பது பெரிய காரியம். ஆயின் இவ்விழாவில் நாடளாவிய ரீதியில் 550 பேருக்கும் மேல் கலந்து கொண்டமை சிறப்பான விடயமாகும். கொழும்பு ஜே.ஆர். ஜயவர்த்தனா கலாசார மண்டபத்தின் பிரதான மண்டபத்தில் 400 ஆசனங்களே உள்ளன. வெளியில் இருந்து 150 கதிரைகள் வாடகைக்குப் பெறப்பட்டு பிரதான மண்டபத்துடன் இணைந்த மண்டபத்திலும் போடப்பட்டதாகப் புன்னியாமீன் எனக்குத் தெரிவித்திருந்தார். மண்டபத்தில் பாரிய தொலைக்காட்சித் திரையிலும் நிகழ்வுகள் பெருப்பித்தும் காட்டப்பட்டன. விழாவிற்கு வந்த அனைவருக்கும் ஒரு 'ஈரநெஞ்சனின் உளவியல் உலா - சுவடுகள்' எனும் 48 பக்க நூல் ஒன்றும் இலவசமாக வழங்கப்பட்டது. நிகழ்ச்சி நிரலுடன், சிந்தனை வட்டத்தினதும் அதன் தாபகர் புன்னியாமீனினதும் பணிகளை சுவடுகள் உள்ளடக்கியிருந்தது.

பொதுவாக நூல் வெளியீட்டு விழாக்களின் போது முதல் பிரதி, சிறப்புப் பிரதி என்று நூல் பெறுவோர் பட்டியல் நீண்டிருக்கும். ஆனால் 'ஒரு ஈரநெஞ்சனின் உளவியல் உலா' வெளியிட்டு விழா அழைப்பிதழில் இத்தகைய பட்டியல்களைக் காணமுடியவில்லை. இருப்பினும் விழா நடைபெற்ற நேரத்தில் கலந்துகொண்ட பெரும்பாலானோர் நூலின் பிரதிகளை முண்டியடித்துக்கொண்டு வாங்கியமையும் நூலின் அச்சிடப்பட்ட பிரதிகளின் அரைவாசிக்கும் மேல் அன்றைய விழாவிலேயே விற்பனையாகித் தீர்ந்துபோனதும் ஈழத்து வெளியீட்டுத்துறையில் குறிப்பிடத்தக்க நிகழ்வொன்றேயாகும்.

கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் மா. கருணாநிதி தலைமையில் நடைபெற்ற இவ்விழா சர்வதேச குர்ஆன் ஓதல் போட்டியில் முதலிடம் பெற்று இலங்கைக்குப் பெருமை தேடித்தந்த மொஹமட் ரிஸ்வானின் கிராத்துடன் ஆரம்பமாகியது. இலங்கையில் உளவியல் துறையில் மூத்த பேராசிரியர் ரோலன்ட் அபேபால, இலங்கையில் சிரேஸ்ட மனோ வைத்திய நிபுணர் நிரோஸ மென்டிஸ் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்துகொண்டனர். இந்நிகழ்வுக்கு எந்தவொரு அரசியல்வாதியும் அழைக்கப்பட்டிருக்கவில்லை என்பதையும் அவதானிக்க முடிந்தது. பேராசிரியர்களும் கல்விமான்களுமே அதிதிகளாக அழைக்கப்பட்டிருந்தனர்.

விழாவில் நூலாய்வு என்று எதுவும் இடம்பெறவில்லை. இருப்பினும் இலங்கையில் முன்னணி சிந்தனையாளர்களில் ஒருவரான அல்ஹாஜ்

என்.ஏ.ரஷீட் சிறப்புரையையும் நூலாசியர் புன்னியாமீன் வெளியீட்டுரையையும் நிகழ்த்தியதுடன் திருமதி. மஸீதா புன்னியாமீன் கவி வாழ்த்திசைத்தார்.

மனோதத்துவ நிபுணரான யூ.எல்.எம்.நௌபர் அவர்கள் தன்னலமற்ற ஒரு உளவளவியலாளராவார். சுமார் நான்கு தசாப்த காலமாக இலங்கையில் சுமார் 2500க்கு மேற்பட்டோரை உளவியல் சிகிச்சை மூலமாக குணப்படுத்தியுள்ளார். சுனாமி அனர்த்தத்தின் பின்பும் வடக்கில் யுத்தம் நிறைவடைந்த பின்பும் வடமாகாணத்திலும் இவர் கணிசமான சேவை யாற்றியுள்ளார். இவர் சேவைக்காக ஒரு சதமேனும் பணமோ அல்லது அன்பளிப்புகளோ பெறுவதில்லை என்பது வியப்புக்குரிய உண்மை. இத்தகைய சேவைகளை மிகத் தெளிவாகவும் ஆதாரபூர்வமாகவும் புன்னியாமீன் இந்நூலில் தெளிவுபடுத்தியிருந்ததுடன் பொதுவாக உளவியல் பற்றியும் விரிவாகவும் சுவையாகவும் அனுபவ வெளிப்பாட்டுடன் எழுதியுள்ளார். இவ்விழாவிற்கு அதிகளவில் பார்வையாளர் கலந்து கொண்டமைக்கு இன மத வேற்றுமையற்ற தன்னலம் பாராத யூ.எல். எம்.நௌபர் அவர்களது சேவைகளும் ஒரு காரணமாக இருக்கலாம்.

இந்த விழாவின் போது நூலாசிரியர் கலாபூஷணம் புன்னியாமீன் உளவளவியலாளரான யூ.எல்.எம்.நௌபர் அவர்களை பொன்னாடை போர்த்தியும் மலர்மாலை அணிவித்தும் வாழ்த்தினார். உலகிலேயே அச்சுப்பதிவில் சிறிய அளவு கொண்டதாக 1998 கின்னஸ் சாதனைவரிசை நூலில் இடம்பெற்றிருந்த முக்கியத்துவமான குர்ஆன் பிரதியொன்றை தேடிப்பெற்று அன்பளிப்பாக வழங்கியும் அவரை மகிழ்வித்தார்.

அதனைத்தொடர்ந்து அந்நிகழ்வில் மேலும் சிரேஷ்ட பிரஜைகள் அறுவரும் கௌரவிக்கப்பட்டனர். எழுத்தாளரும் திறனாய்வாளருமான கே.எஸ் சிவகுமாரன் - 'இருமொழி வித்தகர்' என்ற பட்டம் வழங்கப் பெற்றார். தொழிலதிபரும் பரோபகாரியுமான ஏ.ஆர்.எஸ். அரூஸ் ஹாஜி, தொழிலதிபரும் பரோபகாரியுமான அல்ஹாஜ் எஸ்.எம். அனீப் மௌலானா ஆகியோர் - 'சேவைச் செம்மல்கள்' என்று பட்டம் வழங்கப்பெற்றனர். சிரேஷ்ட ஊடகவியலாளரும் நவமணி பத்திரிகையின் பிரதம ஆசிரியரு மான அல்ஹாஜ் என்.எம்.அமீன் - இதழியல் வித்தகர் என்ற பட்டத்தையும், உளவியல்துறை விரிவுரையாளரான திருமதி யமுனா பெரேரா மற்றும் ஜனாப் எம்.எஸ்.எம்.அஸ்மியாஸ் ஆகியோர் 'சீர்மியச் செம்மல்கள்' என்ற பட்டத்தையும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் பொன்னாடை போர்த்தப்பெற்று நினைவுச்சின்னங்களும் பரிசில்களும் வழங்கப்பெற்று கௌரவிக்கப்பட்டனர்.

'ஓர் ஈர நெஞ்சனின் உளவியல் உலா' நூலானது, நூலாசிரியர் கலாபூஷணம் புன்னியாமீனை முகாமைத்துவப் பணிப்பாளராக கொண்டி

யங்கும் உடத்தலவின்னை சிந்தனை வட்டத்தின் 350ஆவது வெளியீடாகும் என்பதும் புன்னியாமீன் மூலம் எழுதப்பட்ட 185 வது நூல் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஏறகெனவே சிந்தனை வட்டத்தின் 100வது நூலான 'இரட்டைத்தாயின் ஒற்றைக்குழந்தை'யின் வெளியீட்டுவிழா நிகழ்வின் பதிவாக 'சுவடுகள்' அமைந்திருந்ததைப் போலவே 'ஓர் ஈர நெஞ்சனின் உலவியல் உலா' நூலும் வடிவமைக்கப்பெற்று, புன்னியாமீனின் ஆவணப்படுத்தும் பாங்கினை எடுத்தியம்புகின்றது.

'இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர் களின் விபரத்திரட்டு' என்ற தொடர்நூல் வரிசையில் மற்றவர்களின் வாழ்க்கை வரலாற்றைத் திரட்டி வாரம் தவறாமல் எழுதிவைத்த அமரர் புன்னியாமீன் அந்த 350 பதிவுகளில் ஒரு கட்டுரையைக்கூடத் தனது வாழ்வையும் பணியையும் குறிப்பிட்டு எழுதுவதற்கு ஒதுக்கியிராமையானது பலருக்கும் விந்தையாக இருந்திருக்கலாம். உண்மையில் அவரது பணிகள் ஒரு சில பக்கங்களில் முடங்கிவிடக்கூடியவையோ, முடியக் கூடியவையோ அல்ல. அவருடன் தொடர்புபட்ட ஒவ்வொரு விடயத்தையும் எழுதப் புகும் வேளையில் ஏராளமான தகவல்களை அங்கும் இங்குமாக அவர் விட்டுச் சென்றிருப்பதை எதிர்காலத்தில் அவர் பற்றிய வாழ்க்கை வரலாற்றை எழுத முற்படும் இலக்கியவாதிகள் அறிந்துணர்வார்கள். அவ்வளவு தூரம் பொதுவாழ்வில் ஒரு திறந்த புத்தகமாக அவர் செயற் பட்டு வந்துள்ளார். இத்தகைய வாழ்க்கைமுறையைப் பின்பற்றுவோர் இலங்கையில் மிகக் குறைவென்றே நான் கருதுகின்றேன்.

**நூல்தேட்டத்தில் சிந்தனை வட்டமும் புன்னியாமீனும்**

நூலியல் பதிவுகளை நான் மேற்கொண்டுவந்த வேளையில் புன்னியாமீனை அறியும் முன்பாகவே அவரது நுல்கள் பலவற்றையும் இலங்கை நூலகங்களில் தேடிப்பெற்று பதிவுசெய்துவைத்திருந்தேன். என்னுடன் தொடர்பினை ஆரம்பித்த பின்னர் படிப்படியாக விடுபட்டுப் போயிருந்த தனது நூல்கள் அனைத்தையும் என்னிடம் சேர்ப்பித்து தனது சகல நூல்களும் ஆவணமாக்கப்படுவதை உறுதிசெய்துகொண்டிருந்தார். தனது நூல்கள் ஆவணப்படுத்தப்பட வேண்டுமென்பதில் அவர் தீவிரமான நாட்டம் கொண்டிருந்தார். அவரது இந்தப் போக்கே என்னுடைய பணிகள் அனைத்திலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள அவரைத் தூண்டியிருக்கின்றது. அவரது பெரும்பாலான வெளியீடுகளில் எனது பாதிப்பை காணக்கூடியதாக இருந்துவந்துள்ளது. தான் எழுதும் ஒவ்வொரு நூலிலும் எங்காவது எனது பணிபற்றியோ, குறைந்த பட்சம் எனது அணிந்துரையையோ நூல் குறிப்பையோ அவர் இடம்பெறச் செய்யத் தயங்குவதில்லை.

ஒரு கட்டத்தில் நூல்தேட்டத்தில் இடம்பெற்றுள்ள அவரது நூல் களையும், சிந்தனைவட்டத்தின் வெளியீடுகளையும் தனித்தனியான இரு நூல்களாக வெளியிடும் ஆர்வத்தை என்னிடம் தெரிவித்தார். நான் அதற்கான முழு ஆதரவினையும் வழங்கி, அவர் கேட்ட வண்ணமே அவருக்கு அப்பட்டியலை அனுப்பிவைத்திருந்தேன். அவர் உரிய அட்டைப் படங்களைச் சேர்த்து, அழகானதொரு நூலாக அவற்றைத் தானே பதிப்பித்து வெளியிட்டுமிருந்தார்.

'நூல்தேட்டத்தில் கலாபூஷணம் பீ.எம். புன்னியாமீன்: ஒரு நூல்விபரப் பட்டியல்' என்ற அந்த நூல் மார்ச் 2007இல் வெளிவந்தது. கலா பூஷணம் புன்னியாமீன் எழுதியிருந்த முதல் 110 நூல்களும் வெளிவந்த நிலையில் அவை நூல்தேட்டம் தொகுதிகளிலும் பதிவாகியிருந்தன. நூல்தேட்டம் முதல் நான்கு தொகுதிகளிலும், ஐந்தாம் தொகுதியின் முற்பகுதியிலும் வெளிவந்தவையான இந்த 110 நூல்கள் பற்றிய பதிவு களையும் தனியாகப் பிரித்தெடுத்து இந்நூல் உருவாக்கப்பட்டது. நூல் தலைப்பு அட்டவணை, ஆண்டுவாரியான நூல் வெளியீட்டு விபரம் என்பனவும் இடம்பெற்றிருந்தன. புன்னியாமீன் பற்றிய நூலாசிரியரின் கட்டுரையும், சிந்தனை வட்டம் வெளியீட்டு நிறுவனம் பற்றியதான நூலாசிரியரின் கட்டுரையும் பின்னிணைப்பாகத் தரப்பட்டிருந்தன. தன்னையும், தன் பதிப்புகளையும் விரிந்ததொரு அறிவோர் வட்டத்திற்குச் சமர்ப்பிக்க அவர் முயன்று வெற்றியும் கண்டார்.

'நூல்தேட்டத்தில் சிந்தனை வட்டம்' என்ற எனது மற்றுமொரு நூல் நவம்பர் 2007இல் வெளியிடப்பட்டிருந்தது. நூல்தேட்டம் துணை நூல் வரிசையில் இது இரண்டாவது நூல் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. சிந்தனைவட்டத்தின் 277ஆவது வெளியீடாக வெளிவந்த இந்நூல் விபரப் பட்டியலில், கலாபூஷணம் பீ.எம். புன்னியாமீனால் 1988இல் உருவாக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட சிந்தனை வட்டம் வெளியீட்டு நிறுவனத்தினால் அண்மைக்காலம் வரை வெளியிடப்பட்ட முதல் 250 நூல்கள் பற்றிய விபரங்கள் முழுமையாக குறிப்புரையுடன் இடம்பெற்றிருந்தன. அவ்வப்போது நூல்தேட்டத்தின் முதல் ஐந்து தொகுதிகளிலும் இவை முன்னர் இடம் பெற்றிருந்தன. இந்நூல் அப்பதிவுகளின் ஒட்டுமொத்தத் தொகுப்பாகும். பின்னிணைப்பில் 2007 மார்ச் முதல் 11.11.2007 வரையிலான காலப்பகுதியில் சிந்தனை வட்டம் வெளியிட்ட மேலும் 25 நூல்களும் பதியப்பட்டுள்ளன. ஒவ்வொரு நூல் பற்றிய விபரத்துடன் அதன் அட்டைப்படங்களையும் இத்தொகுப்பில் சேர்த்து சிந்தனை வட்ட வெளியீடாக அவர் வெளியிட்டி ருந்தார். இவ்விரு நூல்களும் புன்னியாமீனின் நூலியல் பணியை விபரமாகப் பதிவுசெய்திருக்கின்றன.



**விக்கிபீடியாவும் புன்னியாமீனும்**

நூலியல் துறையில் தடம்பதித்த புன்னியாமீன், தமிழ் விக்கிபீடியாவிலும் தன் செயற்பாட்டைக் காட்டத் தொடங்கினார். நூல்தேட்டத்தில் வெளிவந்த நூல்களை ஆண்டுவாரியாக விக்கிபீடியாவில் பிரசுரிக்க எனது அனுமதி யைப் பெற்று அதனை ஒரு தமிழ்த் தொண்டாகவே அவர் செய்துவந்தார். விக்கிபீடியாவில் தான் எழுதிய கட்டுரைகளை படிப்படியாகப் பதிவுசெய்து வந்தார். ஒரு கட்டத்தில் அதுவே அவரது முழுநேரப்பணியாக இருந்ததை நான் அறிந்திருந்தேன்.

2010ஆம் ஆண்டு நவம்பர் 14ஆம் திகதி தொடங்கிய இவரது விக்கிபீடியா பணி, சிறியதும் பெரியதுமான 7500 கட்டுரைகளை எழுதி அதைத் தமிழ் விக்கிபீடியாவில் பதிவேற்றம் செய்வதில் ஆர்வத்துடன் ஈடுபட வைத்தது. 2011ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் திகதி வரை தொடர்ந்த இப்பணியை இடைநடுவில் விக்கிபீடியா நிர்வாகத்தில் சிலருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக நிறுத்தப்பட்டதாக அறிகின்றேன்.

விக்கிபீடியா உலகளாவியரீதியில் 282 மொழிகளில் வெளிவருவதுடன், அதிகமான வாசகர்களால் தகவல் தேடுகைகளுக்காகப் பயன்படுத்தப்படும் இணையத்தளங்களின் வரிசையில் முதல் ஐந்து இடங்களில் கடந்த பல ஆண்டுகளாக தக்கவைத்துக்கொண்டு வருகின்றது.

தமிழ் விக்கிபீடியா குழுமத்தில் பயணராக இணைந்த ஆரம்ப காலத்தில் புன்னியாமீன் இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள்,

கலைஞர்கள் மற்றும் வரலாற்று அறிஞர்கள் ஆகியோரை அதில் அறிமுகம் செய்து ஈழத்துத் தமிழ் முஸ்லிம்களின் வாழ்க்கையையும் அவர்களது துறைசார்ந்த பணிகளையும் தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதும் அறியும் வகையில் தன்னலமற்ற செயலாற்றி வந்தார். பின்னாளில் தொடர்ந்து இலங்கை அரசியல், பொருளாதாரம், வரலாறு, கலை தொடர்பான விடயங்கள் மற்றும் இலங்கை எழுத்தாளர்களின் நூல்கள் ஆகியவற்றைப் பதிவுசெய்ததுடன், பின்னாளில் உலகளாவிய ரீதியில் கிரிக்கெட் வீரர்கள் பற்றியும் அவர் எழுதிவந்தார். இலங்கையில் மட்டு மன்றி இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், மியான்மார் (பர்மா), போன்ற நாடுகளில் உள்ள தமிழ் முஸ்லிம் எழுத்தாளர்கள் பற்றியும் தமிழ்பேசும் முஸ்லீம்களால் வெளியிடப்பட்ட சஞ்சிகைகள், சிற்றிதழ்கள் பற்றிய குறிப்புகளையும் தொடர்ந்து தமிழ் விக்கிபீடியாவில் இடம்பெறச் செய்திருந்தார்.

நவம்பர் 14, 2010 முதல் மார்ச் 16, 2011 வரையிலான காலகட்டத்தில் புன்னியாமீன் 500 கட்டுரைகளை எழுதி விக்கிபீடியாவில் தரவேற்றம் (Upload) செய்திருந்தார். அதனைத் தொடர்ந்து மார்ச் 17, 2011 முதல் ஏப்ரல் 5, 2011 வரையிலான காலகட்டத்தில் மேலும் 500 கட்டுரைகளைத் தரவேற்றம் செய்திருந்தார். ஏப்ரல் 6, 2011க்கும் மே 5, 2011க்குமிடைப்பட்ட ஒரு மாத காலத்தில் 2000 கட்டுரைகளை அசுரவேகத்தில் தரவேற்றம் செய்திருந்தார். அவ்வாண்டின் மே 6 மதல் ஜுன் 22 வரையான கால கட்டத்தில் மேலும் 3000 தகவல்களை இக்கட்டற்ற கலைக்களஞ்சியத்தில் பதிவுசெய்துவைத்தார். தொடர்ந்து அசுர வேகத்துடன் செயற்பட்டு வந்த இவரது பணி, திடீரென்று நவம்பர் 13, 2011இல் மொத்தம் 7500 கட்டுரைகளுடன் நிறுத்திக்கொள்ளப்பட்டு விட்டது.

இக்காலகட்டத்தில் பல்வேறு சமூக, பொருளாதார பின்னடைவுகளுக்கு புன்னியாமீன் முகம்கொடுத்துவந்த வேளையிலும் இவரை மரணம்வரை தொடர்ந்த நீரழிவு நோயால் பாதிக்கப்பட்டு வீடும் வைத்தியசாலையுமாக வாழ்ந்து வந்த அந்தக் காலகட்டத்திலும்கூட இவரால் இப்பணியை சோர்வின்றித் தீவிரமாக மழைமேகங்களுக்குள் மறைந்தியங்கும் சூரியனாக தமிழ் விக்கிபீடியா உலகில் வலம்வர வைத்ததை எண்ணி வியக்காதிருக்க முடியவில்லை.

இலத்திரனியல் ஊடகத்துறையில் அவரது பணி லண்டனிலிருந்து வெளிவரும் தேசம் இணையச் சஞ்சிகையின் பிரதான தகவல் வழங்குநராக வலம்வர வைத்தது. தேசம் இணையத்துடன் அவர் கொண்டிருந்த தொடர்புகள் அவரை பல்வேறு சமூகப் பணிகளுக்குள்ளும் இணையவைத்து சர்வதேச அளவில் அவருக்கு ‘சிறப்பானதும் மனிதநேயம் மிக்கவருமான

ஒரு இஸ்லாமிய நண்பர்' என்ற அங்கீகாரத்தை புலம்பெயர்ந்த தமிழர் மத்தியில் பெற்றுக்கொடுத்தது. இதுபற்றி தனியானதொரு அத்தியாயத்தில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளேன். தேசத்தில் மாத்திரமன்றி பல்வேறு இணையத்தளங்களிலும், வலைப்பூக்களிலும் அவரது படைப்புக்கள் இடம்பெற்றுவந்தன.

சப்ரகமுவ பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் இறுதியாண்டு மாணவியான செல்வி எம்.ஐ.எப்.நபிலா என்பவர், 'இலங்கையில் தமிழ் எழுத்தாளர்களும் இணையப் பாவனையும்' என்னும் தலைப்பில் 'தமிழ் ஜேர்னலிஸ்ட்' என்ற இணையத்தில் 2010 டிசம்பர் 29ஆம் திகதி எழுதிய ஓர் ஆய்வுக்கட்டுரையில் உலகளாவியரீதியில் செயற்படும் 183 இணையத் தளங்களில் பீ.எம். புன்னியாமீன் அவர்களின் ஆக்கங்கள் இடம் பெற்றுள்ளதைச் சுட்டிக்காட்டியிருந்தார். அத்துடன் புன்னியாமீனின் கட்டுரைகள் இடம்பெற்றிருந்த அந்த 183 இணையத்தளங்களின் முகவரி களையும் பட்டியலிட்டுக் குறிப்பிட்டிருந்தார்.

புன்னியாமீன் ஒரு எழுத்தாளராக மாத்திரமல்ல, சமூகப் பணியாள ராகவும் நட்புவட்டத்தில் அறியப்பெற்றுவந்தார். அவர் சார்ந்த இலங்கை இஸ்லாமிய உலகம் அவரை அறிந்து வைத்திருந்ததைவிட மிகவும் பரந்துபட்டவகையில் வித்தியாசமான ஒரு மனிதராக தமிழ்பேசும் மக்களிடையே அவர் அறியப்பெற்றிருந்ததை இந்த நூலின் சகல அத்தியாயங்களையும் வாசிக்கும் ஒருவரின் மனதில் நிச்சயம் தோன்றும் என்ற நம்பிக்கை எனக்குள்ளது.

*மரணத்தினால் சில கோபங்கள் தீரும்*
*மரணத்தினால் சில சாபங்கள் தீரும்*
*வேதம் சொல்லாததை மரணங்கள் கூறும்*
*விதை ஒன்று வீழ்ந்திடில் செடிவந்து சேரும்.*

5

# நூல்தேட்டத் தொகுப்பு மற்றும் நூல் வெளியீடுகளில் புன்னியாமீனின் பங்களிப்பு

நூல்தேட்டம் இலங்கையில் இதுவரை அச்சில் வெளிவந்த தமிழ் நூல் களையும், இலங்கையரால் தமிழாக்கம் செய்யப்பட்ட பிறமொழி நூல் களையும், இலங்கை தொடர்பான பன்னாட்டுத் தமிழர்களால் எழுதப்பட்ட தமிழ் நூல்களையும் உள்ளடக்குகின்றது. இதுவரை நூல்தேட்டத்தின் 10 தொகுதிகளைக் கண்டு பதினோராவது தொகுதியின் தயாரிப்புப் பணியில் ஈடுபட்டுவரும் பகைப்புலத்தில் நின்று, நூல்தேட்டத்துடனும் எனது ஏனைய வெளியீடுகளுடனுமான புன்னியாமீனின் பங்களிப்பு பற்றியும் அவரால் நூல்தேட்டத்திற்குக் கிடைத்த நன்மைகள் பற்றியும் இந்த இயலில் நினைவுகளை மீட்டிப்பார்க்கவிழைகின்றேன்.

நான் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்திருந்த காலத்தில் நூல்தேட்டம் சஞ்சிகையொன்றின் உருவிலேயே முதன்முதலில் என் மனதில் கருக் கட்டியிருந்தது. இத்தகையதொரு சஞ்சிகை அகில இலங்கை ரீதியில் குறிப்பிட்ட கால இடைவெளியில் உருவாக்கப்பட்டு, மாகாணம் தோறும் உலாவி வராதுபோனால், ஒரு மாவட்டத்தில் வெளிவரும் நூல் பற்றி அடுத்த மாவட்டத்தில் உள்ளவர்களே அறியமுடியாது போக வாய்ப்பிருக்கும் என்று எனக்குப்பட்டது. அதன் விளைவாகவே நூல்தேட்டம் உருவாக்கப் பட்டது. வடக்கு - கிழக்கு பிரதேசங்களின் பிரதான நூலகங்களுக்கு நூல்தேட்டம் சென்றடைய வழிசெய்யப்பட்டது. காலக்கிரமத்தில் எழுத் தாளர்கள், கல்லூரி நூலகங்கள் என்று வலையமைப்பினை விரிவாக்கலாம் என்றும் கருதினேன்.

ஏப்ரல் 1990இல் 50 ஈழத்துத் தமிழ் நூல்கள் பற்றிய நூலியல் தகவல்களுடன் நூல்தேட்டத்தின் முதலாவது இதழ் 24 பக்கங்களில் வெளிவந்தது. எஸ்.எம்.ஹனிபா (உத்தமத் தூதர்), எம்.வை.எம்.மீ ஆத் (நபி பெருமானின் நல்லுரைகள்), எஸ்.எச்.எம்.ஜெமீல் (ஏ.எம்.ஏ.அசீஸ் அவர்களின் கல்விச் சிந்தனைகளும் பங்களிப்பும்), ஆ.மு.ஷரிப்புத்தீன் (கனிந்த காதல்), எம்.எச்.எம். ஹாலிம்தீன் (இதய மலர், காலத்தின் கோலங்கள்), மேமன் கவி (இயந்திரசூரியன், ஹீரோஷிமாவின் ஹீரோக்கள்), அன்பு முகையதீன் (எழுவான் கதிர்கள், புதுப்புனல்),

எஸ்.ஐ.நாகூர்கனி (தூரத்து பூபாளம்), நயீமா சித்தீக் (வாழ்க்கையின் சுவடுகள்), ஜெக்கியா ஜுனைதீன் (ஷாமிலாவின் இதய ராகம்) ஆகிய பத்து முஸ்லிம் படைப்பாளிகளின் 13 நூல்கள் உள்ளிட்ட மொத்தம் 50 நுல்களை முதலாம் இதழில் பதிவுசெய்திருந்தேன்.

ஈழத்துத் தமிழ் இலக்கியம் பற்றிப் பேசுபவர்களும் எழுதுபவர்களும் முஸ்லிம்கள் அல்லாத படைப்பாளிகளின் படைப்புகளையே தமது ஆய்வுக்குள் உள்ளீர்ப்பதும், முஸ்லீம் எழுத்தாளர்களின் படைப்புகளை தனியானதொரு முஸ்லிம் தமிழ் இலக்கியம் என்ற வரையறைக்குள் கொண்டுவருவதும் எனக்கு உடன்பாடானதொன்றாக இருந்ததில்லை. ஈழத்தின் முதல் நாவலான ‘அசன்பேயின் கதை’ சரிதத்தைத் தந்தவரே முஹம்மது காசிம் சித்தி லெவ்வை மரைக்கார் என்பதை மறந்துவிடமுடியாது. அதனாலேயே ஈழத்துத் தமிழ்ப் படைப்புகளின் ஆவணம் என்ற குறியீட்டுக்குள் முஸ்லீம் எழுத்தாளர்களின் படைப்புகளையும் வேறு படுத்தாமல், இணைத்தே நூல்தேட்டத்தின் சஞ்சிகை உருவில் முதலாவது இதழை வெளிக்கொணர்ந்தேன். இந்த இணைப்பினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர்களாக அன்றிருந்த சில தேசியப் பற்றாளர்கள் கேள்விக்குள்ளாக்க முயன்றனர். அவர்களைப் பொறுத்த வரையில் இஸ்லாமிய நூல்தேட்டம் என்று தனியானதொரு பிரிவின் கீழ் இந்தப் பத்துப் படைப்பாளிகளையும் பதிவுசெய்திருக்கலாம் என்பதாக இருந்தது. அவர்களது கருத்தை நான் முதலாவது இதழிலேயே ஏற்றுக் கொள்ளவில்லை.

தொடர்ந்தும் நூல்தேட்டம் இதழினை ஒரு காலாண்டிதழாக நடத்தும் எண்ணத்தில் இரண்டாவது இதழை ஜுலை 1990இல் அச்சிட்டு வெளியிட்டிருந்தேன். 62 பதிவுகளைக் கொண்ட இரண்டாவது இதழின் முதலாவது பதிவு, புன்னியாமீன் எழுதிய நூலாகவே அமைந்திருந்தது. அவ்வேளையில் புன்னியாமீன் பற்றி நான் பெரிதாக ஒன்றும் அறிந்திருக்க வில்லை. புன்னியாமீன்(இலக்கிய விருந்து), எம்.ஐ.எம்.மீரா லெவ்வை (அறிவும் உணர்வும்), எப்.எம்.நதிம் பாரி (முஹம்மது சல்: மனிதரில் தலைசிறந்தவர்), யூ.எல்.எம்.குவைலீத் (ஜீவியப் பயணம்), எஸ்.எச். எம்.ஜெமீல் (கல்விச் சிந்தனைகள்), அல் அஸுமத் (அல் அஸுமத் கவிதைகள், புலராத பொழுதுகள்), எம்.ஏ.நு.ஃமான் (அழியா நிழல்கள், பாலஸ்தீனக் கவிதைகள், திறனாய்வுக் கட்டுரைகள்), சாரணா கையூம் (சிறுவர் பாட்டு), ஜின்னாஹ் ஷெரிபுத்தீன் (பாலையில் வசந்தம், முத்து நகை), எஸ்.எச்.நிஹ்மத் (எரிகொள்ளி), அன்பு முகையதீன் (மாதுளம் முத்துக்கள்), எஸ்.ஐ.நாகூர்கனி (அவள் நெஞ்சுக்குத் தெரியும்), அ.ஸ.அப்துஸ்ஸமது (கனவுப் பூக்கள்), எஸ்.எம்.ஹனீபா (உத்தமர்

உவைஸ், மகாகவி பாரதி), மேமன்கவி (டொமினிக் ஜீவா கருத்துக் கோவை), முஹம்மது எம். ஸபர் (சேர் றாஸிக் பரீத்: வழியும் நடையும்) ஆகிய பதினாறு முஸ்லிம் படைப்பாளிகளின் 21 நூல்கள் உள்ளிட்ட மொத்தம் 62 நூல்களை இரண்டாவது இதழில் பதிவுசெய்திருந்தேன்.

மூன்றாவது இதழுக்காக நூல்களைத் தொகுத்துக்கொண்டிருந்த வேளையில் கொழும்பில் ஒரு வருடம் பணியாற்றவேண்டிய நிலை எற்பட்டிருந்தது. 3வது இதழை கொழும்பில் வெளியிடும் நோக்கத்துடன், அதுவரை சேகரித்த நூல்விபரங்களுடன் குடும்ப சகிதம் கொழும்புக்கு வந்து சேர்ந்தேன். அங்கும் எனது தேடல் பணி தொடர்ந்த போதிலும் மூன்றாவது இதழை வெளியிடும் அளவுக்குப் பொருளாதார நிலை இருக்கவில்லை. இத்தனைக்கும் ஒவ்வொரு இதழும் 24 பக்கங்களே கொண்டிருந்தது.

ஓராண்டு கழிந்த நிலையில் 1992 டிசம்பரில் யாழ்ப்பாணம் திரும்பும் முடிவை மாற்றி லண்டனுக்குப் புலம்பெயர நேர்ந்தமை ஈழத்து இலக்கியத்துறைக்கும் ஆவணமாக்கல் வரலாற்றுக்கும் பின்னாளில் நன்மையையே அளித்திருந்தது. காரணம் இலங்கையில் 24 பக்கம் கொண்ட ஒரு பிரசுரத்தை வெளியிடவே பொருளாதார வளம் இல்லாத நிலையில், நூல்தேட்டத்தைச் சுமார் 500-600 பக்கங்கள் கொண்ட நூல் தொகுதிகளாக, தொகுதிக்கு ஆயிரம் நூல்களைக் கொண்டதாக பொருளாதாரச் சிக்கலின்றி 13 ஆண்டுகளில் பத்துத் தொகுதிகளை வெளியிட்டுவைத்துத் தமிழன்னைக்கு அணிசெய்யும் வகையில், இப்பயணத்தைத் தொடரும் வல்லமையை இந்தப் புலம்பெயர் வாழ்வே எனக்கு ஈட்டித் தந்திருக்கிறது.

லண்டன் வந்த பின்னர் 2000ஆம் ஆண்டு வரை தொகுப்புப் பணியிலேயே எனது காலத்தைச் செலவிட்டு வந்திருந்தேன். இங்குள்ள நூலகங்களிலும் தனிப்பட்டவர்களின் வீடுகளிலும் இருந்து நான் சேகரித்த நூலியல் தகவல்களையும், இலங்கையிலிருந்து கொண்டுவந்த தகவல் களையும் சேர்த்து நூல்தேட்டம் நூல் தொடரின் முதலாவது தொகுதியை ஜுன் 2002 இல் லண்டனில் வாசன் அச்சகத்தில் அச்சிட்டுப் பெற்றுக் கொண்டேன். லண்டனில் அச்சிட்டமை எவ்வளவு பெரிய முட்டாள்தனம் என்பதை அதற்குச் செலவிட்ட பணத்தொகையிலிருந்தே அறிய முடிந்தது. லண்டனில் ஒரு தொகுதியை அச்சிட்டு முடித்த பணத்தில் இலங்கையில் மூன்று தொகுதிகளை அச்சிட்டு முடித்திருக்கலாம். விநியோகிக்க வழியின்றி நூல்கள் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தன. நூற்பட்டியல் பற்றிய பிரக்ஞையற்றதொரு சமூகத்தில் அதனைச் சந்தைப்படுத்த வழியறியாது திணறினேன். சில பெட்டிகளை பெருந்தொகையில் இலங்கைக்கு அனுப்பிவைத்து மேலும் செலவுக்கு வழியமைத்தேன்.

இரண்டாவது தொகுதியை ஜுன் 2004இல் கொழும்பில் ஒரு அச்சகத்தில் தான் அச்சிடுவதெனத் தீர்மானித்து, வெள்ளவத்தையில் ஒரு அச்சகத்தில் நூலை அச்சிட வழங்கி, அதனை அச்சிட்டு எடுத்துக் கொள்வதில் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கினேன். நூல்களை முடித்துப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கைக்கே பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இரண்டாவது தொகுதியை அச்சிடும் பணியை 2003இல் மேற் கொண்டிருந்த காலகட்டத்திலேயே புன்னியாமீனின் தொடர்பு எனக்கு ஏற்பட்டிருந்தது. ஆரம்பத்தில் நூல்களின் விபரங்களைப் பெற்றுக் கொள்வதிலேயே நான் அதிகம் ஆர்வம் காட்டினேன். காரணம் லண்டன் வந்தபின்னர் முஸ்லிம் படைப்பாளிகளின் நூல்களை புலம்பெயர்ந்த தமிழர்களிடமிருந்து பெறுவதில் சிக்கல் இருந்தது. தமிழறிஞர்களுடன் தொடர்பில் இருந்த இஸ்லாமிய அறிஞர்கள் ஒரு சிலரின் நூல்களையே லண்டனில் என்னால் பெற முடிந்தது. புன்னியாமீனின் தொடர்பின் பின்னர் அதுவரை நான் அறிந்திராத பல முஸ்லிம் எழுத்தாளர்களின் நூல் களையும், அது பற்றிய விபரங்களையும் என்னால் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடிந்தது.

புன்னியாமீன் அவர்கள் நான் முஸ்லிம் படைப்பாளிகளை தமிழ்ப் படைப்பாளிகள் என்ற பெருவெளிக்குள் கொண்டுசென்று இணைத்ததையிட்டு மிகவும் மகிழ்வுடன் இருந்தார். இதனை நீண்டகாலம் கழித்து ஒரு கட்டுரையில் கீழ்கண்டவாறு எழுதியிருந்தார்.

'கொழும்பிலிருந்து செல்வராஜா அவர்களையும், நவமணி பிரதம ஆசிரியர் (மர்ஹூம்) அஸ்ஹர் அவர்களையும் சகோதரர் சட்டத்தரணி ஏ.எம். ஜிப்ரி எங்கள் வீட்டுக்கு அழைத்து வந்தார். அன்றைய தினம் இரவு சுமார் 9 மணியிலிருந்து நானும் செல்வராஜா அவர்களும் நவமணி அஸ்ஹர் ஹாஜி அவர்களும் (விடிந்தால் விழா என்பதை மறந்து) அதிகாலை 3மணி வரை என் வீட்டு மேல்மாடியில் கதைத்துக் கொண்டி ருந்தோம். இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்று 10 ஆண்டுகள் கழிந்து விட்டன. நவமணி ஹாஜியாரும் மரணித்து விட்டார். ஆனால் அந்தக் காத்திரமான கலந்துரையாடலை இன்று வரை என்னால் மறக்க முடியாது. ஏனெனில் சுமார் 6 மணித்தியாலங்கள் அளவில் இலங்கையில் முஸ்லிம் களின் இலக்கியத்துறை பற்றியும், அவர்களின் இலக்கிய ஆர்வம் பற்றியும், ஈழத்து இலக்கியப் பரப்பில் முஸ்லிம் எழுத்தாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும், தமிழ் இலக்கிய முயற்சிகளை ஆவணப்படுத்துவது பற்றியும் கதைத்துக்கொண்டிருந்தோம். அச்சந்தர்ப் பத்தில் செல்வராஜா அவர்கள் ஈழத்து முஸ்லிம் இலக்கியம் பற்றி



எவ்வளவு தூரம் தெரிந்து வைத்துள்ளார், ஆராய்ந்துள்ளார். என்பதை எம்மால் உணர்ந்து கொள்ள முடிந்தது.'

செல்வராஜா பற்றிக் கூறும்போது பொதுவாக ஒரு விடயத்தையும் குறிப்பிட்டே ஆக வேண்டும். 20ஆம் நூற்றாண்டின் இறுதிவரை இலங்கை தமிழ் இலக்கியப் பரப்பில் முஸ்லிம் எழுத்தாளர்கள் பற்றியோ அவர்களின் படைப்புகள் பற்றியோ பெரிதாகப் பேசப்படவில்லை. பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் மற்றும் தமிழ் இலக்கிய ஆய்வாளர்கள் போன்றோர் குறிப்பிட்ட சில முஸ்லிம் எழுத்தாளர்கள் பற்றி தெரிந்திருந்தார்களேயன்றி யாரும் முழுமையான ஆய்வினை நோக்கிச் செல்ல எத்தனிக்கவில்லை. இந்தப் பணியினை செல்வராஜா ஆவணப்பதிவாகவே முன்வைத்திருப்பதானது இலங்கை முஸ்லிம்கள் எழுத்தாளர்கள் பெற்ற வரப்பிரசாதமென்பதனை யாரும் மறுப்பதற்கு இயலாது. 2014ஆம் ஆண்டு வரை செல்வராஜா அவர்களால் வெளியிடப் பட்ட நூல் தேட்டம் 10 தொகுதிகளிலும் 10000 இலங்கைத் தமிழ் மொழி எழுத்தாளர்கள் நூல்கள் பதிவாக்கப்பட்டுள்ளன. இன மத செயற்பாடு களுக்கு அப்பால் நின்று ஈழத்து தமிழ் இலக்கிய நூல்களை ஆவணப்படுத்தி வரும் இவர் 3000க்கும் மேற்பட்ட இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்களின் நூல்களை ஆவணப்படுத்தியிருப்பது குறித்துக் காட்டக்கூடிய ஒரு விடயமேயாகும்.

**மேலே காணப்பட்டவை புன்னியாமீனின் வரிகள்**

அக்காலகட்டத்தில் நவமணியில் புன்னியாமீன், முஸ்லிம் எழுத்தாளர்கள் பற்றிய கட்டுரைகளை இடம்பெறச் செய்துகொண்டிருந்தார். சிந்தனை வட்டத்தின் வெளியீடாக ‘இலங்கை முஸ்லீம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு’ என்ற தலைப்பில் முதலாம் பாகமாக 2004 இல் வெளியிட்டிருந்த போது அதன் பிரதியையும் எனக்கு அனுப்பிவைத்திருந்தார். இதில் 36 கலை இலக்கியப் பிரமுகர்கள் பற்றிய விபரங்களைப் புகைப்படங்களுடனும், அவர்களின் புத்தக அட்டைப் படங்களுடனும் புன்னியாமீன் இடம்பெறச் செய்திருந்தார். இதன் பின்னர் அவரது கட்டுரைகளைத் தொடர்ந்து எனக்கு அனுப்பி வைப்பதை வழமையாகக் கொண்டிருந்தார். அதிலுள்ள முஸ்லிம் எழுத்தாளர்களுடன் தொடர்புகொண்டு அவர்களது நூல்களை அவரே பெற்றுப் பதிவுசெய்தும், தான் பெற்றுக்கொண்ட நூல்களில் காணப்படும் நூலியல் தகவல்களை தானே தயாரித்த படிவமொன்றில் பதிந்து லண்டனுக்கு அனுப்பிவைக்கவும் தொடங்கினார். முஸ்லிம் சமூகத்தில் நூல்தேட்டத்திற்கான பிரதிநிதியாக அவர் செயற்படத் தொடங்கினார் என்றால் அது மிகையாகாது.

இந்நிலையில் ஜுன் 2004இல் நூல்தேட்டம் 2வது தொகுப்பு வெளிவந்ததும், மூன்றாவது தொகுதிக்கான தேடல்பணிகளை முடுக்கி விட்டேன். இரண்டாவது தொகுதியின் அச்சகப் பணிகளில் எனக்குத் திருப்தியற்ற நிலை இருந்தது. அச்சகத்தில் ஏற்பட்ட அர்த்தமற்ற தாமதங்கள் எனது பிற பணிகளையும் தளர்வடையச் செய்தது. இறுதியில் மூன்றாவது தொகுதியை வெளியிடும் முன்னர் பொருத்தமானதொரு அச்சகத்தைத் தேர்வுசெய்யவேண்டும் என்று தீர்மானித்த வேளையில் கொழும்பு குமரன் புத்தக இல்லத்தைத் தேர்வு செய்வதற்கு புன்னியாமீன் ஆலோசனை வழங்கினார். அதன்படியே ஓகஸ்ட் 2005இல் குமரன் புத்தக இல்லத்தின் மூலம் மூன்றாவது தொகுதியை அச்சிட்டுப் பெற்றுக்கொண்டேன்.

நூல்களை அச்சிட்டுப் பெறமுடிந்த எனக்கு அவற்றை விநியோகிக்கும் ஆளணி வசதி எதுவும் அப்போது இருக்கவில்லை. பூபாலசிங்கம் புத்தகசாலை உள்ளிட்ட பல்வேறு நூல்விற்பனையாளர்களும் 10 அல்லது 15 பிரதிகளுக்குமேல் ஒரே தடவையில் கொள்வனவுசெய்வதைத் தவிர்த்துக் கொண்டார்கள். மேலும் ஈழத்துப் படைப்பாளிகளின் நூல்களை ஏதோ மாற்றான் தாய் மனப்பான்மையுடன்தான் பார்த்தார்கள். அதனால் புத்தகங்களை அச்சிட்டதும் அதனை பாதுகாத்து வைத்திருந்து படிப்படியாக விற்பனை செய்வதற்கான ஒரு விநியோகத் திட்டம் எனக்குத் தேவைப்

பட்டது. அதற்குத் தானே முன்வந்து விநியோகப் பொறுப்பை புன்னியாமீன் ஏற்றுக்கொண்டார். நூல்தேட்டம் 2,3ஆம் தொகுதிகளை புன்னியாமீன் தானே அச்சகத்திலிருந்து பெற்று உடத்தலவின்னையில் வைத்துப் பாதுகாப்பதற்கும், கேட்கும் வேளையில் உரியவர்களுக்குப் பிரதிகளை அனுப்பிவைக்கும் உதவியையும் எனக்குச் செய்துவந்தார்.

இந்நிலையில் நூல்தேட்டத்தின் நான்காம் தொகுதித் தொகுப்புப் பணி முடிவடைந்திருந்தது. முன்னைய 3வது தொகுதியை அச்சிட்ட குமரன் பதிப்பகமே இத்தொகுதியையும் அச்சிடுவதெனத் தீர்மானித் திருந்தேன். நான்காம் தொகுதி டிசம்பர் 2006இல் வெளியாயிற்று.

இதற்கிடையில் 3வது தொகுதியின் அறிமுக நிகழ்வொன்றினை கொழும்பில் ஏற்பாடு செய்திருந்தேன். அதற்கான வேலைகளை குமரன் பதிப்பக உரிமையாளர் சகோதரர் குமரனே பார்த்துக்கொண்டார். அதற்காக இலங்கை வரும் செய்தியையும் 2005ஆம் ஆண்டு ஆரம்பத்தில் புன்னியாமீனிடம் தெரிவித்திருந்தேன். அந்தப் பயணத்தை புன்னியாமீன் பொருத்தமாகப் பயன்படுத்திக்கொண்டார்.

'இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர் களின் விபரத்திரட்டு' தொகுப்பின் 3வது பாகம் அக்காலகட்டத்தில்தான் வெளிவர ஆயத்தமாகியிருந்தது. சிந்தனை வட்டத்தின் 200ஆவது நூல் இதுவாகும். இம்மூன்று நிகழ்வுகளையும் ஒருங்கிணைத்து சிந்தனை வட்டத்தின் 200 ஆவது நூல்வெளியீடு, முஸ்லிம் எழுத்தாளர்கள், மலையக எழுத்தாளர்களின் படைப்பிலக்கியங்களை சர்வதேச ரீதியில் கொண்டு செல்வதற்கான ஏற்பாட்டுக் கலந்துரையாடல், வாழும்போது கௌரவிக்கும் நிகழ்வு, என ஒரு முழுநாள் நிகழ்வை 11.9.2005 அன்று சிந்தனை வட்டத்தின் சார்பில் உடத்தலவின்னையில் புன்னியாமீன் பெருமெடுப்பில் ஒழுங்குசெய்தார். மத்திய இலங்கை முஸ்லிம் பட்டதாரிகள் ஒன்றியம் இதனை ஒருங்கிணைத்திருந்தது.

**புன்னியாமீன் வழங்கிய கௌரவம்**

குறிப்பிட்டபடி 2005ஆம் ஆண்டு செப்டெம்பரில் இலங்கை சென்றிருந்தேன். திட்டமிட்டபடி நூல்தேட்டத்தின் 3வது தொகுதிக்கான வெளியீட்டு நிகழ்வுகள் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றன.

புன்னியாமீனின் அழைப்பின்பேரில் 10.9.2005 அன்று மாலை உடத்தலவின்ன மடிகே கிராமத்தில் முதன்முதலில் கால் பதித்தேன். அன்றுதான் புன்னியாமீன் அவர்களையும் குடும்பத்தினரையும் நேரில் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன். மூன்றாண்டுகளாக மாதத்தில் நான்கு ஐந்து தடவைகள் தொலைபேசியில் மணிக்கணக்காக உரையாடிய குரலுக்கு உரிமையாளனை அன்றுதான் ஒரு 'சிறிய உருவத்தில்' நேரில்

தரிசித்தேன். என்னை தனது வாகனத்தில் புன்னியாமீனின் நண்பரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான ஏ.எம். ஜிப்ரி அவர்கள் அழைத்துச் சென்று புன்னியாமீனின் இல்லத்தில் சேர்த்திருந்தார். கிராமத்தின் முக்கியஸ்தர்கள் பலர் அங்கு எமது வரவை எதிர்பார்த்திருந்தார்கள். நவமணி ஆசிரியர் எம்.பீ.எம்.அஸ்ஹர் அவர்களும் அங்கே முன்னதாக வந்துசேர்ந்திருந்தார்.

இஸ்லாமியர்களுக்கே உரிய சிறப்பான உபசரிப்பு முறை எனது நெஞ்சைத் தொட்டது. அரசியல்ரீதியாக தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்று பிரிபட்டு இரும்புத்திரைகளால் தடுக்கப்பட்டு வாழ்ந்துவந்த எமக்கு ஒரு சாரார மற்றைய சாரார் சந்தேகக் கண்கொண்டே பார்க்கும் வழமை ஐரோப்பியர்களின் பிரித்தாளும் தந்திர ஆட்சிமுறை எமக்கு விட்டுச்சென்ற முதுசொமென்றே கருதுகின்றேன். காலம்காலமாகப் பிரித்துவைக்கப்பட்டிருந்த இரும்புத்திரை, பனித்திரையாக உருகி மறைவதற்கு மனிதநேயம் என்றதொரு மகத்தான சக்தி எம்மிடையே தேவைப்படுகின்றது. அதனை வளர்ப்பதால் எல்லோரும் நல்லவரே என்ற மனப்பாங்கு தோன்றிவிடும் என்ற அச்சமும், தம்மால் தொடர்ந்தும் இனவாத, மதவாத அரசியலை எடுத்துச்செல்ல முடியாமல், மக்கள் விழிப்படைந்துவிடுவார்கள் என்ற மனப்பயம் காரணமாகவே இந்த மனிதநேயர்கள் இருசாராரிடையேயும் உருவாகுவது தடுக்கப்படுகின்றது.

இத்தகைய நிலைமையைத் தனிமனித முயற்சிகளின் மூலமே நாம் எதிர்கொண்டாகவேண்டும். அதற்காக அடுத்தவர்களின் கலாச்சாரங்களை இருசாராரும் அறிந்துகொள்ளவும், பரஸ்பரம் அவரவர்களைப் புரிந்து கொள்ளவும் வேண்டும். உனது தாயைவிட எனது தாயே மேலானவள் என்ற போக்கு இத்தகைய புரிந்துணர்வுகளைத் தடுக்கும். ஒவ்வொருவருக்கும் அவரவர் தாயே மேலானவள் என்ற உணர்வை நாம் பெற்றுக்கொள்ளும் போது, அது எம்மிடையே மனித நேயத்தை உயிர்ப்பிக்கும்.

புன்னியாமீன் என்ற மனித நேயர் என்னை அந்த இரும்புத் திரையினை பனித்திரையாக்கி இஸ்லாமிய தமிழ் வேறுபாடின்றி தமது நட்பு வட்டத்திற்கு அன்று மாலை அறிமுகம் செய்து வைத்தார். நேரம் கடந்தது. விருந்தினர் கள் ஒவ்வொருவராக தத்தமது இல்லங்களை நாடி அகன்றனர். எஞ்சியிருந்தது நானும் புன்னியாமீனும், சகோதரர் எம்.பீ.எம்.அஸ்ஹரும் தான். இரவு உணவின் பின்னர் புன்னியாமீனின் இல்லத்தின் ஒருகோடியில் அமர்ந்து உரையாடத் தொடங்கினோம். அதிகாலை மூன்று மணிவரை எமது உரையாடல் தொடர்ந்தது. எங்கள் மூவரையும் அன்று இணைத் திருந்தது மதம் அல்ல. இன உணர்வு அல்ல. மனித நேயம் மட்டுமே!

மறுநாள் ஒரு ஞாயிற்றுக்கிழமை. அன்று காலை உடத்தலவின்னை மடிகேயில் அமைந்துள்ள, கண்டி/ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரியின் அஷ்ரப் ஞாபகார்த்த கேட்போர் கூடத்தில் அன்றைய விழா

ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. விழாவுக்குப் பிரதம அதிதியாக நானும், விஷேட அதிதிகளாக நவமணி பிரதம ஆசிரியர் அல்ஹாஜ் எம். பீ.எம்.அஸ்ஹர் அவர்களும், சிரேஷ்ட சட்டத்தரணியான ஏ.எம்.ஜிப்ரி அவர்களும் அழைக்கப்பட்டிருந்தோம்.

முதலாம் அமர்வில் நூல் வெளியீடும் கௌரவிப்பும் இடம்பெற்றன. வெளியீட்டு நிகழ்வுக்கு மத்திய இலங்கை தகவல் பேரவையின் தலைவரான சட்டத்தரணி ஏ.எம்.வைஸ் அவர்கள் தலைமை தாங்கினார். வரவேற்புரையை திரு புன்னியாமீனின் துணைவியார் மஸீதா புன்னியாமீன் அவர்கள் நிகழ்த்தினார். தலைமையுரையை சட்டத்தரணி ஏ.எம்.வைஸ் அவர்கள் நிகழ்த்தியதும் திரு பீ.எம். புன்னியாமீன் நூலறிமுகத்தை வழங்கினார். அதையடுத்து சட்டத்தரணி ஏ.எம்.ஜிப்ரியின் விசேட அதிதி உரை நிகழ்த்தப்பட்டது.

'இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு' தொகுப்பின் 3வது பாகம் வெளியிடப்பட்டபோது என்னைக் கவர்ந்த விடயம் நூலை அதன் ஆசிரியரே வெளியிட்டு வைத்தமையாகும். இதன் மற்றுமொரு சிறப்பம்சம் என்னவெனில் முதற் பிரதி, சிறப்புப்பிரதி என்று எவரும் மேடைக்கு அழைக்கப்பட்டு நூல்கள் வழங்கப்படவில்லை. கூட்டத்திற்குச் சமூகமளித்திருந்த அனைவருக்கும் 200 ரூபா பெறுமதியான அந்நூல் இலவசமாகவே அன்று வழங்கப்பட்டது. அதுமட்டுமன்றி சிந்தனை வட்டத்தின் 100வது வெளியீட்டு நிகழ்வு தொடர்பாக வெளியிடப்பட்ட 'சுவடு' என்ற தொகுப்பு நூலும், தேசம் சஞ்சிகை ஆசிரியர் த.ஜெயபாலன் எழுதியிருந்த 'நூல்தேட்டம் - தகவல் கையேடு' என்ற நூல்தேட்டம் தொடர்பான அறிமுக நூலும் அந்த நிகழ்வில் பங்கேற்ற அனைவருக்கும் இலவசமாகவே வழங்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து கௌரவிப்பு நிகழ்வு தொடங்கியது. முதலாவது கௌரவம் பெறும் பாக்கியத்தை நானே அன்று அடைந்தேன். 'எழுத்தியல் வித்தகர்' என்ற பட்டத்தை எனக்கு கல்லூரி முதல்வரான ஜனாப் எம். ஐ.எம். நிலாப்தீன் வழங்க, சிரேஷ்ட சட்டத்தரணியான ஏ.எம்.ஜிப்ரி அவர்கள் எனக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். அவரைத் தொடர்ந்து விருதுப் பதக்கத்தை சட்டத்தரணி ஏ.எம்.வைஸ் அவர்கள் எனக்கு அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார். சிந்தனை வட்டத்தின் 'எழுத்தியல் வித்தகர்' விருதினை கலாபூஷணம் பீ.எம்.புன்னியாமீன் வழங்கினார். அந்த நிகழ்வு ஏனோ உணர்வுபூர்வமானதாக அமைந்து என் கண்களை நீர்த்திரையிட்டது.

அன்றைய மேடையில் என்னைப் போலவே 'நவமணி' பிரதம ஆசிரியர் அல்ஹாஜ் எம்.பீ.எம். அஸ்ஹருக்கு 'இதழியல் வித்தகர்' என்ற பட்டமும், மூத்த கவிஞரும் பன்னூலாசிரியருமான கலாபூஷணம் எம்.

எச்.எம்.ஹலிம்தீன் அவர்களுக்கு 'இருமொழி வித்தகர்' என்ற பட்டமும், மூத்த சிறுகதை எழுத்தாளர் கலாபூஷணம் நயீமா சித்தீக் அவர்களுக்கு 'சிறுகதைச் செம்மணி' என்ற பட்டமும், இலக்கிய ஆர்வலரும் சமூக சேவகருமான தோழர் என்.எல்.றஷீன் அவர்களுக்கு பொதுச் சேவைச் செம்மல் என்ற பட்டமும் வழங்கப்பட்டன.

தொடர்ந்து விருது பெற்ற நால்வரும் ஒவ்வொருவராக உரை நிகழ்த்தினோம். எனது பிரதம அதிதி உரையில் முஸ்லீம் படைப்பாளிகளின் படைப்புக்கள் தமிழ் வாசகர்களிடையே பரவலாக விநியோகிக்கப்படவேண்டும் என்ற கருத்தினை அடியொற்றி அமைந்திருந்தது. மேலும் நூல்தேட்டம் பணி பற்றியும் சிந்தனை வட்டத்துடனான எனது தொடர்பு பற்றியும் எனது உரை விரிந்து சென்றது. எனது உரையின் சில பகுதிகள் நவமணி வார இதழின் 09.10.2005 இதழில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

'பிரதம அதிதி 'எழுத்தியல் வித்தகர்' என்.செல்வராஜா தனது உரையில் முஸ்லிம் படைப்பாளிகள் பற்றிய தகவல்கள் தனக்கு முறையாகக் கிடைக்கவில்லை. புன்னியாமீன், லாபீர் போன்றோரின் தொடர்பினை அடுத்து அவை கிடைக்க ஆரம்பித்துள்ளன. எதிர்வரும் நூல்தேட்டம் தொகுதிகளில் அவை முறையாகச் சேர்க்கப்பட்டு சர்வதேச அரங்குக்குக் கொண்டுசெல்ல வழியமைக்கப்படும் என்றார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் முஸ்லீம் எழுத்தாளர்களின் படைப்புகள் பரவலாகக் காணப்பட்ட போதிலும்கூட அவை ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள் முடங்கி வருவதனால் அவற்றின் பரிமாணத்தை அளவிட முடியாதுள்ளது. இத்தகைய படைப்புக்கள் சர்வதேச ரீதியாக உலகத் தமிழர்களிடையே இனம்காணப்படல் அவசியமாகும். இதற்குத் தன்னாலான பங்களிப்பினைத் தருவதாகக் கூறினார். எழுத்தாளர்கள் தாம் வெளியிடும் நூல்களில் முழுமையான நூலியல் தரவு விபரங்களை அந்நூலில் அடங்கச் செய்வதன் முக்கியத்துவம் பற்றியும் அவர் விளக்கினார். திருக்குறளைத் தெரிந்துவைத்திருக்கும் எமக்கு திருவள்ளுவர் யார் என்பது பற்றித் தெரியாமல் உள்ளது. ஔவையார் பாடல்களைத் தெரிந்த எமக்கு ஔவையாரின் இளமைக்காலம் பற்றித் தெரியாது. எமக்குத் தெரிந்ததெல்லாம் ஒரு மூதாட்டியின் வடிவம் மாத்திரமே. இதற்குக் காரணம் ஆக்கியோன் பற்றிய பதிவுகளை காலம்காலமாகப் பேணுவதில் நாம் காட்டிவரும் அக்கறையின்மை தான். மேற்கத்தைய நாடுகளில் நூலாசிரியரை அறிந்தபின்தான் அவரது புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து வாங்கிச் செல்கிறார்கள். இது விடயத்தில் இலங்கை எழுத்தாளர்கள் அக்கறையுடன் செயற்படவேண்டும் என்று திரு. என். செல்வராஜா தனது உரையில் தெரிவித்தார்.'

2.30 மணியளவில் பகல் உணவின் பின்னர் மீண்டும் நிகழ்வின் இரண்டாம் அமர்வு தொடங்கியது. அதில் இலங்கை எழுத்தாளர்கள் தமது நூல்களை வெளியிடும்போது கையாளவேண்டிய நூலியல் வழிமுறைகள் பற்றியும் சர்வதேச தராதரத்தில் அவற்றை அச்சிட்டு விநியோகிப்பது பற்றியும் எனது உரை அமைந்திருந்தது. அதையொட்டி பின்னர் கலந்துரையாடப்பட்டது.

புன்னியாமீன் ஒழுங்குசெய்த அந்த இலக்கியச் சந்திப்பு இன்றளவில் என் மனதில் பசுமைமிக்கதொரு நினைவாக தனி மேடையில் வீற்றிருக்கின்றது.

**சிந்தனை வட்டத்தின் அச்சகப் பணி**

2005ஆம் ஆண்டுக்குப் பின்னர் நான் புன்னியாமீனின் சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவின் மூலம் சிலகாலம் எனது நூல்களை அச்சிட ஆரம்பித்தேன். அதே வேளை, தமது பதிப்புத் தேவைகளுக்காக தமிழகத்தை நாடிச்சென்ற புலம்பெயர் எழுத்தாளர்களிடையே சிந்தனை வட்ட வெளியீட்டகத்தின் இருப்பு பற்றியும் தெளிவுபடுத்தியிருந்தேன். இதன் வழியாக புன்னியாமீனின் பதிப்பகத்தின் செயற்பாட்டினை விருத்திசெய்யலாம் என்ற எண்ணம் எனக்கிருந்தது. புகலிடப் படைப்பாளிகளுக்குத் தேவைப்பட்டது என்னவெனில், தமது நூல்களை இலங்கையில் அச்சிட்டு, அவற்றைப் பாதுகாத்து வைத்திருந்து, ஒரு வெளியீட்டு நிகழ்வை நடத்தி, அந்நூல் பற்றி பத்திரிகைகளில் அறிமுகம் செய்து, பின்னர் பாடசாலைகளுக்கும் பொது நூலகங்களுக்கும் அவற்றை ஒழுங்காக விநியோகித்து உதவும்வகையில் ஒரு அமைப்பினை கண்டறிவதாக இருந்தது. அதற்குப் பொருத்தமானவராக புன்னியாமீனைக் கண்டேன். புலம்பெயர் தமிழர் எதிர்பார்க்கும் அனைத்து வளங்களும், ஆளணியும் அவரிடம் இருந்தன. 2005-2008 காலப் பகுதிகளில் ‘மலையகப் பதிப்புலகத்தில் ஒரு சிந்தனை வட்டம்’ என்ற எனது கட்டுரை பல்வேறு இணையத்தளங்களில் மீள்பிரசுரமாகின. புகலிடத்தமிழர்கள் புன்னியாமீனின் பதிப்பகத்தை விரும்பினர். அவரை நாடி சில புலம்பெயர் எழுத்தாளர்கள் தமது அச்சகத் தேவைக்காக வந்தனர்.

இருப்பினும் துர்அதிர்ஷ்டவசமாக புன்னியாமீனால், நான் எதிர்பார்த்த அளவு புகலிடப் படைப்பாளிகளைக் கவர முடியவில்லை. ஆளணி நிர்வாகக் குறைபாடு அவரது வெளியீட்டு முயற்சிகளையும், விநியோக வசதிகளையும், அச்சீட்டுப் பணிகளையும் அதிகமாகப் பாதித்தாக நான் உணர்ந்தேன். இவை பற்றி அவருடன் நீண்ட உரையாடல்களிலும் ஈடுபட்டிருந்தேன். இருப்பினும் 2005-2008 காலகட்டத்தில் ஏழு நூல்களையே புன்னியாமீனால் என் சார்பாக பதிப்பித்து வழங்க முடிந்தது.

பணம் இங்கு ஒரு பொருட்டாக இருக்கவில்லை. தனது பதிப்பக நிர்வாகத்தை விருத்தி செய்ய புன்னியாமீன் முயலாமைக்கான காரணத்தை இன்றுவரை என்னால் அறிந்துகொள்ளமுடியாமல் உள்ளது.

2005ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் எனது கட்டுரைத் தொகுப்பாக அமைந்த 'நூலியல் பதிவுகள்' என்ற நூல்தான் புன்னியாமீன் தனது சிந்தனை வட்ட அச்சீட்டுப் பிரிவின் வாயிலாக அச்சிட்டு வழங்கிய எனது முதலாவது நூலாகும். 104 பக்கம் கொண்ட இந்நூலை அச்சிட்ட துடன் அதனை விநியோகம் செய்யும் பொறுப்பினையும் அவர் ஏற்றுக்கொண்டிருந்தார்.

2006 செப்டெம்பரில் எனது மற்றுமொரு நூலான 'வாய்மொழி மரபில் விடுகதைகள்' என்ற நூல் சிந்தனை வட்டத்தின் அச்சீட்டுப்பிரிவால் 76 பக்கங்களில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.

2007 மார்ச்சில் 'நூல்தேட்டத்தில் கலாபூஷணம் பீ.எம்.புன்னியாமீன்' என்ற நூல் 128 பக்கங்களில் அவரது வேண்டுகோளின்பேரில் எழுதி வழங்கப்பட்டது. இது சிந்தனை வட்ட வெளியீடாக வெளியிடப்பட்டது. இந்நூலின் அச்சீட்டுப் பொறுப்பு முழுவதையும் அவரே ஏற்றுக்கொண்டார்.

2007 ஏப்ரல் மாதத்தில், 'சிறப்பு மலர்களுக்கான வழிகாட்டி' என்ற நூலின் 1வது தொகுதி புன்னியாமீனால் அச்சிடப்பெற்றுவெளியிடப்பெற்றது. இந்த நூல் இலங்கையில் வெளியான 150 சிறப்பு மலர்களில் இடம் பெற்றிருந்த 2000க்கும் அதிகமான கட்டுரைகளுக்கான வழிகாட்டியாகும்.

2007 நவம்பரில் மட்டும் மூன்று நூல்கள் வெளியிடப்பட்டன. லண்டன் சுடரொளி வெளியீட்டுக்கழகம், மலையக இலக்கிய கர்த்தாக்கள் என்ற எனது கட்டுரைத் தொகுப்பொன்றினை சிந்தனை வட்டத்தினரின் அச்சீட்டுப் பிரிவின் மூலம் அச்சிட்டுப் பெற்றுக்கொண்டனர். இலங்கையின் மலைய கத்தில் தமிழ் வளர்த்த பதினொரு இலக்கியகர்த்தாக்களின் வாழ்வும் பணியும் லண்டனிலிருந்து ஐ.தி.சம்பந்தன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் சுடரொளி இரு மாத இதழில் தொடராகப் பிரசுரிக்கப்பட்டது. அத்தொடரில் வெளிவந்த முதல் 11 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. கோ.நடேசையர், எஸ்.எம்.ஹனிபா, இர.சிவலிங்கம், சி.வி.வேலுப்பிள்ளை, அந்தனி ஜீவா, பீ.எம்.புன்னியாமீன், மாத்தளை சோமு, சாரல்நாடன், தெளிவத்தை ஜோசப், துரை. விஸ்வநாதன், கே.கணேஷ் ஆகியோர் பற்றிய பதிவுகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

'நூல்தேட்டத்தில் சிந்தனை வட்டம்' என்ற நூலை புன்னியாமீனுக்காக தொகுத்து வழங்கியிருந்தேன். அதன் அச்சீடும் இதே மாதத்தில் தான் மேற்கொள்ளப்பட்டது.

அதுவரை சிறிய நூல்களையே அச்சிட்டு வந்த புன்னியாமீனிடம் அவரை நம்பி நான் வழங்கிய 410 பக்கம் கொண்ட முக்கியமான பெரிய நூல் மலேசிய-சிங்கப்பூர் நூல்தேட்டமாகும். 2007 கார்த்திகையிலேயே இந்நூலும் அச்சிடப்பட்டது. அதனை அச்சிட்டது மாத்திரமன்றி மலேசியாவுக்கும் சிங்கப்பூருக்கும் அவற்றின் பிரதிகளை கப்பல் வழியாக உரிய காலத்தில் அனுப்பிவைக்கும் வித்தியாசமான அனுபவத்தையும் புன்னியாமீன் இந்நூல் வெளியீட்டின்போதே பெற்றுக்கொண்டார் என்று கருதுகின்றேன்.

நான் எதிர்பார்த்த உயர் தரத்தில் பலரும் மெச்சும் வகையில் மலேசிய - சிங்கப்பூர் நூல்தேட்டம் அமைந்திருந்தது. மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் ஏககாலத்தில் இதன் வெளியீட்டு நிகழ்வு தேசிய மட்டத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு புன்னியாமீனும் கலந்து சிறப்பிப்பதாக இருந்தது. இறுதி வேளையில் அவரால் வர முடியாது போனமை எனக்கும் அவருக்கும் மிகுந்த வேதனையை அளித்திருந்தது. நல்லதொரு நூல் பதிப்பாளரான புன்னியாமீனை தென்னாசியத் தமிழர்களுக்கு அறிமுகப்படுத்திவைக்கும் எனது நோக்கம் அன்று ஈடேறவில்லை.

2007 வரையில் புன்னியாமீன் அச்சீட்டுத் துறையில் நமக்கு நம்பிக்கையை ஊட்டியதுடன், பெரும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியிருந்தார். இதையடுத்து அடுத்த கட்டமாக நூல்தேட்டத்தின் ஐந்தாவது தொகுதியின் அச்சிடல் பணியையும் அவருக்குப் பரீட்சார்த்தமாக வழங்கினேன். 500 பக்கம் கொண்ட அந்த நூலை அச்சிட்டுப் பெற்றுக்கொள்வதில் பலத்த சிரமத்தை அவர் அடைந்திருந்ததாக நான் அறிந்ததும் அடுத்த தொகுதியை கொழும்பிலேயே அச்சிட்டுக்கொள்வதென்ற தீர்மானத்தை நான் எடுக்கவேண்டியதாயிற்று.

நூல்தேட்டம் என்பது நாடளாவிய விநியோகத் திட்டத்தை எதிர் நோக்கும் ஒரு பாரிய முயற்சியாகும். உடத்தலவின்ன மடிகே போன்ற சிறு கிராமங்களில் இத்தகைய பாரிய முயற்சிகளை முன்னெடுக்கும்போது பல போக்குவரத்துச் சிக்கல்கள், மேலதிக உழைப்பு என்பன ஏற்படுவதை தவிர்க்கவியலாமல் போகின்றது. அங்கு ஒழுங்கான மின்சார வசதியில் லாமல், அடிக்கடி மின்சாரத் தடை ஏற்படுவதும், தொலைத்தொடர்புத் தடங்கல்கள் ஏற்படுவதும் புன்னியமீனின் பதிப்புப் பணியில் காலதாமதத்தை ஏற்படுத்தி எம்மையும் அவரையும் பல்வேறு சிரமங்களுக்குள் தள்ளி விட்டிருந்தன. ஆளணிப் பற்றாக்குறை, பொருளாதாரத் தளம்பல் என பல்வேறு புறக்காரணிகள் திரு. புன்னியாமீன் அவர்கள் சில பணிகளைத் திருப்திகரமாகச் செய்வதற்கு இடமளிக்கத் தவறிவிட்டன.

போர் தீவிரமடைந்திருந்த அக்காலகட்டத்தில் இரயில் போக்குவரத்து வசதிகளின்றி, நாட்டின் போக்குவரத்து சேவைகளும் வடக்கு - கிழக்கிற்கு

திருப்திகரமாக இல்லாத நிலைமையால் புன்னியாமீனால் காலக்கிரமத்தில் நல்லதொரு விநியோகத் திட்டத்தை செயற்படுத்த முடியாது போயிருக் கலாம். புன்னியாமீனும் பல புகலிட வெளியீடுகளை அச்சிடுவதிலிருந்து தவிர்த்துக்கொள்ளத் தொடங்கியதாக பல புலம்பெயர் எழுத்தாளர்கள் எனக்குத் தெரிவித்திருந்தார்கள். தமிழகத்தை நாடி மீண்டும் அவர்கள் செல்வதை என்னாலும் தடுக்கமுடியாது போனது. அதனால் 2008க்குப் பின்னர் புன்னியாமீனிடம் வழங்கிவந்த பதிப்புப் பணிகளை படிப்படியாக குறைத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டிருந்தது. ஆயினும் அவருடன் வேறு எழுத்து மற்றும் சமூகப் பணிகள் தொடர்பாக தொடர்பினைப் பேணியே வந்தோம். இறுதியில் கடந்த 2013இல் புன்னியாமீனின் இல்லத்தில் தேங்கிக்கிடந்த விற்கப்படாத, விநியோகிக் கப்படாத எனது ஏராளமான நூல்களை கொழும்பு, யாழ்ப்பாணம், திருக்கோணமலை, மட்டக்களப்பு என ரயில் தபால் மூலம் அனுப்பிவைத்து, நானே நேரில் சென்று கூட்டங்களை ஒழுங்குசெய்து, பாடசாலைகளுக்கும் பொதுநூலகங்களுக்கும் அந்நூல் பிரதிகளை இலவசமாகவே விநியோகிக்க நேர்ந்தது.

நூல்தேட்டம் ஆறாவது தொகுதியிலிருந்து மீண்டும் கொழும்பில் குமரன் பதிப்பகத்தினால் நூல்தேட்டம் அச்சிட்டு விற்பனை செய்யப் படுகின்றது. அச்சிடல் பணியின் சுமைகளை குமரன் அவர்களே ஏற்று விநியோகத்தையும் அவரே பொறுப்பேற்று எனது சுமையின் பெரும் பங்கினைத் தாங்கிவருவதால் நூல்தேட்டம் தொகுப்புக்கள் சுமுகமான முறையில் தற்போது இலங்கையில் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

எனது வழியையே சகோதரர் புன்னியாமீனும் பிற்காலத்தில் கடைப் பிடித்திருப்பதை அவரது இறுதி நூலான 'ஓர் ஈர நெஞ்சனின் உளவியல் உலா' என்ற நூல் குமரன் பதிப்பகத்திலேயே அச்சிடப்பட்டிருப் பதிலிருந்து புரிந்துகொள்ளமுடிகின்றது.

2010ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில் இலங்கை சென்ற வேளையில் சுமார் மூன்று வாரங்கள் புன்னியாமீனின் இல்லத்தில் விருந்தாளியாகத் தங்கியிருந்து நாள்தோறும் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குச் சென்று அங்கிருந்த நூல்களை நூல்தேட்டம் தொகுப்பிற்காகப் பார்வையிட்டுத் தகவல்களைச் சேகரித்த அனுபவம் வாழ்வில் என்றும் மறக்க முடியாதது. இதனை புன்னியாமீனின் வரிகளிலேயே உங்களுடன் பகிர்ந்து கொள்வது சுவையாகவிருக்கும்.

'செல்வராஜாவிடம் நான் அவதானித்த மிக முக்கியமான பண்புகளாவன திட்டமிடலும், நேர முகாமைத்துவமுமாகும். இதனை நான் ஏற்கனவே அறிந்து வைத்திருந்தாலும் கூட நூல்தேட்டம் தொகுதி 07க்காக

பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தில் நூல் விபரங்களை பதிவு செய்ய வந்த நேரத்தில் என்னால் அருகிலிருந்து நேரடியாக அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தில் காணப்பட்ட நூல்களைப் பார்வையிட்டு பதிவுசெய்வதற்கான அனுமதியை அவர் இலண்டனில் இருந்து வருவதற்கு சுமார் 6 மாதங்களுக்கு முன்பே நூலகத்தில் தமிழ் நூல்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட துணை நூலகர் இ.மகேஸ்வரன் ஊடாகப் பெற்று வைத்திருந்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு சுமார் 15 கிலோமீற்றர் தொலைவில் எனது வீடு அமைந்திருந்ததினால் சுமார் மூன்று வாரங்கள் எனது வீட்டில் தங்கி இப்பணியை நிறைவேற்ற அவர் திட்டமிட்டார்.

2010ஆம் ஆண்டு மார்ச் மாதம் அவரது இலங்கை வருகை தொடர்பாக ஆறு மாதங்களுக்கு முன்பே நிகழ்ச்சி நிரலை தயாரித்து எனக்கு அனுப்பிவைத்திருந்தார். அவரின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப சுமார் 3 வாரங்களுக்குள் 500 புத்தகங்களைப் பதிவாக்க வேண்டும் என்பது அவரின் திட்டமாகும். அதற்கேற்ப போக்குவரத்து வசதிகளுடன் எனது அலுவலகத்தில் பணியாற்றும் ஜெ. இல்முன் நிஸா அவர்களையும் செல்வராஜா அவர்களின் பதிவு உதவிக்காக ஏற்பாடுகளை செய்திருந்தேன்.

சுமார் 6 மாதங்களுக்கு முன் (லண்டனிலிருந்தபடி) எவ்வாறு திட்டமிட்டிருந்தாரோ அந்த நிகழ்ச்சி நிரலில் ஒன்று கூட பிசகாமல் அவர் நிகழ்த்தியமை என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. உண்மையாகச் சொல்வதானால் திட்டமிடல் நேரமுகாமைத்துவம் போன்ற விடயங்களை அவரிடம் தான் நான் கற்றுக்கொண்டேன் என்று கூறலாம்.

அவர் இலங்கை வந்த நேரத்தில் கண்டிப் பகுதியைச் சுற்றிப்பார்க்கலாம் என நான் அழைத்த சந்தர்ப்பத்தில் ‘என்னுடைய குறிக்கோள் குறைந்தது 500 புத்தகங்களைப் பதிவாக்குவது எனவே தயவு செய்து சுற்றுலாவுக்கு எல்லாம் அழைக்காதீர்கள்’ என உறுதியாகக் கூறிவிட்டார். தேடல் என்ற ஒரே நோக்கில் இருந்தமையினால் மூன்று வாரங்களுக்குள் அவரால் 700 புத்தகங்களை பதிவாக்கவேண்டிய தகவல்களைத் திரட்டிக்கொள்ள முடிந்தது.

சுமார் காலை 8 மணிக்கு பல்கலைக்கழகம் செல்லும் அவர் மாலை 4.30 மணிவரை பல்கலைக்கழக நூல்களைப் படித்து அவற்றை குறிப் பெடுத்துக் கொண்டு வந்து, இரவில் அதிக நேரம் மடிக்கணனியில் தான் திரட்டிய விபரங்களை பதிவாக்குவார். சில நேரங்களில் நள்ளிரவு 12 மணியையும் தாண்டிவிடும். இவ்வளவு அதிகமாக களைப்படைய வேண்டாம் என நான் கேட்டுக்கொண்டு மின்குமிழை அணைத்த சந்தர்ப்பங்களும் உண்டு. நான் தூங்கும்வரை பார்த்திருந்து மின்குமிழைப்

போடாமல் கையடக்கத் தொலைபேசியின் மின்குமிழ் வெளிச்சத்தில் அவர் வேலை செய்ததை பின்னால் என்னால் தெரிந்து கொள்ள முடிந்தது.

எனவே தன் இலக்கை அடைய அவர் மிகவும் திட்டமிட்டு தியாக சிந்தையுடன் செயற்படுவதாலேயே அவரால் இன்று 10,000 தமிழ் நூல்களை பார்வையிட்டுப் பதிவுக்குட்படுத்த முடிந்துள்ளது.'

இங்கு அவரது பார்வையில் எனது பணிகளைப் பதிவுசெய்திருக்கிறார். நான் புன்னியாமீன் அவர்களின் இல்லத்தில் தங்கியிருந்த அந்த மூன்று வாரங்களில் அவர்களது பாசம்மிக்க உரையாடல்களாலும், குடும்பத்தினரின் அன்பான உபசரிப்பாலும் மிகவும் திக்குமுக்காடிப்போயிருந்தேன். எனக்கு விருப்பமான உணவுப் பண்டங்களையும், எனக்குப் பிடிக்கும் என்று தாங்கள் தீர்மானித்த உணவுப் பண்டங்களையும் செய்தும், வாங்கியும் குவித்து என்னைத் திக்குமுக்காடச் செய்துவிட்டார்கள். என்னைச் சந்திக்கும் ஆர்வத்துடன் மாலை வேளைகளில் புன்னியாமீன் இல்லத்துக்கு வரும் ஊர் நண்பர்களிடம் என்னைத் தொந்தரவு செய்யவிடாமல் கண்டிப்பாக நடந்துகொண்ட சந்தர்ப்பங்களையும் நான் அவதானித் திருந்தேன். அன்று முதல், ஒவ்வொரு தடவை நானோ எனது குடும்பத்தினரோ இலங்கை செல்லும் வேளைகளில் குடும்ப சமேதரராக புன்னியாமீன் அவர்களின் இல்லத்துக்குச் சென்று வருவது ஒரு முக்கியமான பணியாகிவிட்டது. 2015இல் சென்ற வேளையில்தான் அது கைகூடாமல் போய்விட்டது. அது என் இறுதிக்காலம் வரை இனி என் மனதை நெருடவே செய்யும் என்பதை நான் அறிவேன்.

**புன்னியாமீனின் இறுதிப் பொது நிகழ்வு**

எனது அண்மைக்கால இலங்கைப்பயணம் ஜுன் 2015இல் இடம்பெற்றது. நூல்தேட்டத்தின் பத்தாவது தொகுதியின் வெளியீடும், எனது மணிவிழாவை யொட்டி குமரன் புத்தக இல்லத்தினர் அயோத்தி நூலக சேவையுடன் இணைந்து வெளியிட்டிருந்த 'மௌனமாய்ப் பொழியும் மாமழை' என்ற சேவை நயப்பு மலரின் வெளியீடும் ஏககாலத்தில் கொழும்பில் ஏற்பாடு செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

எண்ணிக்கையில் நாற்பதைத் தாண்டிவிட்ட எனது நூல்களுக்கு வெளியீட்டு விழா என்று ஒரு வைபவத்தை வைப்பதை நீண்டகாலமாகத் தவிர்த்து வந்திருந்த என்னால் நண்பர்களின் இந்த முயற்சிக்கு இணங்க முடியவில்லை. அதற்குப் பதிலாக ஈழத்துப் படைப்பிலக்கி வாதிகளையும் எழுத்தாளர்களையும் பதிப்பாளர்களையும் ஊடகவியலாளர்களையும் உள்ளடக்கிய ஒரு கலந்துரையாடல் நிகழ்வாக அதனை நடத்தலாம் என்று ஆலோசனை வழங்கினேன். இறுதியில் அவ்வாறே நடத்துவதென்று

தீர்மானிக்கப்பட்டது. முன்கூட்டியே கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் சங்கரப்பிள்ளை மண்டபத்தை ஒழுங்கு செய்துவிட்டு, புன்னியாமீனுக்கு தொலைபேசிமூலம் அந்தச் செய்தியைத் தெரிவித்தேன்.

நூல்தேட்டம் பணியில் என்னுடன் நீண்ட காலமாகக் கைகோர்த்துப் பயணித்தவர் அவர் அத்துடன் முதல் ஐந்து நூல்தேட்டம் தொகுதிகளும் வெளிவந்திருந்த நிலையில் தானாகவே முன்வந்து அந்த ஐந்து தொகுதிகளையும் சேர்த்து ஒரு ஆய்வினை மேற்கொண்டதுடன் அதனை தனது செலவிலேயே 'நூல்தேட்டம்: இலங்கையின் தேசிய இலக்கிய நீரோட்டத்தில் சங்கமிக்கவேண்டியதொரு பெருநதி' என்ற நீண்ட கட்டுரையை விரிவான தகவல்களுடன் எழுதியதுடன் தனி நூலாகவும் அதனை வெளியிட்டவர். இவருக்குப் பின்னரே நூல்தேட்டம் பற்றிய ஆய்வுகளை பிறர் மேற்கொள்ளத் தொடங்கியிருந்தார்கள். அவ்வகையில் இவ்விடயத்தில் புன்னியாமீனே முன்னோடியாகச் செயற்பட்டவர்.

அத்தகைய ஒருவரை இந்நிகழ்ச்சியில் தலைமை தாங்கவிடுவதென்று விரும்பியிருந்தேன். தான் தலைமை தாங்கும் விடயத்தில் ஆரம்பம் முதலே அவர் விரும்பியிருக்கவில்லை. அவரது நீண்டகாலச் சுகவீனம் காரணமாக அவரை நான் வற்புறுத்தவும் தயங்கியிருந்தேன். போதாக் குறைக்கு அது இஸ்லாமியரின் நோன்புக்காலம் வேறு.

இந்நிலையிலேயே 'நூல்தேட்டத்தின் அறிமுக நிகழ்வும், கலந்துரை யாடலும்' என்ற தலைப்பில் அன்றைய நிகழ்வு ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் ஞானம் - ஆசிரியர் வைத்திய கலாநிதி தி.ஞானசேகரன் அவர்களின் தலைமையில் 28.6.2015 அன்று அந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது. என்னை ஆச்சர்யத்தில் ஆழ்த்தும் வகையில் புன்னியாமீன் தனது துணைவியார் சகிதம் அங்கு பிரசன்னமாகியிருந்தார். அவருடன் 'ஓர் ஈரநெஞ்சனின் உளவியல் உலா' நாயகன் உளவளவியலாளர் யூ.எல்.எம்.நௌபரும் நிகழ்ச்சியில் பங்கேற்று என்னுடன் கலந்துரையாடவென வருகை தந்திருந்தார். அது எனக்கு இரட்டிப்பு மகிழ்வைத் தந்தது.

நவமணி வார இதழின் முன்னாள் பிரதம ஆசிரியரும் எமது நண்பருமான அமரர் அல்ஹாஜ் எம்.பீ.எம். அஸ்ஹர் அவர்களின் அன்புக் குரிய இளையோர்களான என்.நஜ்முல் ஹுசைன், தாஸிம் அஹ்மட், நியாஸ் ஏ.ஸமட் ஆகியோரும் என்னைக் காணவும் உரையாடவும் அங்கு வந்திருந்தது என்னை நெகிழவைத்திருந்தது. அதில் ஒரு இளைஞர், தனது கருத்துரையின்போது, தனது ஆசான் அல்ஹாஜ் எம். பீ.எம். அஸ்ஹர் உயிரோடிருந்தபோது, என்னையும் திரு. புன்னியாமீன் அவர்களையும் பற்றி அடிக்கடி குறிப்பிட்டு வந்திருந்ததாகவும், வாழ் நாளில் தாங்கள் ஒருதடவையேனும் இவர்கள் இருவரையும் சந்தித்து



உரையாடவேண்டும் என்று வலியுறுத்திக் குறிப்பிட்டு வந்ததாகவும், அல்ஹாஜ் எம்.பீ.எம்.அஸ்ஹர் குறிப்பிட்ட இரண்டு பேரையும் ஒரே அரங்கில் காணக் கிடைத்தது இரட்டை மகிழ்ச்சி எனவும் குறிப்பிட்டார். அந்த இளைஞனின் வார்த்தை என் இதயத்தைத் தொட்டது.

அன்றைய நிகழ்ச்சியின் தொடக்கத்தில் இலக்கியப்புரவலர் ஹாசிம் உமர் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டதும் கலந்துரையாடலை தலைவர் ஆரம்பித்துவைத்தார். நூல்தேட்டம் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் இடம்பெற்ற இக்கருத்தரங்கில் பல ஈழத்துப் படைப்பாளிகள் வந்திருந்தார்கள்.நான் புன்னியாமீனை மேடைக்கு விடாப்பிடியாக அழைத்து என்னருகில் இருத்திக்கொண்டேன். சுகவீனம் காரணமாக அவரால் நீண்டதூரம் நடக்க முடியாத நிலையும், நீண்டநேரம் ஒரே இடத்தில் நிற்கமுடியாத நிலையும் காணப்பட்டது. தன் துணைவியார் திருமதி. மஸீதா புன்னியாமீனுடன் வருகைதந்திருந்த புன்னியாமீன், தனது உரையில் நூல்தேட்டத்தைப் பற்றி அதிகம் கதைக்காமல் ஆன்மீகம் தொடர்பாகவும் மரணம் தொடர்பாகவும், நிகழ்ச்சியுடன் தொடர்பற்ற வகையில் கதைத்துக்கொண்டிருந்தமை எனக்கு விந்தையாக இருந்தது. திருமதி. மஸீதா புன்னியாமீன் அவர்கள் தனது உரையில் தெளிவாக நூல்தேட்டத்தின் வெற்றிக்கு எனது துணைவியார் தான் காரணம் என்பதை அழகுற எடுத்துரைத்தார்.

எனது நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் அவர் வேறு இலக்கிய நிகழ்வுகள் எதிலும் கலந்துகொண்டிருக்கவில்லை என்றே என்று அறிகின்றேன். அவரிடம் அதற்கான தேக ஆரோக்கியம் இல்லாதிருக்கலாம்.

2015இல் எனது இலங்கைப் பயணத்தின்போது புன்னியாமீனிடம் செல்வதற்கு வழமைபோல முன்கூட்டியே ஒருநாளைத் தீர்மானித்து வைத்திருந்தேன். லண்டனிலிருந்து புறப்படும் முன்னரே அதற்காக கண்டிக்கான கடுகதிப் புகையிரதத்துக்கான பயணச்சீட்டையும் பதிவு செய்திருந்தேன்.

எனது அவதானக் குறைவால் அதே தினத்தில் தமிழ்ச் சங்கத்தில் நடைபெறவிருந்த, ஆசி கந்தராஜா அவர்களின் கறுத்தக் கொழும்பான் நூல்வெளியீட்டு விழாவில் சிறப்புரையொன்றினை 'புலம்பெயர் இலக்கியம்' என்ற தலைப்பில் ஆற்றுவதற்கும், புன்னியாமீனிடம் செல்லத் தீர்மானித் திருந்த திகதியைப் பரீசிலனை செய்யாமலே ஞானம் ஆசிரியர் திரு. தி.ஞானசேகரனிடம் ஒப்புதல் வழங்கியிருந்தேன். இலங்கைக்குச் சென்ற பின்னர் தான் அழைப்பிதழில் என் பெயரும் குறிக்கப்பட்டு விழா ஒழுங்குகள் அனைத்தும் நிறைவாகியிருந்ததை காணமுடிந்தது.

இதனை புன்னியாமீனிடம் பவ்வியமாக எடுத்துச்சொல்லி, மற்றொரு வசதியான நாளைக்குச் சென்று பார்க்கலாம் என்ற முடிவில் அவரிடம் எனது சிக்கலான நிலைமையைக் கூறியிருந்தேன். அவரும் எனது நிலைமையை நன்குணர்ந்து கொண்டவராக அமைதியாகினார். நான் எதிர்பார்த்த அந்த 'வசதியான நாள்' நான் லண்டன் பயணமாகும் வரை வரவேயில்லை. இனிமேல் என்றுமே அவரைக்காணும் வாய்ப்பு வரப்போவதில்லை என்று எண்ணும்போது எனது மனது குற்றவுணர்வால் கனக்கின்றது.

*பூமிக்கு நாம் ஒரு யாத்திரை வந்தோம்*
*யாத்திரை தீரும் முன் நித்திரை கொண்டோம்*
*நித்திரை போவது நியதியென்றாலும்*
*யாத்திரை என்பது தொடர்கதையாகும்.*

# 6

# புன்னியாமீனின் உதவியுடன் இலங்கையில் புத்தக விநியோகம்

கடந்த 2014 மே மாதம், பிரித்தானியாவின் ஸ்கொட்லண்டில் இயங்கும் புக்ஸ் எப்ரோட் நிறுவனத்தின் உதவியுடன் திருக்கோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட எண்பத்திமூன்று பாடசாலைகளுக்கும் யாழ்ப்பாணப் பொதுநூலகத்திற்கும், நல்லூர் பிரதேச சபையின் மூன்று நூலகங்களுக்கும் விநியோகிக்கவென ஒரு கொண்டெய்னர் நிறைந்த சிறுவர், இளையோர் களுக்கான ஆங்கில நூல்களை அனுப்பிவைத்திருந்தேன். இத்திட்டத்தின் கீழ் சுமார் ஒருலட்சத்தி ஐம்பதினாயிரம் நூல்கள் வடக்கு கிழக்கை கடந்த 2014ஆம் ஆண்டு சென்றடைந்துள்ளன.

இன்று இந்த மாபெரும் நிகழ்வு சாத்தியமாவதற்கு, சுமார் பத்தாண்டுகளுக்கு முன்னர், 2004இல் புன்னியாமீன் அவர்களின் உதவியுடன் மலையகத்திற்கு நூல்களை விநியோகிக்க நான் மேற்கொண்ட நடவடிக்கைகளே படிக்கல்லாக அமைந்திருந்தன. பத்தாண்டுகளுக்கு முன்னர் சிறப்பாக அவர் மேற்கொண்ட விநியோக ஒழுங்கே 'புக்ஸ் எப்ரோட்' அமைப்பின் இலங்கையர் மீதான நம்பிக்கையை வளர்த்திருந்தது.

புக்ஸ் எப்ரோட் நிறுவனம் பெரிய பொருட்செலவுடன், ஏராளமான நிதிவசதியுடன், ஆரம்பிக்கப்பட்டதொரு சர்வதேச நிறுவனமல்ல. ஸ்கொட்லாந்திலுள்ள கல்விச்சாலைகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றும் சுமார் முப்பது ஆசிரியர்களின் பகுதிநேர கூட்டு முயற்சியே இது.

பிரித்தானிய பாடசாலைகளில் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை அதன் நூலகச் சேர்க்கைகள் கழிக்கப்பெற்று புதிய நூல்கள் வழங்கப்படும் நடைமுறை உள்ளது. அவ்வாறு கழிக்கப்பெறும் நூல்கள் பிரித்தானிய தெருக்களை அமைக்கும் போது மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படும். பெரும்பாலான நூல்கள் கழிவுகளாக (Land fills) நிலங்களைச் சென்றடையும். இப்படிப் பயனற்றுப் போகாமல் அந்த நூல்களைப் பெற்று, அவற்றில் நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்து அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலுள்ள பாடசாலை மற்றும் பொது நூகங்களுக்கு நேரடியாக அனுப்பிவைத்து, அந்நூல்களின் வாழ்வை நீடிக்கச் செய்வதுடன் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் கல்வித்துறையின் நூலகச்



செலவினத்தையும் கணிசமாகக் குறைக்க வழியமைக்கும் ஒரு பணியையே புக்ஸ் அப்ரோட் மேற்கொள்கின்றது. இந்நிறுவனத்தின் தொண்டுநிலை இணைப்பாளர்களுள் ஒருவராகப் பணியாற்றும் ஒரேயொரு தமிழராகவும், இலங்கையராகவும் நான் 2003முதல் இயங்கி இதுவரை ஏராளமான நூல்களை ஈழத்துப் பாடசாலைகளுக்கும், பொது நூலகங்களுக்கும் அனுப்பிவந்திருக்கிறேன்.

2004இல் சகோதரர் புன்னியாமீனின் உதவியுடன் மலையகப் பகுதிகளுக்கும், குமரன் புத்தக இல்ல அதிபர் குமரனின் உதவியுடன் தென்னிலங்கைப் பிரதேசத்திலுள்ள தமிழ் பாடசாலைகளுக்கும் பரிசோதனை முயற்சியாக இவ்வாறு நூல்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. அவ்வேளையில் 6613 புத்தகங்களை புன்னியாமீனின் கைகளில் ஒப்படைத்து அவற்றை அவருடன் தொடர்பான மலையகப் பாடசாலைகளுக்கு விநியோகித்து, அவர்களை அந்த நிறுவனத்துடன் தொடர்ந்தும் தொடர்பினைப்பேணி ஆண்டுதோறும் புத்தகங்களைத் தருவித்துக்கொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்திருந்தேன்.

புன்னியாமீன் மிகுந்த ஆர்வத்துடன் எனது வேண்டுகோளை ஏற்று எனது நூல்களுடன் தனது வெளியீடுகளிலும் 1165 நூல்களைச் சேர்த்து, இலங்கையின் 22 மாவட்டங்களில் 17 மாவட்டங்களைச் சேர்ந்த 93

பாடசாலைகளுக்கு நூல்களை ஒழுங்குமுறையாக வழங்கியுதவியிருந்தார். வெறுமனே புத்தகங்களை வழங்கியதுடன் மாத்திரம் நில்லாது ஒவ்வொரு பாடசாலையின் கடிதத் தலைப்பிலும் அதிபரின் கையெழுத்தோடு, பெற்றுக்கொள்ளப்பட்ட புத்தகங்களின் பட்டியலையும், நன்றிக் கடிதம் ஒன்றையும் இணைத்துப் பெற்று, அவை அனைத்தையும் தொகுத்து மட்டை கட்டி, தனியான ஒரு ஆவணமாக மூன்று பிரதிகளையும் எனக்கு அனுப்பிவைத்தார். அவர் அன்று அனுப்பியது போன்று, முன்னரோ பின்னரோ எனக்கு எவரும் ஏற்புக் கடிதங்களைப் பெற்று ஒழுங்காக அனுப்பவில்லை.

துர்அதிர்ஷ்டவசமாக நூல்களைப் பெற்றுக்கொண்ட அனைத்துப் பாடசாலைகளும் அதன்பின்னர் அக்கறையில்லாமல், தொடர்பாடலை நிறுத்திக்கொண்டன. ஒருவர்கூட முயற்சியெடுத்து, நாங்கள் வழங்கிய இணைப்பினைப் பயன்படுத்தி புக்ஸ் எப்ரோட் நிறவனத்துடன் தொடர்பை ஏற்படுத்தி, மேலும் நூல்களைக் காலக்கிரமத்தில் பெற்று நிரந்தர பயனாளிகளாக மாறவேயில்லை. இது எனக்கும், என்னை விட அதிகமாக உழைத்த புன்னியாமீனுக்கும் மிகுந்த மன வேதனையைக் கொடுத்தது.

நீண்டகாலத்தின் பின்னர், அதாவது கடந்த 2014 மே மாதம் புத்தக கொன்டெய்னர் இலங்கை வந்து, வடக்கு கிழக்கில் நூல் விநியோகம் செய்யப்பட்டு அவை பற்றிப் பத்திரிகைகளில் செய்தி வந்தவேளையில் புன்னியாமீன் மீண்டும் என்னுடன் இது பற்றிக் கதைத்தார். தனக்கு மீண்டும் அந்த நூல்விநியோக வாய்ப்பினை வழங்கும் படியும், விநியோகத்தை தானே முன்நின்று சிறப்பாக மேற்கொள்வதாகவும் அவர் உறுதியளித்திருந்தார்.

நானும் 2016 இறுதிப் பகுதியில் ஒரு கொன்டெய்னர் நூல்களை (மொத்தம் ஒன்றரை லட்சம் நூல்கள்) அவரது வீட்டுக்கு நேரடியாக அனுப்பிவைப்பதற்கான ஒழுங்குகளைச் செய்திருந்தேன். வெண்ணெய் திரளும் வேளை பானை உடைந்த கதையாக இன்று புன்னியாமீனை இழந்ததன் மூலம், மலையகப் பாடசாலைகளும் அந்த வாய்ப்பினை இழந்து நிற்கின்றன.

பொதுவாக இலங்கையில் தமிழ்ச் சமூகத்தில் நன்கொடை என்பது ஒருவழிப்பாதை கொண்ட சித்தாந்தமாகவே அமைந்துவிட்டது. இதனை உதவி வழங்கும் நிறுவனங்கள் ஒரு மரபாகவே வளர்த்துவிட்டுள்ளன. பல்வேறு மறைமுக நோக்கங்களுடன் இயங்கும் இவ்வமைப்புகள் பாடசாலைக்கு நூல்வழங்குவதென்பது அள்ளிக்கொடுத்து கணக்கைத் தீர்க்கும் ஒரு தலை முயற்சியாகவே முடிந்துவிடுகின்றன. அவர்கள் வழங்கும் உதவிகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதையோ

தொடர்ந்து அந்நிறுவனத்தின் உதவியை எவ்வாறு கையாள்வது என்பது பற்றியோ உதவியைப் பெறும் நிறுவனங்கள் அக்கறைப்படுவது கிடையாது. இதுவே தமிழர் பிரதேசங்களில் உள்ள சிக்கலான நிலைமையாகும்.

தங்கமுட்டையிடும் ஒரு வாத்தை, ஒருவருக்கு நீண்டகாலம் தொடர்ந்து தங்கமுட்டைகளைப் பெற்றுக்கொள்ள வழியமைக்கும் நல்லெண்ணத்தில் வழங்கினால், அதன் முட்டைக்குக் காத்திராமல், அதனைக் கொன்று கறிவைத்துப் புசிப்பதுடன் வேறொருவர் தரப்போகும் தங்கவாத்து வரும்வரை தமது கருமங்களைப் பார்த்துச் செல்லமுனையும் ஒரு சில கல்வி நிறுவனங்களால் ஒட்டுமொத்த கல்விச்சேவைக்கும் பாதிப்பு ஏற்படும் ஆபத்துள்ளதென்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

ஆரம்பத்தில், மேற்படி பாடசாலைகளால் மூன்று பக்க விண்ணப்பப் படிவங்கள் அனுப்பிவைக்கப்பட்டு, அவை புக்ஸ் அப்ரோட்டின் தேர்வுக் குழுவின் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு உதவி வழங்கும் பாடசாலைகளாகத் தேர்வுசெய்யப்படுவதென்பது நீண்டதொரு வேலைத்திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை இப்பாடசாலைகளுக்கு ஆங்கில மொழியிலான சிறுவர், இளையோர் நூல்களும் உசாத்துணை நூல்களும் பாடசாலையின் சார்பில் எவ்வித பணச் செலவுமின்றி தேர்வு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ் தமது நூலகத்தின் சேர்க்கைகளை வளர்த்துக்கொள்ள விரும்பும் பாடசாலைகள் புக்ஸ் எப்ரோட் நிறுவனத்துடன் மூன்று கட்டங் களில் தமது தொடர்பினை மேற்கொள்ள உடன்பட்டாக வேண்டும்.

1) நூல்கள் கிடைத்ததும் அதனை மேற்படி நிறுவனத்துக்கு மின்னஞ்சல் வாயிலாகவோ தபால் மூலமாகவோ நன்றி தெரிவித்து கடிதம் ஒன்றை அனுப்பி வைக்க வேண்டும்.

2) சுமார் மூன்று மாதங்களில் மேற்படி நூல்கள் அனைத்தும் பட்டியல் இடப்பட்டு நூலகச் சேர்க்கையில் இணைக்கப்பட்ட பின்னர் கிடைத்தவற்றுள் மிகவும் பயனுள்ள நூல்கள் சிலவற்றின் விபரத்தை யும் (ஆகக் கூடியது 10 நூல்களின் தலைப்பு, ஆசிரியர் பெயர், பாட விடயம் என்பவற்றை குறிப்பிடலாம்), பயனற்றதெனத் தாம் கருதும் நூல்களில் சிலவற்றின் விபரத்தையும் (இதுவும் முன்னையது போன்றே 10 தலைப்புகளில் அமையலாம்) பட்டியலிட்டு ஒரு கடிதத்தை பாடசாலை அதிபர் வாயிலாக அனுப்பவேண்டும்.

3) நூல்கள் கிடைத்து ஆறு மாதங்கள் கடந்த நிலையில், பாடசாலையின் ஆங்கில பாட ஆசிரியரின் கண்காணிப்பின்கீழ் மூன்று பிள்ளைகள், தாங்கள் கடந்தகாலங்களில் வாசித்த புக்ஸ் எப்ரோட் நிறுவனத்தின்

நூல்களில் ஏதாவது ஒரு நூலைத் தேந்தெடுத்து அந்த நூல் என்ன சொல்கிறது? அதில் தாம் விரும்பும் அம்சம் என்ன ஆகிய தகவல் களை உள்ளடக்கி, 20 வரிகளுக்குள் அமையும் சிறு விமர்சனம் ஒன்றை எழுதி (மூன்று மாணவர்களின் மூன்று விமர்சனங்களும் ஒன்றாக அனுப்பப்படவேண்டும்) புக்ஸ் அப்ரோட் நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

இவை தவிர தமது நூல்களை கண்காட்சிப்படுத்தமுனையும் பாடசாலைகள், பொது நூலகங்கள் அதுபற்றிய புகைப்படங்களையும் பிற தொடர்பாடல்களையும் அனுப்பிவைக்கலாம். அத்துடன் தாங்கள் விண்ணப்பப் படிவத்தில் வழங்கிய தொடர்பு முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்கள் மாற்றப்பட்டால் அதனையும் அவ்வப்போது தெரிவித்து புக்ஸ் அப்ரோட் நிறுவனத்தின் கணனித்தகவல் கோவையில் மாற்றத்தை மேற்கொள்ளப் பணிக்கவேண்டும்.

இத்தகைய மூன்று அடிப்படைத் தொடர்பாடல்களையும் வெற்றிகரமாக மேற்கொள்ளும் ஒரு பாடசாலை அடுத்த இரு ஆண்டுகளில் மேலும் பெருந்தொகுதி நூல்களை எதிர்பார்த்து நம்பிக்கையுடன் காத்திருக்கலாம். இதனை செய்யத் தவறுவோர், தங்கமுட்டையிடும் வாத்தை சுவைத்த திருப்தியுடன் எஞ்சிய காலத்தைக் கழிக்கலாம். மலையகத்தைப் பொறுத்தவரை 2004இல் நூல்களைப் பெற்ற 93 பாடசாலைகளில் ஒன்றுகூட தம் தொடர்பினைப் பேண முன்வரவில்லை.

சகோதரர் புன்னியாமீன் விட்டுச் சென்ற இப்பணியினைத் தொடர் வதற்காக மலையகத்திலிருந்து சுயநலன் கருதாத சமூக விரும்பிகள் எவராவது முன்வந்து புன்னியாமீன் விட்டுச் சென்ற பாதையைத் தொடர முனையவேண்டும். இதன் வழியாக ஸ்கொட்லண்டையும் மலையகத்தையும் இணைக்க அவர்கள் முன்வரவேண்டும்.

*தென்றலின் பூங்கரம் தீண்டிடும் போதும்*
*சூரியக் கீற்றொளி தோன்றிடும் போதும்*
*மழலையின் தேன்மொழி செவியுறும் போதும்*
*மாண்டவர் எம்முடன் வாழ்ந்திடக்கூடும்.*

# 7

# புன்னியாமீன் - லண்டன் உறவுப்பாலம்

புன்னியாமீனுக்கும் எனக்கும் இடையே ஏற்பட்ட நட்பும் உறவும் என்னைச் சுற்றியுள்ளவர்களுடனும் தொடர்ந்தது. அவ்வாறு தொடர்ந்த அந்த உறவுகளிலும் நட்பிலும் குறிப்பிடத்தக்கதும் பெறுமதிமிக்கதுமாக அமைந்தது தேசம் சஞ்சிகையின் ஆசிரியர் தம்பிராஜா ஜெயபாலனுடன் ஏற்பட்ட நட்பும் உறவுமாகும். தேசம் ஜெயபாலனுக்கும் எனக்கும் இருந்த உறவும் நட்பும் பன்முகத்தன்மையுடையது. எழுத்துத்துறை, பத்திரிகைத்துறை, சமூகப் பணிகள் என இந்த உறவும் நட்பும் பல கோணங்களில் பின்னிப் பிணைந்திருந்தது. இந்த உறவுப் பாலம் புன்னியாமீனையும் இணைத்துக் கொண்டது.

தேசம் ஜெயபாலனுடன் நான் பல்வேறு விடயங்களையும் பகிர்ந்து கொள்வது வழக்கம். புன்னியாமீனுடன் எனக்கு ஏற்பட்ட நட்பு பற்றியும் சந்தர்ப்பம் வாய்க்கும் வேளைகளில் ஜெயபாலனுடன் கதைத்திருக்கிறேன். 2005 செப்ரம்பர் 11 அன்று உடத்தலவின்னவில் ஏற்பாடு செய்யப்பட்ட விருதுவழங்கும் விழா அதன் பிறகு அங்குள்ள எழுத்தாளர்களையும், முஸ்லீம் பிரமுகர்களையும் குறிப்பாக முஸ்லீம் எழுத்தாளர்களை சந்தித்தது தொடர்பாக சிலகாலம் உரையாடினோம். அப்போது இலங்கையில் இருந்து வெளியாகும் தமிழ் நூல்களில் கணிசமானவை முஸ்லீம் எழுத்தாளர்களால் வெளியிடப்படுகின்றது என்ற உண்மையையும் புன்னியாமீனுடைய வெளியீட்டு முயற்சிகளையும் அவருடன் பகிர்ந்து கொண்டேன்.

அப்போது தேசம் மாற்றுக் கருத்துத் தளத்தில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. தேசம் பல்வேறு அரசியல் மற்றும் தமிழ் - முஸ்லிம் இன ஒருங்கிணைப்பு தொடர்பான சந்திப்புக்களையும் ஏற்பாடு செய்து நடத்திக் கொண்டிருந்தது. அதேசமயம் ஜெயபாலன் லண்டனில் உதயன் (லண்டன்), லண்டன் குரல் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராகவும் இருந்தார். ஜெயபாலனை புன்னியாமீனுடன் நேரடியான தொடர்பினை ஏற்படுத்த வாய்ப்பொன்றை ஏற்படுத்திக் கொடுத்ததைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் தங்கள் நட்பையும் உறவையும் தாமாகவே வளர்த்துக் கொண்டனர். கருத்துக்களையும் செய்திகளையும் தமக்கிடையே பகிர்ந்துகொண்டனர். இதேவேளை இலங்கையில் ‘நவமணி’

பத்திரிகையுடன் நெருக்கமான உறவை வைத்திருந்த புன்னியாமீன் தேசம் சஞ்சிகைக்கும் நவமணி பத்திரிகைக்கும் உறவுப்பாலமாகவும் இருந்துவந்தார்.

இது பற்றி பின்னர் வெளியான 'தமிழ் - முஸ்லீம் இன உறவுகள்' என்ற தொகுப்பு நூலில் என்னுரையும் பதிப்புரையும் என்ற அறிமுகப்பகுதியில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

'புலம்பெயர் தமிழ் ஊடகங்கள் சிலவற்றில் இன்று குறித்த சில தமிழ் எழுத்தாளர்கள் இலங்கை முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் துணிவுடன் எடுத்துக் கூறுவதைப்போல இலங்கையிலுள்ள ஊடகங்களாலும் (தமிழ்/முஸ்லிம்) எழுத்தாளர்களாலும் முடியவில்லை. தேசம் விசேட மலராக வெளிவரும் இந்நூலில் தேசம் சஞ்சிகையில் இலங்கை முஸ்லீம் கள் பற்றி தமிழ் எழுத்தாளர்களாலும் முஸ்லீம் எழுத்தாளர்களாலும் எழுதப்பட்டுள்ள சில கட்டுரைகளைத் தொகுத்துள்ளேன். இக்கட்டுரைகளில் பெரும்பாலானவை இலங்கை முஸ்லீம்களுக்கான தேசிய வார இதழான நவமணியில் மறுபிரசுரமானவை. இக்கட்டுரைகள் நவமணியில் மறுபிரசுரமான நேரத்தில் நவமணியின் பிரதம ஆசிரியர் அல்ஹாஜ் எம். பி.எம். அஸ்ஹர், அவர்களுடனும் என்னுடனும் பலர் தொடர்புகொண்டு, இக்கட்டுரைகளை தமிழர்கள் தான் எழுதுகிறார்களா? தேசம் முஸ்லீம்களின் சஞ்சிகையா? என்று வினவிய சந்தர்ப்பங்கள் பலவுண்டு. எனவே இலங்கையில் தமிழ் முஸ்லிம் மக்களிடையே இன உறவினை ஏற்படுத்தத் தமிழர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இலங்கையில் வாழும் தமிழர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் தமிழ் ஊடகங்களுக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும்.'

இவ்வேளையில் தேசம் சஞ்சிகை, தமிழ் - முஸ்லீம் இன உறவுகளை வளம்படுத்தும் நோக்கில் லண்டனில் ஒரு கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்திருந்தது. அதில் கலந்துகொள்ளும் வகையில் பி.எம். புன்னியாமீனை லண்டனுக்கு அழைக்க தேசம் ஆசிரியரும் நானும் திட்டமிட்டோம். அதற்கு புன்னியாமீனும் தனது மேலான விருப்பத்தைத் தெரிவித்தார். அத்தோடு தேசம் சஞ்சிகையில் வெளியான முஸ்லீம்கள் பற்றிய கட்டுரை களைத் தொகுத்து ஒரு நூலாகக் கொண்டு வரும் விருப்பத்தையும் அவர் தெரிவித்தார். தேசம் ஜெயபாலன் அதற்கு தனது பூரணவிருப்பத்தைத் தெரிவித்திருந்தார்.

இதன் பின்னணியில் லண்டன் வோல்தம்ஸ்ரோவில் மார்ச் 10, 2007இல் தமிழ் - முஸ்லீம் இனஉறவுகள்தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது. புன்னியாமீனின் லண்டன் மாநாடு பற்றிய செய்திகளைத் தனி நூலாக தான் வெளியிட்ட 'சுவடுகள்' தொகுப்புகளைப் போலவே ஆவணப்படுத்த வேண்டும் என்று புன்னியாமீன் விரும்பியிருந்தார். ஏனோ

அது ஈடேறாமல் போய்விட்டது. புன்னியாமீனின் ஆத்ம திருப்திக்காக அவரது ஆசையை கடுகளவாவது ஒப்பேற்றும் நோக்கில் அதுபற்றிய சில பதிவுகளை இங்கு மேற்கொள்கின்றேன்.

**லண்டன் மாநாடு – சில சுவடுகள்**

லண்டன் வோல்தம்ஸ்ரோவில் மார்ச் 10, 2007இல் தமிழ் முஸ்லீம் இனஉறவுகள் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பி.எம். புன்னியாமீன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். ரி. கொன்ஸ்ரன்ரைன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வு நவாஜோதி ஜோகரட்ணம் அவர்களின் வரவேற்புரையுடன் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் சிறப்புரை வழங்கிய புன்னியாமீன் இலங்கையில் தமிழ் முஸ்லீம் உறவுகள் வளர்க்கப்படுவதன் அவசியத்தையும் அவசரத் தையும் விரிவாக எடுத்து விளக்கினார். தமிழ் - முஸ்லீம் அரசியல் அமைப்புகள் தங்கள் சுய அரசியல் லாபங்களுக்காகவே செயற்படுகின்றன என்று குற்றம்சாட்டிய பி.எம். புன்னியாமீன், தமிழ் - முஸ்லீம் மக்கள் ஒருவரை ஒருவர் தீவிரவாதிகளாகப் பார்ப்பதைத் தவிர்த்து இரு சமூகங்களும் தங்கள் பிள்ளைகளுக்கிடையே நட்புறவையும் ஒருமைப் பாட்டையும் ஊட்டி நம்பிக்கையை வளர்த்தெடுக்கும் வகையில், அந்த இனஉறவுகளை தமது வீட்டில் இருந்தே ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அன்று சிந்தனை வட்டமும் தேசம் சஞ்சிகையும் இணைந்து வெளியிட்ட, கலாபூஷணம் புன்னியாமீன் தொகுத்திருந்த 'தமிழ் முஸ்லிம் இன உறவுகள்' என்ற நூலை ரி. சோதிலிங்கம் ஆய்வு செய்தார். லண்டன் - நியுஹாம் நகர கவுன்சிலர் போல் சத்தியநேசன் அந்த நூலை வெளியிட்டு வைத்தார்.

'வரலாற்று ரீதியாக முஸ்லீம் மக்களின் இருப்பு' என்ற தலைப்பில் மூன்றாவது மனிதன் ஆசிரியர் பௌசர் உரையாற்றினார். அவர் முஸ்லீம்களின் வரலாற்றுப் பின்னணியையும் தமிழ் மொழியை மதிக்கும் அதேசமயம் முஸ்லீம்களின் தனித்துவத்தையும் எடுத்துக் கூறினார்.

சிறிலங்கா முஸ்லீம் போறத்தின் தலைவர் நஜா மொகம்மது 'முஸ்லீம் தேசியவாதமும் முஸ்லீம் மக்களும்' என்ற தலைப்பில் பேசும் போது முஸ்லீம்கள் தனித்துவமான மத அடையாளத்தைக் கொண்ட தனி இனம் என்று குறிப்பிட்டார். தமிழ் மக்கள் இன்ன இன்ன அடையாளங் களைக் கொண்டிருக்க வேண்டும் என்று முஸ்லீம் மக்கள் எப்படிச் சொல்ல முடியாதோ அது போல் முஸ்லீம் மக்கள் இன்ன இன்ன அடையாளங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று எவரும் சொல்ல

முடியாது என்று அவர் தெரிவித்தார். தமிழ் - முஸ்லீம் முரண்பாடுகள் அரசியல் அடிப்படையிலேயே அணுகப்பட வேண்டும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

'தமிழ் தேசியவாதமும் தமிழ் மக்களும்' என்ற தலைப்பில் உரை யாற்றிய சட்டவல்லுனர் சி. ராஜேஸ்குமார் தமிழ் தேசியவாதத்தின் ஆபத்தான போக்கினைச் சுட்டிக்காட்டினார். மேலும் தமிழ் தேசியவாதம் தன்னுள் உள்ள சாதியப் பிரிவுகளை எவ்வாறு அடக்குகிறது என்பதை அவர் விளக்கினார்.

'தமிழ் முஸ்லீம் உறவுக்கான தடைகளும் அதை நீக்குவதற்கான வழிவகைகளும்' என்ற தலைப்பில் பதூர் சமன் தனது சொந்த அனுபவங் களுக்கூடாகப் பேசினார். எஸ்.எஸ்.எம். பாரூக் முஸ்லீம் ஊடகங்களை அறிமுகம் செய்து வைத்ததுடன் இனஉறவுகளை வளர்ப்பதில் ஊடகங் களின் பங்களிப்பை சுட்டிக்காட்டினார். பெரும்பாலும் தமிழ் தேசிய ஊடகங்கள் முஸ்லீம் விரோதப் போக்கைக் கொண்டிருப்பதை சுட்டிக் காட்டிய அவர் முஸ்லீம்களுக்கு எதிராக அநீதிகள் இழைக்கப்பட்ட போது தமிழ் தேசிய ஊடகங்கள் அதற்கு எதிராகக் குரல் எழுப்பவில்லை என்றும் அவை மௌனமாக இருந்ததையும் சுட்டிக்காட்டினார். தமிழ் மக்களுக்கு ஆதரவான முஸ்லீம் குரல்கள் எழுப்பப்பட்டவேளைகளில் அவை மௌனம் காத்ததையும் குறிப்பிட்டார். ஆனால் சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் அவர்கள் முஸ்லீம்களைப் பயங்கரவாதிகளாகக் காட்டத் தவறியதில்லை என்றும் குறிப்பிட்டார்.

சர்வகட்சி மாநாட்டில் முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்டங்கள் சிலவற்றை ஆய்வுசெய்த ஆய்வாளர் வி. சிவலிங்கம் அதிகாரத்தை பகிர்ந்துகொள்வது, அதிகாரத்தை பரவலாக்குவது பற்றி விளக்கமளித்தார். மேலும் அக்காலகட்டத்தில் சர்வகட்சிக்குழுவின் பெரும்பான்மை நிபுணர் குழுவாலும், திரு. விதாரனவாலும் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்டத்தின் அடிப்படையில் ஒரு சமாதானத் தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை அவர் அன்றைய உரையில் வலியுறுத்தினார்.

'இலங்கை இன உறவுகளின் எதிர்காலம்' என்ற தலைப்பில் கல்வியியலாளர் ரவி சுந்தரலிங்கம் பேசும்போது இலங்கையில் தமிழ், சிங்களம் என்ற இரு இனங்களே இருப்பதாகவும் இனங்கள் மதத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட முடியாது என்றும் தெரிவித்தார். பாகிஸ் தானை தோல்வி அடைந்த தேசமாக அவர் காட்டினார். ஒரு இனத்தின் அடிப்படை மொழி என்பதனை முற்றிலும் முரண்பட்ட மார்க்சிய முதலாளித்துவ தத்துவங்கள் குறிப்பிடுவதை அவர் சுட்டிக்காட்டினார். அவர் மேலும் குறிப்பிடுகையில் தமிழ் தேசம் என்பது இருக்கவில்லை என்றும் அது சகல தமிழ் பேசும் மக்களையும் கொண்டு கட்டி எழுப்பப்பட

வேண்டும் என்று ஈரோஸ் அமைப்பே முதன் முதலில் தெரிவித்ததாகவும் அதில் வாழ்பவர்கள் ஈழவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வும் முஸ்லீம்களின் நிலைப்பாடும் என்ற தலைப்பில் பேசிய சட்ட வல்லுனர் எஸ்.எம்.எம். பஸீர் தமிழ் - முஸ்லிம் என்போர் இருவேறுபட்ட இனங்கள் என்பதை ஏற்றுக்கொண்டே வேற்றுமையில் ஒற்றுமைகாண வேண்டும் என்று குறிப்பிட்டார். தந்தை செல்வநாயகம் தமிழ் அரசியல் தலைவர்களில் இருந்து முற்றிலும் வேறுபட்டவர். அவர் அந்நாட்களிலேயே முஸ்லீம்களின் தனித்துவத்தை ஏற்றுக்கொண்டவர். அவரை இப்போதுள்ள தமிழ் தலைவர்களுடன் ஒப்பிடமுடியாது என்று பசீர் ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

கூட்டத்தின் முடிவில் தொகுப்புரை வழங்கிய கலாநிதி எம்.வை.எம். சித்திக் முஸ்லீம்கள் தனியான ஒரு இனம் என்றும் தமிழ் - முஸ்லீம் இனங்களிடையே முதலில் புரிந்துணர்வு ஏற்பட வேண்டும் என்றும் அதனைத் தொடர்ந்தே இன உறவுகள் வளர்த்தெடுக்கப்பட முடியும் என்றும் தெரிவித்தார்.

நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்ட இந்நிகழ்வு குறித்த நேரத்தில் ஆரம்பித்த போதும் சூடான விவாதம் காரணமாக ஒன்றரை மணிநேரம் நீடிக்கப்பட்டது. தொடர்ந்தும் பழையனவற்றை பேசியபடியே இருக்காமல் விடுதலைப் புலிகள் நேசக்கரம் நீட்டுகிறார்கள் அதில் ஒற்றுமைப்பட வேண்டும் என்று சுடரொளி சஞ்சிகையின் ஆசிரியர் ஐ.ரி. சம்பந்தன் தெரிவித்தார். டாக்டர் பாலா, டாக்டர் நீதிராஜா, நேசன் மற்றும் சிலரும் தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.

முஸ்லீம் என்பது மதத்தை அடையாளப்படுத்துவதாகவும் சோனகர் என்பதே தமிழ் மொழி பேசும் முஸ்லீம்களின் இனம் என்றார் நிஸ்தார் மொகமட். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் புவியியில் விரிவுரையாளராகப் பணியாற்றிய ச. முருகையா கருத்துத் தெரிவிக்கையில் தமிழர்கள், முஸ்லீம்கள், மலையகத் தமிழர்கள், சிங்களவர்கள் என்ற நான்கு பிரிவினரையும் உள்ளடக்கிய அரசியல் தீர்வே இலங்கைக்கு அவசியம் எனத் தெரிவித்தார். மலையகத் தமிழர்களும் உள்ளடக்கப்படுவதன் அவசியத்தையும் அவர் அழுத்தமாக வெளிப்படுத்தினார்.

பிரித்தானிய சோசலிஸக் கட்சி உறுப்பினர் சேனன் கருத்துத் தெரிவிக்கையில் பிரித்தானிய அரசின் முஸ்லீம் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு எதிரான போராட்டங்களில் லண்டனிலுள்ள இலங்கைத் தமிழர்கள் யாரும் கலந்துகொள்வதில்லை என்று குற்றம்சாட்டினார். மேலும் ராஜேஸ்குமாரின் பேச்சை ஆதரித்த அவர் தமிழ் தேசிய வாதத்தின் பாசிசப் போக்கு முஸ்லீம் மற்றும் சாதியப் பிரிவினரை ஒடுக்குவதை சுட்டிக்காட்டினார். மேலும் இன உருவாக்கத்திற்கு மொழி அடிப்படை

இல்லை என்று ரவி சுந்தரலிங்கத்தின் கருத்தை மறுத்துரைத்தார். இதே கருத்தை வெளிப்படுத்திய ச. வேலு தமிழகத்தில் ஒரே மொழிபேசும் தமிழர்களிடையே வெவ்வேறு சாதிப்பிரிவுடைய தலைவர்கள் ஒன்று சேர்கிறார்கள். அதன் மூலம் அம்மக்களிடையே உள்ள முரண்பாடுகள் நீக்கப்பட்டுவிடுமா என்று கேள்வி எழுப்பினார்.

கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் இந்நிகழ்வின் இறுதியில் தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றினர். அது வருமாறு:

மூன்று தசாப்தகால யுத்தம் தமிழ் - முஸ்லீம் உறவுகளைப் பாதித்து உள்ளது. இது மேலும் தொடராமல் இருக்க புரிந்துணர்வும் நல்லுறவும் ஏற்படுத்தப்படுவது அவசியம். பல்வேறு சமூக பிரதேச பிரிவு களையும் சமத்துவமாக மதித்து உள்வாங்கி உடனடியாக ஒரு அரசியல் தீர்வை இலங்கை அரசு முன்வைக்க வேண்டும்.

இந்த அரசியல் தீர்வு நிபுணர்களின் பெரும்பான்மை குழுவினதும் விதாரணவினதும் அறிக்கைகளின் அடிப்படையில் அமைய வேண்டும்.

இத்தீர்மானம் கூட்ட இறுதியில் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது. அப்போது சபையில் இருந்தவர்களின் மிகப் பெரும்பான்மையினரால் இது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தமிழ் - முஸ்லீம் இனஉறவுகளை வலுப்படுத்துவதற்கு, அதைப்பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு, அதைப்பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு இச்சந்திப்போ இச்சந்திப்பின்போது வெளியிடப்பட்ட நூலோ உதவுமாக இருந்தால் அது தேசம் சஞ்சிகைக்கும் அதன் வாசகர்களுக்கும் கிடைத்த வெற்றியாக அமையும் எனத் தெரிவித்தார் இந்நிகழ்வை ஏற்பாடு செய்த தேசம் சஞ்சிகையின் ஆசிரியர் த. ஜெயபாலன்.

இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டவர்கள் மத்தியில் மேற் கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பு இங்கு பதிவு செய்யப்படுகின்றது. இது ஒரு பூரணமான கருத்துக் கணிப்பாக அமையாவிடினும் தமிழ் முஸ்லீம் உறவுகள் பற்றிய ஒரு பிரதிபலிப்பாக இதனைக் கொள்ள முடியும். இக்கருத்துக் கணிப்பில் கேட்கப்பட்ட கேள்விகளும் அதற்கு வழங்கப்பட்ட பதில்களின் வீதமும் கீழே பதிவு செய்யப்படுகிறது.

1. தமிழ் முஸ்லீம் உறவுகள் எப்படி உள்ளது என்று நினைக்கிறீர்கள்?

   மிக நன்றாக உள்ளது - 00 %
   நன்றாக உள்ளது - 12 %
   மோசமாக உள்ளது - 56 %
   மிக மோசமாக உள்ளது - 28 %
   தெரியவில்லை - 04 %

02. தமிழ் - முஸ்லீம் உறவுகள் பாதிக்கப்பட்டு உள்ளதாக கருதினால் மட்டும் இக்கேள்விக்கு பதிலளிக்கவும். (இக்கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட காரணிகளுக்கும் நீங்கள் புள்ளியிடலாம்.) தமிழ் - முஸ்லீம் உறவுகள் பாதிக்கப்பட்டு இருப்பதற்கு யார் காரணம் என நீங்கள் நினைக்கிறீர்கள்?

இலங்கை அரசு - 28 %
தமிழ் ஆயுதக் குழுக்கள் - 44 %
முஸ்லீம் கட்சிகள் - 23 %
தெரியவில்லை - 02 %

3. எதிர்காலத்தில் தமிழ் - முஸ்லீம் உறவுகள் எப்படி அமையும் என்று நினைக்கிறீர்கள்?

உறவுகள் விருத்தியடையும் - 54 %
உறவுகள் மோசமடையும் - 30 %
தெரியவில்லை - 16 %

4. எதிர்கால சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லீம்கள் தனித்தரப்பாக கலந்து கொளவதைப் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

முஸ்லீம்கள் தனித்தரப்பு - 74 %
தனித்தரப்பு அவசியம் இல்லை - 22 %
சொல்லத் தெரியவில்லை - 04 %

5. முஸ்லீம்மக்களை தனியொரு இனமாகக் கருதுகிறீர்களா?

ஆம் - 72 %
இல்லை - 28 %
தெரியவில்லை - 00 %

6. மலையகத் தமிழர்களை தனியொரு இனமாகக் கருதுகிறீர்களா?

ஆம் - 60 %
இல்லை - 38 %
தெரியவில்லை - 02 %

7. இலங்கையில் இன ஐக்கியத்திற்கான வாய்ப்புகள் உள்ளது என நினைக்கிறீர்களா?

ஆம் - 68 %
இல்லை - 22 %
தெரியவில்லை - 10 %

8. இலங்கை இனப்பிரச்சினை அடுத்த 5 ஆண்டுகளுக்குள் தீரும் என நினைக்கிறீர்களா?

ஆம் - 30 %
இல்லை - 54 %
தெரியவில்லை - 16 %

9. அண்மைய எதிர்காலத்தில் தமிழீழம் சாத்தியம் என நினைக்கிறீர்களா?

ஆம் - 02 %
இல்லை - 90 %
தெரியவில்லை - 08 %

10. நீங்கள் எந்த மதத்தை பின்பற்றுகிறீர்கள்:

இந்து - 38 %
இஸ்லாம் - 14 %
கிறிஸ்தவம் - 08 %
மதநம்பிக்கையில்லை - 40 %

இதனை மத அடிப்படையில் ஆராயும் போது முஸ்லீம்கள் தனித்து வமான இனம், அவர்கள் தனித்தரப்பாக பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள வேண்டும் என முஸ்லீம்கள் நூறுவீதம் உடன்பட்டுள்ளனர். இவர்களில் 85 வீதத்தினர் மலையகத் தமிழர்களும் தனித்துவமான இனம் எனக் கருதுகின்றனர். கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை 50 வீதமானவர்களே முஸ்லீம்களை தனித்துவமான இனம் எனவும் அவர்கள் பேச்சுவார்த்தைகளில் தனித்தரப்பாக கலந்துகொள்ள வேண்டும் எனவும் கருதுகின்றனர். ஆனால் மலையகத் தமிழர்கள் தனித்துவமான இனம் அல்ல என்று கிறிஸ்தவர்கள் 100 வீதம் கருதுகின்றனர்.

இந்துக்களில் 80 வீதத்தினர் முஸ்லீம்களை தனித்துவமான இனமாகக் கருதுகின்றனர். ஆனால் 68 வீதமான இந்துக்களே முஸ்லீம்கள் பேச்சு வார்த்தைகளில் தனித்தரப்பாக கலந்துகொள்ள வேண்டும் என்று கருதுகின்றனர். ஆனால் மத நம்பிக்கை அற்றவர்களில் 60 வீதமானவர்கள் மட்டுமே முஸ்லீம்களை தனித்துவமான இனமாகக் கருதுகின்றனர். மதநம்பிக்கை அற்றோரில் 75 வீதமானவர்கள் பேச்சு வார்த்தைகளில் முஸ்லீம்கள் தனித்தரப்பாக கலந்துகொள்ள வேண்டும் என்று கருது கின்றனர். 68 வீதமான இந்துக்கள் மலையகத் தமிழர்களை தனித்துவமான இனமாகக் கருதுகின்றனர். ஆனால் மத நம்பிக்கை அற்றவர்களில் 55 வீதத்தினரே மலையகத் தமிழர்களை தனித்துவமாகக் கருதுகின்றனர்.

பி.எம். புன்னியாமீன் புலம்பெயர் எழுத்தாளர்களைச் சந்திக்கின்ற நிகழ்வு ஒன்று மார்ச் 16, 2007இல் லங்குறோப் ஹோட்டலில் இடம்பெற்றது.

தமிழ், முஸ்லிம் எழுத்தாளர்கள் பலர் விருந்துபசாரத்துடன் புன்னியாமீனைச் சந்திக்கும் வகையில் இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

அதற்கு மறுநாள் மார்ச் 17இல் Tamil Relief Centre ஏற்பாடு செய்த சந்திப்பில் கலந்துகொண்ட புன்னியாமீன் 'வெளியீட்டு முயற்சிகளும் புலம்பெயர் நாடுகளில் தமிழும்' என்ற தலைப்பில் உரையாற்றினார். அப்போது புலம்பெயர் நாடுகளில் தமிழ் மொழியை வாழவைப்பதற்கு இங்குள்ள பெற்றோரின் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். இன்னும் சிலரும் இச்சந்திப்பில் உரையாற்றினர்.

மார்ச் 18இல் வித்துவான் வேலன் இலக்கிய வட்டத்தினருடன் தமிழ் இலக்கியம் பற்றி புன்னியாமீன் கலந்துரையாடினார்.

**புன்னியாமீன் தேசம் சஞ்சிகையில் பங்களிப்பு**

லண்டனில் நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்கு வசதியாக புன்னியாமீன் அந்நாட்களில் தேசம் ஜெயபாலன் குடும்பத்தினருடன் லண்டன், வொல்த்தம்ஸ்ரோவில் சில நாட்கள் தங்கி இருந்தார். இது அவர்களிடையேயான நெருக்கத்தை மேலும் வலுப்படுத்தியது. இதன் பின்னர் நீண்டகாலம் தேசம் இணையச் சஞ்சிகையில் பி.எம். புன்னியாமீன் கட்டுரையாளராக, செய்தியாளராக இருந்து அதன் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு நல்கினார். தேசம் சஞ்சிகையை இலங்கையில் பதிவு செய்து இலங்கையிலேயே வெளியிடுவதற்கான முயற்சியிலும் அவர் ஈடுபட்டு இருந்தவேளையில் அவர் சுகவீனமுற்று பின் எம்மைவிட்டு பிரிந்து சென்றுவிட்டார். அம்முயற்சி கைகூடி இருந்தால் தேசம் சஞ்சிகை யின் உத்தியோகபூர்வ ஆசிரியராக பி.எம். புன்னியாமீனே இன்றளவில் இருந்திருப்பார். அதனை அவர் பெருவிருப்புடன் ஏற்றுக்கொண்டிருந்தார். தேசம் தோளோடு தோள் கொடுக்கும் நல்லதொரு நண்பனை இன்று இழந்து நிற்கின்றது.

பி.எம்.புன்னியாமீன் சொல்வதை செயலில் செய்து முடிக்கின்ற திறமை வாய்ந்த மனிதர். தமிழ் - முஸ்லீம் இனஉறவுகள் வலுப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவசரத்தையும் வலியுறுத்திய அவர் அதனை செயலிலும் காட்டினார். அதற்கு புனர்வாழ்வு முகாமில் மேற்கொள்ளப்பட்ட கல்வித் திட்டமே சிறந்த எடுத்துக்காட்டு.

**புன்னியாமீனின் புனர்வாழ்வு முகாம் புலமைப் பரிசில்**

வன்னிப் பிரதேசம் யுத்தத்தினால் பாதிப்படைந்து, இறுதியில் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டு வன்னி மக்கள் புனர்வாழ்வு முகாம்களில் அடைக்கப்பட்ட வேளையில் உலகத் தமிழர்களிடமிருந்து பல்வேறு குரல்கள் எழுந்தன. இவை பெரும்பாலும் அரசியல்ரீதியான குரல்களாகவே அமைந்திருந்தன.

இந்நிலையில் அந்தத் தடுப்புமுகாம்களுக்குள் அடைக்கப்பட்ட சிறுவர்கள் பற்றிய கரிசனையை அதிகமாக வெளிக்காட்டியவர் புன்னியாமீன் அவர்களாவார். வவுனியா நலன்புரி நிலையங்களில் அடைக்கப்பட்டு தமிழ்ச்சிறார்கள் கல்வி வாய்ப்பை இழந்திருந்தனர். கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, பூநகரி, கண்டாவளை ஆகிய கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த அனைத்துப் பாடசாலை மாணவர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களும், துணுக்காய் கல்வி வலயத்தைச் சேர்ந்த துணுக்காய், ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு ஆகிய கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மணவர்களும் பாதிக்கப்பட்டிருந்தமையை புன்னியாமீன் அடையாளம் கண்டு எமக்குத் தெரிவித்திருந்தார். 31.7.2009 திகதியிட்ட அரச அறிக்கையொன்றின்படி வவுனியாவில் 59,727 மாணவர்கள் இருப்பதான அதிர்ச்சித் தகவலை எமக்கு அவர் தெரிவித்தார். நிர்வாக நோக்கங்களுக்காகப் பிரிக்கப்பட்ட ஆறு வலயங்களிலும் (0-5) சுமதிபுரம் நிவாரண முகாம், வீரபுரம் நிவாரண முகாம், தர்மபுரம் நிவாரண முகாம் ஆகியவற்றிலுமே இந்த 59,727 மாணவர்களும் அடைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கான கல்வி வசதிபற்றியே அக்கால கட்டத்தில் தேசம் - இணையச் சஞ்சிகை ஆசிரியர் ஜெயபாலனுடனும் என்னுடனும் புன்னியாமீன் அடிக்கடி தகவல்களைப் பகிர்ந்துகொள்வதுண்டு. இவர் களுக்கு நாம் ஏதாவது செய்தாகவேண்டும் என்ற வலியுறுத்தல் அவரது உரையாடல்களில் எப்போதும் அழுத்தமாக இருந்துவந்தது.

இந்த நலன்புரி நிலையங்களில் அரசினாலும் சமூகசேவை நிறுவனங்களாலும் அமைக்கப்பட்ட தற்காலிக பாடசாலைகள் 53 இருந்தன. நலன்புரி நிலையப் பாடசாலைகளில் அடிப்படை வசதிகளே இல்லாத நிலையில் மர நிழல்களில் பாடம் நடத்தும் நிலையில் அவர் களுக்கான புலமைப்பரிசில் பற்றி யாராவது பேசுவார்களா? புன்னியாமீன் பேசினார்!

உள்நாட்டு யுத்தத்தினால் ஏற்பட்ட மனித அவலம் வன்னி மக்களை நீண்ட துயர்மிகு வாழ்விற்குள் தள்ளியுள்ளது. இளம்தலைமுறை மாணவர் சமூகம் காணாமல் போய்விட்டது. அன்புக்குரியவர்களை இழந்தவர்களும் அங்கங்களை இழந்தவர்களுமாக வாழ்வாதாரங்களை இழந்துள்ள மக்களுக்கு பல்வேறு வகையிலும் கைகொடுக்க வேண்டிய கடமைப்பாடு புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு உள்ளது. இது உடனடியான நாளாந்த வாழ்வியல் தேவைகளுடன் மட்டுப்படுத்தப்படாமல் கல்விவளத் தேவைகளை நீண்டகால நோக்கில் மேற்கொள்ளப்படுவதும் அவசியம்.

இந்நிலையில் 2009 ஏப்ரல் 4இல் வன்னிப் பகுதி வலயக் கல்விப் பணிப்பாளர் த. மேகநாதன், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்ற

இருக்கும் 1057 மாணவர்கள் (மார்ச் இறுதிப்பகுதி புள்ளிவிபரம்) இடம்பெயர்ந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட 13 நலன்புரி முகாம்களில் இருப்பதாகவும் அவர்களுக்கான பாட நூல்களை வழங்கி உதவுமாறும் புன்னியாமீன் ஊடாக தேசம்நெற்றைக் கேட்டுக்கொண்டார்.

புலம்பெயர்ந்து வாழும் நாம் அவர்கள் எதிர்கொள்ளும் மிகத்துயரமான வாழ்வை எண்ணி வேதனைப்படுகின்றோம். சிலசமயம் குற்ற உணர்வுக்கும் உள்ளாகிறோம். அக்குற்ற உணர்வில் இருந்து எம்மை சற்று விடுவித்துக் கொள்ள அவர்களுக்கு ஆறுதலாக இருக்க நினைக்கின்றோம். அந்த வகையில் சிறுவர் சிறுமியராகிய அவர்கள் எதிர்கொள்ள இருக்கும் புலமைப் பரிசில் பரீட்சைக்கு படிப்பதற்கு உதவும் வகையில் இப்பாட நூல்களை மாணவர்களுக்கு வழங்கும் பொறுப்பை தேசம்நெற் ஆசிரியர் குழு ஏற்றுக்கொள்வதாக தேசம் ஜெயபாலன் புன்னியாமீனுக்கு உறுதிவழங்கி அதற்கான நிதியையும் அனுப்பி வைத்தார்.

வன்னி யுத்தத்தின்போது இடம்பெயர்ந்து நலன்புரிநிலையங்களில் தரம் 05இல் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை (எதிர்பார்க்கப்பட்டது போல்) 3815ஆல் உயர்ந்திருந்தது. நலன்புரிநிலையங்களில் அமைக்கப் பட்டிருந்த 53 பாடசாலைகளில் இம்மாணவர்கள் பயின்றுவந்தனர். நலன்புரிநிலைய பாடசாலை இணைப்பாளரும், கல்வி அதிகாரியுமான திரு.த. மேகநாதன் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க புதிதாக நலன்புரிநிலையங்களில் இணைந்த 3815 மாணவர்களுக்கும் உதவிகளை வழங்க தேசம்நெற், சிந்தனைவட்டம், மத்திய இலங்கை முஸ்லிம் பட்டதாரிகள் ஒன்றியம், ஐக்கிய இராச்சியத்தில் அகிலன் பவுண்டேசன் போன்ற நிறுவனங்களும் மேலும் சில பரோபகாரிகளும் முன்வந்தனர். புதிதாக இடம்பெயர்ந்த மாணவர்களுக்கும் தனித்தனியே 04 வழிகாட்டி நூல்களையும், 30 மாதிரிவினாப்பத்திரங்களையும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கையில் ஆண்டு 5க்கான புலமைப்பரிசில் பரீட்சை ஒவ்வொரு பெற்றோருக்கும் முக்கியமானது. ஒரு பிள்ளையின் முதலாவது அரசாங்க பொதுப்பரீட்சையும் போட்டிப் பரீட்சையும் இதுவாகும். இதில் சித்தியெய்தும் மாணவருக்கு உயர்தரக் கல்வி வரை கற்பதற்காக அரசாங்கம் ஆண்டு தோறும் 5000 ரூபாய் பெறுமதியான புலமைப்பரிசில் பணத்தை வழங்கி வருகின்றது.

இதனால் இப்பரீட்சையால் அதிகமான பெற்றோர் கவரப்பட்டு அதற்காகத் தமது பிள்ளைகளை மேலதிக வகுப்புகளுக்கும் தனியார் கல்வி நிலையங்களுக்கும் அனுப்பிப் படாதபாடுபடுகின்றனர். நலன்புரி நிலையங்களில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும்

வயதில் இருந்த அந்த 4872 மாணவர்களின் பெற்றோருக்கும் இந்த வாய்ப்பு கிடைக்க வழிசெய்தவர் புன்னியாமீன் அவர்களே.

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றத் தயாராகும் ஒவ்வொரு மாணவனுக்கும் ரூபா 570 பெறுமதியான 30 மாதிரி வினாத்தாள்களையும், 4 வழிகாட்டி நூல்களையும் தயாரித்து வழங்குவதற்கு இருபத்தியேழு லட்சத்து எழுபத்தேழாயிரம் ரூபா (27,77,000) தேவையென்று புன்னியாமீன் கணக்கிட்டார். தமது பங்கிற்கு சிந்தனை வட்டத்தின் அச்சீட்டுச் செலவின் ஒரு பங்கினையும் பொறுப்பேற்பதாகத் தெரிவித்தார். அதன்படி 7 லட்சம் ரூபாயை மத்திய இலங்கை முஸ்லிம் பட்டதாரிகள் ஒன்றியம் வழங்கி யிருந்தது. எஞ்சிய பணத்தொகையை ஈடுசெய்யும் வகையில் லண்டன் நிறுவனங்களும், சில தனிப்பட்ட நபர்களுமாக லண்டனிலிருந்த வழங்கி இத்திட்டத்தை புன்னியாமீன் மூலம் செயற்படுத்தினோம். இத்திட்டம் 28.4.2009இல் தொடங்கி 10.8.2009இல் வெற்றிகரமாக நிறைவடைந்தது. 117 புத்தகப்பொதிகளில் 1915 கிலோ எடையுள்ள நூல்கள் புகையிரத மார்க்கமாக இக்காலப்பகுதியில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இதற்கான அனுப்பும் செலவையும் புன்னியாமீனே ஏற்றுக்கொண்டதாகப் பின்னர் அறிந்தேன்.

இத்திட்டத்திற்கு மேலதிகமாக தரம் 6 முதல் 11 வரையுள்ள மாணவர்களின் நலன் கருதி சிந்தனை வட்டத்தின் உப பாடநூல்களில் 62 நூல்களில் மொத்தம் 247 பிரதிகளை புன்னியாமீன் தனது தனிப்பட்ட செலவில் புனர்வாழ்வு முகாம்களுக்கு 28.4.2009-31.7.2009 காலகட்டத்தில் அனுப்பிவைத்திருந்தார். புன்னியாமீனின் இத்திட்டத்திற்கு வவுனியா மாவட்டத்திலுள்ள நலன்புரி நிலையப் பாடசாலைகளின் உத்தியோகபூர்வ இணைப்பாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான திரு.த. மேகநாதன் அவர்கள் பூரண ஒத்துழைப்பினை வழங்கியிருந்தார். இரண்டு கட்டமாகச் செயற்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்தில் முதற் கட்டத்தில் 2009 ஏப்ரல் முன்னரைப் பகுதியில் 1057 மாணவர்களும், ஏப்ரல் மாத இறுதிப் பகுதியில் 3815 மாணவர்களுமாக மொத்தம் 4872 மாணவர்கள் பயனடைந் திருக்கிறார்கள்.

அவ்வாண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் புனர்வாழ்வு முகாமிலிருந்து 507 மாணவர்கள் சித்தியடைந்திருந்தார்கள். புன்னியாமீன் இரவுபகல் பாராது கண் துஞ்சாது, தன் உடல்நலத்தையும் ஒரு பொருட்டாக மதியாது மேற்கொண்ட இம்முயற்சிக்கு கிடைத்த வெற்றி இதுவாகும். 507 மாணவர்களின் வாழ்வில் நம்பிக்கை ஒளியேற்றிவைப்பதற்காக புன்னியாமீன் இதயசுத்தியோடு நடத்திய யாகத்தை, அவர் அனுபவித்த வலிகளை பலரும் அறிந்திருக்கமாட்டார்கள் என்றே கருதுகின்றேன். ஏன் இந்த 507 மாணவர்களோ அவர்களது பெற்றோர்களோ கூட

அறிந்திருக்க வாய்ப்பில்லை. விளம்பரமற்ற சேவை அவருடையது. என்னைப்பற்றி அவர் எழுதிய ஒரு கட்டுரையில் 'மேகத்துள் மறைந்தியங்கும் சூரியனாய்...', 'மௌனமாய்ப் பெய்யும் மாமழை..' ஆகிய இரு சொற் பிரயோகங்களை என்னைக் குறிப்பிடப் பயன்படுத்தியிருந்தார். உண்மையில் அவை புன்னியாமீனுக்கே உரியவை. இத்திட்டத்தின் படி அவ்வாண்டு புலமைப்பரிசில் பரீட்சை எழுதிய புனர்வாழ்வு முகாம்களில் தங்கியிருந்த முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 196 மாணவர்களும், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 267 மாணவர்களும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 27 மாணவர்களும் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த 7 மாணவர்களும், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 10 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.

புன்னியாமீனின் ஆண்டு ஐந்துக்கான புலமைப்பரிசில் செயற்திட்டம் வெற்றியளித்தது போலவே வன்னி முகாம்களிலுள்ள க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கான அவரது கல்வி நிவாரண செயற்திட்டமும் 2009இல் எம்மிடம் முன்வைக்கப்பட்டது.

இவ்விடத்தில் சில உண்மைகளை வெளிப்படையாக குறிப்பிட வேண்டிய ஒரு கடப்பாடு உண்டு. இத்திட்டத்தை மூலமாக முன்னெடுத்த சிந்தனைவட்டம் அமைப்போ தேசம்நெற் அமைப்போ பாரியளவில் நிதியினைக் கொண்டுள்ள நிறுவனங்களல்ல. இதனால் எமது திட்டத்தை நடைமுறைப்படுத்த சில பரோபகாரிகளின் உதவியைப் பெற வேண்டிய நிலையிலேயே எமது முழுமையான திட்டத்தை அவர்களிடம் வழங்கி உதவிகள் கோரினோம். கிட்டத்தட்ட எமது முழுமையான செயற்றிட்டத்தை நிறைவேற்ற எமக்கு சுமார் 30 ஆயிரம் பவுண்கள் தேவைப்பட்டன. கிட்டத்தட்ட ஒரு மாணவனுக்கு 5 பவுண்களுக்குட்பட்ட ஒரு தொகையை ஒதுக்கீடு செய்வதை அடிப்படையாகக் கொண்டு மேற்படி திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்திருந்தோம். ஒரு மாணவனுக்கு நாம் ஒதுக்கிய 5 பவுண்களிலிருந்தே 30 மாதிரி வினாத்தாள்களையும் 5 அரசாங்க வினாத்தாள்களையும் 42 வழிகாட்டி குறிப்பேடுகளையும் வழங்க தீர்மானித்திருந்தோம். ஆனால் அத்தொகையை எம்மால் திரட்ட முடியவில்லை. அதனால் அத்திட்டத்தை எமக்கு கிடைத்த உதவித் தொகைக்கு அமைய சுருக்கிக் கொள்ளுமாறு தேசம் ஜெயபாலன் புன்னியாமீனைக் கேட்டுக்கொண்டார். அதற்கமைய அத்திட்டம் சிறிய அளவில் மேற்கொள்ளப்பட்டது.

இக்கல்வி நிவாரணசெயற்திட்டத்தின் கீழ் கணிதம், வரலாறு, தமிழ்மொழியும் இலக்கியமும், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய ஐந்து பாடங்களுக்குமான ஆறு மாதிரி வினாத்தாள்களை உள்ளடக்கி, 2009 டிசம்பர் மாதம் க.பொ.த. பரீட்சைக்குத் தோற்றவிருந்த புனர்வாழ்வு

நிலையங்களில் இருந்த 6290 மாணவர்களுக்கு வழங்கி இத்திட்டத்தை 21.11.2009இல் நிறைவு செய்திருந்தார். இதற்காக லண்டனிலிருந்து தேசம் நெற். அகிலன் பவுண்டேஷன், கரன் சேர்விஸ் ஸ்டேஷன், திரு பொன் சிவசுப்பிரமணியம் ஆகியோர் இணைந்து 2000 பவுண்களையும், கனடாவிலிருந்து பதினொரு பரோபகாரிகள் இணைந்து 1180 கனேடிய டொலர்களையும் (680 பவுண்கள்) புன்னியாமீனுக்கு அனுப்பியிருந்தார்கள். இப்பணத்தொகையை பயன்படுத்தி புன்னியாமீன் 6290 மாணவர்களுக்கு ஆறு மாதிரி வினாத்தாள்களையும் வழிகாட்டிக் குறிப்புகளையும் மொத்தம் 761 கிலோ எடைகொண்ட 40 பெட்டிகளில் அனுப்பிவைத்திருந்தார்.

இதில் துர்அதிர்ஷ்டவசமான விடயம் என்னவெனில், இலங்கையில் கல்விசார் சமூகத்தைச் சேர்ந்த எவரும் புன்னியாமீனுக்கு இத்திட்டத்தில் உதவ முன்வரவில்லை என்பதுதான். இது எமது சமூகவியலாளர்கள் தீவிரமாக ஆய்வுக்குட்படுத்தவேண்டிய ஒரு உளவியல் கேள்வியாகும்.

வன்னி அகதி முகாம்களிலுள்ள மாணவர்களுக்கு மாதிரி வினாத் தாள்கள் வழிகாட்டிக் குறிப்பேடுகள் தயாரித்துத் தரக்கூடிய கல்வியியலாளர் களிடம் உதவியைக் கோரி (பண உதவியல்ல) மொத்தம் 1782 பாடசாலைகளுக்கு தனிப்பட்ட முறையில் புன்னியாமீன் கடிதங்களை அனுப்பி வைத்தார்.

அக்கடிதங்களை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 415 பாடசாலைகளுக்கும், இலங்கையில் சகல மாவட்டங்களைச் சேர்த்து தமிழ் பாடசாலைகளுக்கும், கண்டியிலும் கொழும்பிலும் பிரபல்யம் மிக்க தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்களுக்கும் அனுப்பி வைத்திருந்தார். ஆனால், வேதனைக்குரிய விடயம் என்னவென்றால் ஒரு பாடசாலையிலிருந்தாவது அல்லது தனியார் கல்வி நிறுவன ஆசிரியரிடமிருந்தாவது அவருக்கு ஒரு பதிலாவது வரவில்லை. இதனால் பேராதனைப் பல்கலைக்கழக மற்றும் கண்டி பிரதேச புகழ்பெற்ற ஆசிரியர்களிடமிருந்து மாதிரி வினாத்தாள்களையும், வழிகாட்டிக் குறிப்பேடுகளையும் விலைகொடுத்துப் பெற்றுக் கொண்டே இந்த உதவித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளை சிந்தனைவட்டமே பொறுப்பேற்றுக் கொண்டது.

இந்தச் சம்பவத்தினை விளக்கி தேசம் இணையத்தில் புன்னியாமீன் எழுதிய ஒரு கட்டுரையிலும், கல்வி நிவாரண செயற்திட்டம் தொடர்பாக அவர் தயாரித்து நூலுருவில் வெளியிட்ட செயற்றிட்ட அறிக்கையிலும் விபரமாகப் பதிவுசெய்துள்ளார்.

'இச்சம்பவத்தை வைத்து நோக்கும்போது வன்னி முகாம்களிலுள்ள மாணவர்களின் கல்வி நிலை தொடர்பாக இலங்கையைச் சேர்ந்த



எம்மவர்கள் கதைப்பதன் அர்த்தத்தை எம்மால் உணர்ந்துகொள்ள முடியவில்லை என்றும், விசேடமாக பண உதவியெதுவும் கேளாமல், அவர்கள் ஏற்கனவே தயாரித்துப் பயன்படுத்திவந்த மாதிரி வினாத்தாள்கள் வழிகாட்டிக் குறிப்பேடுகளையும்கூட தருவதற்கு இவர்கள் முன்வராமை இவ்விடத்தில் சிந்திக்க வேண்டிய ஒரு விடயமே' என புன்னியாமீன் தேசம்நெற் இல் டிசம்பர் 01, 2009இல் எழுதிய கட்டுரையில் வேதனையுடன் சுட்டிக்காட்டி இருந்தார்.

நாம் வழங்கிய மாதிரி வினாத்தாள்களை பின்வரும் பெருந்தகைகள் எமக்குத் தயாரித்துத் தந்தனர்.

ஜனாப் யூ.எல்.எம். பஷீர் - வரலாறு ஆசிரிய ஆலோசகர்
திருமதி.மஸீதா புன்னியாமீன் - பயிற்றப்பட்ட கணித, விஞ்ஞான ஆசிரியர்
ஜனாப் ஏ.எம். பாயிஸ் - பயிற்றப்பட்ட கணித ஆசிரியர்
செல்வி. தஸ்மின் ரியால் - தமிழ் பட்டதாரி ஆசிரியர்
வத்தேகம கல்வி வலய பரீட்சைப் பிரிவு

இது எல்லாவற்றிலும் மிக முக்கியமானது என்னவெனில், தான் செய்த ஒவ்வொரு வேலைத்திட்டத்தையும் முறையாகப் பதிவு செய்து அதற்காகப் பெறப்பட்ட நிதி மற்றும் செலவீனங்களை முழுமையாகப் பதிவு செய்து திட்ட முடிவில் ஒரு தனி நூலாக முழுமையான அறிக்கை

யையும் ஆதாரங்களையும் புன்னியாமீன் அனுப்பி வைப்பார். அது என்னை பல நேரங்களில் மெய்சிலிர்க்க வைத்துள்ளது. இவ்வாறான நல்ல மனிதர்கள் இன்னும் பல காலம் வாழ்ந்திருந்தால் இன்னும் பல சேவைகளை மக்களுக்கு வழங்கி இருக்க முடியும்.

இவ்விடத்தில் புன்னியாமீன் உடைய நட்பினூடாக அறியப்பட்ட மத்திய இலங்கை முஸ்லிம் பட்டதாரிகள் ஒன்றிய செயலாளர் ஜனாப் ஏ.எம். வைஸ் பற்றி ஒரு சில வார்த்தைகள் குறிப்பிடுவது அவசியம். 'மானுடம் என்று பார்க்கும்போது இனம், மதம் இரண்டாம் பட்சமே. வன்னி மாவட்டத்திலிருந்து பாதிக்கப்பட்டு வந்துள்ள அனைவரும் மானுடப் பிறவிகளே. எங்களைப் போலவே ஆசாபாசமுள்ள அவர்களது உணர்வுகளை நாங்கள் மதிக்க வேண்டும்' என்று யுத்தத்தால் பாதிக்கப் பட்ட வன்னி மக்களுக்கு உதவ வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தி இருந்தது மட்டுமல்ல 5ஆம் தர புலமைப்பரிசில் திட்டத்திற்கு 7 இலட்சம் ரூபாய் நிதியையும் தனது அமைப்பின் சார்பில் கையளித்து இருந்தார். ஆபத்தில், நிர்க்கதியில் நின்றிருந்த போது கைகொடுத்த இந்த சகோதரத்துவம் தான் தமிழ் - முஸ்லீம் இன உறவை வளர்த் தெடுக்கும். புன்னியாமீன் எம்மைப் பிரிந்தாலும் அவர் ஏற்படுத்திச் சென்றுள்ள உறவுப்பாலம் இந்த இரு சமூகங்களுக்கு இடையேயும் நிரந்தரமானதாக்க நாம் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும்.

*மாண்டவர் சுவாசங்கள் காற்றுடன் சேர்க*  
*தூயவர் கண்ணொளி சூரியன் சேர்க*  
*பூதங்கள் ஐந்திலும் பொன்னுடல் சேர்க*  
*போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க.*

# 8

# புன்னியாமீன் எழுதிய நூல்கள்: ஒரு நூல்விபரப்பட்டியல்

(வெளியீட்டாளர் விபரம் குறிப்பிட்டாலன்றி அனைத்து நூல்களும் சிந்தனை வட்டம் வெளியீட்டுப் பிரிவினரால் வெளியிடப்பட்டவையாகும். இணையாசிரியர் விபரம் தரப்பட்டாலன்றி அனைத்து நூல்களும் பீ.எம்.புன்னியாமீன் அவர்களால் எழுதப்பட்டவையாகும்.)

## 1979

***தேவைகள்: மினிக் கதைகள்,*** தலவின்னையூர் புன்னியாமீன் (இயற்பெயர்: பீ.எம். புன்னியாமீன்). கட்டுகஸ்தோட்டை: இஸ்லாமிய சேமநலச் சங்கம், 1வது பதிப்பு, நவம்பர் 1979. viii, 72 பக்கம், விலை: ரூபா 3.90, அளவு: 18x12.5 சமீ.

(தனது 19 வயதை பூர்த்தியாக்குவதற்குள் படைப்பாளியாகிவிட்ட பீ.எம்.புன்னியாமீன் பிரசுரித்த முதலாவது நூல். தினகரன் மூலம் எழுத்துலகில் அறிமுகமான இவர், மலையகத்தின் பல்வேறு சமூக இயக்கங்களிலும் பொறுப்புவாய்ந்த பதவிகளை வகித்தவர். தினகரனில் வெளியான 5 மினிக் கதைகளையும், ஏனைய ஒன்பது புதிய கதைகளையும் உள்ளடக்கிய ஒரு தொகுப்பாக இந்நூல் மலர்ந்துள்ளது. ஆண் - பெண் திருமணம் தொடர்பான எட்டு கதைகளும், மலையகத் தொழிலாளர் பிரச்சினைகளையும், சமூகப் பிறழ்வுகளையும் கருவாகக் கொண்ட 6 கதைகளுமாக மொத்தம் 14 கதைகளும் விறுவிறுப்பானவையாக அமைந்துள்ளன.)

## 1986

***நிழலின் அருமை,*** கண்டி: தமிழ் மன்றம், கல்ஹின்ன, 1வது பதிப்பு, மார்ச் 1986. 76 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 18x12.5 சமீ.

(இலங்கை இந்திய வெகுசன தொடர்பு சாதனங்களில் வெளியான ஒன்பது சிறுகதைகள் இதில் அடங்கியுள்ளன. தான் வாழும் சமூகத்தைப் பற்றிய உணர்வுகளின் வெளிப்பாடாக அமைந்துள்ள இக்கதைகளில் எளியநடையும் நிதானமான போக்கும் இழையோடும் கதையமைப்பு காணப்படுகின்றது.)

## 1987

***அடிவானத்து ஒளிர்வுகள்,*** 1வது பதிப்பு, ஒக்டோபர் 1987. xii, 210 பக்கம், விலை: இந்திய ரூபா 25., அளவு: 18x12.5 சமீ.

(கிராம எழுச்சிக்கு வழிகாட்டும் வகையில், தனது சமூகசேவை அனுபவங்களைப் பின்னணியாக வைத்து உருவாக்கப்பட்ட நாவல் இது. ஒரு நாட்டின் இதயம் கிராமம் என்பதை துல்லியமாக, மலையகக் கிராமமொன்றின் பகைப்புலத்தில் நின்று நாவலாக்கியிருக்கிறார். இலங்கை முஸ்லிம்களின் அரசியல் பிரச்சினையை மையப்படுத்திய ஆரம்பகால முன்னோடி நாவல்களில் ஒன்று இது. இலங்கை முஸ்லீம்களுக்கு தனி அரசியல்கட்சி தேவை என்ற கருத்தை இந்நாவல் எழுதப்பட்ட 1983இல் வலியுறுத்தியுள்ளமையும், மாகாண அலகுகளின் அறிமுகம் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அவசியம் என்பதையும் நாவலில் எடுத்துக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. 1983இல் எழுதப்பட்ட இந்நாவல் 1987இல் நூலுரு வாகியுள்ளது. (இந்தோ - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் 1987இல் மாகாணசபை உருவாகியதும், இலங்கையில் முதலாவது முஸ்லிம் அரசியல் கட்சி 1988இல் உருவாக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது).

***இலக்கிய உலா.*** சென்னை 600001: மில்லத் பப்ளிகேஷன்ஸ், 16, அப்பு மேஸ்திரி தெரு, 1வது பதிப்பு, மே 1987. 148 பக்கம், புகைப்படங்கள், விலை: இந்திய ரூபா 20., அளவு: 18x12.5 சமீ.

(கல்ஹின்ன தமிழ்மன்றம் என்ற நூல் வெளியீட்டகத்தின் ஸ்தாபகர் S.M. ஹனிபா அவர்களது வாழ்க்கை வரலாறு, மற்றும் அவரது நூல்கள் பற்றிய ஓர் ஆய்வு இங்கு இலக்கிய நயத்துடன் சொல்லப்படுகின்றது.)

***இலக்கிய விருந்து.*** கண்டி: தமிழ் மன்றம், கல்ஹின்ன, 1வது பதிப்பு, 1987. (சென்னை: பசுங்கதிர் பதிப்பகம், 43, முத்துமாரி வீதி). 96 பக்கம். விலை: இந்திய ரூபா 6., அளவு: 18x12 சமீ.

(கண்டி தமிழ் மன்றம் வெளியிட்ட 30 நூல்கள் பற்றிய இவ் விபரப்பட்டியலில், நூலின் பௌதிக விபரங்களும் நூலின் உள்ளடக்கம் பற்றிய சுருக்கக் குறிப்பும் தரப்பட்டுள்ளன. அடுத்து வெளிவரவிருந்த ஆறு நூல்கள் பற்றிய முன்னோடித் தகவல் குறிப்பும் உள்ளது.)

## 1988

***கிராமத்தில் ஒரு தீபம்,*** உடத்தலவின்னை: ஜமா அத்தார் சங்க பொன்விழா வைபவக் குழு, உடத்தலவின்ன மடிகே, 1வது பதிப்பு, நவம்பர் 1988. 80 பக்கம், விலை: ரூபா 6., அளவு: 18x11 சமீ.

(உடத்தலவின்ன மடிகே கிராமத்தில் கதீபாக (கிராமிய மார்க்கத் தலைவர்) ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றும் எம். வை.அப்துல் ஹமீட் அவர்களது வாழ்க்கை வரலாறு. அவர் நிறுவிய உடத்தலவின்ன மடிகே கிராமத்தின் ஜமா அத்தார் சங்கத்தின் வரலாற்றையும் இந்நூல் பதிவு செய்கின்றது. கிராமிய மார்க்கத் தலைவர் ஒருவர் பற்றி வெளியாகும் முதல் நூல் என்ற வகையிலும், தமிழ் எழுத்துச் சீராக்கம் இலங்கையில் 1990இல் அறிமுகப்படுத்தப்படும் முன்னரே அதற்கமைய இலங்கையில் பதிப்பிக்கப்பட்ட முதல் நூல் என்ற வகையிலும் இந்நூல் முக்கியத்துவம் வாய்ந்ததென்று நூலாசிரியர் குறிப்பிடுகின்றார்.)

## 1989

**கரு: சிறுகதைத் தொகுப்பு,** 1வது பதிப்பு, நவம்பர் 1989. 76 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 18x12.5 சமீ.

(ஆசிரியரின் 3வது சிறுகதைத் தொகுதி. இது எங்கள் காலம், திருப்பங்கள், திருப்பங்களும் முடிவுகளும், பெருநாள் உதயம், அரியணை ஏறிய அரசமரம் ஆகிய 5 நெடுங்கதைகள் இதில் இடம்பெற்றுள்ளன. சமுதாயத்தில் புரையோடிப் போயுள்ள மூடநம்பிக்கைகள், சீதனக் கொடுமை, போன்ற எண்ணக்கருக்களை கதைகளாக இந்நூலில் பதித்துள்ளார்.)

## 1990

**அந்த நிலை,** 1வது பதிப்பு, ஜனவரி 1990. 96 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 18x12.5 சமீ.

(புன்னியாமீன் எழுதிய மூன்று நெடுங்கதைகள் கொண்ட தொகுப்பு. போலிகளை நம்பி ஏமாறாது புத்திபூர்வமாக அவற்றை எதிர்கொண்டு வெல்லும் பெண்ணின் கதையாக வேதமோதும் சாத்தான்கள் என்ற கதையும், செய்யும் தொழிலிலே திருப்திகண்டு உயரும் ஒருவனது கதையாக இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு என்ற கதையும் திருமணங்களில் சுயகௌரவத்திற்காக நுழைக்கப்படும் ஆடம்பரங்கள் எவ்வாறு சமூகத்தை பாதிக்கின்றன என்பதை வெளிச்சமிட்டுக் காட்டுவதாக அந்த நிலை என்ற தலைப்புக் கதையும் அமைகின்றன.)

**அரசறிவியல் மூலதத்துவங்கள் (பகுதி 01).** கண்டி: EPI Tutorial College, 115, D.S. Senanayaka Rd, 1வது பதிப்பு, ஆகஸ்ட் 1990. 96 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 20.5x14 சமீ.

(க.பொ.த உயர்தர அரசறிவியல் மூலதத்துவங்கள் பாடத்தில் பகுதி 01 பாடப்பரப்பைத் தழுவியதான குறிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன. மாணவர்கள் சுயமாகக் கற்கக்கூடிய இலகு நடையில் இக்குறிப்புகள் காணப்படுகின்றன. அத்துடன் பகுதி 01 இல் இடம்பெறக்கூடிய பரீட்சை மாதிரி வினாப்பத்திரம் விடைகளுடன் விளக்கப்பட்டுள்ளது.)

**அரசறிவியல் மூலதத்துவங்கள் (பகுதி 02),** கண்டி: EPI Tutorial College, 115, D.S. Senanayaka Rd, 1வது பதிப்பு, செப்டெம்பர் 1990. 96 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 20.5x14 சமீ.

(க.பொ.த உயர்தர அரசறிவியல் மூலதத்துவங்கள் பாடத்தில் பகுதி 02 பாடப்பரப்பைத் தழுவியதாக குறிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன. மாணவர்கள் சுயமாகக் கற்கக்கூடிய இலகு நடையில் இக்குறிப்புகள் காணப்படுகின்றன. அத்துடன் பகுதி 02 இல் இடம்பெறக்கூடிய பரீட்சை மாதிரி வினாப்பத்திரம் விடைகளுடன் விளக்கப்பட்டுள்ளது.)

**அரும்புகள்,** 1வது பதிப்பு, நவம்பர் 1990. 126 பக்கம், விலை: இந்திய ரூபா 15., இலங்கையில் ரூபா 30., அளவு: 21x13.5 சமீ.

(இது சிந்தனை வட்டத்தின் ஏழாவது வெளியீடு. கலைமகள் ஹிதாயா, மரீனா இல்யாஸ், என். நவரட்ணம், சுமைரா அன்வர், கலைநிலா காதிஜீன், இரா. திருச்செல்வம், தலவின்னை புஹாரா, நாகபூஷணி கருப்பையா, கெக்கிறாவை ஸஹானா, இஸ்லாமியச் செல்வி, சீ.வி. நித்தியானந்தன், ஆகிய பதினொரு இளம் கவிஞர்களின் கவிதைகள் இதில் இடம் பெற்றுள்ளன.)

**புதிய மொட்டுகள்,** 1வது பதிப்பு, ஜுன் 1990. 100 பக்கம், விலை: ரூபா 20., அளவு: 18x12.5 சமீ.

(உஸ்மான் மரிக்கார், நஜுமுதீன், மஸீதா புன்னியாமீன், தலவின்னை சிபார், அக்குறணை ரிழ்வான், ரிஷானா ரஷீட், கலைமகள் ஹிதாயா, கலதெனிய நளீம், தமீம் அன்சார் ஆகிய 9 இளம் கவிஞர்களின் கவிதைகள் உள்ளடங்கியுள்ளன. சிந்தனை வட்டத்தின் ஆறாவது வெளியீடு.)

**நெருடல்கள்,** 1வது பதிப்பு, பெப்ரவரி 1990. 80 பக்கம், விலை: ரூபா 15., அளவு: 18x12 சமீ.

(ஆசிரியரின் 9வது நூல். நெருடல்கள், சம்பாத்தியம் என்னும் இரு நெடுங்கதைகளையும், துரோகத்தின் விளைவு, தியாகம், மன்னிப்பு, வெற்றி, ஆகிய நான்கு உருவகக் கதைகளையும் கொண்ட தொகுப்பு. இலங்கையில் முஸ்லீம்கள் வியாபாரத்துறையில் காட்டும் ஆர்வம்

கல்வித்துறையில் காட்டுவதில்லை என்ற சமூகப் பிரச்சினையொன்றை இரண்டு நெடுங்கதைகளும் அலசுகின்றன.)

## 1991

**வரலாறு – குறிப்புகள் (ஆண்டு 9),** 1வது பதிப்பு, அக்டோபர் 1991. x, 48 பக்கம், புகைப்படங்கள், வரைபடங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 60., அளவு: 29x19 சமீ.

(புதிய பாடதிட்டத்தின் கீழ் அறிமுகம் செய்யபப்பட்ட ஆண்டு 9 மாணவர்களுக்கான 'வரலாறு' பாடத்தில் மாணவர்களுக்குத் தேவையான அடிப்படைக் குறிப்புக்களைக் கொண்டதாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. தேவையான இடங்களில் புகைப்படங்கள், வரைபடங்கள், சித்திரங்கள் போன்றவற்றைச் சேர்த்திருப்பது மாணவர்களுக்கு மேலதிக விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது.)

**வரலாறு – குறிப்புகள் (ஆண்டு 10),** 1வது பதிப்பு, அக்டோபர் 1991. 60 பக்கம், புகைப்படங்கள், வரைபடங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 70., அளவு 29x19 சமீ.

(புதிய பாடதிட்டத்தின் கீழ் அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டு 10 மாணவர்களுக்கான 'வரலாறு' பாடத்தில் மாணவர்களுக்குத் தேவையான அடிப்படைக் குறிப்புக்களைக் கொண்டதாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. தேவையான இடங்களில் புகைப்படங்கள், வரைபடங்கள், சித்திரங்கள் போன்றவற்றைச் சேர்த்திருப்பது மாணவர்களுக்கு மேலதிக விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது.)

**வரலாறு – குறிப்புகள் (ஆண்டு 11),** 1வது பதிப்பு, அக்டோபர் 1991, 72 பக்கம், புகைப்படங்கள், வரைபடங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 80., அளவு: 29x19 சமீ.

(புதிய பாடதிட்டத்தின் கீழ் அறிமுகம் செய்யபப்பட்ட ஆண்டு 11 மாணவர்களுக்கான 'வரலாறு' பாடத்தில் மாணவர்களுக்குத் தேவையான அடிப்படைக் குறிப்புக்களைக் கொண்டதாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. தேவையான இடங்களில் புகைப்படங்கள், வரைபடங்கள், சித்திரங்கள் போன்றவற்றைச் சேர்த்திருப்பது மாணவர்களுக்கு மேலதிக விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது. அத்துடன், க.பொ.த சாதாரண தர அரசாங்கப் பரீட்சையை மையமாகக் கொண்டு மாதிரி பரீட்சை வினாத்தாள்கள் இணைக்கப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும்.)

## 1992

**அரசறிவியல் கோட்பாடுகள்,** 1வது பதிப்பு, நவம்பர் 1992. 120 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 20.5x14 சமீ.

(க.பொ.த உயர்தர அரசறிவியல் மூலதத்துவங்கள் பாடம் பகுதி 1 இல் இடம்பெறக்கூடிய அரசியல் கோட்பாடுகள் பற்றிய குறிப்புகள் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. மாணவர்கள் சுயமாகக் கற்கக் கூடிய இலகு நடையில் இக்குறிப்புகள் காணப்படுகின்றன. இப்புத்தகத்தில் காணப்படக்கூடிய குறிப்புகள் பேராதனைப் பல்கலைக்கழக முதற் கலைத் தேர்வு மாணவர்களுக்கும் ஏற்ற வகையில் உள்ளன.)

**இலங்கையில் தேர்தல்கள்: அன்றும் இன்றும்.** கொழும்பு 13: ஈ.பீ.ஐ. புத்தகாலயம், 64, 2/2, ஹின்னி அப்புஹாமி மாவத்தை, 1வது பதிப்பு, ஓகஸ்ட் 1994. 68 பக்கம், வரைபடங்கள், புள்ளிவிபரம், விலை: ரூபா 50., அளவு: 21x13.5 சமீ.

(இலங்கை அரசியல் வரலாற்றில் சட்ட நிரூபண சபைக்கு பிரதிநிதியொருவரைத் தேர்ந்தெடுப்பதற்கான முதலாவது தேர்தல் 1911ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ஆம் திகதி நடைபெற்றது. இத்தேர்தலில் இருந்து 1994ஆம் ஆண்டில் தென் மாகாணசபை பிரதிநிதி களைத் தேர்ந்தெடுப்பதற்காக நடத்தப்பட்ட இடைக்கால மாகாணசபைத் தேர்தல் வரை இலங்கையில் நடைபெற்ற சகல தேர்தல்களும், அவற்றின் போக்குகளும், தேர்தல் முடிவுகளும் இந்நூலில் ஆராயப்பட்டுள்ளன. புன்னியாமீனால் எழுதப்பட்டு சிந்தனை வட்டத்தின் சார்பில் வெளியிடப் பட்டுள்ள இந்நூல் இலங்கையின் தேர்தல் வரலாற்றினைச் சுருக்கமாகத் தெரிந்துகொள்ள ஆர்வமுள்ள அனைவருக்கும் பயன்மிக்க கையேடாகும்.)

## 1993

**வரலாறும் சமூகக் கல்வியும்,** 1வது பதிப்பு, அக்டோபர் 1993. vii, 88 பக்கம், புகைப்படங்கள், விரைபடங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 30., அளவு: 29x21 சமீ.

இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட புதிய பாடத்திட்டத்திற்கமைய ஆண்டு 10, 11 மாணவர்களின் நலன் கருதி வெளியிடப்பட்ட நூல் இதுவாகும். இலங்கையின் அரசியல் யாப்பு வளர்ச்சியில் பல்வேறு அரசியல் யாப்புக்களும் ஆராயப்பட்டுள்ளன. குடியரசு, சர்வாதிகாரம் போன்றவை பற்றிய விளக்கங்களும், ஐக்கிய நாடுகள் சபை, சார்க், அணிசேரா இயக்கம், ஆசியான், அரபு நாடுகளின் சம்மேளனம், ஆபிரிக்க ஒற்றுமை நிறுவனம் ஆகிய சர்வதேச நிறுவனங்கள் பற்றிய குறிப்புக்களும் சேர்க்கப்பட்டுள்ளன.)

**வரலாறும் சமூகக் கல்வியும் ~ 2,** 1வது பதிப்பு, நவம்பர் 1993. 80 பக்கம், புகைப்படங்கள், வரைபடங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 25., அளவு: 29x21 சமீ.

(இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட புதிய பாடத்திட்டத்திற்கமைய ஆண்டு 10,11 மாணவர்களின் நலன் கருதி வெளியிடப்பட்ட நூல் இதுவாகும். மத்தியகால ஐரோப்பா, மனித செயற்பாடுகளும் உலகின் பல்வேறு பிரதேசங்களும், 1வது 2வது உலகமகா யுத்தங்கள் என்பனவும் விளக்கப்பட்டுள்ளன. இத் தலைப்புக்களுக்குள் அடங்கும் கடந்தகால வினாக்களும் விடைகளும் இந்நூலில் தரப்பட்டுள்ளன.)

## 1994

**1994 சனாதிபதித் தேர்தலும் சிறுபான்மை இனங்களும்,** கொழும்பு 13: E.P.I. புத்தகாலயம், 64, 2/2, Hinni Appuhamy Mawathe, 1வது பதிப்பு, நவம்பர் 1994. 92 பக்கம், அட்டவணைகள், சித்திரங்கள், விலை: ரூபா 70., அளவு: 21x14 சமீ.

(அரசறிவியலை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கும், அரசியலைத் தெரிந்துகொள்ள ஆர்வமுள்ள அனைவருக்கும் ஏற்ற நூல். இலங்கையில் நடைபெற்று முடிந்த முதல் மூன்று ஜனாதிபதி தேர்தல்களினதும் வாக்குவிபரம் மாகாண, மாவட்ட, தொகுதி அடிப்படை யில் தரப்பட்டுள்ளன.)

## 1995

**1994 பொதுத் தேர்தலும் சிறுபான்மை இனங்களும்,** கொழும்பு 13: E.P.I. புத்தகாலயம், 64, 2/2, Hinni Appuhamy Mawathe, 2வது பதிப்பு, ஜனவரி 1995, 1வது பதிப்பு, நவம்பர் 1994. 84 பக்கம், அட்டவணைகள், சித்திரங் கள், விலை: ரூபா 55., அளவு: 21.5x14 சமீ.

(இலங்கை அரசியலில் 10வது பொதுத்தேர்தல் நடந்து முடிந்துவிட்ட நிலையில் அது ஏற்படுத்தக்கூடிய சமகால அரசியல் மாற்றங்களை எதிர்வுகூரும் அரசியல் திறனாய்வுகள். பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் விளக்கமாக அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன.)

**இலங்கையின் அரசியல் 95: நிகழ்கால நிகழ்வுகள்,** 1வது பதிப்பு, மே 1995. 80 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 21x13.5 சமீ.

(ஒரு நாட்டின் அபிவிருத்தியில் ‘தேசியக் கொள்கை’ என்ற எண்ணக்கரு இன்றியமையாதது. தேசத்தின் பொருளாதாரம், கல்வி, சமூகவியல், ஆகிய துறைகளில் தேசியக் கொள்கைகள் காணப்படின் அரசாங்க மாற்றங்களால் இவ்வடிப்படைக் கொள்கைகள் மாறப்

போவதில்லை. இதனால் நாட்டின் சீரான அபிவிருத்தியினை நாம் அவதானிக்கமுடியும். மாறாக, அரசாங்கம் மாற, மாற குறித்த துறைசார்ந்த கொள்கைகளைத் தேசியக் கொள்கை களாகவன்றி கட்சிக் கொள்கைகளாக மாற்றிவருவது பலவிதமான சிக்கல்களை நாட்டில் உருவாக்கலாம். இத்தன்மைகளைப் பொதுவாக மூன்றாம் உலக நாடுகளில் காணமுடியும். 1994ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தல்களில் பொதுசன ஐக்கிய முன்னணி வெற்றியீட்டியது. இதனைத் தொடர்ந்து 1995ஆம் ஆண்டில் இலங்கையில் பொருளாதார, கல்வி, சமூகவியல், வெளிநாட்டுக் கொள்கைகளில் ஏற்படுத்தப்பட்ட அரசியல் மாற்றங்கள் இந்நூலில் சித்தரிக்கப்பட்டுள்ளன. காலத்தின் தேவையுணர்ந்து எழுதப்பட்ட நூல் இதுவாகும்.)

## 1996

***பாலங்கள்: கவிதைத்தொகுதி,*** 1வது பதிப்பு, ஜூலை 1996. 70 பக்கம், விலை: ரூபா 18., அளவு: 17.5x12 சமீ.

(ஈழத்து இளம்கவிஞர்கள் ஐவரின் கவிதைத்தொகுதி. பஹிமா ஜஹான், மரினா இல்யாஸ், உஸ்மான் மரிக்கார், ஜெயந்தன், சுமைரா அன்வர் ஆகிய ஐவரின் கவிதைகள் இடம்பெற்றுள்ளன.)

***யாரோ எவரோ எம்மை ஆள,*** 1வது பதிப்பு, ஜூலை 1996. 120 பக்கம், விலை: இந்திய ரூபா 24., அளவு: 18x12 சமீ.

(இத்தொகுப்பிலுள்ள 8 கதைகளும், எண்பதுகளில் இருந்து தொன்னூறு வரையுள்ள ஒரு தசாப்த காலப்பகுதியைச் சார்ந்தவை. எனவே இக்கதைகளில் இக் காலப்பகுதிக்கேயுரிய சமூக, அரசியல் பிரச்சினைகளைக் காணமுடிகின்றது. புன்னியாமீனின் எழுத்துகளில் எளிமையும் தெளிவும் சமூகப்பார்வையும் மிகுந்திருப்பதைக் காணலாம். முஸ்லீம் சமூகத்தின் அரசியல் பிரச்சினைகளை இலக்கிய வடிவமாக முன்வைப்பதில் இவர் பணி மகத்தானது.)

***வில்ஸ் வேர்ல்ட் கப் 1996: நினைவுகள்,*** 1வது பதிப்பு, ஏப்ரல் 1996. 84 பக்கம், புள்ளி விபரங்கள், அட்டவணைகள், விலை: ரூபா 65.00, அளவு: 21x14 சமீ.

(இலங்கையில் கிரிக்கெட் விளையாட்டுத் தொடர்பாகத் தமிழில் வெளிவந்த முதல் நூலாகக் கருதப்படுகின்ற இந்நூல், 1996ஆம் ஆண்டில் வில்ஸ் உலகக் கிண்ணத்துக்கான ஒருநாள் மட்டுப்படுத்தப்பட்ட சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் இந்தியா, பாக்கிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளில் இணைந்து நடத்தப்பட்டன. இந்தப் போட்டித் தொடரில் ஆறாவது உலகக் கிண்ணத்தை இலங்கை அணி சுவீகரித்துக் கொண்டது. இப்போட்டித் தொடர் பற்றிய சகல விபரங்களும், முக்கிய நிகழ்வுகளும்

புள்ளிவிபரத் தகவல்களுடன் இந்நூலில் எடுத்தாளப் பட்டுள்ளன. 1975, 79, 83, ஆம் ஆண்டுகளில் இங்கிலாந்தில் நடைபெற்ற புருடன்ஷியல் கிண்ணத்துக்கான 1வது 2வது, 3வது உலகக் கோப்பைக்கான விபரங்களும், 1987ஆம் ஆண்டில் இந்தியா - பாக்கிஸ்தன் ஆகிய நாடுகளுக்கிடையே நடைபெற்ற ரிலயன்ஸ் கிண்ணத்துக்கான 4வது உலகக் கோப்பைக்கான விபரங்களும், 1992ம் ஆண்டில் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற பென்சன் அன் ஹெஜஸ் கிண்ணத்துக்கான 5வது உலகக் கோப்பைக்கான விபரங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.)

## 1997

**அரசறிவியல் பகுதி 1: கோட்பாடுகளும் எண்ணக்கருக்களும்,** 7வது பதிப்பு, பெப்ரவரி 1997, 1வது பதிப்பு, ஜனவரி 1992. 84 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 21x14 சமீ.

(G.A.Q, G.C.E.(A/L) புதிய பாடத்திட்டத்துக்கான பாடநூல் தொடரில் 1வது நூல். அரசறிவியல் கோட்பாடுகளும், எண்ணக் கருக்களும் தொடர்பான மாதிரி வினாக்களையும் சுருக்க விடைகளையும் உள்ளடக்கியது.)

**அரசறிவியல் மூலதத்துவங்கள்: பல்தேர்வு மாதிரி வினாவிடைத் தொகுதி 1.** 1வது பதிப்பு, நவம்பர் 1997. 96 பக்கம், விலை: ரூபா 125., அளவு: 28x21.5 சமீ.

(1997ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட க.பொ.த. உயர்தர மாணவர் களுக்கான அரசறிவியல் மூலதத்துவங்கள் பாடப்பரப்பில் முதற்தடவையாக பல்தேர்வு வினாக்கள் (MCQ) வினாப்பத்திரம் அறிமுகப் படுத்தப்பட்டது. பரீட்சையில் 40 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய இவ்வினாப்பத்திரத்திற் கேற்ற வகையில் முழுமையான பாடப்பரப்பினை உள்ளடக்கி மாணவர்களின் நுணுக்க அவதானிப்பு, ஞாபகத்திறன் என்பவற்றை அளவிடக்கூடிய வகையில் இந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் மொத்தம் 10 மாதிரி வினாத்தாள்கள் இணைக்கப்பட்டுள்ளன. அரசறிவியல் மாணவர்களுக்கென இலங்கையிலே தமிழ்மொழி மூலம் வெளிவந்த முதலாவது பல்தேர்வு வினாவிடைத்தொகுதி இதுவென்று கருதப்படுகின்றது.)

**அரசறிவியல் பகுதி 3: உள்ளூராட்சிமுறை, கட்சிமுறை, வெளிநாட்டுக் கொள்கை,** 6வது பதிப்பு, பெப்ரவரி 1997, 1வது பதிப்பு, ஜனவரி 1991. 64 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 21x14 சமீ.

(G.A.Q, G.C.E.(A/L) புதிய பாடத்திட்டத்துக்கான பாடநூல்தொடரில் 4வது நூல். உள்ளூராட்சி முறையும், கட்சி முறையும், வெளிநாட்டுக் கொள்கைகளும் சம்பந்தமான மாதிரி வினாக்களையும் சுருக்க

விடைகளையும் உள்ளடக்கியது. உள்ளூராட்சி முறை, மாகாணசபை, கட்சிமுறை, ஐக்கிய நாடுகள் சபை, சார்க் அமைப்பு, அணிசேரா இயக்கம் ஆகிய அம்சங்கள் விளக்கப்படுத்தப்பட்டுள்ளன.)

**அறிமுக சுற்றாடல் கல்வியும் பொது அறிவும். இணை ஆசிரியர்: மஸிதா புன்னியாமீன்.** 1வது பதிப்பு, ஜூன் 1997. 80 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21x13.5 சமீ.

(புன்னியாமீன் - மஸீதா தம்பதியினர் இணைந்து வெளியிட்டுள்ள புலமைப் பரிசில் தரம் 5 பாடவழிகாட்டி நூல். பாடப்பரப்பில் இடம்பெறும் அறிமுக சுற்றாடல் கல்வியும், பொது அறிவு விடயங்களும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆரம்ப வகுப்பு மாணவர்கள் இலகுவாகவும், சுயமாகவும் விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் இந்நூல் எழுதப் பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.)

**அறிமுக விஞ்ஞானமும் ஆங்கிலமும்,** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 1வது பதிப்பு, ஜூன் 1997. 80 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21x13.5 சமீ.

(தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் பாடவழிகாட்டி நூலாக இந்நூல் வெளிவந்துள்ளது. அறிமுக விஞ்ஞானம் பற்றியும், ஆங்கிலம் பற்றியும் பாடப் பரப்பில் இடம்பெறும் குறிப்புக்களை எளிய நடைமுறையில் விளக்குகின்றது.)

**அறிமுகக் கணிதம். இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன்.** 1வது பதிப்பு, மே 1997. 80 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21x14 சமீ.

(புலமைப்பரிசில் வழிகாட்டித் தொடர் இலக்கம் 2. ஆண்டு 4, 5 புதிய பாடத்திட்டத்தை உள்ளடக்கியது.)

**அறிமுகத் தமிழ்,** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 1வது பதிப்பு, பெப்ரவரி 1997. 48 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21x14 சமீ. (புலமைப்பரிசில் வழிகாட்டித் தொடர் வரிசை 1. ஆண்டு 4,5 புதிய பாடத்திட்டத்தை உள்ளடக்கிய நூல்.)

**ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினா-விடைகள்: தொகுதி 1.** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 1வது பதிப்பு, ஏப்ரல் 1997. iv, 98 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 28x21.5 சமீ.

(இலங்கையில் மாணவர்கள் எதிர்நோக்கும் முதலாவது அரசாங்கப் பரீட்சை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையாகும். மாணவர்களை பிரபல்யமான பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5இல் நடத்தப்படும் இப்பரீட்சை

ஒரு போட்டிப் பரீட்சையாகும். புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இந்நூலில் பகுதி 1, பகுதி 2க்கான 24 மாதிரி வினாப்பத்திரங்கள் இணைக்கப்பட்டுள்ளன.)

**ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினா~விடைகள்: தொகுதி 2.** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 1வது பதிப்பு, ஏப்ரல் 1997. 113 பக்கம், விலை: ரூபா 120., அளவு: 28x21.5 சமீ.

(ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி நூல். இவ்விரண்டாம் தொகுதியில் மாதிரி வினாப்பத்திரங்கள் 25 முதல் 44 வரை இடம்பெற்றுள்ளன.)

**தெரிவுசெய்யப்பட்ட நாடுகள்.** 6வது பதிப்பு, ஒக்டோபர் 1997, 1வது பதிப்பு, ஜுன் 1993. 88 பக்கம், அட்டவணைகள், வரைபடங்கள், விலை: ரூபா 80., அளவு: 21x14 சமீ.

(மாதிரி வினாக்களையும், சுருக்க விடைகளையும் உள்ளடக்கியது. G.C.E.(A/L), G.A.Q., மட்டத்தினருக்கான பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளையும், G.C.E.(A/L) மாணவர்களுக்கான இந்தியா, முன்னைய சோவியத் யூனியன் ஆகிய பாட அலகுகளையும் உள்ளடக்கியுள்ளது.)

**பிரித்தானியாவின் அரசியல் முறை.** 7வது பதிப்பு, பெப்ரவரி 1997, 1வது பதிப்பு, மே 1987. 48 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21x14 சமீ.

(G.A.Q, G.C.E.(A/L) புதிய பாடத்திட்டத்துக்கான பாடநூல். மாதிரி வினாக்களையும் சுருக்க விடைகளையும் உள்ளடக்கியது.)

## 1998

**அரசறிவியல் பகுதி 2: இலங்கையின் அரசியல் திட்டவளர்ச்சி,** 7வது பதிப்பு, ஜனவரி 1998, 1வது பதிப்பு, மே 1993. 72 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 21x14 சமீ.

(G.A.Q, G.C.E.(A/L) புதிய பாடத்திட்டத்துக்கான பாடநூல் தொடரில் 3வது நூல். இலங்கையில் அரசியல் திட்ட வளர்ச்சி தொடர்பான மாதிரி வினாக்களையும் சுருக்க விடைகளையும் உள்ளடக்கியது.)

**அரசறிவியல் மூலதத்துவங்கள்: பரீட்சை மாதிரி வினாவிடை 1998.** 1வது பதிப்பு, பெப்ரவரி 1998. 88 பக்கம், விலை: ரூபா 100., அளவு: 28x21.5 சமீ.

(1997ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான அரசறிவியல் மூலதத்துவங்கள் பாடப்பரப்பில் இடம்பெறும் வினாக்களுக்கு விடை எழுதக்கூடிய வகையில் பரீட்சை

மாதிரி வினாவிடை 1998 என்னும் இந்நூல் வெளிவந்துள்ளது. இந் நூலில் புதிய பாடத்திட்டத்திற்கமைய பகுதி 1, 2 ஆகிய இரு வினாப் பத்திரங்களிலும் வினாக்கள் எவ்வாறு அமையும், விடைகள் எவ்வாறு வழங்க வேண்டும் என்பனபோன்ற விளக்கங்கள் எளிய நடையில் இதன் நூலாசிரியர் புன்னியாமீன் மூலம் வழங்கப்பட்டுள்ளன.)

**அறிமுக விஞ்ஞானம்: தொகுதி 1.** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 1வது பதிப்பு, பெப்ரவரி 1998. 80 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21x14 சமீ.

(புலமைப் பரிசில் வழிகாட்டித் தொடர் 4. ஆண்டு 4, 5 புதிய பாடத்திட்டத்தை உள்ளடக்கியது. இத்தொகுதி நாமும் சூழலும், தாவரங் கள், விலங்குகள், மண் ஆகிய நான்கு பாடங்களை உள்ளடக்கியது.

**அறிமுக விஞ்ஞானம்: தொகுதி 2.** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 1வது பதிப்பு, ஏப்ரல் 1998. 64 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21x14 சமீ.

புலமைப் பரிசில் வழிகாட்டித் தொடர் 5. ஆண்டு 4, 5 புதிய பாடத்திட்டத்தை உள்ளடக்கியது. இத்தொகுதி நாமும் சூழலும், தாவரங்கள், விலங்குகள், மண் ஆகிய நான்கு பாடங்களை உள்ளடக்கியது.

**நாமும் சுற்றாடலும்: தொகுதி 1.** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 1வது பதிப்பு, ஏப்ரல் 1998. 80 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21x14 சமீ. (புலமைப் பரிசில் வழிகாட்டித் தொடர் 6. ஆண்டு 4, 5 புதிய பாடத்திட்டத்தை உள்ளடக்கியது. இத்தொகுதி எமது அயலில் காணப்படும் தாவரங்கள், பிராணிகள், சுற்றாடலின் கோலங்கள், புவியும் வானும், வேலைகளை இலகுவாக்கும் முறைகள், எமது உணவு, எமது பரிபாலன முறைகள் ஆகிய பாடங்களை இத்தொகுதி உள்ளடக்கியுள்ளது.)

**நாமும் சுற்றாடலும்: தொகுதி 2,** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 1வது பதிப்பு, மே 1998. 48 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21x14 சமீ.

(புலமைப் பரிசில் வழிகாட்டித் தொடர் 7. ஆண்டு 4, 5 புதிய பாடத் திட்டத்தை உள்ளடக்கியது. பழக்க வழக்கங்களும் பொறுப்புக்களும், நாமும் போக்குவரத்தும், நாம் எவ்வாறு வளர்கிறோம், எமது வளர்ச்சிக்குத் தடையாக அமைவன, பொது அறிவு விடயங்கள் ஆகிய பாடங்களை இத்தொகுதி உள்ளடக்கியுள்ளது.)

**புலமைப் பரிசில் வெற்றி வழிகாட்டி: தொகுதி 1,** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 2வது பதிப்பு, ஓகஸ்ட் 1998, 1வது பதிப்பு, ஏப்ரல் 1998. 82 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 28x22 சமீ.

(1999/2000 ஆண்டுகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர் களுக்கான மாதிரி வினாப்பத்திரங்களும் விடைகளும் அடங்கியுள்ளன.

**புலமைப் பரிசில் வெற்றி வழிகாட்டி: தொகுதி 2.** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 2வது பதிப்பு, ஓகஸ்ட் 1998, 1வது பதிப்பு, ஏப்ரல் 1998. 76 பக்கம், விலை: ரூபா 80., அளவு: 28x22 சமீ.

(1999/2000 ஆண்டுகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர் களுக்கான மாதிரி வினாப்பத்திரங்களும் விடைகளும்.)

**புலமைப் பரிசில் வெற்றி வழிகாட்டி: தொகுதி 3.** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 2வது பதிப்பு, ஓகஸ்ட் 1998, 1வது பதிப்பு, ஏப்ரல் 1998. 76 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 28x22 சமீ.

(1999/2000 ஆண்டுகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர் களுக்கான மாதிரி வினாப்பத்திரங்களும் விடைகளும் அடங்கியுள்ளன. இந்நூல் 3 தொகுதிகளில் வெளிவந்துள்ளது.)

**வரலாறு: ஆண்டு 9.** 7வது பதிப்பு, ஜனவரி 1998, 1வது பதிப்பு, நவம்பர் 1991. 64 பக்கம், விலை: ரூபா 47.50, அளவு: 21x14 சமீ.

(கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை வழிகாட்டியாகும் இந்நூலில் இலங்கையின் நீர்வள நாகரீகம், தரைத் தோற்றம், காலநிலை, நீர்வழங்கல், நீர்ப்பாசன முறையின் வளர்ச்சி, நீர்வள நாகரீகத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் உட்பட பத்துத் தலைப்புகளில் வரலாற்று விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. எளிய நடையில் சரளமாக, சின்னச்சின்ன கேள்வி பதில்களாக, சிறுசிறு குறிப்புகளாக அட்டவணைகளாக வரைபடங்களுடன் விளக்கப்பட்டுள்ளது.)

**வரலாறு: ஆண்டு 10.** 8வது பதிப்பு, பெப்ரவரி 1998, 1வது பதிப்பு, நவம்பர் 1991. 72 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21x14 சமீ.

(கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை வழிகாட்டியாகும். புதிய பாடத்திட்டத்தின் ஆண்டு 10 பாடப்பரப்பில் சேர்க்கப்பட்ட புதிய விடயங்களுக்கு அமைய எளிய நடையில் சரளமாக, சின்னச்சின்ன கேள்வி பதில்களாக, சிறுசிறு குறிப்புகளாக விளக்கப்பட்டுள்ளது. வரலாறு (ஆண்டு 10) வினாவிடைத் தொகுதி)

**வரலாறு: ஆண்டு 11,** 8வது பதிப்பு, ஜனவரி 1998, 1வது பதிப்பு, ஒக்டோபர் 1991. 76 பக்கம், புகைப்படங்கள், நிலவரை படங்கள், விலை: ரூபா 70., அளவு: 21x13.5 சமீ.

(இது கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை வழிகாட்டியாகும். புதிய பாடத்திட்டத்தின் ஆண்டு 11 பாடப்பரப்பில் சேர்க்கப்பட்ட புதிய விடயங்களுக்கு அமைய எளிய நடையில் சரளமாக, குறுகிய கேள்வி பதில்களாக, சிறு குறிப்புகளாக விளக்கப்பட்டுள்ளது. வரலாறு (ஆண்டு 11) வினா - விடைத் தொகுதி.)

## 1999

***அரசறிவியல்: முதற்கலைத் தேர்வு.*** கண்டி: E.P.I. கல்வி நிலையம், 83, கட்டுகஸ்தோட்டை வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1999. 126 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21x13.5 சமீ.

(GAQ முதற்கலைத் தேர்வு வெளிவாரி மாணவர்களுக்கு ஏற்ற 1985-1998 காலப்பகுதிக்குரிய பரீட்சை வினாக்களைக் கொண்ட பாட அலகுரீதியான தொகுப்பு. வினாக்களுக்கான விடைகளும் சுருக்க அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு மட்டுமன்றி அரசறிவியலின் அடிப்படைகளை அறிந்துகொள்ளவிரும்பும் எவருக்கும் ஏற்றது.)

***B.A.அரசறிவியல்: பாடநூல்,*** கண்டி: E.P.I, கல்வி நிலையம், 83, கட்டுகஸ்தோட்டை வீதி, 1வது பதிப்பு, ஜனவரி 1999. 126 பக்கம், விலை: ரூபா 70., அளவு: 21x13.5 சமீ.

(பேராதனைப் பல்கலைக்கழக பொதுக் கலைமாணி (B.A.) வெளிவாரி மாணவர்களின் நலன்கருதி, அரசறிவியல் பாடத்துக்காக வெளியிடப்பட்ட நூல். 1990ஆம் ஆண்டு முதல் 1998ஆம் ஆண்டு வரை இடம்பெற்ற பரீட்சை வினாக்கள், பாட அலகு ரீதியாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவ் வினாக்களுக்கான விடைகளும் சுருக்கக் குறிப்புகளாக வழங்கப் பட்டுள்ளன. அரசறிவியல் சமூகக் கோட்பாடுகள், இலங்கை அரசாங்கம், பொதுத்துறை ஆட்சியியல், ஆகிய தலைப்புகளில் விடயங்கள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன.)

***புலமைப் பரிசில் அறிவு ஒளி: தொகுதி 1.*** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 2வது பதிப்பு, மே 1999, 1வது பதிப்பு, மார்ச் 1999. (5), 67 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 80., அளவு: 28x21.5 சமீ.

(தரம் 5, புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாவிடை. செயற்பாட்டுத் திறனை அதிகரிக்கும் வகையில் வினாப்பத்திரங்கள் 1முதல் 10 வரை அமைந்துள்ளன. சிந்தனை வட்டத்தின் 116வது வெளியீடு.)

**மத்திய மாகாண முஸ்லீம் கலாசார, கலைஞர்கள் கௌரவிப்பு விழா – 1999.** பீ.எம். புன்னியாமீன் (தொகுப்பாசிரியர்). கண்டி: மத்திய மாகாண சபையின் முஸ்லீம் சமய விவகார அமைச்சு, த.பெ. இலக்கம் 65, பேராதனை, 1வது பதிப்பு, டிசம்பர் 1999. 96 பக்கம், புகைப்படங்கள், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25x17.5 சமீ.

(இலங்கையில் 'மாகாணசபை முறை' அறிமுகப்படுத்தப்பட்ட பின்பு மாகாண ரீதியான முஸ்லீம் கலாசார, கலைஞர் கௌரவிப்பு விழா மத்திய மாகாணத்தில் இன்றுவரை ஒரே ஒரு தடவை மாத்திரம் நடைபெற்றுள்ளது. மத்திய மாகாண சபையின் முஸ்லீம் சமய விவகார அமைச்சின் இணைப்புச் செயலாளராக ஜனாப் பீ.எம்.புன்னியாமீன் பணியாற்றிய காலகட்டத்தில் 1999இல் இவ்விழா ஒழுங்குசெய்யப்பட்டது. இவ்விழாவில் கௌரவிக்கப்பட்ட 15 முஸ்லீம் எழுத்தாளர்கள், கலைஞர்கள் பற்றிய விபரங்களும், ஐந்து தமிழ், சிங்கள எழுத்தாளர்கள், கலைஞர்களின் விபரங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. வர்த்தக விளம்பரங்கள் அற்று காத்திரமான பயனுள்ள பல இலக்கியக் கட்டுரைகளுடன் இம்மலர் வெளிவந்துள்ளது.)

## 2000

**21ஆம் நூற்றாண்டின் இலங்கையின் தலைமைத்துவம்: 1999 ஜனாதிபதித் தேர்தல் ஒரு மதிப்பீடு.** 1வது பதிப்பு, ஜனவரி 2000. 128 பக்கம், அட்டவணைகள், விலை: ரூபா 120., அளவு: 21.5x14 சமீ.

(1999 டிசம்பர் 21ஆம் திகதி இலங்கையில் நடைபெற்றுமுடிந்த ஜனாதிபதித் தேர்தலைப் பின்னணியாகக் கொண்டு வெளியிடப்பட்ட அரசறிவியல் ஆய்வுநூல்.)

**2000 பாராளுமன்றப் பொதுத்தேர்தலும் சிறுபான்மைச் சமூகத்தினரும்.** 1வது பதிப்பு, நவம்பர் 2000. 162 பக்கம், அட்டவணைகள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 120., அளவு: 17x12.5 சமீ.

(11வது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் அமைந்த அரசியல் ஆய்வு. B.A., G.A.Q., G.C.E.(A/L) அரசறிவியல் மாணவர்களுக்கும் ஏற்புடையது. சிந்தனை வட்டத்தின் 114வது வெளியீடு.)

**புலமைப் பரிசில் அறிவு ஒளி: தொகுதி 2.** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 2வது பதிப்பு, மார்ச் 2000, 1வது பதிப்பு, பெப்ரவரி 2000. (4), 62 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 80., அளவு: 28x21.5 சமீ.

(தரம் 5, புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினா-விடை. செயற்பாட்டுத் திறனை அதிகரிக்கும் வகையில்

வினாப்பத்திரங்கள் 1முதல் 10 வரை அமைந்துள்ளன. சிந்தனை வட்டத்தின் 110 வது வெளியீடு.)

***புலமைப் பரிசில் அறிவு ஒளி: தொகுதி 3.*** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 2வது பதிப்பு, ஜூன் 2000, 1வது பதிப்பு, மே 2000. 80 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 80., அளவு: 28x21.5 சமீ.

(2001 /2002ஆம் ஆண்டுகளில் தரம் 5, புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாப்பத்திரங்களும் விடைகளும். செயற் பாட்டுத் திறனை அதிகரிக்கும் வகையில் வினாப்பத்திரங்கள் அமைந் துள்ளன. சிந்தனை வட்டத்தின் 111வது வெளியீடு.)

***புலமைப் பரிசில் அறிவு ஒளி: தொகுதி 4.*** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 1வது பதிப்பு, ஓகஸ்ட் 2000. (4), 68 பக்கம், விலை: ரூபா 60., அளவு: 21.5x28 சமீ.

(சிந்தனை வட்டத்தின் 108வது வெளியீடு. 2001/2002ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான 32 மாதிரி வினாப் பத்திரங்களும் விடைகளும் அடங்கியுள்ளன.)

***புலமைப் பரிசில் ஆரம்ப வழிகாட்டி.*** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 2வது பதிப்பு, ஜனவரி 2000, 1வது பதிப்பு, டிசம்பர் 1999. 60 பக்கம், சித்திரங்கள், விலை: ரூபா 80., அளவு: 28x21.5 சமீ.

(தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையின் போது ஒன்றிணைக்கப்பட்ட பாடத் திட்டத்தின்கீழ் தரம் 3, தரம் 4 பாடப் பரப்புகளையும் தழுவியதாகவே பரீட்சை வினாக்கள் இடம்பெறும். எனவே அதற்கேற்ப தரம் 3, தரம் 4 பாடத்திட்டத்தைத் தழுவியதாகத் தயாரிக்கப்பட்ட மாணவர் வழிகாட்டி நூல் இதுவாகும். இந்நூலில் மொத்தமாக பத்து மாதிரி வினாத்தாள்கள் இணைக்கப்பட்டுள்ளன.)

## 2001

***ஆப்கான் மீதான அமெரிக்கத் தாக்குதல்: உலக சமாதானத்துக்கான அறைகூவலா? மூன்றாம் உலகமகா யுத்தத்திற்கான அத்திவாரமா?*** 1வது பதிப்பு, நவம்பர் 2001. 126 பக்கம், புகைப்படங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 100., அளவு: 22x15 சமீ.

(11.09.2001ஆம் திகதி அமெரிக்காவின் நியுயோர்க்கில் உலக வர்த்தக நிலையத்தின் மேல் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கும் அதே வேளையில், உண்மையான குற்றவாளியை உலகுக்கு ஆதாரபூர்வமாக இனம்காட்டாது ஊகங்களை

வைத்து இன்று அமெரிக்கா இஸ்லாமிய நாடுகளின் மேல் தொடுத்திருக்கும் திட்டமிட்ட யுத்த நெருக்குதல்களையும் கண்டிக்கும் வகையில் எழுதப் பட்டுள்ள நூல்.)

**2002 புலமைப் பரிசில் புலமை ஒளி.** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 1வது பதிப்பு, அக்டோபர் 2001. 200 பக்கம், படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 190., அளவு: 28x21.5 சமீ.

(இந்நூல் சிந்தனை வட்டத்தின் 124வது வெளியீடாகும். 2002ம் ஆண்டிலும், அதற்குப் பின்பும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன்கருதி இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. நுணுக்கமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ள 32 மாதிரி வினாப்பத்திரங்களுள் பகுதி 01 இல் 16 வினாப்பத்திரங் களும், பகுதி 02 இல் 16 வினாப்பத்திரங் களும் சேர்க்கப்பட்டுள்ளன.)

**புலமைப் பரிசில் சுடர் ஒளி.** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 1வது பதிப்பு, ஏப்ரல் 2001, 56 பக்கம், படங்கள், சித்திரங்கள், விலை: ரூபா 60., அளவு: 28x21.5 சமீ.

(இந்நூல் 2001-2002 ஆண்டுகளிலும், அதற்குப் பின்பும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவ மணிகளின் நலன்கருதி வெளியிடப்பட்டுள்ளது. தரம் 3 தரம் 4 பாடப்பரப்பை உள்ளடக்கி தரம் 5 புலமைப்பரிசில் வினாப்பத்திர மாதிரிக்கமைய 10 மாதிரி வினாத்தாள்கள் இந்நூலில் விடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.)

**புலமைப் பரிசில் வெற்றி ஒளி.** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 2வது பதிப்பு, நவம்பர் 2001. 1வது பதிப்பு, ஆகஸ்ட் 2000. 280 பக்கம், விலை: ரூபா 240., அளவு: 28x21.5 சமீ.

(2001-2002ம் ஆண்டுகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாப் பத்திரங்களும் விடைகளும் அடங்கியது. இது சிந்தனை வட்டத்தின் 127வது வெளியீடு.)

**புலமைப் பரிசில் வெற்றி வழிகாட்டி.** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 1வது பதிப்பு, நொவம்பர் 2001. 220 பக்கம், விலை: ரூபா 190., அளவு: 28x21.5 சமீ.

(சிந்தனை வட்டத்தின் 125வது வெளியீடு. 2002ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர் களுக்கான 32 மாதிரி வினாப்பத்திரங்களும் விடைகளும் அடங்கியுள்ளன. 2002 புலமைப்பரிசில் வெற்றி வழிகாட்டி)

## 2002

***சிறுபான்மைப் பிரதிநிதித்துவ விகிதாசாரம் பேணும் 12வது பாராளுமன்றம் இனப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்குமா?*** 1வது பதிப்பு, ஜனவரி 2002. 108 பக்கம், அட்டவணைகள், வரைபடங்கள், விலை: ரூபா 120., அளவு: 20x14.5 சமீ.

(2001ஆம் ஆண்டு இலங்கைப் பாராளுமன்றப் பொதுத்தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் அமைந்த அரசியல் ஆய்வு. தேர்தல் முடிவுகள் விபரமாக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. B.A., G.A.Q., G.C.E.(A/L) அரசறிவியல் மாணவர்களுக்கும் இந்நூல் ஏற்புடையது. சிறுபான்மை பிரதிநிதித்துவ விகிதாசாரம் பேணும் 12வது பாராளுமன்றம் கொதிநிலையில் நிற்கும் இனப்பிரச்சினைக்கு விடிவுகாணுமா என்ற பிரதான கேள்விக்கு இந்நூலாசிரியர் பதில் சொல்ல முனைகிறார்.)

***புலமைப் பரிசில் முன்னோடி வழிகாட்டி.*** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 3ஆம் பதிப்பு, அக்டோபர் 2002, 1வது பதிப்பு, நவம்பர் 1998. 64 பக்கம், விலை: ரூபா 90., அளவு: 28x21.5 சமீ.

(இலங்கையிலிருந்து வெளிவரும் ஞாயிறு தினக்குரல் இதழில் 25.11.2007 முதல் 16.3.2008 வரை பிரசுரமான 10 இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்கள் 276 முதல் 285 வரையிலான பதிவு எண்களைக் கொண்டு இந்நூலில் பதிவாக்கப்பட்டுள்ளன. இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு தொகுதி 11 ஆகவும் வெளிவந்துள்ள இந்நூல் இவர்கள் நம்மவர்கள் என்ற புதிய தொடரில் பாகம் 1 ஆகத் தொடர்கின்றது. இந்நூலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 10 பேரினதும் புகைப்படங்களும் அவர்களது குறிப்பிடத்தக்க நூல்களின் அட்டைப் படங்களும் இந் நூலில் இடம்பெறுகின்றன. தம்பி ஐயா தேவதாஸ், எஸ்.எச்.எம்.ஜெமீல், அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை, அந்தனி ஜீவா, பாலா சங்குப்பிள்ளை, ஜே.மீரா மொஹிதீன், வை. அநவரதவிநாயகமூர்த்தி, சாரல்நாடன், வீ.வீரசொக்கன், நா. தர்மராஜா (அகளங்கள்) ஆகியோர் பற்றிய குறிப்புகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.)

**இவர்கள் நம்மவர்கள் பாகம் 2.** 1வது பதிப்பு, ஜூன் 2008. viii, 108பக்கம், விலை: ரூபா 200., அளவு: 20x14.5 சமீ., ISBN: 978-955-1779-13-9.

(இலங்கையில் இருந்து வெளிவரும் ஞாயிறு தினக்குரல் இதழில் 30.12.2007 முதல் 15.6.2008 வரை பிரசுரமான 15 இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்கள் 286 முதல் 300 வரையிலான பதிவு எண்களைக் கொண்டு இந்நூலில் பதிவாக்கப்பட்டுள்ளன. இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத் திரட்டு தொகுதி 12 ஆகவும் வெளிவந்துள்ள இந்நூல் இவர்கள் நம்மவர்கள் என்ற புதிய தொடரில் பாகம் 2 ஆகத் தொடர்கின்றது. இந்நூலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 15 பேரினதும் புகைப்படங்களும்

இந்நூலில் இடம்பெறுகின்றன. செபஸ்தியான் செபமாலை, பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கம், சந்திரகௌரி சிவபாலன், சாந்தி முஹியித்தீன், கிச்சிலான் அமதுர் றஹீம், வண.பிதா தமிழ்நேசன் அடிகள், சி.என். துரைசிங்கம், மானா மக்கீன், சு. ஸ்ரீகந்தராசா, ராஜா ஜென்கின்ஸ், ச.முருகானந்தன், த.சந்திரசேகரன், அன்புமணி நாகலிங்கம், கே.எம். பாரூக், சின்னத்தம்பி இரவீந்திரன் ஆகியோர் பற்றிய குறிப்புகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.)

**இவர்கள் நம்மவர்கள் பாகம் 3.** 1வது பதிப்பு, நவம்பர் 2008. 108 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 200., அளவு: 21.5 x14 சமீ., ISBN: 978-955-1779-15-3.

(இலங்கையிலிருந்து வெளிவரும் ஞாயிறு தினக்குரல் இதழில் 22.6.2008 முதல் பத்து வாரங்கள் வரை தொடர்ந்து பிசுரமான 10 இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்கள் 301 முதல் 310 வரையிலான பதிவு எண்களைக் கொண்டு இந்நூலில் பதிவாக்கப்பட்டுள்ளன. இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவி யலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு தொகுதி 13 ஆகவும் வெளிவந்துள்ள இந்நூல் இவர்கள் நம்மவர்கள் என்ற புதிய தொடரில் பாகம் 3 ஆகத்தொடர்கின்றது. இந்நூலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 10 பேரினதும் புகைப்படங்களும் இந்நூலில் இடம்பெறுகின்றன. தங்கேஸ்வரி கதிராமன், எம்.வை.எம். மீஆது, ஆ.மு.சி. வேலழகன், க. இரத்தினசிங்கம், சி.தர்மகுலசிங்கம், கே.எம்.எம்.காசிம்ஜீ, ஞானசெல்வம் மகாதேவா, க. செல்லத்தம்பி, இராசவல்லவன் இராசயோகன், முருகர் செல்லையா ஆகியோர் பற்றிய குறிப்புகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.)

**இவர்கள் நம்மவர்கள் பாகம் 4.** 1வது பதிப்பு, நவம்பர் 2008. 168 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 240., அளவு 22x14 சமீ., ISBN: 978-955-1779-16-0.

(இலங்கையிலிருந்து வெளிவரும் ஞாயிறு தினக்குரல் இதழில் தொடர்ந்து பிரசுரமான 15 இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரங்கள் 311 முதல் 325 வரையிலான பதிவு எண்களைக் கொண்டு இந்நூலில் பதிவாக்கப்பட்டுள்ளன. இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு தொகுதி 14 ஆகவும் வெளிவந்துள்ள இந்நூல் இவர்கள் நம்மவர்கள் என்ற புதிய தொடரில் பாகம் 4 ஆகத்தொடர்கின்றது. இந்நூலில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 15 பேரினதும் புகைப்படங்களும் இந்நூலில் இடம்பெறுகின்றன. சந்திரகாந்தா முருகானந்தம், கோ.லோகநேசன், வதிரி இ. இராஜேஸ்

கண்ணன், வ. தம்பிமுத்து. மாரி. மகேந்திரன், இ. பாலகிருஷ்ணன், அமரர் சி.விஸ்வலிங்கம், பொ. சுகந்தன், எம்.எஸ்.ஏ. மஜீத், ஏ.முஹம்மது சமீம், ஏ.எம்.முஸ்தகீம், உஸ்மான் பைலா, முக்தார் ஏ.முஹம்மத், ஏ.என். எம்.ஷாஜஹான், எம்.ஏ.ஏ.ஹஸன் ஆகியோர் பற்றிய குறிப்புகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. சிந்தனை வட்டம் தொடரில் 300ஆவது நூலாகவும், அதன் தாபகர் புன்னியாமீன் எழுதித் தொகுத்த 150ஆவது நூலாகவும் இது அமைகின்றது.)

***மறைந்தும் மறையாத நவமணி அஸ்ஹர்.*** 1வது பதிப்பு, ஒக்டோபர் 2008. 80 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1779-19-1.

(06.07.1947இல் கொழும்பில் பிறந்த அஸ்ஹர் (முகைதின் பிச்சை முஹம்மது அஸ்ஹர்) 20ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பத்திரிகைத் துறையினூடாக முஸ்லிம் சமூக எழுச்சிக்கு வித்திட்டவர் என்ற பெருமையைப் பெற்றவர். 28.08.2008 அன்று காலம் சென்ற அல்ஹாஜ் எம்.பி.எம்.அஸ்ஹர் அவர்களின் 40ஆம் நாள் கத்தமுல் குர்ஆன் தமாம் நிகழ்வை முன்னிட்டு வெளியிடப்பட்ட தொகுப்பு இது. சிந்தனை வட்டத்தின் 295ஆவது வெளியீடாக வெளிவரும் இந்த நூலில் இலங்கையின் இஸ்லாமிய தமிழ் ஊடகவியலாளரும், இலங்கை முஸ்லிம்களுக்கான தமிழ்த் தேசிய இதழான நவமணி என்ற பத்திரிகையின் ஆசிரியராகவும் இருந்த எம்.பி.எம். அஸ்ஹர் பற்றிய பல்வேறு தமிழ் சிங்கள பிரமுகர்களின் மனப்பதிவுகள் இடம்பெற்றுள்ளன.)

## 2009

***2009 புலமைப்பரிசில் சார்ந்த செயற்பாடுகள்: தொகுதி 1.*** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 1வது பதிப்பு, ஏப்ரல் 2009. 48 பக்கம், விலை: ரூபா 97.50, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-1779-22-1.

(வன்னிப் போர் அவலத்தின் இறுதிக்கட்டத்தில் இடம்பெயர்ந்து வவுனியா தடுப்புமுகாம்களில் வாழும் சிறார்களில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் வாய்ப்புள்ளவர்களின் பயன்பாட்டுக்கென பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட செயல்நூலின் முதலாம் தொகுதி. லண்டன் தேசம் நெற் வெளியீட்டகத்தின் நிதியுதவியுடன் உடத்தலவின்ன சிந்தனைவட்டம் மேற்கொண்ட செயற்திட்டத்தின் ஒரு அங்கமாக இலவசமாக இந்நூல் வழங்கப்பட்டது. உடத்தலவின்ன சிந்தனை வட்டம் தனது 302ஆவது வெளியீடாக இந்நூலை வெளியிட்டுள்ளது.)

***2009 புலமைப்பரிசில் சார்ந்த செயற்பாடுகள்: தொகுதி 2.*** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 1வது பதிப்பு, ஏப்ரல் 2009. 48 பக்கம், விலை: ரூபா 97.50, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-1779-23-8.

(வன்னிப் போர் அவலத்தின் இறுதிக்கட்டத்தில் இடம்பெயர்ந்து வவுனியா தடுப்புமுகாம்களில் வாழும் சிறார்களில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் வாய்ப்புள்ளவர்களின் பயன்பாட்டுக்கென பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட செயல்நூலின் இரண்டாம் தொகுதி. லண்டன் தேசம்நெற் வெளியீட்டகத்தின் நிதியுதவியுடன் உடத்தலவின்ன சிந்தனைவட்டம் மேற்கொண்ட செயற்திட்டத்தின் ஒரு அங்கமாக இலவசமாக இந்நூல் வழங்கப்பட்டது. உடத்தலவின்ன சிந்தனை வட்டம் தனது 303ஆவது வெளியீடாக இந்நூலை வெளியிட்டுள்ளது.)

***2009 புலமைப்பரிசில் சார்ந்த செயற்பாடுகள்: தொகுதி 3.*** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 1வது பதிப்பு, மே 2009. 48 பக்கம், விலை: ரூபா 97.00, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-1779-24-5.

(வன்னிப் போர் அவலத்தின் இறுதிக்கட்டத்தில் இடம்பெயர்ந்து வவுனியா தடுப்புமுகாம்களில் வாழும் சிறார்களில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் வாய்ப்புள்ளவர்களின் பயன்பாட்டுக்கென பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட செயல்நூலின் மூன்றாம் தொகுதி. லண்டன் தேசம்நெற் வெளியீட்டகத்தின் நிதியுதவியுடன் உடத்தலவின்ன சிந்தனைவட்டம் மேற்கொண்ட செயற்திட்டத்தின் ஒரு அங்கமாக இலவசமாக இந்நூல் வழங்கப்பட்டது. உடத்தலவின்ன சிந்தனை வட்டம் தனது 304ஆவது வெளியீடாக இதனை வெளியிட்டுள்ளது.)

***2009 புலமைப்பரிசில் சார்ந்த செயற்பாடுகள்: தொகுதி 4.*** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 1வது பதிப்பு, மே 2009. 48 பக்கம், விலை: ரூபா 97.00, அளவு: 21.5x14 சமீ., ISBN: 978-955-1779-25-2.

(வன்னிப் போர் அவலத்தின் இறுதிக்கட்டத்தில் இடம்பெயர்ந்து வவுனியா தடுப்புமுகாம்களில் வாழும் சிறார்களில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் வாய்ப்புள்ளவர்களின் பயன்பாட்டுக்கென பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட செயல்நூலின் நான்காம் தொகுதி. லண்டன் தேசம்நெற் வெளியீட்டகத்தின் நிதியுதவியுடன் உடத்தலவின்ன சிந்தனைவட்டம் மேற்கொண்ட செயற்திட்டத்தின் ஒரு அங்கமாக இலவசமாக இந்நூல் வழங்கப்பட்டது. உடத்தலவின்ன சிந்தனை வட்டம் தனது 305ஆவது வெளியீடாக இந்நூலை வெளியிட்டுள்ளது.)

***இவர்கள் நம்மவர்கள் பாகம் 5.*** 1வது பதிப்பு, நவம்பர் 2009. 212 பக்கம், புகைப்படங்கள், விலை: ரூபா 300., அளவு 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1779-17-7.

(இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு தொகுதி - 15 ஆகவும் குறிப்பிடப்பெற்று வெளிவந்துள்ள இந்நூல் இவர்கள் நம்மவர்கள் என்ற புதிய தொடரில் பாகம் 5 ஆகத் தொடர்கின்றது. இந்நூலில் தி. ஞானசேகரன், லெ.முருகபூபதி, சக்தீ அ. பாலஐயா, திமிலைத்துமிலன், ஏறாவூர் தாஹிர், கந்தையா செல்வநாயகம், த.கோபாலகிருஷ்ணன், தில்லையடிச் செல்வன், நீலாபாலன், வயிரமுத்து கந்தசாமி, செபஸ்தியாம்பிள்ளை ஞானராசா, மண்டூர் அசோகா, கனிவுமதி சந்திரசேகரம், முருகப்பன் கணபதிப்பிள்ளை, கனகசபை சிவகுருநாதன், கண்டாவளைக் கவிராயர் - சி.கு. இராசையா, அ. அந்தோனிமுத்து, மொஹம்மது நிசார், தாமரைத்தீவான்- சோ.இராசேந்திரன், பெரியதம்பி ஐங்கரன், இளையதம்பி நடராசா, எஸ். எம்.ஹனிபா, ஆனந்தன் மோகனதாஸ், எஸ்.எம்.எம். மஹ்ரூப், செல்லத்தம்பி மகேஸ் ஆகிய 25 படைப்பாளிகளின் வாழ்வும் பணிகளும் புகைப்படச் சான்றுகளுடன் பதிவிடப்பட்டுள்ளது. பின்னிணைப்பில் அரசியலால் பந்தாடப்பட்ட இலக்கிய விழா என்ற தலைப்பில் நூலாசிரியரினால் ஒழுங்குசெய்யப்பட்ட ஒரு இலக்கியவிழா பற்றிய இணையத்தளக் கட்டுரையும், இணையத்தள பின்னூட்டங்களும் (தேசம் நெற்) இடம்பெற்றுள்ளன.)

***புலமைப் பரிசில் புதிய வெளிச்சம் 2009: கருத்தரங்கு வழிகாட்டிக் குறிப்பேடுகளும் பயிற்சிகளும்.*** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 1வது பதிப்பு, ஜுலை 2009. 32 பக்கம், விலை: ரூபா 110., அளவு: 28x21 சமீ., ISBN: 978-955-1779-33-7.

(12.7.2009 இல் காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்திலும், 18.7.2009இல் கண்டி இந்து கலாசார மண்டபத்திலும் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக் கருத்தரங் கினை முன்னிட்டு இந்நூல் வெளியிடப்பட்டது. கருத்தரங்க வழிகாட்டிக் குறிப்பேடுகளும், பயிற்சிகளும் இதில் இணைக்கப்பட்டுள்ளன. இது சிந்தனை வட்டத்தின் 306ஆவது வெளியீடாகும்.)

***வடக்கில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர் களுக்கான கல்வி நிவாரணச் செயற்திட்டம்.*** இணை ஆசிரியர்: த.ஜெயபாலன். 1வது பதிப்பு, செப்டெம்பர் 2009. 120 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x18 சமீ.

(வடக்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு தற்போது நலன்புரி நிலையங்கள் என்ற பெயரில் இயங்கும் தடுப்பு முகாம்களில் உள்ள சிறுவர்களின் கல்வி மேம்பாட்டுக்கான செயற்திட்டமொன்றினை இலங்கையில் உடத்தலவின்னையிலிருந்து பீ.எம்.புன்னியாமீன் அவர்களும்,

லண்டனிலிருந்து தேசம் இணையத்தள நிர்வாகி த.ஜெயபாலனும் இணைந்து மேற்கொண்டிருந்தனர். 29.4.2009 முதல் 10.8.2009 வரையிலான காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட இத் திட்டம் பற்றிய நடவடிக்கை அறிக்கை, அது பற்றிய பத்திரிகை செய்தி கள் உள்ளிட்ட முழுமையான உதவி ஆவணங்களுடன் இந்நூலில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.)

வடக்கில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கான கல்வி நிவாரணச் செயற்திட்டம்: கட்டம் 2. இணை ஆசிரியர்: த. ஜெயபாலன். 1வது பதிப்பு, டிசம்பர் 2009. 80 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 25.5x17.5 சமீ., ISBN: 978-955-1779-28-3.

(வன்னி முகாம்களிலுள்ள க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கான தேசம்நெற், சிந்தனை வட்ட கல்வி நிவாரண செயற்றிட்டத்தின் கீழ் கணிதம், வரலாறு, தமிழ்மொழியும் இலக்கியமும், ஆங்கிலம். விஞ்ஞானம் ஆகிய ஐந்து பாடங்களுக்குமான 06 மாதிரி வினாத்தள்களை உள்ளடக்கி 6290 மாணவர்களுக்கும் வழங்கியுள்ளதுடன், தனது 2009ஆம் வருடத்திற்கான நிவாரண செயற்றிட்டத்தை 21.11.2009 அன்று நிறைவு செய்துகொண்டது. இவ்வுதவித் திட்டத்தை இலங்கையில் உடத்தலவின்னையிலிருந்து பீ.எம். புன்னியாமீன் அவர்களும், லண்டனிலிருந்து தேசம் இணையத்தள நிர்வாகி த.ஜெயபாலனும் இணைந்து மேற்கொண்டிருந்தனர். இத்திட்டம் பற்றிய நடவடிக்கை அறிக்கை, அது பற்றிய பத்திரிகை செய்திகள் உள்ளிட்ட முழுமையான உதவி ஆவணங்களுடன் இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.)

## 2010

***அமரர் வை.அநவரத விநாயகமூர்த்தி: சில இலக்கியப் பதிவுகள்.*** 1வது பதிப்பு, ஜனவரி 2010. 36 பக்கம், படங்கள், விலை: அன்பளிப்பு, அளவு: 14x13 சமீ., ISBN: 978-955-1779-29-0.

(யாழ்ப்பாண மாவட்டத்தின் இணுவில் கிராமத்தில் பிறந்த அமரர் வைத்தியலிங்கம் அநவரத விநாயகமூர்த்தி (31.08.1923-07.12.2009) அவர்கள் ஈழத்தின் குறிப்பிடத்தக்க படைப்பாளியும் ஊடகவியலாளருமாவார். அன்னாரின் மறைவையொட்டி அஞ்சலி மலராக வெளியிடப்பெற்றுள்ள இந்நூலில் இடம்பெற்றுள்ள அவரது வாழ்வும் பணிகளும் பற்றிய விரிவான கட்டுரை முன்னதாக ஞாயிறு தினக்குரல் பத்திரிகையிலும், இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத் திரட்டு தொகுதி 11இலும் (இவர்கள் நம்மவர்கள் - பாகம்1) வெளிவந்திருந்தது.)

**2010 புலமைப்பரிசில் சார்ந்த செயற்பாடுகள் ~ வழிகாட்டி: தொகுதி 1.** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 1வது பதிப்பு, மார்ச் 2010. 40 பக்கம், சித்திரங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 142.50, அளவு: 29x21.5 சமீ., ISBN: 978-955-1779-34-4.

(சிந்தனைவட்டம் அகில இலங்கை ரீதியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்காக ஆண்டுதோறும் நடாத்தும் தபால்மூலப் பாடநெறியில் மாணவர்களுக்கு வழங்கும் நூற்றொடரின் தரம் 5 பாடப்பரப்பைத் தழுவிய முதல் நூல் இது. வன்னி நிவாரணக் கிராமங்களில் உள்ள தரம் 5 மாணவர்களுக்கும், நிவாரணக் கிராமங் களிலிருந்து மீளக் குடியமர்த்தப்பட்ட தரம் 5 மாணவர்களுக்கும் கல்வி நிவாரண உதவி யாகவும் இந்நூல் லண்டன், தேசம்நெற். அமைப்பினரின் நிதி உதவியுடன் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இந்நூலில் பரீட்சை வினாத்தாள் 01, 02 இல் இடம்பெறக்கூடிய கணிதம் சார்பான வினாக்களும் மாணவர்கள் விடையெழுதக்கூடிய வகையில் எளிமையான குறிப்புகளும், வழிகாட்டல் பயிற்சிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. உடத்தலவின்ன சிந்தனை வட்டம் தனது 313ஆவது வெளியீடாக இந்நூலை வெளியிட்டுள்ளது.)

**2010 புலமைப்பரிசில் சார்ந்த செயற்பாடுகள் ~ வழிகாட்டி: தொகுதி 2.** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 1வது பதிப்பு, ஏப்ரல் 2010. 40 பக்கம், சித்திரங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 142.50, அளவு: 29x21.5 சமீ., ISBN: 978-955-1779-35-1.

(சிந்தனைவட்டம் அகில இலங்கை ரீதியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்காக ஆண்டுதோறும் நடாத்தும் தபால்மூலப் பாடநெறியில் மாணவர்களுக்கு வழங்கும் நூற்றொடரின் தரம் 5 பாடப்பரப்பைத் தழுவிய முதல் நூல் இது. வன்னி நிவாரணக் கிராமங்களில் உள்ள தரம் 5 மாணவர்களுக்கும், நிவாரணக் கிராமங் களிலிருந்து மீளக் குடியமர்த்தப்பட்ட தரம் 5 மாணவர்களுக்கும் கல்வி நிவாரண உதவியாகவும் இந்நூல் லண்டன், தேசம்நெற். அமைப்பினரின் நிதி உதவியுடன் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இந்நூலில் பரீட்சை வினாத்தாள் 01, 02 இல் இடம்பெறக்கூடிய கணிதம் சார்பான வினாக்களும் மாணவர்கள் விடையெழுதக்கூடிய வகையில் எளிமையான குறிப்புகளும், வழிகாட்டல் பயிற்சிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. தர்க்கரீதியான வினாக் களுக்கு விடையளிக்கும் படிமுறைகளும் விளக்கப்பட்டிருக்கின்றன. உடத்தலவின்ன சிந்தனை வட்டம் தனது 314ஆவது வெளியீடாக இந் நூலை வெளியிட்டுள்ளது.

**2010 புலமைப்பரிசில் சார்ந்த செயற்பாடுகள் ~ வழிகாட்டி: தொகுதி 3.** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 1வது பதிப்பு, ஏப்ரல் 2010. 40

பக்கம், சித்திரங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 142.50, அளவு: 29x21.5 சமீ., ISBN: 978-955-1779-36-8.

(சிந்தனைவட்டம் அகில இலங்கை ரீதியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்காக ஆண்டுதோறும் நடாத்தும் தபால்மூலப் பாடநெறியில் மாணவர்களுக்கு வழங்கும் நூற்றொடரின் தரம் 5 பாடப்பரப்பைத் தழுவிய முதல் நூல் இது. வன்னி நிவாரணக் கிராமங்களில் உள்ள தரம் 5 மாணவர்களுக்கும், நிவாரணக் கிராமங் களிலிருந்து மீளக் குடியமர்த்தப்பட்ட தரம் 5 மாணவர்களுக்கும் கல்வி நிவாரண உதவி யாகவும் இந்நூல் லண்டன், தேசம்நெற். அமைப்பினரின் நிதி உதவியுடன் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இந்நூலில் பரீட்சை வினாத்தாள் 01, 02 இல் இடம்பெறக்கூடிய சுற்றாடல் சார்பான வினாக் களும் மாணவர்கள் விடையெழுதக்கூடிய வகையில் எளிமையான குறிப்புகளும், வழிகாட்டல் பயிற்சிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும் ஆய்ந்தறிதல் புலமை அடிப்படையிலான வினாக்களுக்கு விடையளிக்கும் படிமுறைகளும் விளக்கப்பட்டுள்ளன. உடத்தலவின்ன சிந்தனை வட்டம் தனது 318ஆவது வெளியீடாக இந்நூலை வெளியிட்டுள்ளது.)

**2010 புலமைப்பரிசில் சார்ந்த செயற்பாடுகள் ~ வழிகாட்டி: தொகுதி 4.** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 1வது பதிப்பு, மே 2010. 40 பக்கம், சித்திரங்கள், விளக்கப்படங்கள், விலை: ரூபா 142.50, அளவு: 29x21.5 சமீ., ISBN: 978-955-1779-37-5.

(சிந்தனைவட்டம் அகில இலங்கை ரீதியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்காக ஆண்டுதோறும் நடாத்தும் தபால் மூலப் பாடநெறியில் மாணவர்களுக்கு வழங்கும் நூற்றொடரின் தரம் 5 பாடப்பரப்பைத் தழுவிய முதல் நூல் இது. வன்னி நிவாரணக் கிராமங்களில் உள்ள தரம் 5 மாணவர்களுக்கும், நிவாரணக் கிராமங்களிலிருந்து மீளக் குடியமர்த்தப்பட்ட தரம் 5 மாணவர்களுக்கும் கல்வி நிவாரண உதவி யாகவும் இந்நூல் லண்டன், தேசம்நெற். அமைப்பினரின் நிதி உதவியுடன் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இந்நூலில் பரீட்சை வினாத்தாள் 01, 02 இல் இடம்பெறக்கூடிய தமிழ்மொழி, கட்டுரை, பொது அறிவு, கட்புலனறிவு வினாக்களுக்கு மாணவர்கள் விடையெழுதக் கூடிய வகையில் எளிமையான குறிப்புகளும், வழிகாட்டல் பயிற்சிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. உடத்தலவின்ன சிந்தனை வட்டம் தனது 319ஆவது வெளியீடாக இந்நூலை வெளியிட்டுள்ளது.)

**2010 புலமைப்பரிசில் செயல்நூல்: தொகுதி 1 (தரம் 4 வழிகாட்டல்).** இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 1வது பதிப்பு, ஜனவரி 2010.

40 பக்கம், சித்திரங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 142.50, அளவு: 28x21 சமீ., ISBN: 978-955-1779-30-6.

(சிந்தனை வட்டத்தின் 312ஆவது வெளியீடாக வெளிவந்துள்ள இந்நூல் 2010 ஆகஸ்ட் மாதம் புலமைப்பரிசில் (தரம் 5) பரீட்சை எழுதவுள்ள மாணவர்களின் வழிகாட்டி நூலாக வெளிவந்துள்ளது. பரீட்சையில் பகுதி -1க்கான வினாக்களுக்கு மாணவர்களைத் தயார் செய்யத்தக்க வகையில் குறிப்புகளும், பயிற்சிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. 2010ஆம் ஆண்டில் அகில இலங்கைரீதியில் சிந்தனை வட்டத்தால் நடத்தப்படும் புலமைப்பரிசில் தபால் மூல பாடநெறியில் தரம் 4 பாடப்பரப்பை மையப்படுத்திய முதலாவது நூல் இதுவாகும்.)

**2010 புலமைப்பரிசில் செயல்நூல்: தொகுதி 2** (தரம் 4 வழிகாட்டல்). இணை ஆசிரியர்: மஸீதா புன்னியாமீன். 1வது பதிப்பு, ஜனவரி 2010. 40 பக்கம், சித்திரங்கள், புகைப்படங்கள், விலை: ரூபா 142.50, அளவு: 28x21 சமீ., ISBN: 978-955-1779-31-3.

(சிந்தனை வட்டத்தின் 313ஆவது வெளியீடாக வெளிவந்துள்ள இந்நூல் 2010 ஆகஸ்ட் மாதம் புலமைப்பரிசில் (தரம் 5) பரீட்சை எழுதவுள்ள மாணவர்களின் வழிகாட்டி நூலாக வெளிவந்துள்ளது. பரீட்சையில் பகுதி -1க்கான வினாக்களுக்கு மாணவர்களைத் தயார் செய்யத்தக்க வகையில் தமிழ், கணிதம், கணிதப் புலமை, போன்ற வற்றுக்கான குறிப்புகளும், பயிற்சிகளும் சேர்க்கப்பட்டுள்ளன. 2010ஆம் ஆண்டில் அகில இலங்கைரீதியில் சிந்தனை வட்டத்தால் நடத்தப்படும் புலமைப்பரிசில் தபால் மூல பாடநெறியில் தரம் 4 பாடப் பரப்பை மையப்படுத்திய இரண்டாவது நூல் இதுவாகும்.)

**சர்வதேச நினைவு தினங்கள் பாகம் 1.** 1வது பதிப்பு, ஜுலை 2010. 196 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-1779-43-6.

(சர்வதேச நினைவுதினங்கள் ஒரு குறித்த விடயத்தை மையப்படுத்தி அவ்விடயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நோக்கில் அனுஷ்டிக்கப் படுவதுடன் குறித்த விடயத்தை நினைவு கூருவதாகவும் அமைகின்றது. இத்தினங்கள் பல ஐ.நா.சபையினால் அங்கீகரிக்கப்பட்டவை. மேலும் சில குறித்த விடயம் தொடர்பான சர்வதேச கவன ஈர்ப்பினைப் பெறும்வகையில் சர்வதேச நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்படுபவை. பீ.எம்.புன்னியாமீன் தினக்குரல் வார இதழில் தொடராக எழுதிய சர்வதேச நினைவுதினங்கள் தொடர்பான 25 கட்டுரைகள் இந்நூலில் தனித்தொகுப்பாக இடம்பெற்றுள்ளன.)

***சர்வதேச நினைவு தினங்கள் பாகம் 2.*** 1வது பதிப்பு, ஜுலை 2010. 196 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-1779-44-3.

(சர்வதேச நினைவுதினங்கள் ஒரு குறித்த விடயத்தை மையப்படுத்தி அவ்விடயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நோக்கில் அனுஷ்டிக்கப் படுவதுடன் குறித்த விடயத்தை நினைவு கூருவதாகவும் அமைகின்றது. இத்தினங்கள் பல ஐ.நா.சபையினால் அங்கீகரிக்கப்பட்டவை. மேலும் சில குறித்த விடயம் தொடர்பான சர்வதேச கவன ஈர்ப்பினைப் பெறும் வகையில் சர்வதேச நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்படுபவை. பீ.எம்.புன்னியாமீன் தினக்குரல் வார இதழில் தொடராக எழுதிய சர்வதேச நினைவுதினங்கள் தொடர்பான 22 கட்டுரைகள் இந்நூலில் தனித்தொகுப்பாக இடம்பெற்றுள்ளன.)

***சர்வதேச நினைவு தினங்கள் பாகம் 3.*** 1வது பதிப்பு, ஜுலை 2010. 196 பக்கம், விலை: ரூபா 350., அளவு: 21x15 சமீ., ISBN: 978-955-1779-44-3.

(சர்வதேச நினைவுதினங்கள் ஒரு குறித்த விடயத்தை மையப்படுத்தி அவ்விடயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நோக்கில் அனுஷ்டிக்கப் படுவதுடன் குறித்த விடயத்தை நினைவு கூருவதாகவும் அமைகின்றது. இத்தினங்கள் பல ஐ.நா.சபையினால் அங்கீகரிக்கப்பட்டவை. மேலும் சில குறித்த விடயம் தொடர்பான சர்வதேச கவன ஈர்ப்பினைப் பெறும் வகையில் சர்வதேச நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்படுபவை. பீ.எம்.புன்னியாமீன் தினக்குரல் வார இதழில் தொடராக எழுதிய சர்வதேச நினைவு தினங்கள் தொடர்பான 20 கட்டுரைகள் இந்நூலில் தனித் தொகுப்பாக இடம்பெற்றுள்ளன.)

## 2012

***ஓர் ஈரநெஞ்சனின் உளவியல் உலா.*** 1வது பதிப்பு, டிசம்பர் 2012. xviii, 552 பக்கம், விலை: ரூபா 880., அளவு: 21.5x14.5 சமீ., ISBN: 978-955-1779-66-5.

(சிந்தனை வட்டத்தின் 350ஆவது வெளியீடாக வந்துள்ள இந்நூ லில் இலங்கையின் பிரபல உளவளவியலாளர் யூ.எல்.எம்.நௌபர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுப் பதிவுகளும், உளவியல் அடிப்படைகளும் பதினேழு இயல்களில் விபரிக்கப்படுகின்றன. யூ.எல்.எம். நௌபரின் வாழ்க்கை வரலாற்றின் பின்னணியில் அவர் வாழ்வில் தான் கண்ட அரிய பல அனுபவபூர்வமான உளவியல் கருத்துக்களை இந்நூலில் புன்னியாமீன் விளக்கியுள்ளார். மனோதத்துவ நிபுணரான யூ.எல்.எம்.நௌபர் தன்னலமற்ற ஒரு உளவளவியலாளராக சுமார் நான்கு தசாப்த காலமாக இலங்கையில்

அறியப்பட்டவர். இனமதபேதம் கடந்த அவரது சேவை - சுமார் 2500 பேரை இலவச உளவியல் சிகிச்சை மூலமாகக் குணப்படுத்தியுள்ளதை இந்நூலில் ஆசிரியர் விபரிக்கிறார். இலங்கையில் 2004இல் இடம்பெற்ற சுநாமி அனர்த்தத்தின் பின்னணியில் இவரது சேவை வடக்குக் கிழக்கிலும் பரவலடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.)

## 2013

***ஓர் ஈரநெஞ்சனின் உளவியல் உலா: சுவடுகள்.*** 1வது பதிப்பு, பெப்ரவரி 2013. 48 பக்கம், விலை: குறிப்பிடப்படவில்லை, அளவு: 20x15 சமீ., ISBN: 978-955-1779-68-9.

(சிந்தனை வட்டத்தின் 350ஆவது வெளியீடாக வெளிவந்த ஓர் ஈரநெஞ்சனின் உளவியல் உலா என்ற நூலில் இலங்கை யின் பிரபல உளவளவியலாளர் யூ.எல்.எம்.நௌபர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுப் பதிவுகளும், உளவியல் அடிப்படைகளும் பதிவாகியிருந்தது. மனோதத்துவ நிபுணரான யூ.எல்.எம்.நௌபர் தன்னலமற்ற ஒரு உளவளவியலாளராக சுமார் நான்கு தசாப்தகாலமாக இலங்கையில் அறியப்பட்டவர். இனமத பேதம் கடந்த அவரது சேவை - சுமார் 2500 பேரை இலவச உளவியல் சிகிச்சை மூலமாகக் குணப்படுத்தியுள்ளது. அவரது நூல் வெளியீட்டு விழா 25.2.2013 அன்று கொழும்பில் நடைபெற்றவேளையில் வெளியிடப்பட்ட கைந்நூல் இதுவாகும். நிகழ்ச்சி நிரலுடன், நூல் வெளியீட்டு விழா நிகழ்வுகளின் பதிவுகளாக அமைந்த இச்சிறு நூலில், விழாவின் பேராளர்கள் பற்றியும், அந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டவர்கள் பற்றியும் சிறு வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. சிந்தனை வட்டம் - ஓர் ஆய்வு என்ற தலைப்பில் நூலகவியலாளர் என்.செல்வராஜா அவர்களின் விரிவான கட்டுரையும் இறுதியில் இடம் பெற்றுள்ளது.)

# பின்னிணைப்பு

# நூலாசிரியர் அறிமுகம்

## கலாபூஷணம் புன்னியாமீன்

(‘மேகத்துக்குள் மறைந்தியங்கும் சூரியனாய்.... எனது பார்வையில் செல்வராஜா’ என்ற தலைப்பில் நண்பர் புன்னியாமீன் எழுதி, எனது மணிவிழா மலரில் இடம்பெற்றிருந்த கட்டுரை.)

மூன்று தசாப்தங்களுக்கு மேலான எனதிலக்கியப் பயணத்தில் 2003 ஜனவரி வரை நூலகவியலாளர் என். செல்வராஜா அவர்களுடன் எனக்கு எந்த விதமான தொடர்புகளும் இருக்கவில்லை. ஊடகங்களில் அவரது சில கட்டுரைகளை வாசித்துள்ளேனே தவிர அவரைப்பற்றி வேறு ஒன்றையும் நான் தெரிந்திருக்கவில்லை.

2002ஆம் ஆண்டின் இறுதியில் பேராதனைப் பல்கலைக்கழக நிகழ்வொன்றில் கலந்து கொள்ள பல்கலைக்கழகம் சென்ற நேரத்தில் சிரேஷ்ட துணை நூலகர் மகேஸ்வரன் அவர்கள் ‘நூல்தேட்டத்தில் உங்களுடைய புத்தகங்கள் பற்றிய பதிவுகள் இடம்பெற்றுள்ளன’ என்று கூறும் வரை நூல்தேட்டம் பற்றியும் நான் அறிந்து வைத்திருக்கவில்லை.

பின்பு ஒரு நாள் கொழும்பு பூபாலசிங்கம் புத்தகநிலையத்திற்கு சென்றிருந்த நேரத்தில் நூல்தேட்டம் முதலாம் தொகுதியைக் கண்டு அதனை நான் விலை கொடுத்து வாங்கினேன். லண்டனில் அச்சிடப்பட்ட அந்த நூலில் 1000 தமிழ் நூல்கள் பதிவாக்கப்பட்டிந்தன. நூலில் 003 வது பதிவாக என்னுடைய இலக்கிய விருந்து எனும் நூலும், 445 வது பதிவாக பாலங்கள் எனும் கவிதைத் தொகுப்பு நூலும் பதிவாக்கப்பட்டிருந்தன. இந்நூல்கள் இரண்டும் இந்தியா - தமிழ்நாட்டில் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்தவையாகும். எனவே அவர் இந்தியா சென்ற நேரத்தில் அவற்றைப் பெற்றிருப்பார் என எனக்குள்ளேயே முடிவெடுத்துக் கொண்டேன்.

**2003ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒரு நாள்....**

எனக்கு இலண்டனிலிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. “புன்னியாமீன்.. நான் இலண்டனிலிருந்து செல்வராஜா கதைக்கின்றேன்....”

ஆளுமையான அதேநேரம் கனிவான ஒரு குரல் இலாவகமாகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டது.

“உங்களுடைய முஸ்லிம் எழுத்தாளர் விபரத்திரட்டு முயற்சிகள் எந்தளவில் உள்ளன?” அவர் கேட்ட போது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ‘ஓர் உண்மையான ஆய்வாளன் தன்னைப்பற்றி மாத்திரம் சிந்திக்க மாட்டான், அவனது சிந்தனை பரந்துபட்டிருக்கும்’ என்பதனை அன்று அனுபவரீதியாக நான் உணர்ந்து கொண்டேன்.

சுமார் 25 நிமிடங்கள் மட்டில் எமது உரையாடல் தொடர்ந்தது. எமது உரையாடலில் ‘நூல்தேட்டம்’ பற்றிய கருத்துக்களும், எனது எழுத்தாளர் விபரத்திரட்டு பற்றிய கருத்துக்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. என்னுடைய ஏனைய நூல்விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும், என்னுடைய எழுத்தாளர் விபரத்திரட்டில் இடம்பெற்ற எழுத்தாளர்களின் நூல் விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும் விபரத்திரட்டுப்படிவத்தை அனுப்பி வைப்பதாகக் குறிப்பிட்டார்.

முதல் முறை அவர் கதைத்தபோதே அவரின் பேச்சில் ஒரு வசீகரத்தன்மையை நான் உணர்ந்தேன். அவரின் இரத்தத்தோடு ஊறிய இலக்கிய தாகத்தின் விளைவான ஆவணப்படுத்தல் உணர்வினை அறிந்துகொண்டேன். தன் அனுபவத்தின் ஊடாக பிறருக்கு அறிவுரை கூறும் பண்பைத் தெரிந்துகொண்டேன்.

முதல் தொலைபேசி அழைப்பையடுத்து எமது உறவு மிக நெருக்க மானது. வாரத்தில் மூன்று அல்லது நான்கு தினங்கள் நாங்கள் தொலைபேசியினூடாக கருத்துகளைப் பரிமாறிக்கொள்வோம்.

பிறப்பால் செல்வராஜா ஒரு இந்துவாக இருந்தபோதிலும் கூட இஸ்லாம் மதத்தைப் பற்றி, இலங்கையின் இஸ்லாமிய எழுத்தாளர்கள் பற்றி, அவர்களின் நூல்கள் பற்றி நிறைய அறிந்து வைத்திருந்தார்.

சுமார் இரண்டரை ஆண்டு தொடர்பில் அவரைப்பற்றியும், அவரது இலட்சியங்கள் பற்றியும், அவரது பண்புகள் பற்றியும் நிறைய விளங்கிக்கொண்டேன்.

அவரின் குணாதிசயங்களினூடாக அவரைப்பற்றி உயர்ந்த எண்ணம் என் மனதில் இடம்பிடித்தது. இக்காலகட்டங்களில் நவமணி பத்திரிகையில் நான் எழுதிக்கொண்டிருந்த இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு தொடருக்கு நியாயமான ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கிவந்த அதேநேரத்தில் இலண்டன் ஐ.பி.சி. வானொலியில் முஸ்லிம் எழுத்தாளர்கள் பற்றிய குறிப்புகளையும் சேர்த்துக்கொண்டார்.

எனது சிந்தனை வட்ட வெளியீட்டுப் பணியகத்தின் 100வது வெளியீட்டின் போது நான் இலங்கையின் ஐந்து சிரேஷ்ட எழுத்தாளர் களையும் கல்விமான்களையும் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் முன்னிலையில் பிரமாண்டமான முறையில் கௌர வித்தேன். 2000 ஆண்டில் கண்டி சிட்டிமிஷன் கேட்போர் கூடத்தில் இந்த கௌரவிப்பு விழா நடந்தேறியது. திருவாளர் டொமினிக் ஜீவா, திருமதி இராஜேஸ்வரி சண்முகம், திருவாளர் ஸ்ரீதர்சிங், அல்ஹாஜ் எஸ்.எச்.எம். ஜெமீல் ஆகியோருக்கு இவ்விழாவிலே கௌரவிப்பு வழங்கப்பட்டது.

2005ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் சிந்தனைவட்டத்தின் 200வது புத்தகம் வெளிவரக்கூடிய நிலையில் இருந்தது. இதனையும் ஒரு பெருவிழாவாகக் கொண்டாடி என்.செல்வராஜா அவர்களை பிரதம அதிதியாக அழைப்பதுடன் அவரை கௌரவிக்கவும் முடிவெடுத்தேன். 2005ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒரு குறுகியகால விஜயத்தை மேற்கொண்டு செல்வராஜா இலங்கை வரவிருந்தார். இதனை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள நான் ஆசைப்பட்டேன்.

என் விருப்பத்தை அவரிடம் தெரிவித்தபோது உடனே விருப்புத் தெரிவிக்காவிடினும் கூட சில நிபந்தனைகளுடன் தனது சம்மதத்தினைத் தெரிவித்தார். அந்த நிபந்தனைகளில் முக்கியமானது கண்டியிலுள்ள எழுத்தாளர்களை குறிப்பாக முஸ்லிம் எழுத்தாளர்களைத் தான் சந்திக்க ஏற்பாடு செய்து தர வேண்டும் என்பதே.

இதற்கமைய 2005 செப்டெம்பர் 11ஆம் திகதி சிந்தனைவட்டத்தின் 200வது நூல் வெளியீட்டினை நான் பிறந்த மண்ணிலே பிரமாண்டமான முறையில் முழுநாள் நிகழ்வாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தேன்.

**மனித நேயரைச் சந்தித்த போது ...**

2005 செப்டெம்பர் 10ஆம் திகதி அன்று தான் என்.செல்வராஜா அவர்களை நான் முதன்முதலில் நேரடியாகச் சந்தித்தேன்.

கொழும்பிலிருந்து செல்வராஜா அவர்களையும், நவமணி பிரதம ஆசிரியர் (மர்ஹூம்) அஸ்ஹர் அவர்களையும் சகோதரர் சட்டத்தரணி ஏ.எம். ஜிப்ரி எங்கள் வீட்டுக்கு அழைத்து வந்தார்.

அன்றைய தினம் இரவு சுமார் 09 மணியிலிருந்து நானும் செல்வராஜா அவர்களும் நவமணி அஸ்ஹர் ஹாஜி அவர்களும் (விடிந்தால் விழா என்பதை மறந்து) அதிகாலை 3மணி வரை என் வீட்டு மேல்மாடியில் கதைத்துக் கொண்டிருந்தோம்.

இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்று 10 ஆண்டுகள் கழிந்து விட்டன. நவமணி ஹாஜியாரும் மரணித்து விட்டார். ஆனால் அந்தக்

காத்திரமான கலந்துரையாடலை இன்று வரை என்னால் மறக்க முடியாது. ஏனெனில் சுமார் 6 மணித்தியாலங்கள் அளவில் இலங்கையில் முஸ்லிம் களின் இலக்கியத்துறை பற்றியும், அவர்களின் இலக்கிய ஆர்வம் பற்றியும், ஈழத்து இலக்கியப் பரப்பில் முஸ்லிம் எழுத்தாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும், தமிழ் இலக்கிய முயற்சிகளை ஆவணப்படுத்துவது பற்றியும் கதைத்துக்கொண்டிருந்தோம். அச் சந்தர்ப்பத்தில் செல்வராஜா அவர்கள் ஈழத்து முஸ்லிம் இலக்கியம் பற்றி எவ்வளவு தூரம் தெரிந்து வைத்துள்ளார், ஆராய்ந்துள்ளார். என்பதை எம்மால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

செப்டம்பர் 11ஆம் திகதி எமது விழா திட்டமிட்டபடி உடத்தலவின்னை மடிகே ஃ.ஜாமிஉல் அஸ்ஹர் மத்திய கல்லூரியில் அஸ்ரப் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

முழுநாள் விழாவினை இரண்டு அமர்வுகளாக நான் ஏற்பாடு செய்திருந்தேன். முதலாவது அமர்வில் சிந்தனைவட்டத்தின் 200வது நூல் வெளியீடும், சான்றோர் கௌரவிப்பும் இடம்பெற்றது. இதில் என். செல்வராஜா அவர்களுக்கு எழுத்தியல் வித்தகர் பட்டம் வழங்கி மனங் கொள்ளத்தக்க விதத்தில் கௌரவிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இவ்விழாவில் பெருந்தகைகளான ஏ.எச்.எம்.அஸ்ஹர் அவர்களுக்கு இதழியல் வித்தகர் விருதினையும், மூத்த பெண் எழுத்தாளர் நயீமா சித்தீக் அவர்களுக்கு சிறுகதைச் செம்மல் விருதினையும், மூத்த கவிஞர் எம்.எச்.எம்.ஹலீம்தீன் அவர்களுக்கு இருமொழி வித்தகர் விருதினையும், எம்.என்.என்.ரஸீன் அவர்களுக்கு சமூக சேவை செம்மல் விருதினையும் வழங்கி கௌரவித்தோம்.

உடத்தலவின்னை வரலாற்றில் நடைபெற்ற பிரமாண்டமான அதே நேரம் வித்தியாசமான இலக்கிய நிகழ்வாக பலராலும் விதந்து பேசப்பட்ட நிகழ்வாக அது திகழ்ந்தது.

75க்கும் மேற்பட்ட எழுத்தாளர்களும், ஊடகவியலாளர்களும் 200க்கு மேற்பட்ட இலக்கிய ஆர்வலர்களும் கலந்து கொண்ட அந்த விழாவின் 2வது அமர்வாக எழுத்தாளர் சந்திப்பும், கலந்துரையாடலும் இடம்பெற்றது. இந்த அமர்வினை செல்வராஜா அவர்கள் பெரிதும் விரும்பியதுடன் வந்திருந்த அனைத்து எழுத்தாளர்களும் ஊடகவியலாளர்களும் தனிப்பட்ட முறையில் கருத்துக்களை அவருடன் பரிமாறிக் கொண்டமையானது அவரின் இலக்கியம் சார்ந்த உத்வேகத்தினை எடுத்துக் காட்டும் சந்தர்ப்பமாகவே அமைந்தது.

**மன உறவுகளைப் புரிந்து கொள்ளல்.**

இலங்கையில் தமிழ் முஸ்லிம் இன உறவுகள் எனும் தலைப்பில் 2007- மார்ச் மாதம் 10ஆம் திகதி லண்டன் நகரில் கலந்துரையாடலுடன் பொதுக் கூட்டமொன்றுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

லண்டன் தேசம் சஞ்சிகை இதனை ஒழுங்கு செய்திருந்தது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொள்ள என்னை அழைத்திருந்தார்கள். என்னை அழைப்பதற்கான ஏற்பாடுகளை தேசம் ஆசிரியர் த. ஜெயபாலன் அவர்கள் மேற்கொண்டிருந்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொள்ள நான் 2007- மார்ச் மாதம் 8ஆம் திகதி இலண்டன் நோக்கி பயணமானேன். என் வாழ்வில் முதல் விமானப் பயணம் அது. சற்றுப் பய உணர்வுடன் இரவு 7 மணியளவில் ஹீத்ரோ விமான நிலையத்தில் இறங்கினேன். நடுங்கும் குளிர் ஒரு புறம். பய உணர்வு மறுபுறம்.

நான் வெளியே வந்தபோது ஹீத்ரோ விமான நிலையத்தின் பயணிகள் வெளியேறும் வாயிலருகே என். செல்வராஜா அவர்கள் எனக்காக காத்திருந்தார். அவரைக் கண்டதும் தான் உறைந்திருந்த என் இரத்தம் மீண்டும் செயற்பட ஆரம்பித்தது. என் முகத்தில் இழையோடிய பய உணர்வினை அவதானித்த அவர் வார்த்தைகளால் தைரியத்தை ஊட்டி அவருடைய காரிலே லூட்டனில் உள்ள அவருடைய வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.

இலண்டனில் இருந்த சுமார் 3 வாரத்தில் 17 நாட்கள் செல்வராஜா அவர்களின் வீட்டிலேயே தங்கியிருந்தேன். அவரின் விருந்தினராக இருந்த நிகழ்வினை என்னால் மறக்க முடியாது.

விருந்தினர்களை கௌரவிக்கும் பண்பினையும், விருந்தோம்பும் பண்பினையும் அவரிடமும் அவரின் மனைவி விஜி (அக்கா) விடமும் பிள்ளைகளிடமும் நான் நன்கு கண்டு கொண்டேன். அந்தப் 17 தினங்களும் செல்வராஜாவின் வீட்டிலிருந்த பொழுது எனக்கு அந்நியமாகத் தோன்றவில்லை. என் குடும்பத்தினர் ஒருவரது வீட்டில் அந்நியோன்னியமாக இருக்கும் உணர்வே ஏற்பட்டது.

இலண்டனில் நான் கலந்து கொள்ள இருந்த கூட்டங்கள், நான் சந்திக்க வேண்டி இருந்தவர்கள், நான் சந்திக்க வேண்டுமென அவர் விரும்பியவர்கள் அனைவரையும் சந்திக்க அவரே அழைத்து சென்று சந்திக்க வைத்தார்.

நான் எழுதிய நூறாவது புத்தகமான இலங்கை எழுத்தாளர் ஊடகவியலாளர் கலைஞர்களின் விபரத்திரட்டு 4ஆம் தொகுதியின் வெளியீட்டு விழாவினை என் இலண்டன் பயணத்துடன் இணைந்த

வகையில் 2007மார்ச் 17ஆம் திகதி ஜேர்மன் டியுஸ்பேர்க் நகரில் வெளியிடுவதற்கான ஏற்பாடுகளை ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. இதற்கான ஏற்பாடுகளை நான் இலங்கையில் இருந்தபோதே ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஒழுங்கு செய்திருந்தது. இருப்பினும் வைத்தியக் காப்புறுதி சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறியமை யினால் ஜேர்மன் செல்வதற்கான வீஸாவினை என்னால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால் இலண்டனுக்கான வீஸாவினை நான் பெற்றிருந்தேன். இலண்டனில் வைத்து ஜெர்மனிக்கான வீஸாவினைப் பெற முயற்சிகள் மேற்கொண்ட போதிலும் கூட அவையும் தோல்வியில் முடிந்தன.

இதனால் நான் மனதளவில் பெரிதும் பாதிக்கப்பட்டேன். முக்கியமாக எனது நூறாவது புத்தகத்தின் வெளியீடு அது. என் மனஅழுத்தத்தைப் புரிந்து கொண்ட செல்வராஜா குடும்பத்தினர் அனைவருமே எனக்கு ஆறுதல் தந்து என்னைத் தேற்றினார்கள். அத்துடன் என் மனநிலையைப் புரிந்து கொண்ட செல்வராஜா அவர்கள் என் சார்பாக ஜேர்மன் சென்று அவ்விழாவிலே கலந்து கொள்வதாகக் குறிப்பிட்டார். நான் இலண்டன் சென்ற காலகட்டத்தில் சுகயீனம் காரணமாக மருத்துவ விடுகையில் அவர் இருந்தார். தனது சுகயீனத்தையும் பொருட்படுத்தாமல் எனது 100வது புத்தக வெளியீட்டில் என்சார்பாகக் கலந்து கொள்ள முடிவெடுத்த போது அவரை என் உடன் பிறந்த சகோதரனாகவே நான் உள்வாங்கிக் கொண்டேன். எனக்கு சகோதரர்கள் யாரும் இல்லை. அந்தக் குறையை என்னில் களைந்தெறிந்தவர் செல்வராஜா தான் என்பதனை எச்சந்தர்ப் பத்திலும் நான் கூறிக்கொள்ளப் பின்னிற்க மாட்டேன்.

அன்று முதல் இன்றுவரை ஒரு நண்பன் என்ற போர்வையில் அல்லாமல் ஒரு சகோதரனாகவே அவருடனும் அவர் குடும்பத்துடனும் நானும் எனது குடும்பத்தினரும் பழகி வருகின்றோம். அது போன்று அவர் குடும்பத்தினரும் என் குடும்பத்தினரோடு சகோதர வாஞ்சையுடனேயே பழகுவதையிட்டு மகிழ்வெய்துகிறேன்.

நான் இலண்டனில் இருந்த மூன்று வாரங்களும் ஒரு நிகழ்ச்சித் திட்டமொன்றை எனக்கென தயாரித்துத் தந்து அதன்படி செயற்பட தூண்டிய அவரின் பண்பினை என்னால் மறக்கவே முடியாது.

செல்வராஜா அவர்கள் தனது தொழில் மூலமாக கிடைக்கும் வேதனத்தின் பெரும் பகுதியினையும் நேரத்தின் பெரும்பகுதியையும் தமிழ் இலக்கிய முயற்சிகளுக்காகவும் நூல் தேட்டப் பணிகளுக்குமே செலவிட்டு வருவதை நான் கண்கூடாக அவதானித்திருக்கின்றேன்.

நூல் தேட்ட தேடல்களுக்காக அவர் இலங்கையர்கள் புலம்பெயர்ந்த நாடுகளான ஜெர்மனி, பிரான்ஸ், கனடா மற்றும் இந்தியா, மலேசியா,

சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு தனது சொந்த செலவில் அடிக்கடி சென்று ஈழத்து எழுத்தாளர்களின் தமிழ் நூல் விபரங்களை சேகரிப்பார். தனது அலுவலக வேலை முடிந்து வீடு வந்ததும் சுமார் 04, 05 மணித்தியாலங்கள் நூல்தேட்ட பதிவுகளிலும் எழுத்துப் பணிகளிலுமே ஈடுபடுவார். எத்தகைய குளிர் காணப்பட்டாலும் அதிகாலை 6 மணிக்கெல்லாம் எழுந்து அலுவலகம் செல்லும் வரை நூல் தேட்டப் பணிகளை மேற்கொள்வார். நூல் தேட்டத்திற்காக ஒரு நூலைப் பதிவு செய்வதற்கு அந்த நூலை வாசித்து ஆராய்ந்த பின்பே அவர் தனது மடிக்கணணியூடாக அதனை பதிவில் இடுவார். இதனையும் நான் என் கண்களாலே கண்டேன்.

குடும்பத்தின் இதர பொறுப்புக்களை இவரின் மனைவி ஏற்றிருப்பது இவரின் இலக்கிய நூல்தேட்டப் பணிகளுக்கு பெரிதும் உதவியாக இருந்து வருகின்றது. ஓர் எழுத்தாளனின் வெற்றியின் பின் அவரின் இல்லாளின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது என்பார்கள். அவரைப் பொருத்தமட்டில் இது நூறுவீத உண்மை. அவரின் செயற்பாடுகளுக்கு அவரது அன்புமனைவி மற்றும் பிள்ளைகள் வழங்கும் ஒத்துழைப்பு விசாலமானது.

### திட்டமிடலும், நேர முகாமைத்துவமும்

செல்வராஜாவிடம் நான் அவதானித்த மிக முக்கியமான பண்புகளாவன திட்டமிடலும், நேர முகாமைத்துவமுமாகும். இதனை நான் ஏற்கனவே அறிந்து வைத்திருந்தாலும் கூட நூல்தேட்டம் தொகுதி 07க்காக பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தில் நூல் விபரங்களை பதிவு செய்ய வந்த நேரத்தில் என்னால் நேரடியாக அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தில் காணப்பட்ட நூல்களைப் பார்வையிட்டு பதிவுசெய்வதற்கான அனுமதியை அவர் இலண்டனில் இருந்து வருவதற்கு சுமார் 6 மாதங்களுக்கு முன்பே நூலகத்தில் தமிழ் நூல்களுக்குப் பொறுப்பான சிரேஷ்ட துணை நூலகர் இ.மகேஸ்வரனிடம் பெற்று வைத்திருந்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு சுமார் 15 கிலோமீற்றர் தொலைவில் எனது வீடு அமைந்திருந்ததினால் சுமார் மூன்று வாரங்கள் எனது வீட்டில் தங்கி இப்பணியை நிறைவேற்ற அவர் திட்டமிட்டார்.

2010ஆம் ஆண்டு மார்ச் மாதம் அவரது இலங்கை வருகை தொடர்பாக ஆறு மாதங்களுக்கு முன்பே நிகழ்ச்சி நிரலை தயாரித்து எனக்கு அனுப்பிவைத்திருந்தார். அவரின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப சுமார் 3 வாரங்களுக்குள் 500 புத்தகங்களைப் பதிவாக்க வேண்டும் என்பது அவரின் திட்டமாகும். அதற்கேற்ப போக்குவரத்து வசதிகளுடன் எனது

அலுவலகத்தில் பணியாற்றும் ஜெ. இல்முன் நிஸா அவர்களையும் செல்வராஜா அவர்களின் பதிவு உதவிக்காக ஏற்பாடுகளை செய்திருந்தேன்.

சுமார் 6 மாதங்களுக்கு முன் எதனைத் திட்டமிட்டிருந்தாரோ அந்த நிகழ்ச்சி நிரலில் ஒன்று கூட பிசகாமல் நிகழ்த்தியமை என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. உண்மையாகச் சொல்வதானால் திட்டமிடல் நேரமுகாமைத்துவம் போன்ற விடயங்களை அவரிடம் தான் கற்றுக் கொண்டேன் என்று கூறலாம்.

அவர் இலங்கை வந்த நேரத்தில் கண்டிப் பகுதியைச் சுற்றிப்பார்க்கலாம் என நான் அழைத்த சந்தர்ப்பத்தில் என்னுடைய குறிக்கோள் குறைந்தது 500 புத்தகங்களைப் பதிவாக்குவது. எனவே தயவு செய்து சுற்றுலாவுக்கு எல்லாம் அழைக்காதீர்கள் என உறுதியாக கூறிவிட்டார். ஒரே நோக்கில் இருந்தமையினால் மூன்று வாரங்களுக்குள் அவரால் 700 புத்தகங்களை பதிவாக்க முடிந்தது.

சுமார் காலை 8 மணிக்கு பல்கலைக்கழகம் செல்லும் அவர் மாலை 4.30 மணிவரை பல்கலைக்கழக நூல்களைப் படித்து அவற்றை குறிப் பெடுத்துக் கொண்டு இரவில் அதிக நேரம் மடிக்கணனியில் தான் திரட்டிய விபரங்களை பதிவாக்குவார். சில நேரங்களில் நள்ளிரவு 12 மணியையும் தாண்டிவிடும். இவ்வளவு அதிகமாக களைப்படைய வேண்டாம் என நான் கேட்டுக்கொண்டு மின்குமிழை அணைத்த சந்தர்ப்பமும் உண்டு. நான் தூங்கும்வரை பார்த்திருந்து மின்குமிழைப் போடாமல் கையடக்கத் தொலைபேசியின் மின்குமிழ் வெளிச்சத்தில் வேலை செய்ததை பின்னால் என்னால் தெரிந்து கொள்ள முடிந்தது.

எனவே தன் இலக்கை அடைய அவர் மிகவும் திட்டமிட்டு தியாக சிந்தையுடன் செயற்படுவதாலேயே அவரால் 10000 தமிழ் நூல்களை ஆராய்ந்து பதிவுக்குட்படுத்த முடிந்தது.

**சமூகப் பற்று**

செல்வராஜா அவர்கள் தன் சமூகத்தின் மீதும் அதிக பற்று வைத்திருந்தார். என்னோடு சம்பந்தப்பட்ட ஒரு விடயத்தை நான் சுட்டிக்காட்டியேயாக வேண்டும்.

2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிருந்து தமிழ் மக்கள் இடம் பெயர்ந்து வவுனியா அகதி முகாம்களுக்கு அனுப்பப்பட்டிருந்த நேரத்தில் அகதி முகாம்களிலுள்ள மாணவர்களுக்காக வேண்டி சிந்தனை வட்டமும் தேசம் சஞ்சிகையும் முதல் கட்டமாக 2009ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை எழுதவிருந்த மணவர்களுக்காக வேண்டி சுமார் 27 இலட்சம் ரூபா செலவில் கல்வி நிவாரண செயற்திட்டத்தினை ஆரம்பித்தது. இச்செயற்திட்டத்தினை

விரிவு படுத்தி புலமைப்பரிசில் கா.பொ.த.(சா.த) மாணவர்களுக்காக வேண்டி 2010ஆம் ஆண்டிலும் கல்வி நிவாரண செயற்திட்டத்தை முன்னேடுத்தோம். அதன்போது தனதும் இலண்டனிலுள்ள தனது குடும்பத்தினரதும் சேமிப்பாக சில இலட்சம் ரூபாய்களை தந்துதவினார்.

அத்துடன் மாணவர்களின் நலன் கருதி புக்ஸ் எப்ரோட் நிறுவனத்துடன் இணைந்து சுமார் 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை வடக்கு கிழக்கு பகுதி களிலுள்ள நூலகங்களுக்கு நூல்களைப் பெற்றுக்கொடுப்பதில் அதிக ஆர்வம் காட்டி வந்தார். இக்கட்டத்தில் ஒரு முறை புக்ஸ் எப்ரோட்டால் வழங்கப்பட்ட நூல்களில் மூன்றில் ஒரு பகுதியை எனது சிந்தனை வட்டத்திற்கு தந்து தென் பகுதி பாடசாலைகளுக்கு விநியோகிக்கும் பொறுப்பினை என்னிடம் ஒப்படைத்தார். ஒரு முறை அவரால் அனுப்பப்படும் புத்தகத்தொகையில் எனக்குத் தரப்பட்ட மூன்றில் ஒரு பகுதியை தென் பகுதியிலுள்ள 116 தமிழ் முஸ்லிம் பாடசாலைகளுக்கு நான் வழங்கினேன். அவ்வாறாயின் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு பெற்றுக் கொடுக்கும் நூல்கள் மூலமாக எத்தகைய பயன்களை அப்பகுதி மக்கள் பெற்றிருப்பர் என்பதை எம்மால் ஊகிக்கமுடியும்.

3000க்கும் மேற்பட்ட முஸ்லிம் எழுத்தாளர்களின் நூல்களைப் பதிவாக்கியிருப்பது....

செல்வராஜா பற்றிக் கூறும்போது பொதுவாக ஒரு விடயத்தையும் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

20ஆம் நூற்றாண்டின் இறுதிவரை இலங்கை தமிழ் இலக்கியப்பரப்பில் முஸ்லிம் எழுத்தாளர்கள் பற்றியோ அவர்களின் படைப்புகள் பற்றியோ பெரிதாகப் பேசப்படவில்லை. பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் மற்றும் தமிழ் இலக்கிய ஆய்வாளர்கள் போன்றோர் குறிப்பிட்ட சில முஸ்லிம் எழுத்தாளர்கள் பற்றி தெரிந்திருந்தார்களேயன்றி யாரும் முழுமையான ஆய்வினை நோக்கி செல்ல எத்தனிக்கவில்லை. இந்தப் பணியினை செல்வராஜா ஆவணப்பதிவாகவே முன்வைத்திருப் பதானது இலங்கை முஸ்லிம்கள் எழுத்தாளர்கள் பெற்ற வரப்பிரசாத மென்பதனை யாரும் மறுப்பதற்கு இயலாது.

2014ஆம் ஆண்டு வரை செல்வராஜா அவர்களால் வெளியிடப்பட்ட நூல் தேட்டம் 10 தொகுதிகளிலும் 10000 இலங்கைத் தமிழ் மொழி எழுத்தாளர்கள் நூல்கள் பதிவாக்கப்பட்டுள்ளன.

இன மத செயற்பாடுகளுக்கு அப்பால் நின்று ஈழத்து தமிழ் இலக்கிய நூல்களை ஆவணப்படுத்திவரும் இவர் 3000க்கும் மேற்பட்ட இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்களின் நூல்களை ஆவணப்படுத்தியிருப்பது குறித்துக் காட்டக்கூடிய ஒரு விடயமேயாகும்.

இலங்கையில் மூத்த எழுத்தாளரும், கல்விமானும் ஆய்வாளருமான எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்கள் 1994ஆம் ஆண்டு எழுதி வெளியிட்ட சுவடி ஆற்றுப்படை முதலாம் தொகுதியில் 198 நூல்கள் பற்றிய தகவல் களையும் 1995ஆம் ஆண்டு வெளியிட்ட இரண்டாம் தொகுதியில் 350 நூல்கள் பற்றிய தகவல்களையும் 1997ஆம் ஆண்டில் வெளிவந்த மூன்றாம் தொகுதியில் 924 நூல்கள் பற்றிய தகவல்களையும் 2001ஆம் ஆண்டில் வெளிவந்த நான்காம் தொகுதியில் 500 நூல்கள் பற்றிய தகவல்களையும் ஆவணப்படுத்தியுள்ளார். (தற்போது சுவடி ஆற்றுப்படை 5ஆம் தொகுதிக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன) இவரால் இதுவரை 1977 முஸ்லிம் எழுத்தாளர்களின் நூல்கள் பதிவாக்கப்பட்டுள்ளது.

ஈழத்து தமிழ் இலக்கியத்தினை எவ்விதப்பாகுபாடும் இன்றி ஒருமுகப்படுத்த வேண்டியதும் அவற்றின் பதிவுகளை திரட்டவேண்டியதும் காலத்தின் தேவையாகி விட்டது.

இத்தகைய நோக்கத்தைக் கொண்ட செல்வராஜா ஒரு சர்வதேச ஆவணப்பதிவான தன்னுடைய நூல் தேட்டத்தில் 3000க்கும் மேற்பட்ட முஸ்லிம் எழுத்தாளர்களின் நூல்களைப் பதிவாக்கியிருப்பது மிகவும் பெறுமதி வாய்ந்த ஒரு நிகழ்வாகும். இதனூடாக இலங்கையில் முஸ்லிம் எழுத்தாளர்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்புகள் எத்தகையவை என இனங்கண்டு கொள்ளமுடியும்.

இலங்கை தமிழ் இலக்கிய வரலாற்றில் இதுகாலவரை 3000 முஸ்லிம் எழுத்தாளர்களின் நூல்களைப் பதிவாக்கிய தனியொருவராகவே செல்வராஜா திகழ்கின்றார்.

இலங்கையில் காலத்திற்கு காலம் இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாடுகள் நடைபெறுவதுண்டு. இம்மாநாடுகளின் போது அரைத்த மாவையே திரும்பவும் அரைப்பது போல பழமையான ஒரு சில முஸ்லிம் எழுத்தாளர்களின் படைப்புகளே ஆராயப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையைத் தவிர்த்து இதுபோன்ற வரலாற்றில் அழிந்து விடக்கூடாத நிகழ்வுகளும் ஆய்வுக்கெடுக்கப்பட வேண்டியது மிகவும் அத்தியாவசிய மானதொரு விடயமாகும்.

அதே நேரம் முஸ்லிம் பண்பாட்டு கலாசாரத் திணைக்களம் போன்ற அரச நிறுவனங்கள் செல்வராஜாவினால் ஆவணப்படுத்தப்பட்டுள்ள 3000 முஸ்லிம் எழுத்தாளர்களின் நூல் விபரங்களை மீள்பதிப்பித்து தனியொரு ஆவணமாக வெளியிடுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாயின் அது முஸ்லிம்கள் தமிழ் இலக்கியத்திற்கு ஆற்றிய சேவையினை அழியாச் சுவடாக என்றென்றும் பறைசாற்றிக் கொண்டே இருக்கும் என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகின்றது.

தனது 60வது அகவைப் பயணத்தில் காலடி எடுத்து வைக்கும் இந்த ஈரநெஞ்சனின் இலக்கியப் பயணம் மௌனமாய்ப் பொழியும் மழை போன்று நிதானமாய்த் தொடர வேண்டும். அதற்கவர் இன்னும் பல்லாண்டு உடலும் உளமும் தேறியவராய் வாழவேண்டும் என்று உளமாரப் பிரார்த்திக்கின்றேன். இந்த இலக்கிய நேசனின் அன்பும் நட்பும் எனக்குக் கிடைத்தமையையிட்டு இறைவனுக்கு நான் நன்றி கூறுகின்றேன்.

*பாசம் உலாவிய கண்களும் எங்கே*
*பாய்ந்து துழாவிய கைகளும் எங்கே*
*தேசம் அளாவிய கால்களும் எங்கே*
*தீ உண்டதென்றது சாம்பலும் இங்கே.*

